வெளியீடு : 22-1-2014

Issued : 22-1-2014

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 18, 2013—தொகுதி 46—எண் 2**

**Thursday, the 18th April 2013—Volume 46—No. 2**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

**18–04–2013**

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

**1. வினாக்கள் விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 371-434

**2. தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும் வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி—** 434-438

திரு. ச. இராமச்சந்திரன் 434-435

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 435

*திரு. அ. சவுந்தரராசன் 436

திரு. எம். ஆறுமுகம் 436,437

திரு. என்.ஆர். ரெங்கராஜன் 437

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 437-438

டாக்டர் க. கிருஷ்ணசாமி 438

**3. கவன ஈர்ப்பு—**

கோயம்புத்தூர் மாவட்டம், குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை— 439-445

திரு. எம். ஆறுமுகம் 439, 441-442

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 439-441, 443-445

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி 445-571

(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 446,452,460 464 466-470, 483-489,494, 495,497,499, 501-502, 510-511,513, 515-516 521, 523-524,528, 530-531, 535-536, 542-569

திரு. அ. பாஸ்கர் 456,460-469

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 466-467,477, 480,491,492

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 470

*திரு. எஸ்.கே. செல்வம் 470-479

*திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் 479-480

*திரு. க. பாலகிருஷ்ணன் 458,481-492, 495-498,516, 517,531-532

*திரு. அ. சவுந்தரராசன் 493

திரு. சு. குணசேகரன் 494,499,527



பக்கங்கள்

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 496,516, 533,534

*திரு. ஏ.ஏ. கருப்பசாமி 500

திரு. எம். ஆறுமுகம் 451, 459 502-503

*திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி 503-509, 511-515

திருமதி எஸ். விஜயதரணி 448-449, 456, 515

*திரு. ந. நஞ்சப்பன் 517-528

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 526-527

**4. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி

திரு. எஸ். ஜாண் ஜேக்கப் 449, 457 528-538

செல்வி கே. பாலபாரதி 450-451, 532-533

*திரு. பி.வி. கதிரவன் 538-543

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 571-572

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, சித்திரை 5, திருவள்ளுவர் ஆண்டு-2044

## 2013 ஏப்ரல் 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், மலை வளமும், அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**253—**

**மின்மாற்றி**

***17431—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 18

*(அ) சாத்தூர் தொகுதியில் 16* MVA *திறனுடைய கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியில் கூடுதலாக 16* MVA *மின் திறனுடைய மின்மாற்றி அமைப்பதற்கு ரூபாய் 1.5 கோடி செலவில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் மின்மாற்றி இன்னும் ஒரு மாதத்தில் நிறுவப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்ற தமிழர்களின் பாரம்பரியமிக்க மரபினை, தன் சுய விளம்பரத்திற்காக மாற்றி அமைத்த சுய நலத் தலைவர்களுக்கு, தமிழினத்தின் வரலாற்றுப் பாடத்தினை ஆதாரத்தோடு கற்றுக் கொடுத்து, சிறைப்பட்டுக் கிடந்த சித்திரையை மீட்டு, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என மீண்டும் அகிலத்திற்கு அடையாளம் காட்டி, தமிழர்களின் வாழ்வெல்லாம் வசந்த காலமாக வரலாறு படைத்திட்ட, வழிகாட்டியாக வாழும் மனித தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் போற்றி வணங்கி வருகின்ற நம் தமிழ்த் தாய், நாளைய பாரத தேசத்தைத் தலைமை தாங்கி, நல்வழி நடத்த இருக்கின்ற நம் தெய்வத் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் நகரத்தில் அமைந்துள்ள 110/11* KV *துணை மின் நிலையத்தில், கூடுதலாக 16* MVA *திறன் மின்மாற்றி அமைத்துத் தர ஆவன செய்திட்ட, எல்லாரும் எல்லாமும், பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை*



2013 ஏப்ரல் 18]

*வேண்டுமென்ற இலட்சிய முழக்கத்தை நிறைவேற்றிட, இரவு, பகல் பாராது, ஊன் உறக்கம் பாராது, அயராது உழைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்து, அது இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே நிறைவேற்றித் தருகின்ற தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைக் கூறி, தற்போது, சிவகாசி அனுப்பன்குளம் துணை மின் நிலையத்திலிருந்து சாத்தூர் துணை மின் நிலையத்திற்கு வரக்கூடிய 110* KV *உயர் மின்னழுத்த ஒரு வழிப் பாதையை, இரு வழிப் பாதையாக கம்பிவடம்மூலம் அமைத்துக் கொடுத்திட அன்போடு வேண்டுகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் இரு வழிப் பாதை அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகள், அங்குள்ள மின்பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு ஆய்வு செய்து, தேவையிருப்பின், நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *இரு வழிப் பாதையை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அன்னைத் தமிழகத்தை இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றிட, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை வாரி, வாரிக் கொடுத்து, சாதனை வரலாறு படைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைக் கூறி அமைகின்றேன்.*

[2013 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றத் தொகுதியில் தட்டணை கிராமத்தில் ஐந்தாயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். அதைச் சுற்றி 15 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்திலே அதற்குரிய தொகையும் செலுத்தப்பட்டு, கடந்த நிதியாண்டிலே அது கட்டித் தரப்படும் என்றார்கள். அது எப்போது கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மயிலம் பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**254—**

### பாலாற்றுக் குடிநீர்

***5985—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2013 ஏப்ரல் 18]

காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் கிராமத்திற்குப் பாலாற்றுக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட வையாவூர் ஊராட்சியில் அடங்கியுள்ள 10 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்குத் தேவையான குடிநீர், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உள்ளூர் நீராதாரங்கள்மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், பாலாற்றுக் குடிநீர் வழங்க அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறியவர் வாழ்வு வளம் பெற, விலையில்லா அரிசித் திட்டத்தைத் தந்து, வறுமையெனும் சொல்லை தமிழகத்தில் நீக்கி, வெளிச் சந்தையில் அரிசியின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த, தமிழகம் முழுவதும் கூட்டுறவு அங்காடிகள், அமுதம் அங்காடிகள் மற்றும் சிறப்பு அங்காடிகளில் ஒரு கிலோ தரமான அரிசி ரூ.20/-க்கு வழங்கும் திட்டத்தை தன்னுடைய பொற்கரங்களால் துவக்கி வைத்திருக்கின்ற எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதங்களை வணங்குகின்றேன்.

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலிருக்கின்ற வையாவூர் கிராமத்திலே சுமார் 7,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே 12 நீர்த்தேக்கத் தொட்டிகள், குறிப்பாக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டிகள் நான்கும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டிகள் நான்கும், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டிகள் நான்கும், ஆக மொத்தம் 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொட்டிகளுக்கு bore மூலமாக நீர் ஏற்றப்படுகிறது. அருகில் இருக்கக்கூடிய பாலாற்றிலிருந்து சுவையான நீரைக் கொடுப்பதற்கு

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா? இப்போது இல்லையென்றாலும், வருகின்ற காலத்திலே அந்த மக்களுக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா, அல்லது bore மூலமாக எடுக்கக்கூடிய நீரை சுத்திகரிப்பு செய்து தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு விடையாக நீராதாரங்கள் இல்லாத குடியிருப்புகளுக்கு, இதுபோன்று ஆற்றுப் படுகையிலே இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக, குடிநீர் கொடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இந்த ஊராட்சியைப் பொறுத்தவரையில், நிலத்தடி நீரே போதுமானதாக உள்ளதென்ற காரணத்தினால், 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, நிலத்தடி நீரின்மூலம் நிறைவான குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கோரிக்கையும் வைத்திருக்கிறார். அந்த நீர் சுத்திகரிக்கப்பட்டு கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அந்தத் தண்ணீர் குடிப்பதற்கேற்ற நிலையிலே இருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த நீரை மீண்டும் ஆய்வு செய்து, சுத்திகரிப்பு செய்யப்படுகின்ற சூழ்நிலை வரும்பட்சத்தில், அங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, அவர்களுக்குக் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 25 கிராமங்கள் சேர்க்கப்படாமல் விடுபட்டுப் போயுள்ளன. அந்த 25 கிராமங்களைச் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அம்மா அவர்களிடமும் மனு கொடுக்கப்பட்டது. விடுபட்டுப்போன அந்தக் கிராமங்கள், தற்போது காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பொதுவாக, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்படுகின்றபொழுது, அத்திட்டத்தை உருவாக்குகின்றபொழுதே, எத்தனை குடியிருப்புகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படி நிர்ணயம் செய்யப்படுகின்ற சூழ்நிலையில், புதியதாக குடியிருப்புகளைச் சேர்க்கின்றபட்சத்தில், அந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த முடிவதில்லை. எனவே, ஏற்கெனவே இதில் அடங்கியுள்ள குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படுகின்ற நீரை அதிகப்படுத்தி, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப்

பொறுப்பேற்று, இந்த நாட்டு மக்களுக்கு நாளும் ஒரு நல்ல திட்டத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற காவேரியை வென்றெடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கந்திலி ஒன்றியம் முழுவதும் மிகக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையில் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அண்ணன் அவர்களுக்கு எங்களுடைய கந்திலி ஒன்றியம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அருகில் இருக்கின்றது என்பது முழுமையாகத் தெரியும், அங்கே நிலவும் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, 1,228 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பொழுது அந்தத் திட்டப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கும் செல்கிறது. திருப்பத்தூர் நகராட்சிக்கும், மற்ற பகுதிகளுக்கும் செல்கிறது. பொதுவாக, மழை இல்லாத காரணத்தினால், பல்வேறு பகுதிகளில் இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இதை முழுவதுமாக நீக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், போர்க்கால அடிப்படையிலே, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அந்தந்தப் பகுதி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும்கூட குடிநீருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியை முழுமையாகக் குடிதண்ணீருக்கே பயன்படுத்த வேண்டுமென்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பணம் ஒரு பிரச்சினையாக இல்லை. ஆனால், ஆயிரம் அடி bore போட்டால்கூட குடிதண்ணீர் கிடைப்பதில்லை. அதுதான், நமக்கு இருக்கிற ஒரு பிரச்சினை. ஆகவே, எங்கெங்கெல்லாம் குடிதண்ணீர் இருக்கிறதோ, அந்த இடத்திலே ஆய்வு செய்து ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையிலே, எல்லாக் கிராமங்களுக்கும் முழுவதுமாக, எந்தச் சூழ்நிலையிலும்கூட, குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து, கந்திலி ஊராட்சியின் எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது மதுராந்தகம் தொகுதியில் அடங்கிய, கருங்குழி பேரூராட்சியில் பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமா என தங்களின்வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கேட்டிருக்கிறார். அது சம்பந்தமாக துறையிடத்திலே கேட்டறிந்து, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட நுள்ளிவிளை ஊராட்சி, நெட்டாங்கோடு ஊராட்சி, கட்டிமாங்கோடு ஊராட்சி

மற்றும் ஆளூர் பேரூராட்சிகளிலே தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. பக்கத்திலே மாம்பழத்தாறு dam இருக்கிறது. அந்த dam இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் சரிசெய்யப்பட்டது. அந்த dam-இலே தண்ணீர் இருக்கிறது. அந்த dam-லிருந்து தண்ணீர் பெறுவதற்கான ஒரு குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி, நுள்ளிவிளை, கட்டிமாங்கோடு, நெட்டாங்கோடு, ஆளூர் பேரூராட்சிகளுக்குத் தண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2 நாட்களுக்கு முன்பாக குடிதண்ணீருடைய தேவையை ஆய்வு செய்து, இயற்கை பொய்த்தாலும்கூட மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதற்காக, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை இரண்டு நாட்களுக்கு முன்பாக, கிட்டத்தட்ட 350 எம்.எல்.டி. திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராகக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல, ஆய்விலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். என்னவென்று சொன்னால், கடலோரப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் நிலத்தடி நீர் உவர் கலந்த நீராக இருப்பதனால், அந்தப் பகுதிகளுக்கு உள்நாட்டிலேயிருந்து குடிதண்ணீர் எடுத்துச் செல்வதற்குக் கூடுதலான செலவு ஏற்படுகின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற கடல் நீரை நன்னீராக்கி அவர்களுக்கு குடிதண்ணீரை வழங்க வேண்டிய ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளுக்குத் தேவையான குடிதண்ணீரை இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 200 எம்.எல்.டி., 150 எம்.எல்.டி. என்பதைப் போல, அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான 10 எம்.எல்.டி. தண்ணீருக்கும், 25 எம்.எல்.டி. தண்ணீருக்கும், 50 எம்.எல்.டி. தண்ணீருக்கும், கடல்நீரைக் குடிநீராக மாற்றுகின்ற ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதன் அடிப்படையிலே, கடலோரப் பகுதிகளுக்கும் இதுபோன்று குடிநீர் வழங்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஊராட்சிகளுக்கும், அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.





பொதுவாக, மக்கள் தொகை கூடுதலாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், 48.45 சதவீதம் மக்கள் தொகை நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்து வந்திருக்கின்றார்கள். அப்படி வருகின்றபோது ஏற்கெனவே இருக்கிற திட்டங்களின் வாயிலாகக் கொடுக்கக்கூடிய குடிதண்ணீர் போதாத காரணத்தால் குடிதண்ணீரை அதிகப்படுத்திக் கொடுப்பதற்காக, புதிய, புதிய திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**255—**

## அங்கன்வாடி மையம்

***19045—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியிலுள்ள அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 18

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி சட்டமன்றத் தொகுதியில் 193 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 35 அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு பெறப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற அரசு கட்டடங்களில் இயங்கும் 27 அங்கன்வாடி மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எரிவாயு இணைப்பு, குக்கர், கேஸ் அடுப்பு போன்றவை வழங்கி, சமையல் அறை நவீனப்படுத்தப்பட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 50 மையங்களுக்கு Storage bin வழங்கப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற அங்கன்வாடி மையங்களுக்கு Storage bin வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 7 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு மின் இணைப்பும், 49 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு கழிப்பறை வசதியும், 40 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு தண்ணீர் வசதியும், மீதமுள்ள மையங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்காசி தொகுதி, தென்காசி வட்டத்தில் 23 மையங்களும், கீழப்பாவூர் வட்டத்தில் 102 மையங்களும், தென்காசி தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் வட்டத்தில் 65 மையங்களும், தென்காசி தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் வட்டத்தில் 8



2013 ஏப்ரல் 18]

மையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் 75 சதவீதம் சொந்தக் கட்டடத்திலும், 25 சதவீதம் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடத்தில் உள்ள மையங்களில் நவீன வசதிகள் நிறைவாக இல்லை. எனவே, புதியதாகக் கட்டப்பட்டுள்ள நவீன கட்டடங்கள் போன்று, ஏற்கெனவே உள்ள கட்டடங்களில் நவீன வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்த வேண்டும். தென்காசி தொகுதியில் உள்ள குழந்தைகள் மையங்கள் அனைத்தையும் நவீனப்படுத்தும் பணி எப்போது துவங்கி நிறைவு பெறும் என்பதைத் தங்கள்வாயிலாக சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தென்காசி தொகுதியிலே இருக்கின்ற மையங்களில் என்னென்ன வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்கெனவே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், 9 அரசு கட்டடங்களில் பெரிய பழுதும், 11 அரசு கட்டடங்களில் சிறிய பழுதும் சரி செய்வதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் அமரக்கூடிய நாற்காலிகள், பாய் மற்றும் மின் விசிறிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த மையங்களில், வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னால், நம்முடைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு இந்த மையங்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**256—**

## மகளிர் கல்லூரி

***4194—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சோழவந்தான் தொகுதியில் மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. 17 அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளன. உறுப்புக் கல்லூரி ஒன்று உள்ளது. அதோடுமட்டுமல்லாமல், 14 சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன. மதுரை மாவட்டத்தில் மொத்தம் 10 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 34 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. அதோடுமட்டுமல்லாமல், 2012-2013 ஆம் ஆண்டு, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் மதுரை பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, சோழவந்தான் தொகுதியில் புதிய மகளிர் கலைக் கல்லூரி ஒன்று தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

**திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் செதுக்காவிட்டால் விக்கிரகம் எழுவதில்லை, பிரதிஷ்டை செய்யாவிட்டால், பிராணம் கிடைப்பதில்லை, அதற்கு பூஜை செய்யாவிட்டால் போதிய சக்தி பெறுவதில்லை. அனைத்தும் மனித உணர்வின் வெளிப்பாடு. அசுரக் குணம் படைத்த மனிதர்களில், தெய்வீக ஜாதக குண அமைப்புக் கொண்டவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கலைமகளும் வியந்திடும் கல்விக்கு அதிபதி, மாற்றம் தந்த மக்களின் எண்ணம் ஏற்றம் பெற எண்ணற்ற நலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றின்மூலம் ஏழையெளிய மக்கள் வாழ அயராது உழைக்கும் வாழும் மனித தெய்வம், எங்கள் குலதெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் என்னுடைய சோழவந்தான் தொகுதிக்கு உட்பட்ட அலங்காநல்லூர் ஒன்றியம், சின்ன இலந்தகுளம் கிராமத்தில் நல்ல சாலை, நல்ல குடிநீர் வசதிகளுடன்கூடிய அரசுப் புறம்போக்கு நிலம் சுமார் 16 ஏக்கர் உள்ளது. அந்த இடம், அரசுக் கல்லூரி அமைப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, சோழவந்தான் தொகுதியில் ஓர் அரசுக் கல்லூரி அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.*



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 665 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. 74 அரசுக் கல்லூரிகள் உள்ளன. ஏற்கெனவே 62 கல்லூரிகள் இருந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு கூடுதலாக 12 அரசுக் கல்லூரிகளை வழங்கியுள்ளார்கள். ஆக மொத்தம் 74 கல்லூரிகள் உள்ளன. இதுவரையில் அரசுக் கல்லூரிகள் வழங்கப்படாமலேயே இருந்தன. இவற்றை உணர்ந்து அரசுக் கல்லூரிகள் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்த ஆண்டு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியுள்ளார்கள். அதோடுமட்டுமல்லாமல், அரசு உதவி பெறும் கல்லூரியிலும் கட்டணம் மிக, மிகக் குறைவு. தமிழ்நாட்டில் 133 அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளன. 421 சுயநிதிக் கல்லூரிகள் இருக்கின்றன. 35 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள்* (Constituent Colleges) *உள்ளன.*

[2013 ஏப்ரல் 18

இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பெண்களுக்கென ஒரு கல்லூரியும், பெண்களும், ஆண்களும் சேர்ந்து படிக்கக்கூடிய கல்லூரியுமாக 37 கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கும்பட்சத்தில், தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு 651 எண்ணிக்கையில் இருந்த கல்லூரிகள், இன்றைக்கு 665 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியில் கல்லூரி கட்டுவதற்கு நிலம் இருக்கிறது என்ற ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார். நிலத்தைப் பற்றி இப்போது கேள்வி எழவில்லை. புதியதாகக் கல்லூரி தொடங்க வேண்டும், அதுவும் மகளிர் கல்லூரி தொடங்க வேண்டும் என்றுதான் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்கு முன்பு, தமிழ்நாட்டில் ஆண்களும், பெண்களும் படிக்கக்கூடிய ஒரு நிலை என்று சொன்னால், ஆண்கள் நூற்றுக்கு 53 சதவிகிதம் படித்தார்கள், பெண்களின் படிப்பு நூற்றுக்கு 47 சதவிகிதமாக இருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக, ஆண்களோடு பெண்களும் சரிசமமாகப் படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உருவானதால், ஆண்கள் 51 சதவிகிதமும், பெண்கள் 49 சதவிகிதமும் (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கின்ற நிலைமை இன்றைக்கு உருவாகியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் கல்லூரி அமைப்பதற்கான இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலைக்கு ஏற்ப வருகிற காலங்களில், அதைப் பற்றி அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.



2013 ஏப்ரல் 18]

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பாக வரம் தருகின்ற அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்களுடைய நல்லரசு. சோழவந்தான் தொகுதி ஒரு பாரம்பரியமிக்க தொகுதியாகும். அந்தத் தொகுதியில், சோழவந்தான் ஊருக்கு அருகில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பள்ளி இயங்கி வருகிறது. போதிய மாணவர்கள் சேர்க்கை இல்லாததனால், அந்தப் பள்ளி செயல்படாமல் அப்படியே உள்ளது. அந்தக் கட்டடம் பாரம்பரியமிக்க ஒரு கட்டடமாகும். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மகளிர் நல்லமுறையில் படித்து தேர்ச்சி பெற்று, ஆண்களுக்கு இணையாக, நல்ல நிலையில் கல்வியில் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உண்மையிலேயே வருங்காலத்தில் மகளிர் தன்னம்பிக்கையோடு வாழக்கூடிய அளவிற்கு ஒரு நல்லாட்சியை மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திவரும் இத்தருணத்தில், சோழவந்தான் தொகுதிக்கென்று ஒரு மகளிர் அரசுக் கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு கல்லூரிகள் 62, இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய கல்லூரிகள் 12, ஆக மொத்தம் 74 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 74 கல்லூரிகளில் மகளிருக்கு மட்டும் 19 கல்லூரிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு கூட இரண்டு கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். ஆக, இந்த 21 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மகளிர் படிப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், ஒரு கல்லூரியை ஆரம்பிக்கும்போது நிலம் ஓர் இன்றியமையாத தேவை. நிலத்தோடு அதற்கு நிதியும் ஒதுக்கப்பட வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர்

[2013 ஏப்ரல் 18

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11 பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் துவக்கியிருக்கின்றார்கள். ஒரு பாலிடெக்னிக் கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, 11 பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு இதுவரைக்கும் நாம் வழங்கியிருப்பது 141 கோடி ரூபாய்.

ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால், 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதுவரையில், முதல்வர் அம்மா அவர்கள் 4 பொறியியல் கல்லூரிகளைத் துவக்குவதற்காக அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். இதற்காக மொத்தம் 400 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று சொன்னால், தொடரும் செலவாக ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினமாக மரச்சாமான்கள், கணினி இதுபோன்ற பொருட்களை வாங்குவதற்கு 35 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், கட்டடம் கட்டுவதற்கு மட்டும் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இதுவரை துவங்கப்பட்டுள்ள 36 கல்லூரிகளுக்கு 324 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு மற்றும் கலைக் கல்லூரிகளில், மாணவ, மாணவியர்களுக்கு கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, தளவாடச் சாமான்கள், கணினி இதுபோன்ற உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருவதற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்ல, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி போன்ற மாநகராட்சிப் பகுதிகளில் அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய Regional Centres-ஐ உருவாக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் 150 கோடி ரூபாயை அறிவித்தார்கள். இதுவரையில், வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு உயர் கல்வித் துறைக்கு கட்டடங்கள் கட்டுவதற்காக மட்டும் 1127 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உயர் கல்வித் துறைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே, கட்டடம் கட்டுவதற்கு மட்டுமே 1,127 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, ஏழை, எளிய



2013 ஏப்ரல் 18]

மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள், நடுத்தர மாணவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் எல்லாம் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள்.

மேலும், சமூக நலத் துறையின் மூலமாக பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வைப்பு நிதியாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், அவர்களுக்கு தலா 25 ஆயிரம் வீதம் அவர்கள் பெயரில் வைப்பு நிதியாக செலுத்தப்பட்டிருக்கிறது. 20 ஆண்டுகளுக்குப்பின்புதான் டெபாசிட் தொகையைத் திரும்பப்பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலை முன்பு இருந்தது. அதையும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு 18 வயதிலேயே அந்த வைப்பு நிதியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அவர்கள் உயர் கல்வி பெறுகிற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எந்த ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தாலும், தமிழகத்திலே இருக்கின்ற ஏழை, எளிய மாணவர்களுக்கு உயர் கல்வி போய்ச் சேர வேண்டும் என்ற நோக்கோடுதான் இதுபோன்ற அற்புதமான திட்டத்தை அறிவித்து வருகின்றார்கள். ஆகவே, பெண்கள் நலன் காக்கின்ற அரசாக, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசாக, பெண்களை வாழ்க்கையிலே முன்னேற்றுகிற அரசாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் மீண்டும் ஒரு பெண்கள் கல்லூரியைத் துவக்குவதற்கு அம்மாவின் அரசு எதிர்காலத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் பல அரசுக் கல்லூரிகள் இந்த இரண்டு ஆண்டுகளிலே பல மாவட்டங்களிலே அறிவிக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் அரசுக் கல்லூரிகளில் Laptop வழங்கப்படுகின்றது. இதனை இயக்குவதற்கு பயிற்சி கொடுப்பதற்காக பயிற்றுநர்களும், ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், Computer Science-ல் Ph.D., M.Phil. போன்ற பாடப் பிரிவுகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பல பல்கலைக்கழகங்கள்மூலமாக புதிய பாடத் திட்டங்களும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாடு தேர்வு வாரியத்தில் இந்தப் பாடத் திட்டங்களைப் பதிவு செய்து, பகுதித் தேர்வுக்கு அனுப்புவதில் ஓர் இடைவெளி இருக்கிறது. புதிய பாடத் திட்டங்களைப் பதிவது குறித்த பார்வை, தேர்வு வாரிய ஊழியர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பட்டப் படிப்பு முடித்து வருபவர்கள், இங்கு பதிவு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த இடைவெளியை இட்டு நிரப்புவதற்கு, உயர் கல்வித் துறை முன்முயற்சி எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே உலக அளவில் கல்வித் தரம் உயரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், பாடத் திட்டங்களை மாற்றியமைத்திருக்கிறோம். வேலைவாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்தோடும், ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ளும் நோக்கத்தோடும்தான் பாடத் திட்டத்தை மாற்றியமைத்திருக்கிறோம். பொதுவாகவே, பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டங்களை அந்தப் பல்கலைக்கழகங்களே முடிவு செய்து மாற்றியமைக்கின்றன. அப்படி பாடத் திட்டங்களை மாற்றியமைக்கும்போது, தேர்வாணையம் மூலமாகத் தேர்வு எழுதுகின்றபோது, சில நேரங்களில் தகுதிச் சான்று (Equivalent Certificate) கொடுக்கும்போது, சில பாதிப்புகள் ஏற்படுகின்றன. தகுதிச் சான்று பெறும்பொழுது ஏற்படுகின்ற பாதிப்புகளை இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித்



2013 ஏப்ரல் 18]

தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்ற பின்பு, ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பாடத் திட்டங்களை ஆரம்பிக்கின்றபொழுது, அரசிடம் இருக்கக்கூடிய மாநில உயர் கல்வி மன்றத்தை அணுகி, எந்தெந்த பாடத் திட்டங்கள் எதற்குச் சமமான பாடத் திட்டம், வேலைவாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்காக, அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அந்த ஆலோசனைக் கூட்டத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் இருக்குமாறு பாடத் திட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கின்றபோது, மற்ற பாடத் திட்டமும், எதற்குத் தகுதியான பாடத் திட்டமும், என்பதையும் வரைமுறைப்படுத்தியிருக்கிறோம். அப்படி இருக்கின்ற காலகட்டத்தில், இப்பொழுது தேர்வாணையம் மூலமாக எழுதுகின்றபொழுது, இந்தப் பாடத் திட்டங்களை மறுசீரமைக்கின்ற, அதைத் திருத்தியமைக்கின்ற, அதற்கு தகுதிச் சான்றிதழ் கொடுப்பது போன்ற பணிகள் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தில் இருக்கிறது. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்மூலமாக இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது STET தேர்வு எழுதுகின்றபொழுது, Equivalent Certificate தேவை என்று ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதையும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எந்தப் பாடத் திட்டம் எதற்குச் சமமான பாடம் என்பதை வகுத்தறிந்து, இனிமேல் பல்கலைக்கழகங்கள் புதியதாகப் பாடத் திட்டங்களை ஆரம்பிக்கின்றபொழுது, மாநில உயர் கல்வி மன்றத்தின் பரிந்துரையை ஏற்று, அதற்குச் சமமான பாடத் திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்படுகிறது. ஏற்கெனவே இருந்த அரசால்தான் குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. தற்போது உயர் கல்வி மன்றத்தின்மூலமாக 400 புதிய பாடத் திட்டங்களுக்கு சமன்பாடு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, குளறுபடிகளை நீக்கியதால், எதிர்காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் வராது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு தொழில் முனைப்பை ஊட்டி வளர்த்து, அடைகாத்து உருவாக்கும் இன்குபேட்டர் திட்டம் சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. எனது விருதுநகர் தொகுதியிலுள்ள, இயற்கையிலேயே தொழில் முனைப்பு மிகுந்த மாவட்டமான விருதுநகர் மாவட்டத்தில் உள்ள திரு.வி. கல்லூரி, வி.எச்.எஸ்.என். கல்லூரி, ஏ.ஜி.பி., வெள்ளைச்சாமி பாலிடெக்னிக் ஆகிய கல்லூரிகளில் 2 கல்லூரிகளிலாவது இந்த வருடம் இன்குபேட்டர் திட்டம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிறந்த நடவடிக்கை. ஒரு தொலைநோக்குத் திட்டம். முதன்முதலாக இந்தியாவிலேயே வேறு எந்த ஒரு பல்கலைக்கழகத்திலும் இல்லாத திட்டம். தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தில்தான் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பொதுவாக, இன்குபேட்டர் திட்டம் என்பது படித்த பட்டதாரிகளை, தொழில் முனைவோர்களாக ஆக்கி, அவர்கள் எடுக்கக்கூடிய உத்திகளை, அவர்களுக்குத் தெரிந்த விஞ்ஞான ரீதிகளை, நமது பல்கலைக்கழகத்திற்கு அவர்களைக் கொண்டுவந்து, அவர்களது திறமைகளைப் பயன்படுத்தி, இங்குள்ள மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து, தொழில் முனைவோர்களாக உருவாக்குகின்ற திட்டம் அரசாங்கத்தின்மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் தமிழகத்தில் இருக்கக்கூடிய 10 பல்கலைக்கழகங்களுக்கும், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் 20 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது முதன்முறையாகத் தொடங்கப்பட்டிருக்கும் திட்டம், பல்கலைக்கழகங்களில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், படித்த பட்டதாரிகள் தொழில் முனைவோர்களாக வரவேண்டுமென்று சொன்னால், தனக்கென்று ஏதாவது ஒரு புதிய உத்தியை வைத்திருக்கிறாரென்று சொன்னால், அந்தப் பல்கலைக்கழங்களுக்குச் சென்று அங்கே



2013 ஏப்ரல் 18]

அவர்கள் பயிற்சி பெற்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அந்தப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்து கொடுக்கும். ஆகவே, பயிற்சி பெற்று, அந்தத் திறமைகளினால் நாட்டு மக்கள் பயன்பெறுகிற வகையில், நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிற வகையில், அவர்கள் தொழில் முனைவோர்களாக வெளி வந்து, அவர்களுடைய தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் சொல்லுகிற அந்தக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரி மாணவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்குச் சென்று, தங்களுடைய உத்திகளை அங்கே பயன்படுத்தி, தொழில் முனைவோராக வெளி வருவதற்கு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 12-க்கும் மேற்பட்ட உயர் கல்வி நிறுவனங்களை தமிழ்நாடு அரசு துவங்கியிருப்பது வரவேற்கக்கூடியது. என்னுடைய கேள்வி, தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசு உயர் கல்வி நிறுவனங்களான கல்லூரிகளில், மாலை நேரங்களில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., குரூப்-1, குரூப்-2 மற்றும் மத்திய அரசினுடைய வங்கிப் பணிகள் போன்ற பணிகளுக்கான பயிற்சி வகுப்புகளை தனியாக பல்வேறு நிறுவனங்களே நடத்துகின்றன. அதை ஏன் மாலை நேர வகுப்புகளாக அனைத்துக் கல்லூரிகளிலுமே நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்கக்கூடாது? அதற்குண்டான முயற்சியை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுமா எனத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 62 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 62 கலைக் கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகளில் ஐ.ஏ.எஸ். தேர்விற்கு பயிற்சி வழங்கப்படுகிறது சென்னையிலே* Queen Mary's College, *மதுரையில் இருக்கக்கூடிய மீனாட்சி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு பெண்கள் படிக்கக்கூடிய கல்லூரிகளில் பெண்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு, மாணவிகள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஆகவே, வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மட்டும்தான் இரண்டு கல்லூரிகளில், அதாவது சென்னையில் இருக்கக்கூடிய* Queen Mary's College, *மதுரையிலே இருக்கக்கூடிய மீனாட்சி மகளிர் கல்லூரியிலும் பெண்களுக்காக ஐ.ஏ.எஸ். தேர்விற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே பயிற்சி பெறுபவர்களுக்கு ஏற்கெனவே ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வரவழைத்து, பாட வல்லுநர்களை வரவழைத்து, பயிற்சி கொடுக்கப்பட்டு, அதற்கான முழு செலவையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்கிறது. இதுபோன்ற பயிற்சி பெண்களுக்காக மட்டும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சியில் ஈடுபட்டு, தாங்கள் சொல்லுகிறவர்கள் இதுவரையில் அந்த ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறவில்லை என்று சொன்னாலுங்கூட, குரூப்-1, குரூப்-2, இது போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி பெற்று மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.* Banking Service *போன்ற பணிகளுக்குக்கூட போயிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, நீங்கள் சொல்கிற கருத்தை அடிப்படையாக வைத்து தமிழ்நாட்டில் இரண்டு அரசுப் பெண்கள் கல்லூரிகளில் அந்த செயல்திட்டம் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 ஏப்ரல் 18]

**257—**

### விளைபயிர்களைப் பாதுகாத்தல்

***21024—திரு. வீ.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் விளைபயிர்களை எலிகளிடமிருந்து பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய காவேரி டெல்டா மாவட்டங்களில் விளை பயிர்களை எலிகளிடமிருந்து காப்பதற்கு எலி ஒழிப்பு முகாம்கள், கிராம இயக்க முகாம்கள், விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வீ.பி. நாகைமாலி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் விளைபயிர்களை நாசப்படுத்தும் எலிகளிடமிருந்து பாதுகாக்க அரசிடம் ஏதாவது சிறப்புத் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் எலியை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதற்காக எலி ஒழிப்பு முகாம்கள் கோடைக் காலங்களிலே மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. எலிகளை ஒழிப்பதற்கு எலி மருந்து, மானியத்தில் வழங்குதல் மற்றும்*

[2013 ஏப்ரல் 18

விவசாயிகளுக்கு எலி ஒழிப்பு பற்றிய பயிற்சி முகாம்கள் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் எலி ஒழிப்பு முகாம்கள் நடத்த மாவட்டத்திற்கு ஒன்று என்று மூன்று வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டு, 30,000 ஹெக்டேர் பரப்பளவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முக்கிய தொழிலாகும். இம்மாவட்டங்களின் கிராமப்புற பொருளாதாரம், நெல் சாகுபடியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த நிலையில் விவசாயம் செய்துள்ள நெற்பயிர்களை, எலிகள் புகுந்து நாசம் செய்துவிடுகின்றன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைகின்றனர். விவசாயத்திற்கு காவேரியில் உரிய நீர் கிடைக்காமலும், தாங்க முடியாத விவசாய இடுபொருட்களின் விலையேற்றத்தாலும், இன்னும் பல நெருக்கடிகளாலும், சொல்ல முடியாத துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் விவசாயிகள், தாங்கள் பயிர் செய்த நெற் பயிர்களை நாசப்படுத்தும் எலிகளை ஒழிக்க வழி தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றனர். எனவே, அரசு வேளாண்மைத் துறைமூலம், நெற் பயிர்களை நாசப்படுத்தும் எலிகளை ஒழிக்க, ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, எலிகளிடமிருந்து டெல்டா மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுகுறித்து ஒரு சிறப்பான திட்டத்தை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் அனைத்து



2013 ஏப்ரல் 18]

மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட 15,296 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. கடந்த ஆண்டிலே புரோமோடயலின் மருந்து 16,948 கிலோ விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலே 16,995 வருவாய்க் கிராமங்களிலே 14-4-2013 முதல் உழவர் பெருவிழாக்கள்மூலமாக எலி ஒழிப்பு முகாம்கள்மூலம் பயிற்சியும் அளிக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மாவட்டத்திலே இதுவரை 467 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. 534 கிலோ அளவிலே எலி மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, 815 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே 708 கிலோ அளவு மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 516 எலி ஒழிப்பு முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே 558 கிலோ மருந்து வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் உழவர் பெருவிழாக்கள் மூலமாக, இந்த எலி ஒழிப்பு பற்றிய சிறப்பு முகாம்களும் நடத்தவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**258—**

**புறவழிச் சாலை**

*__6564__—__திரு. மு. ரெத்தினசாமி:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு முதல் கண்டியூர் வரை புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவையாறு நகருக்கு புறவழிச் சாலை அமைக்க சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கையினைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய வாழ்க்கையில் நிம்மதியும், உயர்வும் ஏற்பட வேண்டுமென்ற நோக்கோடு, எதிரிகளின் எண்ணத்தைத் தகர்த்து, மக்களாட்சி செய்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரியில், கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கு, 5 ஆறுகள் ஓடும் என்பதால் திருவையாறு என பெயர் பெற்ற எங்கள் தொகுதியில் மணிமண்டபம் கட்ட ஆணை பிறப்பித்த அன்புத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் தொகுதி தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி ஆகிய 4 மாவட்டங்கள் அடங்கிய தொகுதி. அங்கிருந்து, ஒரு நாளைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட லாரிகள் மணல், சிமெண்ட், செங்கல்களை ஏற்றிச் செல்கின்றன. மேலும் நூறு பேருந்துகள் வரை செல்கின்றன. அதனால், காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து சுமார் 2, 3 மணி நேரம் பாதிக்கப்படுகிறது. மேலும், புனித காரியங்கள் செய்ய 5 மாவட்ட மக்கள் திருவையாறுக்கு வந்து செல்கின்றனர். நீண்டநாள் கோரிக்கையாக உள்ள இந்தப் பிரச்சினையை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், தனது சொந்த தொகுதியைப் போல கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 226 நீட்சி பெரம்பலூர்-தஞ்சாவூர் சாலையில் திருவையாறு முதல் கண்டியூர் வரை கிலோ மீட்டர் 56/2 முதல் 61/4 வரை 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை ரூபாய் 52.14 இலட்சம் செலவில் தயாரிப்பதற்கு மைய அரசின் ஒப்புதலுக்கு 6-8-2012 அன்று அனுப்பி வைக்கப்பட்டு, இதுநாள் வரை ஒப்புதல் கிடைக்கப் பெறாததால், இதனை 2013-2014 ஆம் ஆண்டுக்கான பணிப் பட்டியலில் ரூ.60 இலட்சம் செலவில் தயாரிப்பதற்கு மீண்டும் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன், சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராஜருடைய கீர்த்தனைகள் அனைத்தும் பாடப்பட்ட ஸ்தலம் திருவையாறு ஆகும். தற்போது தியாகராஜர் அறக்கட்டளையை நிருவகித்து வருபவர் ஒரு மத்திய அமைச்சர் ஆவார். அவர், நமது பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினருடைய மாபெரும் தலைவர் ஆவார். ஆகவே, மத்திய அரசிடமிருந்து அனுமதி வாங்குவது மிகவும் சாதாரணமான ஒரு விஷயம் என்பதால், அந்த அனுமதியை ஒரு வாரத்திற்குள்ளேயே பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வாங்கிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று கூறிக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு எங்கள் தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்து, அதனை இந்த ஆண்டு துவக்கி ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய பிள்ளைகளைப் பொறியியல் துறையில் பட்டப் படிப்பு படிக்க ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 18

(மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தனது தொகுதியைப்போல நினைத்து, மிக விரைவிலே திருவையாறுக்கு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி ஒரு வளர்ந்து வரக்கூடிய நகரமாகும். போக்குவரத்து நெரிசலுள்ள நகரத்தில், சென்ற முறை திருத்துறைப்பூண்டி-நாகை சாலையை இணைக்கக்கூடிய புறவழிச் சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறபோது, அங்கிருந்து பட்டுக்கோட்டைக்கோ, மன்னார்குடிக்கோ, வேதாரண்யத்திற்கோ, நாகப்பட்டினத்திற்கோ செல்லும்போது மிகப் பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும், வேதாரண்யத்தில் உற்பத்தியாகும் உப்பு, சவுக்கு போன்றவற்றை அந்த வழியாகத்தான் லாரிகள்மூலம் எடுத்துச் செல்லக்கூடிய சூழல் இருக்கிறது. மேலும், புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கியபோது, அங்கே இருக்கக்கூடிய ஸ்ரீ பவா அவதேஸ்வரர் திருக்கோயிலினுடைய நிருவாக அதிகாரி கோயில் நிலத்திற்கு விலையைக் கூடுதலாகச் சொன்னதால், தொடங்கிய பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, புறவழிச் சாலைப் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரில் அமைக்கப்படவுள்ள சுற்றுச் சாலையின் நீளம் 2.46 கிலோ மீட்டர் ஆகும். இச்சுற்றுச் சாலை அமைப்பதற்கு மொத்தம் 7.52.93 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இதில் தனியாரிடமிருந்து 3.54.37 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான தொகையும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 2.97.87 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன், சுற்றுச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்பகுதியில் guide line value-ன்படி இல்லாமல், இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், கோயில் நிலத்திற்கு அதிகத் தொகையைக் கேட்கின்ற காரணத்தினாலேதான், பணி நிறுத்தப்பட்டிருந்தது என்று சொன்னார். தற்போது அந்தப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டு, முடிவுக்கு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ள காரணத்தினாலே, விரைவாக நில எடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, புறவழிச் சாலை அமைக்கும் பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பட்டுக்கோட்டை சம்பந்தமான கேள்வியாக இருந்தாலும்கூட, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ரெத்தினசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாவட்டம் என்று வரும்போது, அதன் வளர்ச்சியிலே நாங்கள் அனைவரும் நிச்சயமாக ஒன்றாகத்தான் இருப்போம். எனவே, அவர்களுடைய கருத்துகளைப் பொறுத்தவரையிலே, நிச்சயமாக எங்களாலான உதவிகளைச் செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில், சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4.2 கிலோ மீட்டர் தூரம் பைபாஸ் சாலை அமைக்கும் பணி சுமார் 90 சதவிகிதம் நிறைவுபெற்று, முடிவடையும் தருவாயில் உள்ளது. இன்னும் 4.2 கிலோ மீட்டர் நீளச் சாலை போடப்பட வேண்டும். நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஒருவர் வழக்கு தொடுத்திருக்கிறார், கடந்த இரண்டு வருட காலமாக நிலுவையில் இருக்கிறது. தீர்ப்பில் interim stay கொடுத்திருக்கிறார்கள். அந்த interim stay-வை vacate செய்வதற்கான நடவடிக்கைகளை நெடுஞ்சாலைத் துறை எடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான்

*கேட்டுக்கொண்டேன். அவர்களும் அதற்காக முயற்சிகளை நல்லமுறையிலே எடுத்து வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அதற்காக முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். இருப்பினும், நமது மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே தனிக் கவனம் செலுத்தி, இந்தத் திட்டத்தை, 4.2 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணியினைத் தொடங்குவதற்கு ஏதுவாக, நீதிமன்றத் தடையாணையை அகற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கும்பொழுது, நாம் கேட்டவுடனே தீர்ப்புக் கொடுக்கமாட்டார்கள். விசாரணை முடிந்த பிறகுதான் தீர்ப்பு அளிப்பார்கள். வழக்கினை விரைந்து முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு, வேகமாக, துரிதமாக, புறவழிச் சாலை அமைக்கின்ற பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**259—**

## தேங்காய் எண்ணெய் விநியோகம்

***32977—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?*





**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*கூட்டுறவு அங்காடிகளில் பாமாயிலுக்குப் பதில் தேங்காய் எண்ணெய் வழங்க வாய்ப்புகள் இல்லை என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கம் என்னவென்றால், மதிப்பீட்டுக் குழுவிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை உறுப்பினராகப் போட்டிருந்தார்கள். அந்தக் குழுவின் தலைவர், மாண்புமிகு திரு. நாராயணன் அவர்கள் தலைமையில், 12 மாவட்டங்களுக்கு நாங்கள் ஆய்வுப் பயணம் சென்றோம். ஆய்வுப் பயணத்தின்போது, தோழமைக் கட்சி உறுப்பினர்களெல்லாம் வந்திருந்தார்கள். அப்பொழுது தென்னை விவசாயிகள் அழாத குறையாக பல கஷ்டங்களைச் சொன்னார்கள். ஒன்று, காற்று மூலமாக வரக்கூடிய நோயினால் தேங்காயில் சொறி ஏற்படுகிறது, அந்த நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது. இரண்டாவது, எவ்வளவுதான் விவசாயம் செய்தாலும் ஒரு தேங்காய் மூன்று ரூபாய்க்கு மேலே விற்பனை ஆகவில்லை. அதைப் பறிப்பதற்குக் கூலியாட்கள் வருவதில்லை என்பது. இன்னொரு பக்கம் வறட்சி இருக்கின்றது. இப்படிப்பட்ட காரணங்களால் தென்னை மரங்களையெல்லாம் வெட்டக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு வந்துவிட்டது. தமிழ்நாட்டில் 10 இலட்சம் தென்னை விவசாயிகள் கண்ணீர் விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு, தமிழ்நாட்டில் ரேஷன் கடைகளில் ஒரு அட்டைக்கு மாதத்திற்கு ஒரு கிலோ பாமாயில் பாக்கெட் வழங்குகிறார்கள். பாமாயிலிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யைக் கொடுத்தால், தேங்காய்க்கு விலை கூடுதலாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யைக் கொடுத்தால், தென்னை விவசாயிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்ற நோக்கத்துடன்தான், நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். மாண்புமிகு புரட்சித்*

தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதற்கு ஆவன செய்ய முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற கவலை எல்லோருக்கும் இருக்கின்றது. தென்னை விவசாயிகள் அனைவரும் தேங்காய்க்கு சரியான விலை கிடைக்கவில்லை என்ற வருத்தத்தில் இருக்கிறார்கள் என்பது உண்மை.

தற்போது கோடை வெயில் காரணமாக, கிராமப்புறங்களிலும், மாவட்டப் பகுதிகளிலும் இளநீர் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது; நகரங்களில் 20 ரூபாய்க்கு இளநீர் விற்கப்படுகிறது. சென்னை போன்ற பகுதிகளிலே 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ஒரு மாதத்திற்கு 1,72,00,000 கிலோ பாமாயில் கொடுக்கிறோம். அதாவது, 1,72,00,000 பாக்கெட் கொடுக்கிறோம். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 508 கோடி ரூபாயை மானியமாகக் கொடுக்கிறார்கள். அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டமான சிறப்புப் பொது விநியோகத் திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கின்றது என்பது நாட்டு மக்கள் அறிந்த ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாமாயிலுக்குப் பதிலாகத் தேங்காய் எண்ணெய் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். பொதுவாக, தமிழகத்தில் தேங்காய் எண்ணெய்யை ஆண்டாண்டுக் காலமாக தலைக்குத் தடவுவதற்குத்தான் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். சமையலுக்குப் பெரும்பாலும் பயன்படுத்துவது கிடையாது. சமையலுக்கு ஒரு சிலர் பயன்படுத்துகிறார்கள். பெரும்பான்மையான மக்கள் தமிழகத்திலே தேங்காய் எண்ணெய்யை சமையலுக்குப் பயன்படுத்துவது கிடையாது.





ஒரு முறை 1984 ஆம் ஆண்டு மத்திய அரசு தமிழகத்திற்கு 1,050 மெட்ரிக் டன் அளவு தேங்காய் எண்ணெய்யை ஒதுக்கீடு செய்தது. அதை பொது விநியோகத் திட்டத்தின்மூலம் நியாய விலைக் கடைகளில் வழங்கலாம் என்று சென்னை, நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். கேரளாவிலே தேங்காய் எண்ணெய்யை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், 1984 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட தேங்காய் எண்ணெய்க்கு மக்களிடம் வரவேற்பு இல்லாமல், அப்படியே தேங்கிப் போய்விட்டது. கேரளாவின் பக்கத்திலே இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படவில்லை என்பதனால், அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி இருக்கின்ற காரணத்தினால்தான், இந்தக் கேள்வியையே நான் கேட்டேன். காரணம், யாருமே பிடிக்க முடியாத சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடித்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்ற தீர்ப்பைப் பெற்றது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை இந்திய அரசிதழில் வெளியிட்டு வெற்றி பெற்றது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போல, நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் கொடுப்பதால், அரசுக்கு அதிக நிதிச் சுமை இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், 10 இலட்சம் தென்னை விவசாயிகளின் நலனைப் பார்க்க வேண்டும். காரணம், தென்னை விவசாயிகள் இப்போது நலிந்து போய்விட்டார்கள். தற்போது மாற்று விவசாயத்தைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

[2013 ஏப்ரல் 18

ஆகவே, தயவுசெய்து தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யாவிட்டாலும்கூட, பள்ளிகளுக்கு 13 வகையான கலவை சாதத்தை அம்மா அவர்கள் இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். பள்ளிகளுக்கு ஒரு நாள் சமையலுக்கு தேங்காய் எண்ணெய்யை வழங்கலாம். அப்படிக் கொடுத்தால்கூட, தேங்காயின் விலை ஏற்றத்திற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு டாக்டரே என்ன சொல்கிறார் என்று சொன்னால், தினமும் ஒரே எண்ணெய்யைப் பயன்படுத்தாதீர்கள், Cholesterol வருகிறது என்கிறார்கள். ஒரு நாள் கடலை எண்ணெய் பயன்படுத்து, ஒரு நாள் நல்லெண்ணெய் பயன்படுத்து, ஒரு நாள் தேங்காய் எண்ணெய் பயன்படுத்து என்கிறார்கள். இதுதான் இன்றைய நிலைமை. அதேமாதிரி, கேரளாவில் சாவு எண்ணிக்கை குறைந்திருக்கிறது. என்னவென்று ஆய்வு அறிக்கையில் பார்த்தால், தேங்காய் எண்ணெய்யை அதிகமாகப் பயன்படுத்துவதால், Heart attack அங்கில்லை. இந்தியாவில் அதிகம் படித்தவர்கள் உள்ள மாநிலம் கேரளா. ஆனால், இன்றைக்கு அதிகம் படித்தவர்கள் என்ற நிலையை அடைந்து, அம்மா அவர்களின் ஆட்சியால் தமிழகம் முதன்மை மாநிலமாக வந்து கொண்டிருக்கிறது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், தேங்காய் எண்ணெய்யை கேரளா மாநிலம் முழுவதும் பயன்படுத்துகிறார்கள். அங்கு Heart attack கிடையாது; Cholesterol கிடையாது; ஆகவே, இந்த ஆரோக்கியமான தேங்காய் எண்ணெய்யை தமிழக மக்களுக்குக் கொடுத்தால். தமிழகத் தென்னை விவசாயிகள் பலனடைவார்கள் என்பதுதான் இந்தக் கேள்வியின் நோக்கம். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயிலைப் பொறுத்தவரை, அது balanced saturated and unsaturated fatty acids, அதாவது செறிவூட்டப்பட்ட கொழுப்பு அமிலங்களும், செறிவூட்டப்படாத கொழுப்பு அமிலங்களும் சரிவிகிதத்தில் கொண்டதாக இருக்கிறது. அனைத்து வயதினரும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது.



2013 ஏப்ரல் 18]

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலவும் தட்பவெட்ப நிலைக்கேற்ப, எவ்வளவு நாட்கள் இருந்தாலும் உறையாமல் திரவ நிலையில் இருக்கக்கூடிய எண்ணெய்யாக இருக்கிறது. தயாரிக்கப்பட்டது முதல் இரண்டு ஆண்டுகள் வரை கெடாமல் இருக்கிறது. எனவேதான், பாமாயில் தமிழகத்தில் பயன்படுத்தப்படுகிறது. பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்துவது என்பது முடியாத ஒன்றாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எண் ஜாண் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்று சொல்வார்கள். அந்தத் தலையிலே தேங்காய் எண்ணெய்யைத்தான் நாம் தடவுகிறோம். தொன்றுதொட்டு, பல்லாண்டுக் காலமாக தேங்காய் எண்ணெய்யைத்தான் தலைமுடிக்குப் பயன்படுத்துகிறோம். தலைமுடியிலிருந்து தேங்காய் எண்ணெய் உரோமக் காலுக்குச் சென்று, மூளையைக் குளிர்ச்சியடையச் செய்து, மூளையை சுறுசுறுப்பாக இயங்க வைக்கிறது. தேங்காய் எண்ணெய் பல்வேறுவகையான மூலிகைகளைத் தயார் செய்வதற்கும், கேரளாவில் ஆயுர்வேத மருத்துவமனைகளிலேயும் பயன்படுத்தப்படுகிறது. சமீபகாலத்தில் இவ்வளவு சிறப்புவாய்ந்த தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்தினால் கொழுப்புச் சத்து அதிகமாகும் என்றும், Heart attack வரும் என்றும், பல்வேறு நோய்கள் வரும் என்றும் வணிக நிறுவனங்கள் தவறான செய்தியைப் பரப்புவதன் காரணமாக, தேங்காய் எண்ணெய்யின் பயன்பாடு குறைந்திருக்கிறது. தமிழகத்திலே கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம், சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளிலே பிரதான தொழிலாக இருப்பது தென்னை விவசாயம்தான்.

[2013 ஏப்ரல் 18

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** காவேரி டெல்டா பகுதி மக்களுக்கு நெல் விவசாயம் எப்படி முக்கியமோ அதைப்போல, 40 சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் தென்னை விவசாயம்தான் பிரதானமாக இருக்கிறது. எனவே, தேங்காயைப் பயன்படுத்தி தயார் செய்கிற தேங்காய் எண்ணெய்யை தமிழகத்தினுடைய அனைத்து நியாய விலைக் கடைகளிலும், பாமாயிலுக்குப் பதிலாக விநியோகிப்பதற்கு விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகளை உடனடியாகத் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேங்காய் எண்ணெய்க்கு எதிராகத் தொடங்கியிருக்கிற தவறான பிரச்சாரத்தை, மத்திய அரசு பத்திரிகை வாயிலாக விளம்பரம் கொடுத்து, முறியடித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் தென்னை விவசாயிகளை ஊக்கப்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இந்தத் துறைக்கு அவரும் அமைச்சராக இருந்திருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆராய்ச்சி செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களும் கூறியவை எல்லாம் முழுக்க முழுக்க உண்மை. காரணம் என்னவென்றால், இங்கே சென்னை மாநகரத்தில் தேங்காய் எண்ணெய்யில் சமைக்கின்ற ஒரே கடை நாயர் மெஸ். சட்டமன்ற உறுப்பினர்களில் பாதிப் பேரை நாயர் மெஸ்சிலே பார்க்க முடிகிறது. உண்மையிலேயே நான் சென்னையை முழுக்க சுற்றியிருக்கிறேன். தேங்காய் எண்ணெய்யில் பொரித்த ஆம்லெட் சாப்பிட வேண்டுமானால் அது நாயர் மெஸ்சில்தான் கிடைக்கும். வேறு எந்தக் கடையிலும் கிடைப்பதில்லை. தேங்காய் எண்ணெய் கொழுப்பைக் கட்டுப்படுத்துகிறது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** தேங்காய் எண்ணெய் கொழுப்பைக் கட்டுப்படுத்துகின்றது. சென்னையில் Heart attack வருவதுபோல, கேரளாவில் வருவது கிடையாது. அங்கே நல்ல மருத்துவர்கள் இருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் படுகிற பாட்டைப் பார்த்தால், உண்மையிலேயே சங்கடமாக இருக்கிறது. தேங்காயைப் பறிப்பதற்குக்கூட அங்கே ஆள் கிடைப்பதில்லை. தேங்காயை விற்றால் கிடைக்கும் வருமானம் தேங்காயைப் பறிப்பதற்கு சம்பளம் கொடுப்பதற்குப் போதவில்லை. ஆகவே, தேங்காயைப் பறிக்காமலேயே விட்டுவிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் கூறியதுபோல, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, தேங்காய் எண்ணெய்யை நியாய விலைக் கடைகளிலே உபயோகப்படுத்துவதற்கு கண்டிப்பாக ஆவன செய்ய வேண்டுமென்று அன்பாய்க் கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு மாறாக எதையும் நாம் திணிக்க முடியாது. பெரும்பான்மையான மக்கள் எதை விரும்புகிறார்களோ, அதைத்தான் நாம் நடைமுறைப்படுத்த முடியும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மசாலா பாக்கெட்டுகள் நியாய விலைக் கடைகளில் கொடுப்பது என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 50 ரூபாய் மசாலா பாக்கெட் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு அதை வாங்க ஆள் இல்லை என்றதும், அதை 25 ரூபாயாகக் குறைத்தார்கள். 25 ரூபாயாகக் குறைத்தும், 'கடை விரித்தார்; கொள்வாரில்லை' என்று சொல்வார்களே அதைப்போல, பூச்சி வந்து, கடையைவிட்டு பாக்கெட்டுகளை வெளியே போடுவதே பெரிய விஷயமாகி விட்டது. பிறகு, அந்தத் திட்டமே கைவிடப்பட்டு விட்டது. எனவே, நடைமுறை சாத்தியக்கூறு எதற்கு இருக்கிறதோ, அதைத்தான் செய்ய முடியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) உட்காருங்கள். நான் கூப்பிடாமலே நீங்கள் எழுந்துவிட்டால் என்ன அர்த்தம்? மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் 25 ஆண்டுக் காலம் தேங்காய் எண்ணெய் உற்பத்திச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். இந்தியாவில், ஒரு காலத்தில், தேங்காய் எண்ணெய் என்று சொன்னால், கேரள மாநிலம், கொச்சிதான் பிரபலமாக இருந்துகொண்டிருந்தது. அந்த நிலை இன்று மாறி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், இந்தியாவில், தமிழ்நாட்டில், திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் 10 ஆண்டுகளாக கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். மத்திய அரசு, உலக நாடுகளிலிருந்து





பாமாயில், crude palm எண்ணெய்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்றவற்றைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தி செய்கின்றபோது, விவசாயம் செய்வதற்கு வேலை ஆட்களும் கிடைப்பதில்லை. சம்பளம் மற்றும் செலவுகள் அதிகமாக இருக்கிற நிலையிலும், இன்றைக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருந்தாலும், அவற்றையெல்லாம் மீறி முயற்சி செய்து, தென்னை விவசாயத்தை அதிகப்படியாகச் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள். இங்கிருக்கின்ற டாக்டர்கள் தேங்காய் எண்ணெயில் கொழுப்புச் சத்து உள்ளது என்று தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் அதிகம் படித்தவர்கள், கேரள மாநிலத்திலே இருக்கிறார்கள். உலக நாடுகளில் அவர்கள் எங்கிருந்தாலும், தேங்காய் எண்ணெய்யை உணவுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

*முற்பகல் 11-05*

இந்தியாவில் ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்துகின்றபோது, கேரள மாநிலத்தில் திடீர் இறப்பு மிகக் குறைவாக உள்ளது என்று தெரிய வந்தது. அதனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து நியாய விலைக் கடைகளிலும், பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யைக் கொடுத்தால், மிக நன்றாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். நான் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு தேங்காய் வியாபாரம் செய்தேன். 10 ஆண்டுகளுக்கு முன்பு 10 ரூபாய்க்கு ஒரு தேங்காய் வாங்கினேன். இன்றைக்கு 20 ஆண்டுகள் கழித்தும், தேங்காய் 3 ரூபாய், 4 ரூபாய்க்கு விற்பனை ஆகின்ற காரணத்தினால், விவசாயம் செய்து வந்த அனைத்து விவசாயிகளும், தென்னை மரத்தை வெட்டுகின்ற நிலையில் இருக்கின்றோம். ஆகையால், 30 ஆண்டுகளுக்கு முன்பாக 10 ரூபாய்க்கு விற்ற தேங்காய், இன்றைக்கு 30 ரூபாய்க்கு விற்பனை ஆகவேண்டும். ஆனால், மிகப் பெரிய அளவிலும், குறைவான விலைக்கே விற்பனை செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ்.என். நடராஜ், கேள்வியைக் கேட்டுவிட்டு உட்காருங்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மிகப் பெரிய பாதிப்பு தென்னை விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஆகையால், மாண்புமிகு அம்மா

[2013 ஏப்ரல் 18

அவர்கள் கருணை கூர்ந்து இதனை பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் சொந்தமாக தென்னை மரங்கள் இருக்கின்றன; தென்னந்தோப்பு இருக்கிறது. அதனால், அனைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கும் நான் பதில் சொன்னதைப்போல, இதில் என்ன வாய்ப்பு இருக்கிறதோ, அந்த வாய்ப்பின் அடிப்படையில், அதை ஆய்வு செய்து, நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பதனைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், விவசாயிகளுடைய தோழனாக விளங்குகிற அரசு; விவசாயிகளுடைய தோழனாக விளங்குபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட உழவர் பெருவிழாவையொட்டி, கடந்த 14 ஆம் தேதி, தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வு ஊர்திகள் சென்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த விழிப்புணர்வு ஊர்திகளின்மூலமாக எல்லாக் கிராமங்களிலும், முக்கியமாக இளநீரைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டுமென்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், அந்த ஊர்திகளில் கருத்துப் படங்கள் ஒட்டப்பட்டு சென்று கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களுக்கு, தமிழக விவசாயிகளுக்கு எது நல்லது என்று எண்ணுகிறார்களோ, எது நன்மை பயக்கும் என்று எண்ணுகிறார்களோ, அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவார்கள் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவை பரிசீலிக்கப்படும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு



2013 ஏப்ரல் 18]

பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**260—**

**பால் பண்ணை**

***5269—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் கூட்டுறவு பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மேட்டூர் தொகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் சேலம் பால் பண்ணை உள்ளதால், மேலும் ஒரு பால் பண்ணை அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே 663 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அதில் குறிப்பாக மேட்டூர் தொகுதியிலே, கொளத்தூர், மேச்சேரி, நங்கவல்லி ஒன்றியங்களிலே

82 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றோடு சங்ககிரி, எடப்பாடி, தாரமங்கலம் போன்ற இடங்களில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்தால், 300-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதனடிப்படையிலும், சேலம் மாவட்டம் பெரிய நிலப்பரப்பை உடையதாலும், மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு பால் பண்ணை அமைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர் பால் சேகரிப்புக் குழு அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் மற்றும் பால் விற்பனை அலுவலகம் ஆகியவை தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில், மொத்த பால் கொள்முதல் 32,250 லிட்டர் ஆகும். அந்தத் தொகுதியில் 9 பால் குளிர்விப்பான்கள் உள்ளன. அங்கு பால் கொள்முதல் அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலையில், மேற்கொண்டு பால் குளிர்விப்பான்கள் தேவை என்பதை அறிந்து, இரண்டு 5,000 லிட்டர் பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்குண்டான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அந்தத் தொகுதியில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான் இருக்கிறது. மேலும், அதை 5,000 லிட்டர் கொள்ளளவில் அதிகப்படுத்துகின்றவிதமாக அமைக்கப்பட இருக்கின்றது. இந்தக் குளிர்விப்பான்களுடைய கட்டடங்கள் ஒன்றியத்தின் மூலமாகக் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமெனில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிலும் மாணவர்களுடன், கூட்டு முயற்சியில் ஆவின் பாலகம் நிறுவப்படும் என்ற புதுத் திட்டத்தினை இந்த அரசு கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது. அனைத்துக் கல்லூரிகளிலும் பாலகங்கள் துவக்கப்படுமா என்பதையும், குறிப்பாக எனது மேட்டூர் தொகுதியிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு என்ன உதவிகள் அளிக்கும் என்பதை தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்முனைவோர் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக, அனைத்துக் கல்லூரிகளிலும் இருக்கின்ற மாணவர்களை அழைத்து, அவர்களுக்கு ஆவின் நிறுவனத்தின் சிறப்பைப் பற்றியும், ஆவின் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் பொருட்களைப் பற்றியும் எடுத்துச்சொல்லி, இந்தத் தொழில் ஒரு சாதாரண தொழிலாகத் தற்போது தொடங்கப்பட்டாலும், பிற்காலத்திலே நீங்கள் சுயதொழில் தொடங்குவதற்கு இது ஏதுவாக இருக்கும் என்று கருத்துரை வழங்கப்பட்டு வருகிறது. இதனால், அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் தற்போது ஆவின் பாலகங்களை அமைக்க முன்வருகிறார்கள். சில கல்லூரிகளில் ஆவின் பாலகங்கள் தொடங்கப்பட்டு, மாணவர்களால் இன்று விருப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு தொழிலாக அமைந்து கொண்டிருக்கின்றது. அதனடிப்படையில், இன்றைய அறிக்கையில்கூட, அனைத்துக் கல்லூரிகளிலும் ஆவின் பாலகங்கள் திறக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகையால், அனைத்துக் கல்லூரிகளிலும் ஆவின் பாலகங்கள் திறக்கப்படும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதியில் ஆவின் பாலகம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்பாரேயானால், அதை

[2013 ஏப்ரல் 18

*அமைத்துத் தருவதற்கு ஆவின் நிறுவனம் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**261—**

## கால்நடை மருத்துவமனைக் கட்டடம்

***13296—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, பின்னங்குடிப்பட்டியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, பின்னங்குடிப்பட்டியில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அங்கே கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், அங்கே கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் அழியாத மொழி நம் தமிழ் மொழி; அதுபோல, காலத்தால் நீடித்து நிலைத்திருக்கும் அழியாப் புகழ் கொண்டவர் நம் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்குச் செய்கின்ற தொண்டு தரணிக்கே செய்கின்ற தொண்டு என்று கருதி, தமிழ் அறிஞர்களுக்கு விருதுகள் கொடுத்ததன்மூலம், தமிழ்த் தாயும் பாராட்டுகின்ற எங்கள் தமிழகத்து தாயாம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, விரைவில் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.*



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**262—**

## பின்னலாடைப் பூங்கா

***6502—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பெண்களுக்கென பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் பெண்களுக்கென பின்னலாடை பூங்கா மற்றும் ஆயத்த ஆடை பூங்கா துவங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 18

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம், மிகவும் வறட்சிக்குள்ளான பகுதி. அங்கு வாழும் பெரும்பாலான மக்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா, பெங்களூரு மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று வாழ்க்கையை ஓட்டுகின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக, பெண்களின் நிலை மிகவும் அவலமான நிலையில் இருக்கிறது. அங்கு, குறைந்தபட்சம் ஓர் ஆயத்த ஆடை, பின்னலாடைத் தொழிலையாவது ஆரம்பித்தால், அப்பெண்களுக்கு வாழ்க்கையை ஏற்படுத்தித் தர ஒரு வாய்ப்பாக அமையும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தியத் திருநாட்டில் 40 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில், 10 ஜவுளிப் பூங்காக்கள் நம்முடைய தமிழகத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பூங்காக்களில், நூற்பு மற்றும் சாயம் ஏற்றுதல், பதனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன; ஆட்டோ லூம் எனப்படும் நெசவு மற்றும் பின்னலாடை, ஆயத்த ஆடைகள் விற்பனை செய்யப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நெசவாளர் பெருமக்களின் வேலைவாய்ப்புக்காக இந்தப் பூங்காக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. நெசவாளர்கள் அதிகம் இல்லாத பகுதியாக தருமபுரி மாவட்டம் இருக்கிறது. தொழில்முனைவோர் ஆணா, பெண்ணா என்பது முக்கியம் அல்ல. தொழில் பூங்காவில் வேலைபார்ப்பவர்களில் 3-ல் 2 பகுதி, பெண்கள்தான் உள்ளனர் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தருமபுரி மாவட்டத்தில் தொழில்முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2013 ஏப்ரல் 18]

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஆயத்த ஆடைகள் தயாரிப்பதற்காக ஊராட்சி ஒன்றிய பழைய அலுவலகத்தைத் தந்து, அரசும் 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஆயத்த ஆடை தயாரிப்புப் பயிற்சி அளிப்பதற்கும், ஆயத்த ஆடை தயார் செய்வதற்குத் திட்டங்களை வகுத்தும் அதற்கான அலுவலகமும் ஒதுக்கித் தரப்பட்டது. அன்று அலுவலகம் திறக்கப்பட்டதாக அறிவித்து, அன்றே மூடுவிழா நடத்தியது; இன்றளவும் அது திறக்கப்படவில்லை. 4 ஆண்டுகளாக மூடி இருக்கிற அந்த ஆயத்த ஆடை தயாரிப்புப் பயிற்சி மையத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி அருகில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில்தான் பாவலூரில் 25 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இன்றைய தினம் 26 கோடி ரூபாய் மதிப்பில் அங்கே ஆயத்த ஆடைப் பூங்கா செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கடந்த கால ஆட்சியில் ஏதாவது அப்படி ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு அது செயலற்று இருக்குமேயானால், இந்தத் துறை சிறப்பாக ஆய்வு செய்து மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**263—**

## பேருந்து வசதி

*__22436__—**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலிலிருந்து சென்னைக்கு 19-6-2012 முதல் அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இயக்கப்பட்டு வருகிறது. அந்தப் பேருந்தின் மொத்த இருக்கையில் தற்போது 69 சதவிகிதப் பயணிகள் மட்டுமே பயணம் செய்து வருகின்றனர். பயணிகளின் எண்ணிக்கை வரும் ஆண்டுகளில் அதிகரிக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எல்லா வகைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில், அனைத்திலும் நவீனம் இருந்தும், பேருந்து இயக்கத்திலே நவீனம் இல்லை என்ற சங்கடமான விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று நம்முடைய மாநிலத்திலே அதிநவீன வசதிகளுடன் தனியார் பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.* Multi axle *பேருந்துகள்,* AC Coach-*கள் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிற காரணத்தால், பயணிகள் அவற்றையே பயன்படுத்திக்கொள்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பல்வேறு முக்கிய நகரங்களிலிருந்து வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்திலே சென்னைப் பகுதிக்கும் வாகனங்கள் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே நம்முடைய அரசுப் பேருந்துகள் சரியான நேரப்படி இயங்கவில்லை; நவீனப்படுத்தப்படவில்லை; ஆகவே, பயணிகள் அதிகமாக அவற்றைப் பயன்படுத்தவில்லை என்பது உண்மை. அதுமட்டுமல்ல, நம்முடைய பேருந்துகளை 70 கிலோ மீட்டர் ஸ்பீடில்தான் ஓட்டுகிறோம். அதனால், நாம் குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல முடியாது.*



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *ஆகவே, ஸ்பீடை அதிகப்படுத்த வேண்டும்;. சிறப்பான முறையிலே பேருந்தை இயக்க வேண்டும்; நவீனப்படுத்த வேண்டும். அப்படி நவீனப்படுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குகின்றபோது, நிச்சயமாக அதிக அளவில் பயணிகள் பயன்பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலக்கட்டத்திலே, அரசுப் பேருந்துகள் முதன்மை நிலையில் இருந்தன. தனியார் பேருந்துகள் எல்லாம் ஓதுக்கப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட சூழ்நிலையை இந்த ஆட்சியாளர்கள் கொண்டு வர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்துகளை நவீன முறையில் இயக்க வேண்டும் என்றும், அதனை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். குளச்சலிலிருந்து சென்னைக்கு ஏசி பஸ் இயக்க முன்வர வேண்டும் என்றும், அதுபோல தமிழகத்திலுள்ள முக்கிய நகரங்களிலிருந்து புதிய, நவீன பேருந்துகள் இயக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய குளச்சல் தொகுதியில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த 23 மாத ஆட்சிக் காலத்தில், 11 புதிய வழித் தடங்களில் குளச்சல் தொகுதி மக்கள் பயன்படக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய*

[2013 ஏப்ரல் 18

உத்தரவினைப் பெற்று, புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு மக்கள் வசதியாக வந்து செல்ல குளிர்சாதனப் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து, முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவதற்குண்டான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து செல்லக்கூடிய பயணிகள் வசதியாக வந்து செல்ல வேண்டும் என்பதற்காக அனைத்து விரைவுப் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளை நவீன வசதிகள் கொண்ட, Push back இருக்கைகள் கொண்ட, Ultra Deluxe பேருந்துகளாக, மாற்ற வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, இன்று Ultra Deluxe பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்துகள் அதி நவீன வசதிகள் கொண்டவையாக இருக்கவேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், 49 இருக்கைகள் கொண்ட அந்த Ultra Deluxe பேருந்துகளின் இருக்கைகளை, 43 ஆகக் குறைத்து, பயணிகளின் இருக்கை எண்ணிக்கைக்கேற்ப வசதிகள் செய்து, சௌகரியமாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன்படி இன்று விரைவுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.



2013 ஏப்ரல் 18]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் ஒரு முக்கியமான வளர்ந்துவரும் நகரம் என்ற காரணத்தினால், அதிகமான பேருந்துகள் தேவை. அதிகமான பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதிக்குத் தந்தார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குளச்சலிலிருந்து மீனவர்கள் அதிகமாக கேரளாவிற்கு மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். மீன் பிடித் தொழில் செய்யும் மீனவர்களின் வசதிக்காக குளச்சலிலிருந்து கேரளா மாநிலத்தில் உள்ள எர்ணாகுளத்திற்கு நவீன பேருந்துகளை இயக்கவும், என் தொகுதிக்குட்பட்ட கோழிபோர் பகுதியிலிருந்து நாகர்கோவிலுக்கு ஒரு பேருந்து இயக்கவும், முட்டம், ஜேம்ஸ் நகரிலிருந்து நாகர்கோவிலுக்கு ஒரு பேருந்து இயக்கவும், மணவாளக்குறிச்சியிலிருந்து கேரளா எல்லை, தமிழக பார்டரில் உள்ள களியக்காவிளைக்கு ஒரு பேருந்து இயக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் பேருந்துகளுக்கு இணையாக அரசுப் பேருந்துகளிலும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று முன்பு ஒரு கேள்வியில் கேட்டிருந்தார். தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை தினங்களில் தனியார் பேருந்துகளைவிட, அரசுப் பேருந்துகள் மீது நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாகவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற சீரிய நடவடிக்கையின் காரணமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு பேருந்தில் செல்ல வந்த பயணிகள் ஒருவர்கூட, எங்களுக்கு பேருந்து வசதியில்லை என்று திரும்பிச் சென்ற வரலாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 ஏப்ரல் 18

எத்தனை பயணிகள் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு வந்தார்களோ, அத்தனை பயணிகளுக்கும் சிறப்புப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்தப் பேருந்துகள்மூலம் மக்கள் சொந்த ஊருக்குச் சென்று வந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த வழித்தடங்களில், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**264—**

## மாணவர் விடுதி

*__27895—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:__

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர் விடுதி



2013 ஏப்ரல் 18]

துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை சில நாட்களுக்கு முன் இம்மாமன்றத்தில் துணைக் கேள்வியாகக் கேட்டிருந்தார்கள். அங்கு இருக்கின்ற அவசர, அவசியத்தைக் கருதி, அங்கே விடுதிகள் துவக்குவதைக் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மகத்தான சக்தி, மாட்சிமை பொருந்திய தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பர்கூர் மலைப் பகுதி 30-க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க வேண்டுமானால், 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அந்தியூரில் உள்ள அரசு விடுதியில் தங்கித்தான் படிக்க வேண்டும். பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இந்த விடுதிக்கு வருவதால், மலைக் கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்களுக்குப் போதிய இடம் கொடுக்க முடியவில்லை. எனவே, கல்வித் துறையிலே தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) கனிவுடன் பரிசீலித்து, பர்கூர் மலைப் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று ஒப்பற்ற பொற்கால ஆட்சியை அளித்து வருகின்றார்கள். குறிப்பாக, கல்வித் துறையில், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற மிகக் குறுகிய காலத்தில், 23 மாதங்களுக்குள் 56 விடுதிகளைப் புதிதாகத் திறப்பதற்கு ஆணையிட்டு, இன்று அனைத்து விடுதிகளும் துவக்கப்பட்டுள்ளன. சென்ற ஆட்சிக் காலத்தில் அந்த 56 விடுதிகளிலும் 50 மாணவர்கள் அல்லது மாணவியர்களை தங்க வைத்தார்கள். ஆனால், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி, ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவர்கள் அல்லது மாணவியர்கள் தங்கிப் படிக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள மாணவ, மாணவியர்கள் கல்வி கற்பதற்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றார்கள். குறிப்பாக, விடுதிகளில் வசதிகளைக் கொடுப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அவற்றை ஆரம்பிப்பதற்கு ஆணையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி, அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் விடுதி கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமைகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 ஏப்ரல் 18]

**265—**

## ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

***20117—திரு. ப. தன்சிங்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் கண்டோன்மென்ட் பகுதி புல எண் 769-ல் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் கண்டோன்மென்ட், புல எண் 769-ல் விஸ்தீரணம் 0.38.5 ஹெக்டேர் நிலம், கிராமக் கணக்குகளில் கண்டோன்மென்ட் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலம் மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ளதாலும், மேற்படி புல எண்ணில் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைத்திட வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.*

**திரு. ப. தன்சிங்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் வருவாய்த் துறைக்குச் சொந்தமானது. ஏற்கெனவே, அங்கே அங்கன்வாடி மையமும், வியாபாரிகள் சங்க வளாகமும் கட்டப்பட்டுள்ளன. எனவே, மக்களின் நலன் காப்பதில் இந்தியாவிலேயே ஒப்பாரும், மிக்காரும் இல்லாத வகையில், ஆட்சி புரிந்துவரும் பொன்னியின் செல்வி, நாளைய பாரதத்தின் விடிவெள்ளி (மேசையைத் தட்டும் ஒலி) உலகமே வியந்து பாராட்டிப் போற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர், என்னுடைய குடும்பத் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் உள்ள அரசு பல்லாவரம் தொகுதி மக்களின்*

நன்மையைக் கருதி, மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்து அங்கே ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக்கீழே இருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே ஒரு மாவட்டம் புதிதாக அமைக்கப்படுகிறபோது, அந்த மாவட்டத்தினுடைய பல்வேறு அலுவலகங்களும் மக்கள் தங்கள் தேவைகளுக்காக ஒவ்வொரு அலுவலகமாக ஏறி, இறங்கக்கூடிய சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்கிற எண்ணத்திலும், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய போக்குவரத்து சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்கிற எண்ணத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மூன்றாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலே, திருப்பூர் மாவட்டத்தை அறிவித்தபோதே, மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக அலுவலகத்தை 34 துறை அலுவலகங்களும் ஒரே இடத்திலே அமையக்கூடிய அளவிலே, 103 கோடி ரூபாய் செலவிலே, மிகப் பெரிய ஒரு திட்டத்தை திருப்பூர் மாவட்டத்திலே துவக்கி வைத்தார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, அரசுத் துறை அலுவலகங்களுடைய கட்டடங்கள் பொதுவாக நல்ல முறையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதி, கண்டோன்மென்ட் பல்லாவரம் பகுதியானது அரசினுடைய வருவாய்த் துறைக் குறிப்பிலே, கண்டோன்மென்ட் பகுதியென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, தேவைப்படுகிறபட்சத்தில், மாற்று இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால், மாவட்ட ஆட்சியரின் கருத்தினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.

**திரு. ப. தன்சிங்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில், பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**266—**

### பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***8867—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே பெறப்பட்ட கருத்துருவில் வாய்ப்பில்லையென்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடனும், பரிவுடனும் பரிசீலனை செய்து, 2013-2014 ஆம் கல்வியாண்டில் பெறப்பட்ட கருத்துருவில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட 4-4-2013 ஆம் நாளிட்ட கருத்துருவில் அறிவிக்கப்பட்டுள்ளது. வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம்,

[2013 ஏப்ரல் 18

புளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொது மக்களுடைய பங்குத்தொகை ரூ.2.00 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் போதுமான இடவசதி உள்ளதென்றும் தெரிவித்துள்ளபடியால், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிந்துரை செய்துள்ளார் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி, செம்மலைத் தலைவி, காவேரித் தலைவி, இன்றைய தமிழகத்தினுடைய தலைவி, நாளைய பாரதத்தினுடைய தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றின் சிறப்பு தென்றல் வீசுவது, மேகத்தின் சிறப்பு மழை தருவது, மரத்தின் சிறப்பு நிழல் தருவது, கனியின் சிறப்பு சுவை தருவது, படையின் சிறப்பு வெற்றி தருவது, வெற்றியின் சிறப்பு மகிழ்ச்சி தருவது, கடவுளின் சிறப்பு அருள் தருவது, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்பு நல்லாட்சி தருவது. அத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்து, எல்லாத் துறைகளுக்கும் முதன்மைத் துறையாகவும், முன்னோடித் துறையாகவும் விளங்கும் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி, கல்லாமையை இல்லாமையாக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புளியம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை தரம் உயர்த்துவதற்குத் தேவையான பொது மக்களுடைய பங்குத்தொகை, இடவசதி மற்றும் இயக்குநர் அவர்களின் பரிந்துரை அனைத்தும் இருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆண்டு தரம் உயர்த்தப்படுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு அந்தப் பள்ளி தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்று கூறிய மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**267—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***21657—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதத்திற்கு 30 முதல் 40 பிரசவங்கள் நடைபெறுகின்றன. ஒரு நாளைக்கு 150 முதல் 200 நபர்களுக்கு சிகிச்சை பார்க்கப்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லை. ஐந்து ஊராட்சிகளுக்குட்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதுதவிர, தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் துரிஞ்சிப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், சோலைக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. நூலஅள்ளி கிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் லலிகம் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதேபோன்று, 7 கி.மீ. தொலைவில் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனை உள்ளது. 10 படுக்கை வசதிகளைக் கொண்ட நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினசரி சராசரியாக 100 முதல் 110 வெளி நோயாளிகளும், மாதம் ஒன்றுக்கு சாராசரியாக 60 முதல் 70 வரை உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், மாதம் ஒன்றுக்கு 20 முதல் 25 வரை பிரசவங்கள் நடைபெறுகின்றன. மேலும், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், 2010-2011 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ பின் கவனிப்பு அறையும், 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ.5 இலட்சம் மதிப்பில் தடுப்பூசி அறையும் கட்டப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா*



2013 ஏப்ரல் 18]

*அவர்களுடைய அரசால் தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள டி.துரிஞ்சிப்பட்டி, பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதே ஊராட்சி ஒன்றியத்தில் நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளதால், இதனை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செவிலியர் தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட வேண்டும். சுற்றுச்சுவர் கட்டித்தரப்பட வேண்டும். இரவுக் காவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். மாதேமங்களம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும். பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு நாளைக்கு பத்துக்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் டாக்டர்கள் இல்லாததனால், அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இரவு நேரங்களில் மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததனால், அங்குள்ள மக்கள் தருமபுரிக்குத்தான் வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. இதனால், பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரவு நேர மருத்துவர்களை பணியமர்த்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூலஅள்ளியில் மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். மருத்துவ அலுவலர்கள் இரண்டு பேரும், மருந்தாளுநர் ஒருவரும், ஆய்வக நுட்பினர் ஒருவரும், துணைச் செவிலியர் ஒருவரும், செவிலியர் மூன்று பேரும், கிராமச் சுகாதாரச் செவிலியர்கள் 6 பேரும், பகுதி சுகாதார செவிலியர் ஒருவரும், மருத்துவப் பணியாளர்கள் 2 பேரும், சுகாதார ஆய்வாளர்*

[2013 ஏப்ரல் 18

ஒருவரும், ஆக மொத்தம் 18 பேர், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர் துணைக் கேள்வியாக, பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லை என்ற குறையையும் தெரிவித்திருக்கிறார்கள். அவர் எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கூடுதல் வினாவிற்கு துறையின்மூலம் ஆய்வு செய்து, அவர் சொல்வதுபோல், அந்தப் பகுதிக்கு மருத்துவர்கள் வரவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும் வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தாராள மனதோடு மீண்டும் எங்களுக்கு உரிய இடத்தை தங்களுடைய தீர்ப்பின்மூலம் நேற்று வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக எங்களுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பார்கள். அதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாங்கள் அந்த முடிவை எடுத்ததற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் கருதுகிறபோது, உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றாண்மையோடு அணுகியிருக்கின்றார்கள். ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைத் காட்ட வேண்டும் என்றார் ஏசுபிரான். ஆனால், அதற்கும் மேலாக திருவள்ளுவர் சொல்கிறார்,

> "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு?"



2013 ஏப்ரல் 18] [திரு. ச. இராமச்சந்திரன்]

கெடுதல் செய்பவர்களுக்கும் நல்லது செய்வதுதான் அப்பா, சால்பு என்று திருவள்ளுவர் சொல்கிறார். அந்த சான்றாண்மையின் அடிப்படையில், இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அணுகியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-40*

அவர்களுடைய பரந்த உள்ளத்திற்கும், பெருந்தன்மைக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையை முன்னின்று நடத்தக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், தங்களுடைய இந்த முடிவுக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்று கருதுகின்றபோது, அவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு வாய்ப்பு இல்லாதபொழுது, அது தங்களுக்குத்தானே கிடைக்கும் என்ற சுயநல நோக்கம் சிறிதும் இல்லாமல், தே.மு.தி.க.வுக்கே அந்த வாய்ப்பை மீண்டும் தாருங்கள் என்ற தியாக உள்ளத்தோடு, தொடர்ந்து நேசக்கரம் நீட்டிய எதிர்க்கட்சி வரிசையில் உள்ள எனது அருமை அரசியல் கட்சித் தலைவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவையை நடத்திச் செல்ல நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருவோம் என்று உறுதி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டி இங்கே நீங்கள் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டினார்கள். நானும் அவர்களுக்கு ஒன்றை அன்போடு சொல்லிக்கொள்கிறேன். அதே திருவள்ளுவர்தான் சொல்லியிருக்கிறார்கள்.

> "இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்."

என்று திருவள்ளுவர் சொன்னதற்கிணங்க, *(மேசையைத் தட்டும் ஒலி)* கெடுதல் செய்வதர்களுக்கும்கூட நல்லது செய்கின்ற தாராள உள்ளம் கொண்டவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதையும் அவர் சேர்த்துச் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும் அவருடைய பெருந்தன்மைக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எங்களுடைய நன்றியை இன்றும் நான் பதிவு செய்கின்றேன். இதே மரபுப்படி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை தொடர் முழுவதும் வெளியேற்றியிருப்பதைக் கைவிட வேண்டுகிறேன். தி.மு.க.வின் நடவடிக்கைகள் எதையும் ஆதரித்தோ, எதையும் நான் சப்பைக்கட்டியோ சொல்லவில்லை. என்ன விவாதம் நடந்தாலும், என்ன மோதல் நடந்தாலும், ஒரு தொடர் முழுவதும் அவர்களைத் தள்ளிவைக்க வேண்டாம் என்கின்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்தி, அதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெருந்தன்மையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெற்கெல்லாம் விதியைத் தளர்த்தவேண்டும். நீங்கள் கேட்பதற்கு, விதியைத் தளர்த்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், நாங்களெல்லாம் எதிர் வரிசையிலே இருந்து, எதிர்க்கட்சித் தலைவர்கள் முதலில் பேச வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், அவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், பெருந்தன்மையோடு அவைக்கு வரவேண்டும், சபையிலே கலந்துகொள்ள வேண்டும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுக்கக்கூடிய நேரத்திலே தங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலே கலந்துகொள்ளலாம் என்ற அடிப்படையில் இங்கே தெரிவித்து, நீங்களும் தாங்கள் அளித்திருக்கக்கூடிய தீர்ப்பினை மாற்றி, அவையிலே கலந்துகொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம், அந்தக் கட்சியினுடைய நடவடிக்கைகளைப் பற்றி நான் பேசவில்லை. செயல்பாட்டைப் பற்றிச் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கெல்லாம் விதியைத் தளர்த்த வேண்டிவரும். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலிப்பது என்பது நிரம்ப கஷ்டம். அதற்கு விதியைத் தளர்த்த வேண்டும். நீங்கள் நன்றி சொன்னதோடு, நிறுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** விதியை மாற்றுவது என்பதும், உத்தரவுபோடுவது என்பதும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கையிலே இருக்கக்கூடிய ஒன்று. எனவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கருணை மனு போடுகின்ற காலம். ஆகையினாலே, தாங்கள் விதிகளை மட்டுமே பார்க்காமல், கருணையின் அடிப்படையிலேயும் இதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனைவரும் வைத்த கோரிக்கையை ஏற்று, தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீண்டும் சபையிலே பணியாற்றக்கூடிய வகையிலே, உத்தரவிட்ட தங்களுக்கும், பரிசீலித்த மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் கூறியதுபோல, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இங்கே கலந்துகொள்ளும் சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நல்லதொரு குறளை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். மிகுந்த பரந்த மனப்பான்மையுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள், தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, மரபுப்படி, முதலாவதாக அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைக்கலாம் என்று அவர்கள் பரிந்துரை செய்ய, எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று நீங்களும் சிறப்பானதொரு தீர்ப்பை நேற்று அளித்தீர்கள். அதற்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இதே அடிப்படையிலே, சி.பி.எம்., சி.பி.ஐ. மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும்—அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி நான் இங்கே பரிந்து பேசவரவில்லை—ஆனால், ஒரு எதிர்க்கட்சி என்ற அடிப்படையிலே, ஜனநாயகத்திற்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலே, இந்த அரசு ஜனநாயக நெறிமுறைகளை மிகச் சிறப்பாகக் கடைப்பிடித்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் செயல்படுகின்றது என்பதை அனைவரும் உணரக்கூடிய வகையிலே, அவர்களுக்கு மீண்டும் அவையிலே பங்கு கொள்ளக்கூடிய வாய்ப்பை நீங்கள் தருவதற்கு முன்வர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, தே.மு.தி.க-விற்கு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலே, முதலாவதாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அதேபோல இப்போது அடுத்த ஒரு மாத காலத்திற்கு அவை நடவடிக்கைகளிலிருந்து முற்றாக விலக்கி வைக்கப்பட்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த விதியை, அதாவது இப்போது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தீர்ப்பை மாற்றி, அவர்கள் அவையிலே கலந்துகொள்ளக்கூடிய வகையிலே, தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*



## 3. கவன ஈர்ப்பு

### கோயம்புத்தூர் மாவட்டம், குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் குடி தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க தேவையான இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த அவசரப் பொது முக்கித்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 18

## அறிக்கை

கோவை மாவட்டத்திலுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில், 228 ஊராட்சிகள் உள்ளன. அவற்றின் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,032 ஆகும். இவற்றில் 1,994 குடியிருப்புகள், நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. எஞ்சியுள்ள 38 குடியிருப்புகள் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்றவை. அவற்றிற்கு நடப்பு ஆண்டில் கட்டுமானத்திலுள்ள குடிநீர்த் திட்டங்கள்மூலம் முழுமையான குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கோவை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்படி, வறட்சி நிலவி வரும் சூழ்நிலையில், 433 குடியிருப்புகளுக்கு குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஊரக வளர்ச்சித் துறைமூலம் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள அரசு பரிசீலனை செய்து வருகிறது:

| பணி விவரங்கள் | பணிகள் எண்ணம் | ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|
| மாற்று ஆழ்துளைக் கிணறு | 294 | 414.68 |
| லாரிமூலம் குடிநீர் விநியோகம் | 43 | 31.70 |
| நீராதாரம் வலுப்படுத்துதல் | 9 | 37.10 |
| மொத்தம் | 346 | 483.48 |

மேலும், மேற்கண்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியை அதிகரிக்க கீழ்க்காணும் பணிகளை ஊரக வளர்ச்சித் துறைமூலம் மேற்கொள்ளவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது:-



2013 ஏப்ரல் 18] [திரு. கே.பி. முனுசாமி]

| பணி விவரங்கள் | பணிகள் எண்ணம் | ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|
| திறந்த வெளிக் கிணறு | 2 | 3.70 |
| குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு | 5 | 21.00 |
| புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் | 9 | 48.90 |
| ஜெனரேட்டர் | 1 | 1.80 |
| உப்பு நீக்கி குடிநீர் வழங்கல் | 1 | 1.50 |
| தனி மின்விசைத் திட்டம் பழுது பார்த்தல் | 1 | 5.20 |
| இதர திட்டங்கள் (புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து தனி மின்விசைத் திட்டம்) | 466 | 1310.45 |
| மொத்தம் | 485 | 1392.55 |
| ஒட்டு மொத்தம் | 831 | 1876.03 |

மேலும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 120 புதிய குடியிருப்புகளுக்கு ரூபாய் 10.30 கோடி செலவில் தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசிக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். இதற்கான நீராதாரம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கையில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில், 228 ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகளுடைய எண்ணிக்கை 2,032

[திரு. எம் ஆறுமுகம்] [2013 ஏப்ரல் 18

ஆகும் என்றும், அவற்றில் 38 குடியிருப்புப் பகுதிகள் பகுதி அளவு குடிநீர் வசதி பெற்றவை என்றும், 433 குடியிருப்புப் பகுதிகளிலுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு, ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூர் மாநகரில் காளப்பட்டி பேரூராட்சி, சரவணப்பட்டி பேரூராட்சி, வல்லக்கிணறு பேரூராட்சி, தொடியலூர், கவுண்டம்பாளையம் நகராட்சி, வடபள்ளி பேரூராட்சி, குறிச்சி, குனியமுத்தூர் போன்று மாநகராட்சியுடன் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் பத்து நாட்களுக்கு மேலாக குடிநீர் வந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், சிறுவாணியிலிருந்தும், அத்திக்கடவிலிருந்தும் தண்ணீர் குறைவாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, பற்றாக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலும், நிலத்தடி நீர்மட்டத்தினுடைய அளவு குறைந்துள்ள சூழ்நிலையில், கிராமங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதால் கிணறுகளை ஆழப்படுத்தியும், குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத பகுதிகளிலிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆனைமலை ஒன்றியத்தில் 23 பஞ்சாயத்துகள் பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். விவாதம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்**: இல்லை இது கேள்விதான். ஐந்து பஞ்சாயத்துகளில் சில கிராமங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அந்தக் கிராமங்களைக் கண்டறிந்து, ஆழ்குழாய்க் கிணறுகளை உடனடியாக அமைத்து, குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதன்படி, ஏற்கெனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி எங்கெங்கெல்லாம் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம் மாவட்ட நிருவாகத்துடன் இணைத்து, அந்த இடங்களை ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு பணிகளை முடுக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதனடிப்படையிலே, புதிதாக 294 மாற்று ஆழ்துளைக் கிணறுகள் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 414 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படவிருக்கிறது. அதைப்போல, சில இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் ஆயிரம் அடி வரையில் போட்டால்கூட, அங்கே குடிதண்ணீர் கிடைப்பதில்லை. உடனடியாக அந்தப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் கொடுத்தாக வேண்டும். இதை நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையிலும் நிறைவேற்ற முடியாது. அதனடிப்படையிலேதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எங்கு குடிதண்ணீர் அதிகமாகக் கிடைக்கிறதோ, அங்கிருந்து குடிதண்ணீரை லாரிகள்மூலமாக எடுத்துவந்து, 43 இடங்களுக்கு, 31 இலட்சம் ரூபாய் அளவிலே செலவு செய்து, குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப்போல, ஏற்கெனவே நீராதாரம் உள்ள பகுதியில், அந்த நீராதாரத்தை மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலே, 9 இடங்களில், 37 இலட்சம் ரூபாய் அளவிற்கு பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால், 346 பணிகள் இப்பொழுது எடுக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, தொடர்ந்து இப்பொழுது மேற்கொள்ளக்கூடிய பணி, இரண்டு திறந்த வெளிக் கிணறுகளை மூன்று இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் செலவிலே ஆழப்படுத்தி, குடிதண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 18

அதைப்போல, குடிதண்ணீர் கிடைக்கப்பெறாத இடங்களில், குடிதண்ணீர்க் குழாய்களை விஸ்தரிப்பு செய்து, 5 இடங்களில், 21 இலட்சம் ரூபாய் அளவிலே குடிதண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதைப்போல, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 9 நீர்த்தேக்கத் தொட்டிகள், 48.90 இலட்சம் ரூபாயிலே கட்டுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், சில இடங்களில், மின்சாரம் இல்லாத இடங்களில், ஜெனரேட்டர்களை வைத்து தண்ணீர் இறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, உப்பு நீக்கிய குடிநீர் வழங்குவதற்காக, ஓர் இடத்தில், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தனி மின்விசைத் திட்டம் பழுதுபார்த்தல், அதுமாதிரி தனியாக ஒரு பணியும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், 13 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலே, குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக, 466 பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 120 புதிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக ரூ.10.30 கோடி செலவில் தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்றை செயற்படுத்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே, ஏற்கெனவே கடந்தகால ஆட்சியில் அத்திக்கடவு திட்டத்தை அவர்கள் அறிவித்தார்களேயல்லாமல், அதனை வேகப்படுத்தி, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் விட்டுச் சென்றுவிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே அந்தத் திட்டத்தை எடுத்து, அந்தப் பணியின்வாயிலாக 442 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில், இப்பொழுது கிட்டத்தட்ட 50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்வதோடு, வறட்சி நிவாரண நிதியிலிருந்து ரூ.61.75 இலட்சம் மதிப்பீட்டில், 34 ஊராட்சிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, குடி தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, குடிநீர் விநியோக பாதிப்பைச் சரி செய்ய கிராம ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றிய பொது நிதி மற்றும் கிராம ஊராட்சி பொது நிதியை முற்றிலுமாகப் பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் மாவட்ட அளவிலான அலுவலர் குழுமூலம் ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 18] [திரு. கே.பி. முனுசாமி]

## 4. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

### (அ) கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றது. திடீரென்று எழுந்து நின்று கேட்காதீர்கள். (குறுக்கீடு) இல்லை, அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் இப்படி திடீரென்று கேட்கக்கூடாது. இப்போது, மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. நீங்கள், இப்போது திடீரென்று இதைப்பற்றிக் கேட்கிறீர்களே? (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். அடுத்த Business-க்கு நான் போய்விட்டேன். அமைச்சரையும் நான் கூப்பிட்டுவிட்டேன். அனுமதியின்றி நீங்கள் எழுந்து நின்று பேசுகிறீர்களே? மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2405, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2763, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2872, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.



**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3153, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 304, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்களில் மராமத்துப் பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1370, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்படும் அங்கன்வாடி, நியாய விலைக் கடை, சமுதாயக் கூடங்கள் உட்பட அனைத்துக் கட்டடங்களையும் பொதுப் பணித் துறையே நேரடியாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1523, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை வண்டிகள் நிறுத்துமிட வசதியுடனும், ஒரு படுக்கை அறை வசதியுடனும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1776, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதி, விளவங்கோடு தாலுகா அலுவலகம் பழுதடைந்துள்ளதால் புதிய வசதியான வட்டாட்சியர் அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1824, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பராமரிப்பின்றி உள்ள அரசுக் கட்டடங்களைப் பராமரித்திடவும், அவற்றை பயன்படுத்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1969, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டடப் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்ந்துள்ளதால், கட்டடங்கள் கட்டும் ஒப்பந்ததாரர்கள் சரிவர வேலை செய்யாமல் இருப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2029, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கிய பிறகும் வருடக் கணக்கில் கட்டடம் கட்டாமல் இருக்கிற நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2188, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

*முற்பகல் 11-55*

வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் பொதுப் பணித் துறைமூலம் தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2413, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2473, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2632, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள அரசுக்குச் சொந்தமான கட்டடங்களைப் பராமரிக்கவும், செப்பனிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2643, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறைமூலம் கட்டப்படும் கட்டடங்களுக்கு Rate of cost உயர்வுக்கு ஏற்ப மதிப்பீட்டில் மாற்றம் செய்து, தரமாக, குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2885, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரத்தில் பொதுப் பணித் துறையின் சார்பாக விருந்தினர் மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2998, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை). மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,850,64,64,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 841, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2674, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2404, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2871, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3026, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 150, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 303, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூரில் இருந்து வெளியேறும் உபரி நீரை சேலம் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் திட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 632, திரு. க. பீம்ராவ்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரவாயல் ஏரியில் சாக்கடை நீர் கலப்பதைத் தடுத்திடவும், சுற்றுச் சுவர் எழுப்பிடவும் இந்த நிதியாண்டிலேயே (2013-2014) நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 772, திரு. ஏ. லாசர்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைகை அணை, சோத்துப் பாறை, மஞ்சளாறு அணைகளைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1361, திரு. க. பாண்டியராஜன்.



**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் ஒன்றியம், ரோசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட 116 காலனி அருகே உள்ள ஓடையை கல்லூரி சாலையிலிருந்து அருப்புக்கோட்டை ரோடு வரை தூர் வாரி சீரமைக்கவும், விருதுநகரின் ஜீவ நதியான கௌசிக மகாநதியை தூர்வாரி அகலப்படுத்தி புனரமைக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1379, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து குளங்களிலுமுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி, எல்லைகளை அளந்து, வேலியிட்டு குளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1645, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் முல்லை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி தண்ணீரை நெய்யாறு இடது கரை கால்வாய் வழியாக விட்டு விவசாயத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1739, திரு. அ. பாஸ்கர்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, தருமபுரி நகரம், 6-வது வார்டு முனிஸ்வரா மரம் அறுக்கும் மில் வழியாக ராஜாபேட்டை செல்லும் வழியில் ஆற்றில் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1784, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள மொத்த பாசனங்கள் எத்தனை (சுமார் 39,000) என அறுதியிட்டு பட்டியலிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணைக்கு பாத்தியப்பட்ட கண்மாய்களுக்கு நேரடி பாசனக் கால்வாய் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1970, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் பட்டணங்கால் கால்வாயில் அதிகமான உடைப்புகள் இருப்பதால் கடை வரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. இரா. அண்ணாதுரை.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரைச் சுற்றியுள்ள மாடக்குளம் கண்மாய், செல்லூர் கண்மாய் உள்ளிட்ட அனைத்து கண்மாய்களிலும் ஆக்கிரமிப்பை அகற்றி நீரைத் தேக்கி பாசனம், குடிநீருக்கு பயன்படுத்திடவும், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகப்படுத்தவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2023, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துப் பாசனக் கால்வாய்களையும் செப்பனிட்டு தண்ணீரை விரயமாகாமல் காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2267, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, வளவனாறு ஆற்றின் முகத்துவாரத்தைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2414, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2487, திரு. க. பாலகிருஷ்ணன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீரையும், விளையும் பயிர்களையும் பாழ்படுத்துவதைத் தடுத்திட 1. வெள்ளாறு, 2. கொள்ளிடம், 3. பரவனாறு, 4. உப்பனாறு (சின்ன) ஆகியவற்றினிடையே தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2572, திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள வெண்டாக்கோட்டை அணையின் கொள்ளளவினை உயர்த்தக் கூடிய வகையில் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2622, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் பற்றி கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2644, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2888, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகருக்குக் குடிநீர் ஆதாரமாக இருக்கக்கூடிய ஆசனாம்பட்டு அணையை அகலப்படுத்துவதுடன் சுத்தப்படுத்தி, ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,850,64,64,000/-ல் ரூ. 100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2997, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, கட்டடங்கள், பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே, தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 2 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தே.மு.தி.க. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீது

@ 573 முதல் 714 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



பேச வாய்ப்பளித்த தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது. இங்கே பெரிய தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. தொழில் வாய்ப்புகளும் ஏதும் இல்லை. தற்பொழுது வறட்சி காரணமாக விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை இல்லாததாலும், நிலத்தடி நீர் குறைந்து விட்டதன் காரணமாகவும் விவசாயிகள் அருகில் உள்ள பெங்களூருவிற்கு கூலி வேலைக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

'நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். அவரின் கூற்றுக்கு ஏற்ப நீராதாரங்களைப் பெருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் அதிக அளவில் உள்ளதால், வெள்ள நீர் வெளியேற முடியாமல் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பேரழிவை ஏற்படுத்துகிறது. இதனைத் தடுக்கும்பொருட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர்நிலைகளை ஆழப்படுத்தி, பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மேட்டூர் அணை, தமிழ்நாட்டு மக்களின் ஜீவாதாரமாகவும், உயிர்நாடியாகவும் இருந்து வருகிறது. அணையிலிருந்து வெளியேறும் நீரை டெல்டாப் பகுதிகளில் பாசனத்திற்கும், தமிழகத்தின் பல மாவட்ட மக்களுக்கு குடிநீருக்கும் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, மேட்டூர் அணையை முழுமையாகப் பாதுகாப்பது அரசின் கடமையாகும். அணை கட்டப்பட்டு 79 ஆண்டுகள் ஆகிறது. இதுவரை மேட்டூர் அணை தூர் வாரப்படவில்லை. தற்பொழுது அணையின் நீர்மட்டம் 26 அடியாக உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம் 2023-ன் அடிப்படையிலே, தமிழகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வார, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அங்குள்ள ஆக்கிரமிப்புகளைத் தடுக்கின்ற வகையிலே, எல்லைக் கற்கள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில், அணைகள் புனரமைப்புத் திட்டத்திலே மேட்டூர் அணையும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. வருகின்ற நிதி ஆண்டிலே இந்த அணைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மேட்டூர் அணையைத் தூர்வார வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

நண்பகல் 12-00

**திரு. அ. பாஸ்கர்:** தற்போது அணையின் நீர்மட்டம் 26 அடியாக உள்ளது. இதில் 20 அடி வரை சேறும், சகதியும் நிறைந்திருக்கும். எனவே, மேட்டூர் அணையைத் தூர்வாருவதற்கு ஏற்பாடு செய்து, அனைத்து விவசாய நிலங்களுக்கும் தூர்வாரும் மண்ணை எடுத்துச்சென்று பயன்படுத்திக்கொள்ள அரசு சிறப்பு அனுமதி கொடுத்தால், விவசாயிகள் பயனடைவார்கள். மேலும், இத்திட்டத்தை தருமபுரி தொகுதியிலுள்ள ஏலகிரி ஏரி, மாயமங்கலம் ஏரி, அனசேகரம் ஏரி ஆகிய ஏரிகளுக்கும் செயல்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப் பாசனப் பகுதியைத் தூர் வாருவதற்காக அரசு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி ஜூலை மாதம் ஒதுக்கப்படுகிறது, அப்போது மழைக் காலம் என்பதால், தூர் வார இயலாத நிலை உள்ளது. வறட்சி மாதமான ஏப்ரல் மாதத்தில் சிறப்பு நிதியாக ஒதுக்கி, தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆறுகளின் குறுக்கே பல அணைகள் கட்டி, பாசனத்திற்கும், சாகுபடிக்கும் மற்றும் மின்சாரம் தயாரிப்பதற்கும் உதவுகின்றனர். ஆனால், அதிகப்படியான மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஆண்டுதோறும் தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது. இதைத் தடுக்கும்பொருட்டு, தமிழகத்திலுள்ள பல்வேறு ஆறுகளின் குறுக்கே பல தடுப்பணைகளைக் கட்டி, தமிழகத்திலுள்ள பல ஏரிகளுக்குச் செல்ல கால்வாய்களை உருவாக்கினால், கடலில் வீணாகக் கலக்கும் நீரும் தடுக்கப்படும். வறட்சியான காலங்களில் நிலத்தடி நீர் மட்டமும் உயரும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல இந்த ஆண்டு தடுப்பணைகள் கட்டுவதற்கும், நீர் கடலில் கலந்து வீணாகாமல் தடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். நான் எனது பதிலுரையில் விரிவாக விளக்குகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்பம்பட்டி கிராமத்தில் புல எண் 94, 218, 292, 322 ஆகிய நான்கு இடங்களில் தொப்பையாற்றின் குறுக்கே நான்கு தடுப்பணைகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி, மதிகோன்பாளையம், செம்மாண்ட ஆற்றின் குறுக்கேயும் ஒரு தடுப்பணை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் வெள்ளாறு புல எண் 576 குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும். இதனால், அந்தப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும்; சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும். தருமபுரி மாவட்டம், நாகாவதி அணை, தொப்பையாறு, வாணியாறு, சின்னாறு மற்றும் தும்பல்அல்லி அணைகளைத் தூர் வாரி பூங்காக்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட திப்பம்பட்டியிலிருந்து கம்பைநல்லூர், மொரப்பூர் வழியாக ஈச்சம்பாடிவரை கே.ஆர்.பி. டேமின் வலதுபுறக் கால்வாய்த் திட்டத்தினை இவ்வாண்டு துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதாச்சலம் தொகுதியில், நெய்வேலி என்.எல்.சி. நிறுவனத்தால் நிலத்தடி நீர்மட்டம் வருடா வருடம் 20 அடி கீழே செல்கிறது. இதனால், விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகையால், விருதாச்சலம், மணிமுத்தாற்றின் குறுக்கே இரண்டு இடங்களில் தடுப்பணைகள் அமைக்க வேண்டுமென்ற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி, அதியமான் கோட்டையைப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள் அதனைச் சுற்றி பூங்கா அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி நகரத்தில் முகமதி அலி கிளப் ரோடு, பழைய காய் மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கட்டடம் கட்டும் பணி துவக்கப்பட்ட நிலையில் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காமராஜர் தமிழக முதலமைச்சராக இருந்தபோது தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், ராசிமணல் திட்டு பகுதியில் நீர்மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் 300 முதல் 350 மெகா வாட் வரை மின்சாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும், பரிசீலனை முடிந்தவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

பிற்பகல் 12-05

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், அரூர் அக்ரஹாரம் கிராமத்திலிருந்து வேலூர் மாவட்டம், ஆலங்காயம் வரை தமிழகத்தில் இரு இடங்களில் மட்டுமே மாலிப்டினம் தாது உள்ளதை புவியியல் துறையினர் உறுதி செய்துள்ளனர். ஆகாய விமானம், ராக்கெட் ஆகியவற்றிற்கான உதிரி பாகங்களை செய்யப் பயன்படும் இந்த மாலிப்டினம் தாதுவை வெட்டி எடுக்க தருமபுரி மாவட்டம், அரூர் பகுதியை மையமாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.



தமிழகத்தில், தனியார் நிறுவனங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பாட்டில் மற்றும் கேன்கள்மூலம் விற்பனை செய்து வருகின்றனர். ஒரு லிட்டர் கேன் ரூ.20/-க்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசாங்கமே உள்ளாட்சித் துறையின்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மலிவு விலையில் மக்களுக்கு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரியில் முன்னாள் இராணுவத்தினர் அலுவலகக் கட்டடம் கட்டப்படுமென கடந்த 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவர்களின் இணை இயக்குநர் அலுவலகம், துணை இயக்குநர் அலுவலகங்களுக்கு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, அரூர், காரிமங்கலம் ஆகிய இடங்களில் புள்ளியியல் துறைக்கு கட்டடம் கட்டித் தரப்படும் என 2011 ஆம் ஆண்டு துணை நிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரையில் இதற்கான எந்த முயற்சியும் துவங்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட இடங்களில் புள்ளியியல் துறைக்கு கட்டடங்களைக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2011-2012 ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஈரோடு, குயிலான்தோப்புப் பகுதியில் 40 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக காலிங்கராயன் வாய்க்கால்மீது உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு 29-2-2012 ஆம் தேதியன்று நிதி ஒதுக்கப்பட்டது. 16-5-2012 அன்று பாலம் கட்ட நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இதுவரையில் ஒப்பந்தப்புள்ளிகூட கோரப்படவில்லை.

*19-11-2012 அன்று ஈரோடு (கிழக்கு) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நேரில் சென்று பொதுப் பணித் துறை செயலாளரைச் சந்தித்துப் பேசியும், 29-11-2012 அன்று கடிதம் மூலமாக உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தும், சுமார் . . .(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒகேனக்கல்லில் மின்திட்டப் பணிகளுக்காக காமராஜர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்கவில்லை. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது என்று மத்திய அரசு மறுப்பு தெரிவித்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஈரோடு (கிழக்கு) தொகுதியில் உறுப்பினர் குறிப்பிட்ட பணியைச் செய்ய வேண்டியது மாநகராட்சியினுடைய வேலை, பொதுப் பணித் துறையின்மூலம் கொடுக்க வேண்டிய தடையில்லாச் சான்றிதழைக் கொடுத்துவிட்டோம், விரைவில் பணிகள் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி கொடுக்கின்ற பட்சத்தில், உள்ளாட்சித் துறையினுடைய அலுவலர்களே அந்தப் பணியை மேற்கொள்வார்கள். கால்வாய்களைச் சீரமைப்பது, கால்வாய்களைக் கடந்து மறு பக்கத்திலிருக்கின்ற கிராமங்களுக்குச் செல்வதற்கு ஒரு பாலம் கட்டுவது போன்ற பணிகளுக்கு பொதுப் பணித் துறையிலே நிதி ஒதுக்கப்படுகிறது. பொதுப் பணித் துறைக்கு நிதி ஒதுக்கப்படுகின்றபோது, அந்தப் பணியை பொதுப் பணித் துறையே ஏற்று, அந்தப் பணியை ஆற்றும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடையில்லாச் சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். எனவே, மீண்டும் உள்ளாட்சி அமைப்பின்மூலம் அந்தப் பணி மேற்கொள்ளப்படும். அதை*



*விரைவாக எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் 1,200/-க்கும் மேற்பட்டோர் கடந்த 10 ஆண்டுகளாக தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். மேற்படி நபர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய 1,216 பணியாளர்களுடைய பணி நிரந்தரம் அரசினுடைய ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் கீழுள்ள கட்டட அமைப்புப் பிரிவு, மாநில மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பொதுப் பணித் துறையில் கட்டடப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுகின்றன. ஒப்பந்ததாரர்கள் கட்டடப் பணிகளை எடுப்பதற்கு ஆர்வம் காட்டாத நிலையில் உள்ளனர். இன்றைய சூழ்நிலையில், கட்டுமானப் பொருட்களின் விலை ஏறியுள்ளது. கட்டடப் பணியாளர்களின் தினக்கூலியை அரசு மிகக் குறைவாகவே நிர்ணயித்துள்ளது. உதாரணமாக, ஒரு கொத்தனாருக்கு தினக்கூலியாக கிராமப் பகுதிகளில் 291 ரூபாய் எனவும், மாநகராட்சிப் பகுதியில் 320 ரூபாய் எனவும், ஆண்களுக்கு தினக்கூலியாக கிராமப்பகுதிகளில் 183 ரூபாய் எனவும், மாநகராட்சிப் பகுதியில் 201 ரூபாய் எனவும், சித்தாள்*

பெண்களுக்கு கிராமப் பகுதியில் தினக்கூலியாக 165 ரூபாய் எனவும், மாநகராட்சிப் பகுதியில் 187 ரூபாய் எனவும் பொதுப் பணித் துறை நிர்ணயித்துள்ளது. ஆனால், தற்போதுள்ள நிலையில் வெளிக் கட்டட வேலைக்குச் சென்றால், கொத்தனாருக்கு 600 ரூபாயும், ஆண்களுக்கு 450 ரூபாயும், சித்தாள் பெண்களுக்கு 300 ரூபாயும் வழங்கப்படுகிறது. மேலும், காலை மற்றும் மாலை வேளைகளில் ஆட்களுக்கு டீயும் கொடுக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், கட்டுமானப் பொருட்களான செங்கல், மணல், ஜல்லி இவற்றின் விலைப் பட்டியலில், அரசு கொடுத்துள்ள விலைக்கும், வெளி மார்க்கெட்டில் உள்ள விலைக்கும் உள்ள வித்தியாசம், மலைக்கும், மடுவிற்கும் உள்ள வித்தியாசம்போல் உள்ளது. (குறுக்கீடு)

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை விகிதப்படி (Schedule of rates) அப்போதைய விலைக்குத் தகுந்தாற்போல, தொழிலாளர்களின் கூலிக்குத் தகுந்தாற்போல, ஒவ்வோர் ஆண்டும் விலை மாற்றம் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மணல் குவாரி அனைத்தையும் அரசே நேரடியாக நடத்தி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், மணல் அள்ளிப்போடும் உரிமை மட்டும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தனியார் நிறுவனம், இரண்டாம் மணல் விற்பனை நிலையம் ஒன்றை உருவாக்கி, அந்நிறுவனத்திற்குச் சொந்தமான லாரியை வைத்து, குவாரியிலிருந்து மணலை ஏற்றி வந்து, மைதானத்தில் குவித்து வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்துவருகின்றனர். இதனால் மணலை வெளிச் சந்தையில் அதிக விலைக்கு விற்று இலாபம் பார்க்கிறார்கள். இதனைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் எடுப்பது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. Stock Yard என்று சொல்லப்படுகின்றவர்கள், நீதிமன்றம் சென்று, மணல் அள்ளுவதற்கு அனுமதி வாங்கித்தருகிறார்கள். அனுமதி வாங்குவதுவரையில்தான், Stock Yard-ஐப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால், ஆற்றில் மணல் எடுப்பது போன்ற இதர வேலைகளை பொதுப் பணித் துறைதான் செய்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையில் ஒப்பந்ததாரர், அரசு நிர்ணயித்த விலையில் தரமான கட்டடத்தைக் கட்ட இயலாத நிலை உள்ளது. ஒரு கட்டடத்தின் ஆயுட்காலம் 60 ஆண்டுகள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்போது கட்டக்கூடிய கட்டடங்களின் ஆயுட்காலம் 25 ஆண்டுகள் மட்டுமே உள்ளதாகக் கூறப்படுகிறது. தரமான, உறுதியான கட்டடம் கட்டவேண்டுமென்று சொன்னால், அரசு நிர்ணயித்த விலைப் பட்டியலில் மாற்றம் செய்து, தற்போதைய விலைவாசிக்கு ஏற்றாற்போல் விலை நிர்ணயம் செய்தால், கட்டடம் உறுதிபெறும், வேலை விரைவாக முடியும், அரசுக்கு நற்பெயர் உண்டாகும். தருமபுரியில் அனைத்து வசதிகளுடன்கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக, ஆற்றுப் படுகையிலிருந்து எடுக்கும் இயற்கை மணலுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, கட்டுமானப் பணிகளுக்காகப்

பயன்படும் இயற்கை மணலுக்கு மாற்றாக, செயற்கை மணலைப் (M-sand) பயன்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பல வேலைகளுக்கு அந்த மணலைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஆற்று மணலைவிட மிகவும் உறுதியாக இருக்கிறது. எனவே, வருகின்ற காலங்களில் M-Sand என்று சொல்லக்கூடிய செயற்கை மணலை உபயோகப்படுத்த தொழில் துறைமூலமாக ஊக்கம் கொடுத்துவருகிறார்கள். இதனால் மணல் பற்றாக்குறை விரைவில் நீங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திலுள்ள அணைகள், ஏரிகள் போன்ற இடங்களிலெல்லாம் பூங்காக்கள் அமைத்து, பராமரிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில் ராமக்கால் என்ற சிறப்பு வாய்ந்த, பழமைவாய்ந்த ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஒரு பூங்கா அமைக்கப்பட்டு, சிறுவர்கள் விளையாடுவதற்கும், பொதுமக்கள் பொழுதைக் கழிப்பதற்கும் பயன்படுகிறது. இதுவரையில், தருமபுரியில் இதுபோன்ற ஒரு சிறப்பான அம்சம் இருந்ததில்லை. ஆகவே, தருமபுரியில் நம்முடைய கலாச்சாரத்தை உருவாக்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒரு கோடி ரூபாய் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏரியில் பூங்கா ஒன்றை அமைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

***திரு. எஸ்.கே. செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.



'மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்னும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் கனவை நனவாக்கி, 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற அண்ணல் காந்தியடிகளின் கூற்றினை மெய்ப்பித்து, தர்மத்தாயின் ஆட்சியில், தர்மத்தாய் அம்மாவின் ஆட்சி மலர்ந்தது; தமிழ்ப் புத்தாண்டின் துவக்கமாய் சித்திரை மலர்ந்தது என ஆன்றோர்களும், சான்றோர்களும் அனுதினமும் போற்றும் எங்கள் குலதெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலில் ஆண்கள்தான் வித்தகர்கள் என்னும் அடிச்சுவட்டை அறவே மாற்றி, எதிர்த்தோரை நுண்மதியால் துவம்சம் செய்து, ஏழைகள் வாழ்ந்திடவே திட்டங்கள் தந்து, எழில்மிகு தமிழகத்தை மலரச் செய்து, அடித்தட்டு மக்களுக்கு வாழ்வு தரும் வரியில்லாத அற்புதமான நிதிநிலை அறிக்கையிலே, பொதுப் பணித் துறை- கட்டடங்கள், பாசனம் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற பெரும் வாய்ப்பினை அளித்திட்ட அரசியல் தீர்க்கதரிசியாம் மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும், நெடிய தொலைநோக்கும் ஒருங்கே பெற்ற பார்போற்றும் தலைவியாம், மாண்புமிகு அம்மா அவர்களே, நித்தம், நித்தம் செத்துப் பிழைக்கும் ஈழத் தமிழர்களின் அழுகைக் குரல் அடங்கும் முன்பே, 'நாடாளுமன்றக் குழு' என்ற பெயரிலே இன்பச் சுற்றுலா சென்றதுபோல, முள்ளி வாய்க்காலில் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களின் புதைகுழிகள் மீது அரியணை போட்டு அமர்ந்திருக்கும் ராஜபக்சேவிடம் பரிசுப் பொருட்களைப் பெற்று படம் போட்ட அரசியல்வாதிகளுக்கு மத்தியிலே, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழீழம் மலர பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி சரித்திரம் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்த அனுமதி மறுத்து; இலங்கை வீரர்கள்

பங்கேற்கும் ஐ.பி.எல். போட்டியை தமிழகத்தில் நடத்த அனுமதிக்க முடியாதென்று தமிழினம் காத்த முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் இத்தகைய செயல்பாடுகளுக்கிணங்க, நாட்டு மக்களும், வருங்கால தமிழகத்தை வழிநடத்தப்போகும் மாணவச் சமுதாயமும் வாழ்த்தி வரவேற்பினைப் பெறுகின்ற வான்புகழ் கொண்ட வரலாற்றுத் தலைவியாம் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை நான் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லையென்று வருவோருக்கு இல்லையென்று கூறாமல் அள்ளித்தரும் வள்ளலின் வாரிசே, (மேசையைத் தட்டும் ஒலி) 2013-2014 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 2,000 கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்பு நிதிக்காக 200 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதும், மாநிலத்தின் வேகமான கட்டமைப்பு வளர்ச்சிக்கான தெளிவான கொள்கை மற்றும் நடைமுறை அமைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவு மறைவற்ற விதிகளோடு, தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம், விதிகள் மற்றும் முறைகள் நடப்பாண்டில் வெளியிடப்பட்டுள்ளதும் எதிர்காலத் தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் திகழப்போகிறது என்பதற்குச் சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடைமடை பாசனப் பகுதி உள்ளதால் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் வளங்களைப் பாதுகாப்பதற்காக ஓர் ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை தேவைப்படுவதால், மாநிலத்தின் விவசாயப் பாசனத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, 2013-2014 ஆம் ஆண்டு 3,314.50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது, தமிழகத்தை வளம் பெறச் செய்வதிலே நல்லாட்சி தரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மண்ணில் புரண்டவன், காவேரி டெல்டா மாவட்டத்தில் பிறந்தவன் என்று கதை அளந்தவர்களெல்லாம், காவேரி நீருக்காகக் கடுகளவுகூட செயல்படாத நிலையில், அந்நியர் ஆட்சி முதல் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வரை செய்ய முடியாததைச் செய்து காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை இந்திய அரசிதழில் வெளியிடச் செய்தமைக்காக 9-3-2013-ல் தஞ்சைத் தரணியில் தமிழகமே திரண்டதோ என அலைகடலென திரண்டு, ஆர்ப்பரித்த விவசாயப் பெருமக்களுக்கு வாழ்வு தந்த தாயே! காவேரி ஆறு உள்ளவரை தங்களின் பெயர் நிலைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என உளமார்ந்த நன்றிப் பெருக்கினை உரித்தாக்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீர வரலாற்றின் வெற்றித் தாயாம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி, 18-3-2013 அன்று உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது, காவேரி நீரிலே தமிழகத்திற்கு உரிய பங்கினை வரும் ஆண்டில் பெற்றிட கர்நாடக அரசை கட்டாயப்படுத்தும் கனிவும், துணிவும், வீரச் செயல் என மாற்றாரும் போற்றுதலுக்குரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடாகவும், மேடாகவும் இருக்கும் இடங்களெல்லாம் கழனியாக வேண்டுமெனவும், பசுமைத் தமிழகம் காண பயிரிடும் பரப்புகள் பரந்தோங்க வேண்டுமெனும் நோக்கிலே 3,600 பாசன ஏரிகள் மற்றும் நீர் நிலைகளில் புனரமைப்புப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதும், நீர் வளம், நில வளத் திட்டம் என்று ஏனைய திட்டங்களின்கீழ் 5,894 பொதுப் பணித் துறை ஏரிகள் சீரமைக்கப்பட்டும், அவற்றின் கொள்ளளவு உயர்த்தப்பட்டுள்ளதும், பாரம்பரிய நீர் நிலைகளை மேம்படுத்துவதற்காக 176 திட்டப் பணிகள் 2013-2014 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் செலவிலே மேற்கொள்ளப்படுவதும், நாடு சிறந்திட நம் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நலம் பயக்கும் திட்டங்களாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி பாசனப் பகுதியில் உள்ள கடைமடை நீர்த் தடுப்பு அமைப்புகள் மற்றும் வடிநீர் வடிகால் ஆகியவற்றைப் புனரமைத்திடவும், பருவ நிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்திடவும், காவேரி பாசன

மேம்பாட்டுத் திட்டத்தை ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியோடு இன்றைக்கு ரூபாய் 1,560 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது வளம் காணும் தமிழகத்திற்கு வழிகோலும் பணியாகும்.

மக்களின் தேவையறிந்து செயலாற்றும் மகத்தான தலைவியாம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அணைகள் சீரமைப்பு மற்றும் மேம்படுத்துதல் திட்டத்திற்காக 745.49 கோடி ரூபாய்க்கு மொத்த திட்ட மதிப்பாக, உலக வங்கியுடன் திட்ட ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளதும், இதில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2013-2014 ஆம் ஆண்டிற்கு 390 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ன் வளர்ச்சிக்கு வலு சேர்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிச் சிறுவர்கள் முதல் பழுத்த முதியோர்கள் வரை பயனுறும் திட்டங்களைச் செயலாக்கி, மக்கள் மனதாளும் மாண்புமிகு அம்மா அவர்களே, 1984 ஆம் ஆண்டில் மாநிலங்களவையில் தங்களது கன்னிப் பேச்சிலேயே, தமிழகத்தில் காய்ந்து கிடக்கின்ற ஆறுகளை வளப்படுத்த, நதி நீர் இணைப்புதான் தீர்வாக இருக்குமென எடுத்துரைத்த இதய தெய்வம் அம்மா அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்றதும், நிலத்தடி நீரினை உயர்த்திடும் நோக்கில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் தந்த மாசற்ற மக்கள் சக்தியே! ஏற்கெனவே தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புத் திட்டம், கட்டளை கதவணையுடன் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டப் பணிகளுக்காக 156.44 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மூன்றாவது நதி நீர் இணைப்புத் திட்டமாக பெண்ணையாறு-பாலாறு இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை தொடங்குமென அறிவித்துள்ளது, சொல்லைச் செயலாக்கும் வரலாற்று நிகழ்வு என்பதுடன், எண்ணித் துணிக கருமம் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குவதாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களே, உலகத்து உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன, குடிமக்கள் அரசனின் செங்கோலை நோக்கி வாழ்கின்றார்கள் எனும் பொருளடங்கிய,

“வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி”



என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு ஒரு படி மேலாக, பருவ மழை பொய்த்துவிட்ட நிலையிலும், பகை மனதோடு மத்திய அரசு தமிழகத்திற்குத் தர வேண்டியவற்றைத் தராது வஞ்சிக்கும் சூழ்நிலையிலும், அயராத உழைப்பாலும், அறிவார்ந்த செயலாலும், தளராத மனதோடு, தன்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) பசித்த மக்கள் புசித்து வாழ, வடலூரில் வள்ளலார் அன்று துவங்கிய அன்னதான நித்திய தருமச் சாலையின் அடுப்பு இன்னும் அணையாமல் எரிந்து அமுது படைப்பதுபோல, இன்றைக்கு ஆலயங்கள்தோறும் அன்னதானம், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ விலையில்லா அரிசி, எல்லோருடைய வீட்டிலும் விலையில்லா மடிக்கணினி, இல்லாதவர்களே நாட்டில் இல்லை என்னும் அளவிற்கு நலன் பயக்கும் திட்டங்கள்மூலம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு அளித்திடும் மண் ஆளும் மகராசி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, தங்களின் தலைசிறந்த பணிகளால் தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் திருநாடே தங்களின் தலைமை ஏற்கும் காலம் கனிந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற துறைகளில் பேசுகின்ற வாய்ப்பு எனக்கு தவறி கிடைத்தாலும்கூட, ஓர் அற்புதமான துறையில் பேசுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன். காரணம், இந்தத் துறையின் செயல்பாடுகளை எண்ணிப் பார்க்கும்போது, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நினைவிடத்தைப் புதுப்பித்த துறை, முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிக் கொடுத்தவருக்கு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திருவுருவச் சிலையை அமைத்து, மணிமண்டபத்தை ஏற்படுத்திக் கொடுத்த துறை, சென்னை, பழைய சிறைச்சாலை அருகிலே இருக்கின்ற மருத்துவக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட துறை, சென்னை இராயப்பேட்டையிலே புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனைக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட துறை, சென்னை, திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியளித்த துறை, சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையைப்

புதுப்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்ட துறை, சட்டமன்றம் வைரவிழா காணுகின்ற சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் நினைவுத் தூண் எழுப்பப்பட்ட துறை, திருச்சிராப்பள்ளியிலே தேசிய சட்டப் பள்ளிக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதியளித்த துறை, திருச்சிராப்பள்ளியிலே பக்தர் தங்கும் விடுதியினை அமைக்கவிருக்கின்ற துறை, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கத்தில் சுற்றுலாக் காட்சி விளக்கக் கட்டடம் கட்டியிருக்கின்ற துறை, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கலையரங்கம், கவியரங்கம் கட்டியிருக்கின்ற துறை, திருப்பூர், தஞ்சை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டியிருக்கின்ற துறை, எங்களுடைய சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற சேலம், சங்ககிரியில் தீரன் சின்னமலைக்கு நினைவிடம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட துறை, (மேசையைத் தட்டும் ஒலி) 32 மாவட்டங்களிலும் தொழில் மையங்களைச் சீரமைக்கின்ற துறை, கரிகால் பெருவளத்தானுக்கு 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களால் மணிமண்டபம் அமைக்கின்ற துறை, (மேசையைத் தட்டும் ஒலி) வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் மணிமண்டபம் ஏற்படுத்தியிருக்கின்ற துறை, (மேசையைத் தட்டும் ஒலி) ஓமந்தூரார் சட்டமன்ற விடுதி அலுவலகத்திற்கு அருகிலே இருக்கின்ற பகுதியிலே பிரம்மாண்டமாக கலையரங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற துறை, அதுமட்டுமல்ல, ஏற்கெனவே இருந்த கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்ட பகுதியிலே விருந்தினர் மாளிகை அமைத்திருக்கின்ற துறை. இந்தத் திட்டங்களையெல்லாம் தன்னகத்தேகொண்டு ஒரு தாய்த் துறையாக தமிழகத்தில் கிட்டத்தட்ட 54 துறைகள் இருந்தாலும்கூட, ஒரு முதன்மைத் துறையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய செயல் வடிவங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் துறைதான் பொதுப் பணித் துறை என்பதை நான் மெத்த மகிழ்ச்சியுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மற்ற துறைகள்—உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொண்டால், அந்தத் துறையிலே ஓர் அற்புதமான திட்டம், 'தாய்' திட்டம். அதுபோல, வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால், ஓர் அற்புதமான திட்டம், 'அம்மா' திட்டம். ஆனால், இந்தத் துறை மட்டும்தான் 'அம்மா துறை' என்ற பெயரைப் பெற்றிருக்கிற துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறைகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையேற்றிருந்தாலும்கூட, உண்ணுவதற்கு உணவு கொடுக்கின்ற முதன்மைத் துறை வேளாண்மைத் துறை. அதுதான் முதன்மையான துறை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்துதான் மற்ற அனைத்துத் துறைகளுமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆன்றோர்களும், சான்றோர்களும், மிட்டா மிராசுதாரர்களும், ஏழை பணக்காரன் என்று இல்லாமல், ஜாதி பேதமின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட உறுப்பினர்கள் உள்ள இந்த அவையில் இரண்டாவது முறையாக சட்டமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்து, எட்டாவது முறையாக நடைபெறுகின்ற இந்த மானியத்திலே பங்கெடுக்கின்ற இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே இங்கே நான் பார்க்கிறேன். இந்த அரங்கிலே நான் பார்க்கிறேன். உலகப் பொதுமறையை உருவாக்கிக் கொடுத்த திருவள்ளுவருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன். அகிம்சையின்மூலம் இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தைப் பார்க்கிறேன். அரசியல் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன். தெய்வீகத்தையும், தேசியத்தையும் இரு கண்களாகப் பாவித்த தேவர் திருமகனாருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்.

பிற்பகல் 12-30

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்; கூர்ந்த மதிநுட்பமும், அறிவும் பெற்ற இராஜாஜி அவர்களுடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கை கொண்ட திராவிட இயக்கத்தை இங்கே ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திச் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்; நம்ம வீட்டுப் பிள்ளையாக, ஏழைகளின் பங்காளனாக, (மேசையைத் தட்டும் ஒலி) தான் இருக்கும்வரை இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் தீய சக்தியை அனுமதிக்க மாட்டேன் என்று சூளுரைத்து, பொற்கால ஆட்சி படைத்து, நாளை இந்தியாவை வழிநடத்தவிருக்கின்ற அம்மாவை நமக்குத் தந்து சென்றிருக்கின்ற புரட்சித் தலைவருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்; (மேசையைத் தட்டும் ஒலி) கர்ம வீரர் காமராஜருடைய திருவுருவப் படத்தை நான் பார்க்கிறேன்; இத்தனை பேர்களுடைய திருவுருவப் படங்களை நான் பார்த்தாலும்கூட, இவர்கள் அனைவரின் ஒட்டுமொத்த உருவமாக அமைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேரடியாகப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேர்பட்ட அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற அம்மா அவர்கள்-எதிர்காலத்தில் நிச்சயமாக இந்தியாவினுடைய தலைமை பீடத்தில் அமர்வார்கள். இது காலத்தின் கட்டாயம். இன்றைக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே கொடியேற்றுகின்ற அம்மா அவர்கள், நாளை செங்கோட்டையிலே கொடியேற்றுகின்ற நாள் வெகு தொலைவில் இல்லையென்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, என்னுடைய வீரபாண்டி தொகுதிக்குத் தேவையான மூன்றே மூன்று கோரிக்கைகளை மட்டும் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய வீரபாண்டி தொகுதியிலுள்ள பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே ஜருகுமலை என்ற மலைப் பகுதி இருக்கிறது. 1,000 மக்கள் வசித்து வருகின்ற அந்தப் பகுதியில், ஏழு கிலோ மீட்டர் மலைப் பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியை, கடந்த ஆண்டு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்தினுடைய



அமைச்சரான நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்து, தார்ச் சாலை அமைப்பதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இந்த நிதியாண்டிலேயே அங்கு வாழும் மலைவாழ் மக்களுக்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வீரபாண்டி ஒன்றியப் பகுதியைத் தனி தாலுகாவாக உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை என்னுடைய தொகுதியில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகள் என மூன்று மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், ஓர் அரசு கலைக் கல்லூரிகூட இல்லை. ஆகவே, ஆண், பெண் இருபாலரும் படிக்கும் ஒரு கலைக் கல்லூரி உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, நன்றியினைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். அரசு, செலவில்லாமல், ஒரு கையெழுத்து மட்டும் போட்டால் போதும்.

தேசிய நெடுஞ்சாலையில், தனியார் நகைக் கடை உரிமையாளர்களெல்லாம் ரவுண்டானாவைப் பராமரித்து வருகிறார்கள். என்னுடைய சேலம் வடக்கு தொகுதியிலே புகழ்பெற்ற Super Speciality மருத்துவமனை இருக்கிறது. அதற்கு முன்னால் ஏறக்குறைய 50,000 சதுர அடியிலே பூங்கா அமைக்கவிருக்கின்றார்கள். பொதுவாக, அரசாங்க மருத்துவமனைக்கு வருபவர்களெல்லாம் ஏழை, எளிய மக்கள்தான். அவர்கள் விவரம் தெரியாமல், அந்தப் பூங்காவில் உட்கார்ந்து, சாப்பிட்டு, நிறைய குப்பைகளைப் போட்டுவிடுகிறார்கள். இந்த முறை, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு

நிதியிலிருந்துகூட ஏழு இலட்சம் ரூபாய் ஒதுக்கி, மருத்துவமனைக்கு வரும் பார்வையாளர்களுக்கு கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. ஏனென்றால், அந்த மருத்துவமனை 140 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட அருமையான மருத்துவமனை. அதன் எதிரிலேயே கனரா வங்கி இருக்கின்றது; State Bank of India பிரதான கிளை இருக்கின்றது; அதுமட்டுமல்லாமல் Salem Steel Plant இருக்கின்றது. தொடர்ந்து அந்த மருத்துவமனையின் சுற்றுச்சூழல் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக, அரசு மூலமாகவோ, தனியார் மூலமாகவோ அதைப் பராமரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, உத்தரவு போட்டால், அதன் சுற்றுச்சூழல் மிகவும் நன்றாக இருக்கும். (குறுக்கீடு) எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை. ஏனென்று சொன்னால், அந்தப் பூங்காவின் அருகிலேயே ஒரு நல்ல மருத்துவமனை இருக்கின்றது. அந்த மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகள் பூங்காவை அசுத்தப்படுத்துகிறார்கள். ஆகவே, அவர்களுக்கென ஓர் இடத்தை ஒதுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அந்த மக்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலிருந்து வருகின்ற மக்கள். அவர்களுக்கு அந்தப் பூங்காவினுடைய முக்கியத்துவம் தெரியாமல்கூட இருக்கலாம். எனவே, அவர்களுக்கென்று ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு, மற்ற பகுதிகளைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் பாசனம் மற்றும் கட்டடங்கள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு, கர்நாடக அரசு காவிரியிலே தண்ணீர் திறந்துவிட மறுத்தபோது, தொடர்ந்து நம்முடைய அரசின் சார்பில் நடவடிக்கை மேற்கொண்டு, பல்வேறு வழக்குகளைப் போட்டு, முழுமையாகத் தண்ணீர் பெற முடியாவிட்டாலும்கூட, 63 டி.எம்.சி. தண்ணீர் பெற்று ஓரளவிற்குத் தமிழகத்திலே சாகுபடியைக் காப்பாற்றியதற்கும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை, மிகுந்த காலதாமதத்திற்குப் பிறகு மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்கிற கட்டாயத்தை உருவாக்கியிருப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை, நன்றியை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் ஒழுங்குமுறைப்படுத்தும் குழு இவற்றை அமைக்க வேண்டிய மத்திய அரசு, அவற்றை அமைக்காமல் காலதாமதம் செய்கிறபோது, அமைக்கவேண்டும் என்று மீண்டும் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருப்பதும் நல்ல நடவடிக்கை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, காவேரி நடுவர் மன்றத்தினுடைய தலைவர் பொறுப்பு, கடந்த சில ஆண்டுகளாக காலியாகவே இருக்கிறது. அதை மத்திய அரசு பூர்த்தி செய்யும் வகையில், அதற்குப் பொருத்தமான ஒருவரை நியமனம் செய்து, காவேரி நடுவர் மன்றத்தைச் செயல்படுத்த வேண்டுமென்கிற முறையில், நம்முடைய அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, மத்திய அரசு தேசிய நீர்க் கொள்கை என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, அந்தக் கொள்கையின்மூலம் பாசனத்திற்குக்கூட, குடிநீருக்குக்கூட கட்டணத்தைத் தீர்மானிக்க வேண்டும் என அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் கொள்கையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறவகையிலே, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், கட்டணத்தைத் தீர்மானிக்கிறபோதுகூட, மத்திய அரசு அந்தக் கட்டணத்தைத் தீர்மானிக்கக்கூடாது, சாதக, பாதக அம்சங்களைக் கொண்டு மாநில அரசுக்கு அந்த உரிமையை வழங்க வேண்டும் என்பதுபோல, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பதுகூட பொருத்தமாக இருக்காது. பாசனத்திற்கும், குடிநீருக்கும் கட்டணம் வசூல் செய்கிற, அந்த நடைமுறையை, கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதை நான் இங்கே வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு தண்ணீர் பற்றாக்குறை மிகுந்த மாநிலமாக இருக்கிறது. மொத்தத்திலே 853 டி.எம்.சி. தண்ணீர்தான் நமக்குக் கிடைக்கிறது. ஆனால், இருக்கிற தண்ணீரைச் சேமித்துப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு, நம்மிடம் உள்ள நீர்த்தேக்கங்கள், பாசனப் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை என்பதை நாம் பார்க்க முடிகிறது. அரசினுடைய ஆவணத்தில் தெரிவித்திருக்கிறது என்னவென்று சொன்னால், 853 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிற தமிழகத்தில், 238.53 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்குகிற அளவிற்குத்தான் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு இருக்கின்றது. எனவே, மேட்டூர் உட்பட, வைகை உட்பட, அனைத்து நீர்த்தேக்கங்களையும் ஆழப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்கி, இருக்கிற நீரை முறையாகப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் அல்லது வறட்சி போன்ற இயற்கை இடர்ப்பாடுகளாலே தமிழகம் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாகிறது. ஒரு ஆண்டுக்கு வறட்சி ஏற்பட்டால், சில இலட்சம், கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்தின் மொத்த உற்பத்தியிலே இழப்பீடு ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு மிகப் பெரிய



இழப்பு ஏற்படுகிறது. எனவே, வெள்ளம், வறட்சியை ஒருசேரத் தடுத்து நிறுத்தி, உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால், பாசனத் துறை மிக அதீத முக்கியத்துவத்தோடு செயல்படவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, தமிழகத்திலே பாசனம் பெறுகிற மொத்த நிலத்தின் அளவு, மொத்த சாகுபடி அளவில் 57 சதவிகிதம்தான் இருக்கிறது. மீதியிருக்கிற 43 சதவிகித நிலமானது வானம்பார்த்த பூமியாகத்தான் இருக்கிறது என்று சொல்கிறபோது, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கையாகவே தமிழகத்தில், தண்ணீருக்காக அண்டை மாநிலங்களை நம்பி இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்போது கடுமையான நடவடிக்கை எடுத்து பல்வேறு ஏரிகள், குளங்களைத் தூர்வார நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதேபோல, புதிய தடுப்பணைகள் அமைப்பதற்கும் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலிலே கலக்கின்ற நீர் வீணாகக்கூடாது, அதை சேமித்து வைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, இப்பொழுது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். காவேரிப் பாசனப் படுகையில் நமக்கு மொத்தமாகக் கிடைக்கிற தண்ணீரின் அளவு 419 டி.எம்.சி. ஆனால், மேட்டூர் அணையிலே அந்த நீரைத் தேக்கி வைப்பதற்கு அதன் கொள்ளளவு 93 டி.எம்.சி. மட்டும்தான்.

எனவே, 419 டி.எம்.சி. தண்ணீர் காவேரி படுகையிலே நமக்குக் கிடைத்தால், அதைத் தேக்கி வைப்பதற்கு மேட்டூரைவிட அதிக கொள்ளளவு கொண்ட வேறு நீர்த்தேக்கங்களே தமிழகத்திலே இல்லை என்ற குறை நீண்ட நெடுங்காலமாகவே இருக்கிறதென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக காவேரி நீரைத் தேக்கி வைப்பதற்காக மேட்டூரிலேயிருந்து துவங்கி நாகப்பட்டினம், கொள்ளிடம் வரை 16 கதவணைகள் அமைப்பதன்மூலம் ஏறக்குறைய 120 டி.எம்.சி. தண்ணீரை படிப்படியாகத் தேக்க முடியும். அதனாலே, நிலத்தடி நீர்மட்டத்தை அந்த இரண்டு பகுதிகளிலும் உயர்த்த முடியும் என்கிற பல்வேறு அறிக்கைகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த காரணத்தாலே, எந்தப் பணிகளும் செய்ய முடியாத நிலை இதுவரை இருந்தது. இப்பொழுது இந்த வழக்கு முடிவிற்கு வந்ததனாலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்து, விரைவிலே அறிவிப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, 11,560 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு பெருந்திட்டம் உருவாக்கப்பட்டு, மத்திய அரசின் உதவியோடு நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல ஆண்டுகளாக, பல வழக்குகளின் காரணமாகவோ அல்லது அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களுடைய அலட்சியத்தின் காரணமாகவோ அந்தப் பணிகள் செய்யாமல் விடுபட்டிருந்தாலும், கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒரு பெருந்திட்டத்தை அரசு தயாரித்திருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு



அதனை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவேரி டெல்டா மாவட்டங்களுக்கான திட்டங்கள் என்று அறிவிக்கிறபொழுது, தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை என்கிற அந்த 3 மாவட்டங்களோடு மட்டுமல்லாமல், காவேரி பாசனப் பகுதியைச் சார்ந்த மாவட்டங்கள் முழுவதற்கும் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, காவேரி பாசனப் பகுதி மட்டுமல்லாமல், மற்ற இடங்களிலும், இன்றைக்கு காலையிலேகூட வைகை அணையிலே 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆகாயத் தாமரை அடைத்துக் கொண்டிருக்கிற செய்தியை தொலைக்காட்சியிலே பார்க்க முடிகிறது. ஆகவே, கால்வாய்களைத் தூர்வாருவது என்பது ஒன்று. இன்னொன்று எல்லா இடங்களிலுமே ஆகாயத் தாமரை அடைத்துக் கொண்டு பாசனத்திற்கான நீர்வரத்தையே தடுப்பது மிகப் பெரிய சாபக்கேடாக இருக்கிறது. எனவே, கால்வாய்களைத் தூர்வாரி முறைப்படுத்துவதற்கான நிதியை உடனடியாக. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகாயத் தாமரையை அகற்றுவதற்காக பல்வேறு கட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இப்பொழுது ஓர் இயந்திரம் வாங்க வேண்டுமென்று பொதுப் பணித் துறையால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னோட்டம் பார்ப்பதற்காக ஒரு திட்டத்தினை விரைவிலே, சென்னை மாநகரத்திலே செயல்படுத்த உள்ளோம். அது வெற்றிகரமாக நடைபெற்றுவிட்டால், மீண்டும் அனைத்துப் பகுதிகளிலுமே அந்தச் செயல் திட்டம் உருவாக்கப்பட்டு, விரைவிலே ஆகாயத் தாமரையை அகற்றும் பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, தமிழகத்திலே இருக்கிற இன்னொரு முக்கியமான பிரச்சினை, கடல் நீர் பல்வேறு கால்வாய்களின்

மூலமாக உள்ளே புகுந்து நிலத்தடி நீரையும், சாகுபடி நிலங்களையும் பாழ்படுத்துவது. குறிப்பாக, நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களிலே 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் நீர் உள்ளே புகுந்து, நிலத்தடி நீரை பாழ்படுத்துகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே, உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, எப்படி காவேரி பாசனப் பகுதியை மேம்படுத்துவதற்கு ஒரு பெருந்திட்டத்தை அரசு தயாரித்து இருக்கிறதோ, அப்படி கடல் நீர் உள்ளே புகாதவாறு, கடற்கரை ஓரங்கள் முழுவதிலும் தடுப்பணைகளைக் கட்டி, நிலத்தடி நீரையும், சாகுபடி பரப்பையும். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் நீர் உட்புகாமல் தடுப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் 1,560 கோடி ரூபாய் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன், பல்வேறு பணிக்கான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 39,202 ஏரிகள் இருக்கின்றன. அவற்றிலே 13,699 ஏரிகள் மட்டும்தான் பொதுப் பணித் துறையினுடைய நீராதாரத் துறையின் கட்டுப்பாட்டில் வருகின்றன.

வருவாய்த் துறை உள்ளிட்ட வேறு பல துறைகளின் கட்டுப்பாட்டில் மற்ற ஏரிகள் இருக்கின்ற காரணத்தினால், அவற்றை முறையாகத் தூர்வாருவதற்கோ, பராமரிப்பதற்கோ முடியவில்லை. எனவே, குறைந்தபட்சம் அனைத்து ஏரிகளையும் கட்டுப்படுத்துகிற ஓர் ஆணையத்தை உருவாக்கி, ஓர் உயர் மட்டக் குழுவை உருவாக்கி, அந்த ஏரிகள் உட்பட எல்லா ஏரிகளையும் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு விரிவான திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 12-45

அடுத்து, தமிழ்நாட்டில் நதி நீர்நிலைகள் மாசுபடுவது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. காவேரி, பாலாறு உட்பட, அனைத்து நதி நீர்நிலைகளுமே இன்றைக்கு மாசுபட்டு, ஆலைக் கழிவுகளாலே மிக மோசமான அளவிற்கு மாசுபட்டு, அதனால் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் மிகப் பெரிய அளவில் நோய்கள் பரவுவதற்கான ஆபத்து ஏற்படுகின்றது. எனவே, மாசுபடுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஏரியாக இருக்கக்கூடிய வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் வந்து கொண்டிருப்பது நல்ல செய்தி. அந்த ஏரியை ஆழப்படுத்தி, தூர்வாரி, அதனுடைய கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள் நேற்றைக்குச் சொன்னதுபோல, வீராணம் என்று சொன்னாலே நினைவுக்கு வருவது, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குழாய்கள்தான். கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட திட்டத்தால், வீராணம் என்று சொன்னாலே ஊழல் என்றிருந்த நிலையை மாற்றி, வீராணம், ஒரு வெற்றிகரமான திட்டம் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு மாற்றிக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வருகின்ற நிதியாண்டிலே, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, வீராணம் ஏரி தூர் வாரப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கு 40 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிற நம்முடைய அரசுக்கு நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது ஒரு நல்ல திட்டம்; சென்னை மக்களுக்குக் குடிநீர் அவசியமான ஒன்று என்பதிலே இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால், அதேசமயத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி மக்களுடைய பாசனத்திற்கு ஆதாரமாக இருப்பது வீராணம் ஏரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசனப் பகுதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய பாசன உரிமை பாதிக்காமல், சென்னைக்குக் குடிநீர் எடுத்து வருகிற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்திக்கடவு-அவினாசி திட்டம் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். கொள்ளிடம் ஊற்று நீரைத் தடுத்து, காண்சாய் வாய்க்கால் மூலம் சிதம்பரம் நகரத்திற்குக் குடிநீர் கொண்டுவருகிற, சிதம்பரம் கிள்ளை பகுதிக்குப் பயன்படுத்தக்கூடிய அந்தத் திட்டம், அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அதையும் நிறைவேற்ற வேண்டும்.

தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் எடுக்கின்றபோது, பல இடங்களில், குறிப்பாக தூத்துக்குடியிலே ஸ்ரீவைகுண்டம் அணைக்கு உள்ளேயே ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, ஒரு நாளைக்கு ஏறக்குறைய 9 கோடி லிட்டர் நீரினை அங்கிருக்கின்ற ஸ்பிக், ஸ்டெர்லைட் போன்றிருக்கக்கூடிய 10-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக எடுக்கின்றார்கள். எனவே, தொழிற்சாலைகள்கூட கடல்நீரை நன்னீராக மாற்றிப்



பயன்படுத்திட முடியும். இதனால், அங்கேயிருக்கிற மக்களுடைய குடிநீராதாரம், பாசன ஆதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே, அவற்றைத் தடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**நிலத்தடி நீரை எடுக்கின்றபோது, மேட்டூரிலிருந்து குடிநீருக்கான தண்ணீர் விடுவதை 500 கன அடி என்பதை, 2 ஆயிரம் கன அடியாக உயர்த்தினால், அந்தப் பகுதி பாதிக்காது. குடிநீருக்கும் எந்தத் தட்டுப்பாடும் இல்லாமல், கோடைக்காலங்களிலே பயன்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மணல் வியாபாரத்தை இன்றைக்கு அரசே செய்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். அங்கேயுள்ள stock yard-ல் அரசாங்கத்திடமிருந்து சில தனி நபர்கள் மணலை வாங்கி இருப்பு வைத்துக்கொண்டு, அவர்கள் உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவைப் பெற்றிருக்கிறோம் என்கிற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு, ** அதனால் அரசாங்கத்திற்கும் வருமானம் இல்லை; வாங்கிப் பயன்படுத்தும் மக்களுக்கும் வருமானம் இல்லை; ** எனவே, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே வாங்கியிருக்கின்ற அந்த உயர் நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பினை அரசு இரத்து செய்து, உரிய வகையில் அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டித் தரவும், மக்களுக்குப் பயன்தரக்கூடிய வகையிலும், அந்த இடைத்தரகர்களைப் போக்குவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, விரைவிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதன்மீது நடவடிக்கை எடுப்போம் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோன்று, ஏரி, குளம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக மணலை எடுக்கும்போது, அதிகாரிகள் டிராக்டர்களைப் பறிமுதல் செய்வது, வண்டிகளைப் பறிமுதல் செய்வது போன்ற செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை இந்த அவையில் தெளிவுபடுத்திய பிறகும்கூட, அந்த நடவடிக்கைகள், குமராட்சியிலே, வல்லம்படுகையிலே, சாதாரண ஏழை விவசாயிகளுடைய டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, கடந்த ஆண்டு பாசன மானியக் கோரிக்கையின்போது, உள்நாட்டு நீர்வழித் தடத்தை அதிகரிக்கிற முறையிலே, பக்கிங்காம் கால்வாயை முழுமையாகத் தூர்வாரி, பழவேற்காடு முதல் பாண்டிச்சேரி வரையில் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது; அது இன்னும் துவக்கப்படாமலேயே இருக்கிறது. அதனை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப் பணித் துறையில் பணியாற்றும் 1,178 தினக் கூலித் தொழிலாளர்கள் கடந்த 10, 15 ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களது பணியை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, வெள்ளத் தடுப்பு என்று வருகிறபோது, குறிப்பாக இன்றைக்கு மிக அதிகமான வெள்ளச் சேதத்திற்குள்ளாவது கடலூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்கள்தான். எனவே, அந்த மாவட்டங்களில் வெள்ளத் தடுப்பைப் போக்குவதற்கான சிறப்பான ஒரு திட்டத்தை அரசு தயாரிக்க முன்வர வேண்டும். சில திட்டங்கள், குறிப்பாக, பரவனாற்றுக் கரையைப் பலப்படுத்துகிற திட்டம் பாதியிலேயே நிற்கிறது. அதையும் அவர்கள் முழுமைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நம்முடைய அரசு சில திட்டங்களைத் தீர்மானிக்கிறபோது, வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இடையிலே இருக்கிற காரணத்தினால், அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாகக் கிடப்பிலே இருக்கின்றன. குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தில் கல்லாறு அணைக்கட்டுத் திட்டத்திற்காக 17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அங்கு வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிற காரணத்தினால், அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாமல், 10 ஆண்டுகளாக தாமதமாகிக் கொண்டு இருக்கிறது. அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கட்டடங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தொகுதி மேம்பாட்டுப் பணிகளுக்காக சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்குகிறபோது, அவற்றில் சில பணிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன; சில பணிகள் பொதுப் பணித் துறை மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. பல இடங்களில் பொதுப் பணித் துறை அதிகாரிகள் உடனடியாக அந்தப் பணிகளை முடித்துவிடுகிறார்கள். ஆனால், சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி போன்றவற்றிற்கு, 2011-2012 ஆம் ஆண்டில் பல்வேறு பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டும், இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்கிற குறை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில்தான், பல்வேறு வகையான பணிகளுக்கு நிதி ஒதுக்கியும்கூட, முறையாகச் சென்றடையவில்லை. அப்படி சென்றடையாத காரணத்தினால்தான், அந்தப் பணிகள் தொய்வு அடைந்தன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மதுரை மாநகராட்சியை ஆய்வு செய்து, பிரத்யேகமாக, ஒரே தவணையில், 150 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மன்னிக்கவும், நான் மதுரை மாநகராட்சி என்று சொன்னதும் JNNURM திட்டத்திற்கே வந்துவிட்டேன். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும் சொன்னால், நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது பொதுப் பணித் துறையின் மூலமாக நிறைவேற்றப்படுகின்ற பணிக்காக, சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிதி ஒதுக்கப்பட்டும்கூட, அந்தப் பணிகள் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, வியாசர்பாடியிலுள்ள அம்பேத்கர் கலைக் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது; கட்டடம் கட்டும் பணி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதேபோன்று, மதுரை மாநகராட்சியில், நிதி ஒதுக்கப்பட்டும், பணிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. ஆனால், வேறு சில தொகுதிகளில், தாமதம் இல்லை. (குறுக்கீடு) எங்களுக்கெல்லாம் இல்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், உடனடியாக, பொதுப் பணித் துறை அதிகாரிகள், சொல்வதற்கு முன்னாலேயே, பணிகளை முடித்துவிடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் முதலில் பேசும்போது, 'பொதுப் பணித் துறை மூலமாகச் செய்கின்ற பணிகள் விரைவாக முடிக்கப்படுகின்றன' என்று சொன்னார். ஆனால், இரண்டாவது சொல்கின்றபோது, மாற்றி, 'பொதுப் பணித் துறை மூலமாக நடக்கின்ற பணிகள் தாமதப்படுத்தப்படுகின்றன' என்று சொல்கிறார். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் என்கிற முறையிலே, வியாசர்பாடியிலுள்ள அம்பேத்கர் கலைக் கல்லூரிக்கு இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு பணம் ஒதுக்கினேன். நான் கோரியபடி, உயர் கல்வித் துறை, அக்கல்லூரியில், நான்கு புதுப் பாடத் திட்டங்களை ஏற்கெனவே அறிமுகப்படுத்தியிருக்கிறது. எனினும், மாணவர்கள் அமருவதற்குப் போதிய வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால், வகுப்பறைகள் கட்டுவதற்கு அவசரமாகப் பணத்தை ஒதுக்கினேன். ஆனால், 1½ ஆண்டுகளாகியும், அக்கல்லூரியில் வகுப்பறைகள் கட்டுவதற்காக ஒரு செங்கல்கூட இன்னும் எடுத்து வைக்கப்படவில்லை. நான் என்னவென்று விசாரித்தபோது, 'பொதுப் பணித் துறை தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறது' என்று கூறினார்கள். பொதுப் பணித் துறை மூலமாகத்தான் அந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆள் போதவில்லையோ அல்லது கான்ட்ராக்டர்கள் கிடைக்கவில்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், தாமதமாகிக்கொண்டிருக்கிறது. இதன் Nodal Agency, Corporation தான். ஆனால், அரசு கலைக் கல்லூரிக்கும், அரசு பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடம் கட்ட வேண்டியது பொதுப் பணித் துறை. விரைந்து கட்டடத்தை முடித்துத்தர அத்துறையை வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளிலே வருகின்ற

பணிகளை பொதுப் பணித் துறை செய்வதில்லை. அதற்குத் தனியாக ஒரு துறை, உயர் கல்வித் துறை இருக்கிறது. அந்தத் துறை அந்தப் பணிகளைக் கவனித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுப் பள்ளிகளிலே செய்கின்ற பணிகள் மட்டும் பொதுப் பணித் துறைமூலம் செய்யப்படுகின்றன. உயர் கல்வித் துறையிலே செய்கின்ற பணிகள் உயர் கல்வித் துறை மூலமாகச் செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. சு. குணசேகரன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலுள்ள கட்டடப் பிரிவின் மூலமாக அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மேல்நிலைப் பள்ளிகளுக்கு, கட்டடம் கட்டும் எந்தப் பணிகளாக இருந்தாலும் அவை செயல்படுத்தப்படுகின்றன. அந்த அடிப்படையில், என் தொகுதியில்கூட, காம்பவுண்டு சுவர் கட்டுவதற்குத்தான் பணம் கொடுத்திருந்தேன். அதற்குக்கூட எஸ்டிமேட் போட்டும், 2 ஆண்டுகளாகச் செய்யவில்லை. காரணம் கேட்டால், 2 மாவட்டங்கள், 3 மாவட்டங்களாகச் சேர்த்து பணிகளை எடுக்கின்றபோது, பொதுப் பணித் துறையிலுள்ள கட்டடப் பிரிவை, மருத்துவப் பிரிவு, பொதுப் பணி, கட்டடப் பணி என்றெல்லாம் பிரித்திருக்கிற காரணத்தால், நிருவாகத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. எனவே, பணியில் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே, பழைய முறையிலேயே, மாவட்டத்திற்கு ஒரு கட்டடப் பணிப் பிரிவை உருவாக்கி, அதன்மூலமாக விரைந்து அந்தப் பணிகளைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், ஒரு நிமிடத்தில் பேசி, உரையை முடியுங்கள்.



**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, இன்றைக்கு கட்டடத்திற்கான நிதி ஒதுக்கப்படுகிறபோது, கட்டுமானப் பொருட்களின் விலை, கட்டுமானத் தொழிலாளர்களுடைய ஊதியங்கள் எல்லாம் உயர்ந்திருக்கிற சூழ்நிலையில், பொதுப் பணித் துறையினுடைய அளவீடு அடிப்படையிலே, கட்டடங்களுக்கு நிதி ஒதுக்குகிறபோது, இன்றைய தேவைக்கு ஈடுகொடுப்பதாக இல்லை என்கிற காரணத்தினால், ஒப்பந்ததாரர்கள் பணிகளை எடுப்பதற்கு மிகவும் தயங்குகிறார்கள். அதாவது, ஒரு கட்டடப் பணி கொடுத்தால், ஒரு ரோடு வேலையோ, வேறு ஒரு வேலையோ சேர்த்துக் கொடுங்கள் என்று, ஒன்று வாங்கினால், இன்னொன்று கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, கேட்கிறார்கள். எனவே, இன்றைக்கு கட்டுமானப் பொருட்களுடைய விலை உயர்வுக்கு ஏற்ப, அந்த மதிப்பீட்டை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, கடைசியாக இங்கே நான் குறிப்பிட விரும்புவது, கடந்த ஆட்சியில், கொள்ளிடம் கரையை பலப்படுத்துவது என்கிற பெயரிலே, 102 கோடி ரூபாய்க்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதிலே மிகப் பெரிய அளவுக்கு முறைகேடு நடந்தது என்பதெல்லாம் உலகறிந்த விஷயம். ஆனால், என்ன நடந்தது என்று சொன்னால், 102 கோடி ரூபாய் பணத்தைச் செலவழித்து அணையை பலப்படுத்துவதுவதற்கு மாறாக, மேல்மட்டம் சுருக்கப்பட்டதால் 30, 40 கிராமங்களை போக்குவரத்துக்கே லாயக்கு இல்லாமல் செய்துவிட்டபடியால், இன்றைக்கு அணையும் பலமாக இல்லை, போக்குவரத்துக்கும் லாயக்கற்றதாக ஆகிவிட்டது. எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை ஆய்வு செய்து, நிவர்த்தி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட பிரச்சினையை விரைவிலே தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** அடுத்ததாக, விருதுநகர் மாவட்டத்தில், (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விடுகிறேன். அதேபோன்று, கடந்த ஆட்சியிலே ஒரு திட்டம், பரவனாறு கரையைப் பலப்படுத்துகிற திட்டம், பாதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது, பாதி நிறைவேற்றப்படவில்லை. இதனால், ஒரு பகுதியிலே இருக்கிற வெள்ள நீர் முழுவதும் கடைமடைக்கு வந்து, மிகப் பெரிய சேதத்தை உருவாக்குகிறது. அதையும் நீங்கள் முடிவெடுத்து, சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கடைசியாக, **. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் திரும்பத் திரும்ப மணலைப் பற்றிப் பேசுகிற போது ஒரு கருத்தை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார். மணலைப் பொறுத்தவரையில், ஆற்றுப் படுகையில், யார் வேண்டுமானாலும் போய் மணலை வாங்கிக்கொள்ளலாம். 2 யூனிட் மணல் 626 ரூபாய். யாரும், யாரையும் அரசு சார்பாக முகவர்களாக நியமிக்கவில்லை. பொதுப் பணித் துறைதான் நடத்துகிறது. அள்ளிப் போடுகின்ற பணி மட்டும் ஒப்பந்ததாரர்களிடம் விடப்பட்டிருக்கிறது. மற்றபடி மணலை முழுமையாக அரசுதான் ஏற்று நடத்துகிறது. அந்த இடத்திலே போய் யார் வேண்டுமானாலும், 2 யூனிட் மணலை 626 ரூபாய் கொடுத்து, இரசீது போட்டு வாங்கிக்கொள்ளலாம்.

பிற்பகல் 1-00

ஆனால், மணலை எடுத்துச் செல்கின்றவர்கள், அவர்களாக மணலை சலித்து, சுத்தம் செய்து, விலைக்குத் தருகிறார்கள். அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ** என்று அடிக்கடி திரு. பாலகிருஷ்ணன் இங்கே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கின்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசிற்கும், அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. யார் வேண்டுமானாலும் ஆற்றுப் படுகைக்குச் சென்று லாரியைக் கொண்டுபோய் நிறுத்தி, இரண்டு யூனிட் மணலை 626 ரூபாய் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள்கூட பெற்றுக்கொள்ளலாம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது, ** பற்றிச் சொன்னதும், நான் பேசியதும், அனைவர் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உங்கள் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்றில் அனுமதியில்லாமல் மணல் அள்ளியவர்களின் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது வரையில் 6,023 லாரிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன்மூலம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூபாய் 12 கோடியே, 61 இலட்சம் ஆகும். அதில் 2,883 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 11 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன், உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) அரை மணி நேரம் ஆகி விட்டது. நீங்கள் வேறு புதிய சப்ஜெக்ட்டுக்குள் போகாதீர்கள். உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள் . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன், உங்கள் தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள். இப்போது முடித்து விடுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிக் கோிக்கைகள்.

கொள்ளிடம் ஊற்று நீரை, ஆதனூர் (கடலூர் மாவட்டம்), குமாரமங்கலம் (நாகை மாவட்டம்) இடையில் அணைகட்டி நீரைத் திருப்பி, கான்சாகிப் வாய்க்கால்மூலம் சிதம்பரம் வட்டம், சிதம்பரம் நகர் குடிநீருக்கும், கிள்ளை பகுதிக்கு பாசனத்திற்கும் திருப்பிவிடும் திட்டம் ரூ.250 கோடியில் மதிப்பிடப்பட்டுள்ளதை நிறைவேற்றிட ஒப்புதலும், நிதியும் வழங்கிட வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடல்நீர் உள்புகுந்து நிலத்தடி நீரையும், சாகுபடி நிலங்களையும் பாழ்படுத்துவதால் கொள்ளிடம், வெள்ளாறு, உப்பனாறு, பரவனாறு போன்றவற்றில் தடுப்பணை கட்டி, நிலத்தடி நீரையும், சாகுபடி நிலங்களையும் பாதுகாத்திட வேண்டும்.

கடைபரவனாற்றில் கரைகளை உயர்த்தி வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள திட்டத்தை காலதாமதமில்லாமல் நிதி ஒதுக்கி, நிறைவேற்ற வேண்டும்.

கொள்ளிடம் வலதுகரையில் கடந்த ஆட்சியின்போது ரூ.102 கோடி செலவில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் அணையின் மேல்மட்டத்தை மிகவும் சுருக்கி, போக்குவரத்திற்கு இலாயக்கற்றதாக மாற்றப்பட்டதால், 30 கிராமங்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை ஆய்வு செய்து, அணையைப் பலப்படுத்தி, போக்குவரத்திற்கு ஏற்புடையதாக மாற்றித் தர வேண்டும்.

சிதம்பரம் நகரத்தின் கழிவுகள் கான்சாகிப் கால்வாயில் கலப்பதால் சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படுவதால், நகரக் கழிவுகள் கால்வாயில் கலப்பதைத் தடுத்திட வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, Stock Yard வைத்துக் கொண்டு மணலை வாங்கி விற்பதற்கான வழி செய்திருக்கின்ற உயர் நீதிமன்ற ஆணையை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பதில் சொல்லி விட்டார்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** உயர் நீதிமன்ற ஆணையை இரத்து செய்வதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென மீண்டும் வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள். (குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்? சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள், பேசட்டும். அந்த சப்ஜெக்ட் முடிந்து விட்டது. வேறு சப்ஜெக்ட்டிற்குப் போய் விட்டோம். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கருப்பசாமி, கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நீண்டகாலமாக பேரூராட்சி, சிறிய கிராமங்களில், மாட்டு வண்டிகள்மூலம் மணல் அள்ளி சின்னச் சின்ன வேலைகளுக்குப் பயன்படுத்தி வந்தார்கள். அரசு இப்போது அறிவித்திருக்கிற பசுமை வீடு திட்டங்கள் போன்ற நல்ல திட்டங்களுக்குக்கூட அது பயன்பட்டு வந்தது. ஆனால், சமீபத்தில் மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதற்குத் தடை செய்யப்பட்டு இருக்கிறது. பொதுப் பணித் துறையிலிருந்து ஆய்வுகள் மேற்கொண்டு, மணலை அள்ளிக்கொள்ளலாம் என இரசீது கொடுத்து அனுமதிக்கப்பட்ட இடங்களில்கூட, பசுமை தீர்ப்பாயத்தின்மூலமாக, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ** எனவே, இது காரிய சாத்தியம் இல்லாத ஒரு நிலையில், இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்களில் மாட்டு வண்டியில் மணல் அள்ள முடியாததால், அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்கள்கூட தடைபட்டிருக்கின்றன என்பதை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ** . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டியில் மணல் அள்ளிச் செல்வதற்கென தனியாக மணல் குவாரி அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குவாரிகளில், அனுமதிக்கப்பட்ட இடங்களில், மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதில் எந்தத் தடையும் இல்லை. ** என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அப்படி ஏதாவது குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு குணசேகரன் தெரிவித்த ** சம்பந்தமான கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து உங்கள் உறுப்பினர் பேசும்போது சொல்லட்டும், விடுங்கள். (குறுக்கீடு) அதை பிறகு பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

***திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரியைப் பெற்றுத் தந்த தங்கத் தாரகையே! நாளைய பாரதமே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள மேட்டுப்பாளையம், கோவை வடக்கு, அவினாசி, பவானிசாகர், கோபிசெட்டிபாளையம், சூலூர், திருப்பூர் வடக்கு, பெருந்துறை ஆகிய எட்டு சட்டமன்றத் தொகுதிகளை (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளடக்கிய அவினாசி-அத்திக்கடவு வெள்ள நீர்க் கால்வாய்த் திட்டத்தில் 538 குளங்கள், 71 ஏரிகளை உள்ளடக்கிய 148 கிராமங்களில் உள்ள சுமார் 20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 23-4-2002 அன்று, இந்தப் பணிகளுக்காக ரூபாய் 1,862 கோடி ஒதுக்கித் தந்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றி மலர்களை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, உரையை முடியுங்கள். உட்காருங்கள்.

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை நிறைவேற்ற, பேராசிரியர் ஏ. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு, தொழில்நுட்பக் குழுவினுடைய திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை தனது விரிவான அறிக்கையின்மூலம் சமர்ப்பித்துள்ளது. பவானி ஆறு, காவேரி வடிநிலத்தின் நான்காவது பெரிய உபவடிநிலமாகும். காவேரியின் இரண்டாவது நீளமான கிளை ஆறாகும். மேலும், 6,154 சதுர கிலோ மீட்டர் நீர்ப்பிடிப்பு பரப்பளவைக் கொண்டு அமைந்துள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பில்லூர் நீர்த்தேக்கம், பவானியின் குறுக்கே குந்தாறு, பவானி ஆறுடன் சங்கமமாகும் இடத்திற்குக் கீழே அமைந்துள்ளது. பவானி ஆற்று நீர், பில்லூர் நீர்த்தேக்கத்தைக் கடந்து, பவானிசாகர் அணைக்குச் சென்றடைகிறது. பவானி ஆற்றின் மொத்த நீளமான சுமார் 217 கிலோ மீட்டரில், 40 கிலோ மீட்டர் நீளம் கேரளாவில் உள்ளது. பவானி ஆறு பவானி நகரத்தின் அருகிலே காவேரியாற்றில் கலக்கிறது. திருப்பூர் மாவட்டத்திலுள்ள அவினாசி வட்டம், முந்தைய கோவை மாவட்டத்தில் ஒரு வளர்ச்சியான வட்டமாகும். இங்கே சராசரியாக ஆண்டுக்கு 660 மில்லி மீட்டர் முதல் 737 மில்லி மீட்டர் வரை மட்டுமே மழை பெய்கிறது. இவ்வட்டத்தின் ஓர் ஓரமாக பவானி ஆறு பாய்ந்தாலும், இந்த வட்டத்தில் பாசனம் சார்ந்த வசதிகள் ஏதுமில்லை. இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், நீண்டகாலமாக தங்களுக்கு உறுதி செய்யப்பட்ட குடிநீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசனத்திற்காக, பவானிசாகர் அணையிலிருந்தோ அல்லது குந்தா நீர் மின் நிலையத்திலிருந்தோ வெளியேறும் நீரினைக் கிடைக்கச் செய்யும்படி வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். எப்போதெல்லாம் பவானி ஆற்றில்

வெள்ளம் ஏற்படுகின்றதோ, அப்போது மட்டும் 2 டி.எம்.சி. அடி நீரினை, இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை, 20 நாட்களுக்கு வெள்ளக் கால்வாய்மூலம் திருப்பிவிட, நீண்ட ஆய்வுக்குப் பின், குழு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 30 இலட்சத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டு ஒதுக்கி, அந்தப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இப்போது ஆய்வுப் பணிகள் முடிந்து, 1,860 கோடி ரூபாய்க்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள அத்திக்கடவு-அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தினால் காரமடை, அன்னூர், அவினாசி, பவானி சாகர், நம்பியூர், ஊத்துக்குடி, சென்னிமலை மற்றும் திருப்பூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் முழுமையாகப் பயனடைவதோடு, அப்பகுதியிலுள்ள 71 குளங்கள், 538 குட்டைகளும் பயனடையும். மேற்கண்ட திட்டத்தால் சுமார் 10,121 ஹெக்டேர் நிலப் பகுதி பயனடையும். இப்பணிக்காக 1,694 ஏக்கர் பட்டா நிலங்களும், 28 ஏக்கர் வனத் துறை நிலங்களும் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்திற்காக, மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு கோரியதன்பேரில், 1,862 கோடி ரூபாய்க்கான மதிப்பீடு, மத்திய நீர்க் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கையைப் பின்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிதி வந்தவுடனே, விரைவிலே பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவினாசி-அத்திக்கடவு திட்டத்திற்குத்தான் பதில் சொல்லி விட்டார்களே! (குறுக்கீடு) திரு. எம். ஆறுமுகம், என்ன Point of Order? குறுக்கீடு சொல்லுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி-அத்திக்கடவு திட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் நல்ல திட்டம். ஆனால், கோவை மாவட்டத்திற்கும், இதர மாவட்டங்களுக்கும் பயனுள்ள திட்டமாக இருக்கக்கூடிய ஆனைமலையாறு-நல்லாறு திட்டம்,



பாண்டியாறு-பொன்னமராவதி திட்டம், இவற்றின் நிலை என்ன? அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களேயானால், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் பிறகு பதில் சொல்வார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

***திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பொதுப் பணி மற்றும் பாசனத் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் இந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பளித்த ஒன்றரைக் கோடித் தொண்டர்களின் பேச்சாய், மூச்சாய், ஏழரைக் கோடி தமிழர்களின் எழுச்சியாய், நாளைய தினம் 125 கோடி மக்களின் வளர்ச்சியாய், வாழ்வாய் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற எங்கள் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

அன்பால், ஆற்றலால், துணிவால், தெளிவால், தூய நல் எண்ணத்தால், தொலைநோக்குப் பார்வையால், தமிழர்மேல் தான்கொண்ட தணியாத பாசத்தால் மூன்றாவது முறையாக முதல்வராகப் பதவியேற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்து, ஏழை, எளியவர்கள் மட்டுமல்ல, எல்லாத் தரப்பினரின் வயிற்றிலும் பால் வார்த்திருக்கிறார், முதல்வர்களின் முதல்வராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நாட்டில் நல்லாரும், வல்லாரும், பொல்லாரும், இல்லாரும், கல்லாரும் சேர்ந்திருப்பதுதான் இயற்கை. நா நயமிக்கவராக இருந்தால் மட்டும் போதாது, நாணயமிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் ஜனநாயக மரபுகளைக் கட்டிக்காக்கின்ற நல்லவராகவும், பன்மொழிப் புலமையோடு எதனையும் நுண்மான் நுழைபுலத்துடன் ஆராய்ந்து, அறிந்து,

செயல்படுத்துவதில் வல்லவராகவும், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தையும் தவறாமல் நிறைவேற்றி வரும் நாணயமிக்கவராகவும், ஏழை, எளியவர்கள்பால் அன்புகொண்டு, எல்லோரும் போற்றிப் புகழும்வண்ணம், விதி 110-ன்கீழ் நாள்தோறும் நல்ல திட்டங்களை அள்ளி, அள்ளி வழங்குகின்ற வள்ளலாகவும் விளங்குகிறார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

கெடுமதியாளர்தம் நோக்கங்களை, தன் சுடர்மதியால் சுட்டு நொறுக்குபவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்தம் நல்லாட்சியில், தரணிவாழ் மக்களில் தமிழன் தலைமகனாகிட வேண்டும் என எத்தனையோ திட்டங்கள். சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் ஆயினும், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள 28 மாநிலங்களிலும், ஏழு யூனியன் பிரதேசங்களிலும் எத்தனையோ முதல்வர்களை, எத்தனையோ கொள்கைகளை பாரத நாடும் பார்த்துவிட்டது. அதனால் பயனில்லை என்பதே பரிட்சார்த்த உண்மை. ஆனால், இன்று இங்கு நடப்பதோ, எந்த யிசத்திலும் சொல்லாத திட்டங்கள், ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக்காத்து, எல்லோரும் ஏற்கும் வகையில் ஏற்றமிகு திட்டங்கள்மூலம் அனைவரும் வாட்டமில்லாமல் வாழும் வகையறிந்து, புதிய உலகு படைக்கும், உலகம் போற்றும் உத்தமத் தாயின் யிசம்தான் அம்மாயிசம்.

சமுதாயத்தின் அங்கங்களை சல்லடையிட்டு சலித்து, சவலையாய் இருக்கும் அத்துணை இனங்களுக்கும் கூடுதலாக நிதி ஒதுக்கி, புதுதில்லி நம்மை புறக்கணித்தாலும் விலைவாசி உயர்வைத் தடுக்கின்ற வகையில், உபரியான நிதி நிலை அறிக்கையைக் கொடுத்து, இன்பத் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறார் நமது மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதேபோல, பள்ளிக்குச் செல்கின்ற குழந்தைகளும், பணிகளுக்குச் செல்கின்ற அனைவரும் சாப்பிட்டுவிட்டு, எப்போதும் இதுதொடர வேண்டும் என வாயார வாழ்த்தும், மலிவுவிலை உணவுத் திட்டம். அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடியில் நேற்று முதல் 20 ரூபாய்க்குத் தரமான அரிசி வழங்கும் திட்டம். ஆலயந்தோறும் அன்னதானத் திட்டம், பள்ளிகள்தோறும் சத்துணவுத் திட்டம், கல்வித் துறைக்கு கணக்கற்ற திட்டம், உலகத்தில் வேறு எங்கும் இல்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், இங்கு இருப்போருக்கு மட்டுமல்லாது, இலங்கை



அகதிகளுக்கும் இரக்கத்தோடு ஆயிரம் ரூபாய் வழங்கும் ஓய்வூதியத் திட்டம், சிறு, குறு விவசாயிகளுக்கு ஓய்வூதியத் திட்டம், ஒரு குடும்பத்திற்கு ரூ.4 இலட்சம் வழங்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைச் சொல்லிக்கொண்டே இருக்க, காலம் போதாது. இப்படி எந்தத் திட்டமானாலும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களை, மற்ற மாநிலங்களும் பின்பற்றினால், இந்தியா வல்லரசு ஆவது உறுதி. தீர்க்கதரிசி, திரிகால ஞானி, சுவாமி விவேகானந்தர் ஒரு காலத்தில் இந்தியா வல்லரசு ஆகும் என்று அருளிய வாக்கு, இந்த நல்லரசு நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் நிச்சயம் பலிக்கும் என்பதே நிதர்சனமான உண்மையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலத்திற்கேற்ற மாற்றங்களைக் கொண்டது அரசியல். மக்களின் மன நிலை, எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் அத்தனையையும் நிறைவேற்றி, மனித வள மேம்பாட்டையும் ஒருசேர வளர்த்து, நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுவது, கட்டடங்கள், பாசனம் மற்றும் சாலைகள் துறைகள் ஆகும்.

உயர்ந்த இடத்தில் இருப்பவரிடம் இருந்து எடுத்து, இல்லாதவருக்கு வழங்கி வாழ்வதல்ல முன்னேற்றம். இல்லாதவரையும், உயர்ந்த இடத்தில் இருப்பவருக்கு ஒப்பாக உயர்த்துவதே மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி)

2013-2014 ஆம் நிதியாண்டில், அரசுத் துறைகளின் பல்வேறு கட்டடங்களுக்கு நிதியும், பராமரிப்பு நிதியும், கொடுத்ததோடு,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எனும் திருக்குறளின் கருத்தின் அடிப்படையில், நன்றி பாராட்டுவது தமிழ் மண்ணின் மரபு. அதைக் காக்கின்ற வகையில், தீய சக்தியை நாட்டைவிட்டு விரட்டி, தமிழ்நாட்டைக் காக்கவும், அ.இ.அ.தி.மு.க. எனும் இராணுவத்தை உருவாக்கிய புரட்சித் தலைவர், பாரத ரத்னா, எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை

புதுப்பித்தல், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னி குவிக்கிற்கு மணிமண்டபம், கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்கு மணிமண்டபம், வீரமங்கை வேலுநாச்சியாருக்கு மணிமண்டபம், வீரன் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் என இந்த நாட்டிற்காக உழைத்த பெருமக்களுக்கு மறவாமல் நன்றி செலுத்துகின்ற வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அரிய காரியங்கள், என்றும் நிலைத்து நின்று, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழுக்கு மங்காத மாணிக்கங்களாக ஒளிரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *1-15*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *2012-2013* வரவு-செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக *1,000* கோடி ரூபாய் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் *2023*-ன்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதையே, வேகமாக இலக்கை அடைய வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, *2013-2014* ஆம் நிதியாண்டில், ஒதுக்கீடு செய்துள்ள தொகையை இரட்டிப்பாக, *2,000* கோடி ரூபாயாக உயர்த்தி, திட்ட வடிவமைப்பு நிதிக்காக *200* கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பது, வளமான பாதையில், இலட்சியத்தை அடைய தமிழகத்தை வழிநடத்திச் செல்வதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி உபகோட்டத்தில் சோதனை அளவில் செயல்படுத்தப்பட்டுவரும் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறை, மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும் என்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

பாசனத் திட்டத்தின்கீழ், பாசனத்திற்காக *2013-2014* ஆம் ஆண்டில், *3,314.50* கோடி ரூபாய் ஒதுக்கியது விவசாயிகள் நலனில் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ள அக்கறையை எடுத்துரைக்கின்றது. காவேரி நீரைப் பெற மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த சட்டப் போர், வாளெடுத்து, தோள் நிமிர்த்தி வெற்றிபெறும் மன்னனின் வெற்றியைவிட மகத்தானது. அரிசியால் சமைக்கின்ற உணவு உண்ணும் அவ்வளவு பேரும், இந்த மண்



உள்ளவரை, அதில் தமிழ் மக்கள் வாழும் வரை, எத்தனை தலைமுறையானாலும் மாண்புமிகு அம்மா வாழ்க என வாயாரப் போற்றும் வரலாற்றுச் சாதனை. முல்லைப் பெரியாறுக்கு முடிவான தீர்வு கண்டது, நதிநீர் இணைப்பிற்கு தலையாய முக்கியத்துவம் கொடுப்பது என நீர்வள மேம்பாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனை, வியந்து போற்றுதலுக்குரியது ஆகும்.

*2011-2012* இல் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளில் *64* இலட்சம் மரக்கன்றுகள் நட்டும், *2012-2013* இல் *65* இலட்சம் மரக்கன்றுகள் *43.55* கோடி செலவில் நட்டும், இப்படி தொடர்ந்து, இந்தத் திட்டத்தை *2013-2014* இலும் செயல்படுத்துவது நீர், நிலம், காற்று, சுற்றுப்புற சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தும் போற்றுதலுக்குரிய அரிய திட்டங்கள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பொள்ளாச்சி தொகுதிக்குத் தேவையான அவசர அவசியமான கோரிக்கைகளை இந்த அவைமுன் வைக்கின்றேன். மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டு, அன்றாடம் சிந்தித்து சமுதாயத்தைச் சீர் செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, பொள்ளாச்சி அரசு மாவட்ட மருத்துவமனையில், புதிய கட்டடங்களைத் தேவைக்கேற்ப கட்டி, விரிவாக்கி, அனைத்துப் பிரிவிற்கான கருவிகளை வழங்கவும், மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிக்கவும், பொள்ளாச்சி, வால்பாறை, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதி மக்களும் அதன்மூலம் நல்ல வைத்தியம் பெற்றுச் செல்லவும் ஏற்பாடுகள் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி அரசு மாவட்ட மருத்துவமனை விரிவாக்கத்திற்கு, அதை ஒட்டியுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பாலகோபாலபுரம் வீதி நடுநிலைப் பள்ளி ஆகியவற்றிற்கான இடங்களை மருத்துவமனைக்கு வழங்க, நகராட்சியில் தீர்மானம் போட்டுக்கொடுத்துள்ளனர். அந்த இரண்டு இடங்களையும் வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பின்படி, துறை வாரியான பரிமாற்றங்களை உடனே செய்து, மருத்துவமனை விரிவாக்கத்திற்கு உதவிட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றிக் கொடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறைக்கு கலியுகத்தில் எப்போதும், எங்குமில்லாத ஏராளமான திட்டங்களைக் கொடுத்து, வரலாறு படைத்துள்ள ஒன்பதாவது வள்ளல் மாண்புமிகு அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பொள்ளாச்சி நகரத்தில் இயங்கிவரும் S.R.M.H.S. அரசுப் பள்ளி 9.50 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். 2,000 மாணவர்கள் படிக்கின்ற அளவிற்கு கட்டடங்களைக் கொண்ட இந்தப் பள்ளியில் 408 மாணவர்களும், 10 மாணவியர்களும் படித்து வருகின்றனர். அதேபோல, 14.56 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட நகர ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 828 மாணவர்கள் மட்டுமே பயின்று வருகின்றனர். இதற்கு அருகில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி 3 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு 545 மாணவிகளே பயின்று வருகின்றனர். எனவே, S.R.M.H.S. பள்ளி மாணவர்களை 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள M.H.S பள்ளியிலும், மாணவியரை M.G.H.S. பள்ளியிலும் மாற்றிக் கொடுத்து, எந்தச் செலவும் இல்லாமல் அனைத்து வசதிகளுடன்கூடிய S.R.M.H.S. பள்ளியை, கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக அமைத்து, வரும் கல்வியாண்டு முதலே நடைமுறைப்படுத்த அன்போடு வேண்டுகின்றேன்.

பொள்ளாச்சி நகர ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் சர்வதேச விளையாட்டுகள் நடத்துகின்ற அளவிற்கு உள் விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். விளையாடுவதற்கு தமிழ் நாட்டிலேயே ஒரு மிதமான தட்பவெப்ப நிலையைக் கொண்ட பொள்ளாச்சிக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில், விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

நித்தம் நித்தம் சிந்தித்து, சப்தமில்லாமல் சாதனைகள் செய்கின்றது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பொள்ளாச்சி நகரில் இயங்கி வரும் சார்பு நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், நீதித் துறை நடுவர் நீதிமன்றம் என நான்கு நீதிமன்றங்களும், வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே இடநெருக்கடியில் இயங்கி வருகின்றன. கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றமும், கூடுதல் மாவட்ட



உரிமையியல் நீதிமன்றமும் ஒருசேர ஒரே இடத்தில் இருந்தால், பொள்ளாச்சி, வால்பாறை, கிணத்துக்கடவு போன்ற சுற்றுவட்டாரப் பொது மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் பேருதவியாக இருக்கும். நகரப் பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால், பொள்ளாச்சி நகராட்சி சர்வே எண் 139/1, 142 மற்றும் 143 பகுதி, சங்கம்பாளையம் என்ற இடத்தில் 3.25 ஏக்கர் நிலத்தை நீதித் துறைக்குக் கொடுக்க, நகராட்சியில் 30-3-2012 ஆம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். நகராட்சி, சட்டம் மற்றும் நீதித் துறையை நிருவகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறை ரீதியான பரிமாற்றங்களை உடனே செய்து, அரசின் வழிகாட்டு மதிப்பீட்டினை நகராட்சிக்கு வழங்கி, ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைய ஆவன செய்யவும், கட்டடங்கள் கட்ட ஒதுக்கப்பட்ட நிதி ரூ.3.85 கோடி திரும்பிவிடாமல் இருக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

‘வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்’

எனும் ஔவையாரின் பாடலுக்கேற்ப செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நொய்யல் ஆற்றில், மழைக்காலத்தில் வீணாகப்போகும் வெள்ள நீரை ஒட்டர்பாளையம் ஏரியிலிருந்து மீண்டும் நொய்யல் ஆற்றுக்குள்ளே சென்று, திருப்பூர் போன்ற நகரத்தில் சேதத்தை ஏற்படுத்துகின்றதைத் தடுக்கின்ற வகையில், இடும்பன்மலை வரை உள்ள ஓடைப்புறம்போக்கு நிலத்தில் குறுக்கே கால்வாய் அமைத்து, சுமார் 325 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட கோதவாடிகுளம், அதன் தொடர்ச்சியாய் புலிப்பாறை அணையும், நடுவில் உள்ள செக்டேம்களும் நிறைவதன்மூலம் நடுப்புணி வரை உள்ள 17 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறும். மறைமுகமாக பல்லாயிரம் ஏக்கர் இதனால் பயனடையும். கிணத்துக்கடவு ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்கு வரப்பிரசாதமாக அமையும் என்று சொல்லி, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளப்பாளையம் ஏரிக்கு நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள பள்ளப்பாளையம் அணைக்கட்டிலிருந்து வரத்துக் கால்வாய்மூலம் நீர் வழங்கப்பட்டு வருகிறது. ஏரியின் பாசனப் பரப்பு 117 ஏக்கர் ஆகும். நகரமயமாக்குதலின் விளைவாக, ஏரியின் ஆயக்கட்டுப் பகுதிகள், குடியிருப்புப் பகுதிகளாக மாறிவிட்டதன் காரணத்தால், ஏரியின்மூலம் பாசனம் எதுவும் நடைபெறுவதில்லை. மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில், நொய்யல் ஆற்றில் விடப்படும் கழிவுநீர், ஏரியில் வரப்பெற்று, வருடம் முழுவதும் நீர் நிரம்பி காணப்படுகிறது. கோதவாடிகுளத்திற்கு, அதன் அருகில் உள்ள தோகையணை ஆறு மற்றும் சிறு, சிறு ஓடைகளில் இருந்தும் நீர்வரத்து இருக்கிறது. மழை குறைந்துவிட்டதன் காரணத்தால், இக்குளமானது 19 வருடங்களாக முழுக்கொள்ளளவை எட்டவில்லை. பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினரின் கோரிக்கை மற்றும் பல்வேறு சங்கங்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று, இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, தோராய மதிப்பீடாக, ரூபாய் 401.55 கோடிக்கு, திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தோராய மதிப்பின்படி, பள்ளப்பாளையம் ஏரியிலிருந்து தோகையணை ஆறு வரை சுமார் 14 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் கட்டண முறையிலே வெட்டப்பட்டு, அதன்மூலம் கோதவாடிகுளத்திற்கு நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 401.55 கோடி ஆகும். மேலும், பயன் செலவு விகிதம் 0.41. இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் ஆயக்கட்டு 3,663 ஏக்கர் ஆகும். இந்தத் திட்டத்திற்கு 173 ஏக்கர் வரை பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு மாற்றாக ஒரு இறவை பாசனத் திட்டமும் ஆய்வுசெய்யப்பட்டது. இந்த இறவைப் பாசனத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 348.69 கோடி ஆகும். பயன் செலவு விகிதம் 0.21 ஆகும். மேலும், இந்தத் திட்டத்திற்கு 90 ஏக்கர் வரை பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். இறவைப் பாசனம் செயல்படுத்த ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 9 கோடி தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டம்



கீழ்க்கண்ட காரணங்களால் செயல்படுத்த முடியாமல் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் செலவினம் ரூபாய் 400 கோடி அளவில், மிக அதிகமாக உள்ளது. ஒரு குளத்திற்கு மட்டுமான இத்தகைய பெரிய செலவினம் உகந்ததாக இருக்காது. பயன் செலவின் விகிதம் 0.41 என்ற விகிதத்திலே, மிகக் குறைவாக உள்ளது. இந்தத் திட்டத்திற்கு 173 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கான செலவு, ரூபாய் 25 இலட்சத்திற்குமேல் மிக, மிக அதிகமாக உள்ளது. திருப்பப்படும் நீர், கணிசமான அளவுக்கு கோயம்புத்தூர் நகரத்தில் கழிவுநீராக உள்ளது. இக்கழிவுநீரை பாசனத்திற்கு உபயோகப்படுத்த எந்தளவிற்கு இயலும் எனத் தெரியவில்லை. மாற்றுத் திட்டமான இறைவைப் பாசனத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 9 கோடி ரூபாய் செலவினம் ஏற்படுவதால், இந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மீண்டும் அந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கோதவாடிகுளம் மட்டுமல்ல. கேரள எல்லை, நடுப்புணி வரையுள்ள புலிப்பாறை அணையும் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற வெள்ளநீரால் நிரம்பு விடுகின்றன. ஒட்டர்பாளையம் ஏரியிலிருந்து பாசனப் பகுதி முழுவதும் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. மழை நீர் அந்த வீட்டு மனைகளுக்குள் புகுந்து, நொய்யலுக்கே சென்று, திருப்பூர் போன்ற நகரங்களில் சேதாரத்தை ஏற்படுத்துகின்றது. பெரும் வெள்ளக் காலங்களில் பெறப்படுகின்ற மழை நீர் மட்டும் ஒரு முறை கோதவாடிகுளத்தை நிரப்பினால், இரண்டு ஆண்டு காலத்திற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு குடிநீர்ப் பஞ்சமோ, விவசாயக் கிணறுக்கு, விவசாயத்திற்கு நீர்ப் பஞ்சமோ இருக்காது என்ற அடிப்படையில், அதுவொரு மிக முக்கியமான திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி,

நதிகளை இணைக்கும் உன்னதத் திட்டத்தை தலையாய திட்டமாகக்கொண்டு செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு, இதையும் கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு சென்று, செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பொள்ளாச்சி நகரத்தில் ஏற்படுகின்ற கடுமையான போக்குவரத்து நெரிசலைப் போக்க, தேசத் தந்தை மகாத்மா காந்தி சிலை முதல் போஸ்ட் ஆபீஸ் வழியாக இரண்டு பேருந்து நிலையங்களை இணைக்கின்ற வகையில், மேம்பாலம் அமைக்கும் ஆய்வுப் பணிக்கு ரூ.20 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதனையும், வட்டச் சாலையையும், திட்டச் சாலைகளான சாம்சன் உணவகம் முதல் மகாலிங்கபுரம் வரையுள்ள சாலையை மேம்படுத்திடவும், மின்னல் மஹால், திருமண மண்டபம் முதல் ஆச்சிபட்டி வரை உள்ள திட்டச் சாலையையும், ராஜ் மஹால் திருமண மண்டபம் முதல் மின்மயானம் வரை செல்கின்ற திட்டச் சாலையையும், அரசே தன் பொறுப்பில் செயல்படுத்துவதன்மூலம், தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த இயலும் என்பதால், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, நிவர்த்திசெய்து கொடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நீர் நிருவாகத்தில் தொலைநோக்குப் பார்வையோடு செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் பாசனம்பெறும் பெரும்பகுதிகள் பல வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும், காற்றாலை நிலங்களாகவும் உள்ளதை, முறைப்படி கணக்கெடுத்து, அவற்றை ஆயக்கட்டிலிருந்து நீக்கி, அதற்கு சமமான அளவில், ஆயக்கட்டு திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டு, விடுபட்டுப்போன கிணத்துக்கடவு ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியப் பகுதிகளை மீண்டும் ஆயக்கட்டில் சேர்த்து, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமாய் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பணிகளில் இப்பொழுது கணக்கெடுக்கும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கணக்கெடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடனே, அந்தப் பணிகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. பொள்ளாச்சி நகரில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை சிறப்பாக அமைத்திடவும், மரப்பேட்டை பள்ளத்தில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** கோட்டாம்பட்டியில் இருக்கும் அருள்மிகு விநாயகர் கோயில் நிலத்தை எடுத்து, துறை ரீதியான பரிமாற்றங்களைச் செய்து, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு, ஏழையெளியவர்கள்பால் அன்பு செலுத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். பொள்ளாச்சி பகுதியில் உள்ள அனைத்து பூங்காக்களையும் சீர் செய்யவும்,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டு, நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட மீதமுள்ள கோரிக்கைகள் அனைத்தையும் எழுத்துவடிவில் கொடுத்துவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** எனது தொகுதிக் கோரிக்கைகள்.

பொள்ளாச்சி பகுதியில் உள்ள அனைத்து பூங்காக்களைச் சீர் செய்யவும், பூங்காக்களுக்காக இடம் ஒதுக்கப்பட்டு, பூங்காக்கள் அமைக்கப்படாத இடங்களில் பூங்காக்களை ஏற்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்களில் மொத்தம் 56 ஊராட்சிகள் உள்ளன. அதிகப்படியான கிராமங்கள் நிறைந்த அந்தப் பகுதியில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், பழமை வாய்ந்ததாகவும் பல வீடுகள் இடிந்து விழுகின்ற நிலையிலும் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் எல்லா வீடுகளையும் ஒரே நேரத்தில் சரி செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, அதற்கென சிறப்பு நிதி ஒதுக்கி, இந்தப் பகுதி வாழ்மக்களின் தொகுப்பு வீடுகள் அனைத்தையும் சரிசெய்து கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு ஒன்றியங்களில் உள்ள ஒன்றியச் சாலைகள் பல பழுதுபட்டு, பராமரிப்பு இல்லாமல் உள்ளன. அவற்றைச் சரிசெய்து கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

P.A.P. ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள தென்னை மரங்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம்மூலம் நீர் பாய்ச்ச நடவடிக்கை எடுத்து, வீணாகும் நீரைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது உள்ள வறட்சிக் காலங்களில், அந்தத் தண்ணீரை ஊற்றி, மரங்கள் காயாமல் காப்பாற்ற முடியும் என அன்போடு தெரிவித்து, நடைமுறைப்படுத்த கேட்டுக்கொள்கிறேன்.



பொள்ளாச்சி-திருப்பூர் வழித்தடத்தில், சுல்தான்பேட்டையில் இருந்து தென்சேரி மலை, காட்டம்பட்டி, செட்டிகாளிப்பாளையம், நெகமம், தேவனாம்பாளையம், எம்மே கவுண்டம்பாளையம், வடகித்தூர் வழியாக கிணத்துக்கடவு வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தந்தால், இந்த வழித்தடத்தில் அதிகப்படியான உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் இருப்பதாலும், கிணைத்துக்கடவு நகரத்தை புதிய தாலுகாவாக அறிவித்து உள்ளதாலும், பொதுமக்கள் சென்று வர உதவியாக இருக்கும். எனவே, இந்தப் புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நெய்யாறு-இடதுகரைக் கால்வாய்க்கு தண்ணீரைப் பெற்றுத்தர வேண்டுமென்று தொடர்ந்து நான் வைத்த கோரிக்கையை ஏற்று, தற்பொழுது உச்ச நீதிமன்றத்தில் பிரிவு 32-இன்கீழ் வழக்கு பதிவு செய்திருக்கிறீர்கள். அந்த வழக்கை வேகமாக நடத்தி, எங்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தரவேண்டும். கேரளா, நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரைப் பெற்றுத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்பதைத்

தெரிவித்துக்கொள்கிறேன். 2004 ஆம் ஆண்டு முதல் அந்தத் தண்ணீர், கேரள அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது, உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு, விரைவிலேயே விசாரணைக்கு வருகிறது. இதற்கிடையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்று நடந்த ஆய்வுக் கூட்டத்திலே, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அனுமதி அளித்துள்ளார்கள். அப்பொழுது இந்தப் பிரச்சினைகள் எல்லாம் பேசி, விரைவிலே தீர்க்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்பொழுது, ** என்று சொன்ன விவரம் குறித்து, நான் பேசியதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் ஆதாரங்களைக் கொடுங்கள். குடிநீருக்குத்தான் முக்கியத்துவம். குடிநீருக்குப் பிறகுதான் விவசாயத்திற்கு. இது மக்களிடையே பீதியை உருவாக்கிவிடும். (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** அதாவது குடிநீர் எடுப்பதனால், சுற்றியிருக்கின்ற பகுதியில் சாகுபடி பாதிக்கின்றது. மேட்டூரிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குடிநீருக்குத்தான் முன்னுரிமை என்று சொல்லிவிட்டார்கள். குடிநீருக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் வரும். இந்த பீதியை உருவாக்காதீர்கள். அந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மக்களுடைய குடிநீர்த் திட்டம்தான் முக்கியம். அதனால்தான் அம்மா அவர்கள் முன்னுரிமை கொடுத்து செய்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பிலேயே காவேரி பாய்கின்ற பகுதிகளுக்குத் தேவையான குடிநீருக்கென்று, தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

***திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வேளாண்மைத் துறை போன்று . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழகத்திற்கு மிக, மிக, அவசியம். அதற்கான சட்டங்கள் செயல்பட வேண்டும். மேட்டூர் அணையிலிருந்து 500 கன அடி தண்ணீர் விடுவிப்பதை, 1,500 கன அடி தண்ணீராக விடுவித்தால், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்குக்கூட முழு அளவிற்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் பாசன பாதிப்பு என்பது ஏற்படாது. ஆகவே, நாங்கள் கேட்பது, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்பது அல்ல. மேட்டூரிலிருந்து குடிநீருக்கென விடக்கூடிய தண்ணீரின் அளவை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் இப்போது சொன்ன கருத்துகள் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கு முன்பு சொன்ன கருத்துகள், நான் சொன்னதும், நீங்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை போன்று பொதுப் பணித் துறையும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும். வேளாண்மைத் தொழில் சிறக்க பாசனத்திற்கு அடித்தளம் அமைத்து, வளர்ச்சிக்கு வழிவகுப்பது பாசனத் துறையாகும். மத்திய அரசின் தவறான அணுகுமுறை, தமிழகத்தைப் பெரும் சோதனைக்கு உள்ளாக்கியுள்ளது. ஈழத் தமிழர் பிரச்சினை, கச்சத் தீவு பிரச்சினை போன்ற பிரச்சினைகளில் மட்டுமல்ல, உள்நாட்டிலுள்ள நமது மாநில நலனையும் பாதிக்கின்ற வகையில், பல்வேறு

பிரச்சினைகளை மத்திய அரசு உருவாக்கி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. முல்லைப் பெரியாற்றில் கேரளாவுடன் பிரச்சினை. காவேரியில் கர்நாடகத்துடன் பிரச்சினை. பாலாற்றில் ஆந்திர மாநிலத்துடன் பிரச்சினை. இவற்றையும் நாம் சந்தித்து வருகிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அண்டை மாநிலத்துடன் நல்லுறவுடன் இருக்கவே நாம் விரும்புகிறோம். ஆனால், மத்திய அரசோ பொறுப்புணர்வுடன் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, இழுத்தடித்து, மோதவிட்டு, தமிழகத்தை வஞ்சிக்கிறது. தமிழகத்தை, இந்தியாவின் ஒரு மாநிலமாகவே பார்க்கவில்லை என்பது பல்வேறு பிரச்சினைகளை அணுகுவதிலிருந்து வெளிப்படுகிறது. வேறு வழியில்லாத காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவேகத்துடன் செயல்பட்டு, உச்ச நீதிமன்றம் வரை சென்று, நீதிக்காகப் போராடி வெற்றி கண்டுள்ளார்கள். தக்க நேரத்தில் எடுத்த சீரிய நடவடிக்கைகளால், முடக்கி வைக்கப்பட்ட காவேரியை மீட்டெடுத்து வந்திருக்கின்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை பொன்னியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வியே, நீவிர் வாழ்க (மேசையைத் தட்டும் ஒலி) என தஞ்சை தரணியில் மக்கள் நன்றியுணர்வோடு விழா எடுத்துப் பாராட்டினார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி) நாமும் நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆறுகள் நிறைந்த பகுதிகளில் அணை மற்றும் பாசனக் கால்வாய்களை அமைத்தும், ஆறில்லா வானம் பார்த்த பகுதிகளில் ஏரிப் பாசனம் அமைத்தும் நமது முன்னோர்கள் வளம் பெருக்கியுள்ளார்கள்.

கரிகால் பெருவளத்தான் கட்டி வைத்த கல்லணை, பாசனத் துறையில் நமது பண்பட்ட பாரம்பரியத்தை உலகுக்குப் பறைசாற்றி கம்பீரமாக நிற்கிறது. மாமன்னன் கரிகால் பெருவளத்தானுக்கு மணிமண்டபம் அமைக்கத் திட்டமிட்டதோடு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தனது சொந்த சொத்தைச் செலவழித்து தமிழக மக்களின் வாழ்வில் நீர் பாய்ச்சிய பொறியாளர் சர் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு திருவுருவச் சிலையும், நினைவு மண்டபமும் அமைத்திட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய செயல்பாட்டுக்கு, இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.



*பிற்பகல் 1-35*

தமிழகத்தின் எதிர்கால நலன், எதிர்காலத் தலைமுறையின் நலனைக் கணக்கில்கொண்டு, நீராதாரங்களையும், இயற்கை வளங்களையும் உருவாக்கி, தொலைநோக்குப் பார்வையுடன் செயலாற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

குடகு மலையில் உருவெடுத்து தமிழகத்தில் வளம்பெருக்கி, பன்னெடுங்காலமாய் வாழவைத்துவரும் காவேரியை முடக்கி, பாரம்பரிய பாசன உரிமையை மறுத்து, தமிழகத்தை வெறும் வடிகால் நிலமாக மட்டுமே கர்நாடகம் கருதுகிறது. பாரம்பரிய உரிமை மறுக்கப்பட்ட நிலையில், 1892 இல் ஒப்பந்தம், 1924 இல் ஒப்பந்தம், 1974 இல் விவகாரம் என்று தொடர்ந்து நீடித்து எந்த ஒப்பந்தத்தையும், தீர்ப்பினையும் ஏற்க மறுத்த காரணத்தால், நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏற்கெனவே, காங்கிரஸ் கூட்டணியில் ஆட்சி நடத்திய தி.மு.க.-வினர், தங்கள் ஆட்சிக் காலத்தில், இன்னல் தீர ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுவும் 1974 இல் 100 டி.எம்.சி. நீரை குறைத்துக்கொள்ளத் தயார் என்று கூறிவிட்டார்கள். ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை, நமது உரிமையை நிலைநாட்ட, வேறு வழிகளையும் முயற்சிக்கவில்லை. இதனால், தமிழகத்தின் உரிமையில் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், நீதிமன்றத்தில் நமது உரிமையை நிலைநாட்ட வழக்குத் தொடுத்து, தொடர் முயற்சியால் வெற்றி பெற்று, தீர்ப்பையும் அரசிதழில் வெளியிடாமல் மத்திய அரசு முடக்கி வைத்த நிலையில், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்ட காரணத்தினால், தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவதற்கான ஆணையையும் நீதிமன்றம் வழங்கியது. இதை நடைமுறைப்படுத்தவும், வாதாடி, போராடி வெற்றி காணவேண்டிய நிலை ஏற்பட்டது. தீர்ப்பு வழங்கி 6 ஆண்டுக் காலம் ஆகியும், அரசிதழில் வெளியிடாமல் மத்திய அரசு இழுத்தடித்த போக்கே, தமிழகத்தை வஞ்சிக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இனியாவது காலந்தாழ்த்தாது, மத்திய அரசு காவேரி மேலாண்மை ஆணையத்தை அமைக்க வேண்டும். அதற்காக, தொடர்ந்து நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியில் பாரம்பரிய உரிமைக்குச் சோதனை ஏற்பட்ட நிலையில் எல்லாம், போராடிப் பெற்ற உரிமையையாவது நிலைநிறுத்தி உறுதிப்படுத்த வேண்டும். எனினும், கர்நாடகா எந்தக் காலத்திலும், உடன்பாட்டையோ, ஒப்பந்தத்தையோ, பேச்சு வார்த்தையையோ, முடிவுகளையோ அல்லது நடுவர் மன்றத் தீர்ப்புகளையோ, ஏன் உச்ச நீதிமன்ற ஆணையையும்கூட ஏற்றுச் செயல்பட்டது கிடையாது.

காவேரியிலிருந்து எவ்வளவு தண்ணீரை கர்நாடகா விடுவிக்கிறது என்பது பிலிகுண்டு என்ற இடத்தில் அளவீடு செய்யப்படுகிறது. கொள்கை விளக்கக் குறிப்பில் பிலிகுண்டுலு என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை பிலிகுண்டு என்று திருத்தம் செய்துகொள்ள வேண்டும். வழக்கு மொழியிலும், ஆவணப் பெயராகவும் பிலிகுண்டு என்ற பெயரே இருக்கிறது. பிலி என்றால் யானை என்று பொருள். ஒப்பந்தத்திலேயே, ‘அளவீடு செய்யப்படும் இடம் பிலிகுண்டு அல்லது இடைப்பட்ட ஏதாவது ஓர் இடத்தில் அளவீடு செய்வது’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிலிகுண்டுக்கு மேற்கே 70 கிலோ மீட்டருக்கு அப்பால்வரை தமிழக நிலப்பரப்பு இருக்கிறது. எனவே, தமிழக எல்லையிலுள்ள பாட்டிப்பாறை அதாவது அச்சுப்பாறை என்றும் சொல்வார்கள், இந்த இடத்தில் அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகா, காவேரியிலிருந்து தமிழகத்திற்கு 182 டி.எம்.சி. தண்ணீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. தண்ணீரும், சுற்றுச்சூழலுக்கு என 10 டி.எம்.சி. தண்ணீரும், ஆக மொத்தம் 199 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும். அதோடு, தவிர்க்க முடியாத உபரி நீர் என 4 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டுமென்று தீர்ப்பில் உள்ளது. ஆனால், பிலிகுண்டுக்கு மேலே கர்நாடகாவின் நிலப்பரப்பில் காவேரியில் கலக்கும் சிறிய ஆறுகள், ஓடைகள் என காவேரி நீர் முழுவதும் தடுப்பணை கட்டப்பட்டு, திருப்பிவிடப்பட்டுள்ளது. தமிழகப் பகுதியில் உள்ள சிற்றாறுகள், ஓடைகளிலிருந்து 35 டி.எம்.சி. தண்ணீருக்குமேல் காவேரியில் கலக்கிறது. ஆக, தமிழகத்திலிருந்து கலக்கும் நீரையும் சேர்த்து, தவறாகக் கணக்கெடுத்துவிடக்கூடாது என்ற நிலையில், பாட்டிப்பாறை என்ற இடத்தில் அளவெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். கர்நாடக



அரசு எந்த ஒப்பந்தமும் இல்லாமல், மத்திய அரசுக்கும் தெரிவிக்காமல், தமிழக அரசின் ஒப்புதலையும் பெறாமல், மேட்டூர் அணையில் ஏமனூர் அருகே, காவேரியிலிருந்து குடிநீரை கொள்ளேகால் பகுதிக்கும் மாதேஸ்வரன் மலைக்கும் கொண்டு செல்லும் பணியைச் செய்து வருகிறது. இந்த நடவடிக்கை, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது. ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றும், கண்டுகொள்ளவில்லை. நீர் எடுக்கும் பகுதி கர்நாடகா அல்ல, தமிழகத்திற்குச் சொந்தமான பகுதி. ஆற்றில் நீரேற்று நிலையம் அமைத்து, ஆற்றின் குறுக்கேயே ஆழமான குளம் வெட்டி, நீர் எடுக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. கர்நாடகாவில் உள்ள சகோதரர்களுக்கு குடிநீருக்காக வேண்டுமென்றால், மனிதாபிமான முறையில், நீர் எடுக்க தடைசெய்ய வேண்டியதில்லை. ஆனால், எந்த ஒப்பந்தமும் இல்லாமல், அதுவும் தமிழக நிலப்பரப்பில் தமிழகத்திற்குச் சொந்தமான தண்ணீரில். . .

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதேஸ்வரன் மலைப் பகுதியிலிருந்து குடிநீர் எடுப்பதைப் பற்றி நமது ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நமக்கு உண்டான தண்ணீரை, நமக்குத் தருவதாக கர்நாடக அரசு ஒப்புக்கொண்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், முந்தைய ஆட்சியில், அத்தகைய ஒப்பந்தம் இருப்பதாகக்கூடச் சொல்லவில்லை. அவர்கள் பகுதியில் அவர்கள் எடுக்கிறார்கள் என்ற விளக்கத்தைத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் சொன்னார்கள். ஆகவே, நமக்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரில் எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர்

எடுக்கின்றார்கள், எந்த அடிப்படையில் எடுக்கப்படுகிறது, அதற்கு மாற்றாக ஏதாவது ஏற்பாடு உண்டா போன்ற எந்தவிதமான முடிவும் இல்லாமல், இதைச் செய்வது என்பது தமிழகத்தை நிச்சயமாக பாதிப்பு அடையச் செய்யும். இது தவறான முன்னுதாரணமாக அமைந்து, எதிர்காலத்தில் ஊறு விளைவிக்கும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில், ஜகர்த்தலா ஏரி, தொட்டலாம்பட்டி, பாப்பாரப்பட்டி மற்றும் 15 ஊர்களில் உள்ள ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகிறது. திட்டம் தொடங்கப்பட்டு பாதியிலேயே நிற்கிறது. இதனால் போக்குவரத்துக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பணியை முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கால்வாயை நாகதாசம்பட்டி வரை நீட்டித்து, ஏரிகளுக்கு மழைக் கால உபரி நீரைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சின்னாற்று மழைக் கால உபரி நீரை, பாலக்கோடு வட்டம், புலிகரை பகுதி வரையில் உள்ள ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளியிலிருந்து வரும் சின்னாறு, மாரண்டஹள்ளி பகுதியைக் கடந்து, பெண்ணாகரம் வட்டத்தில், தொலைக்காதி என்ற இடத்தில் வனத்திற்குள் ஓடி, ஒகேனகலில் சென்று கலக்கிறது. பெண்ணாகரம் தொலைக்காதிக்கும், பாலக்கோடு வட்டம், செம்பட்டிக்கும் இடையில் நல்லூர் என்ற இடத்தில் ஒரு சிறிய தடுப்பணை அமைத்து, மழைக் கால உபரி நீரை ஏரிகளுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம், பாலக்கோடு, காரிமங்களம், நல்லம்பள்ளி பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு நீர் கிடைக்க வாய்ப்பாக அமையும். இதனால் நிலத்தடி நீரும் பெருகும். வேறு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், இந்த ஒரே நீராதாரத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றில் தேன்கனிக்கோட்டை வட்டம், இராயக்கோட்டை அருகே அளேசீபம் அருகே ஒரு தடுப்பணை அமைத்தால், மழைக் கால



உபரி நீரை இராயக்கோட்டையில் உள்ள ஏரிகளுக்குக் கொண்டுவர வாய்ப்பாக அமையும். தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகும் இப்பகுதி மக்களைக் காத்திட, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டுகிறேன். இந்தத் தடுப்பணையிலிருந்து ஒரு சிறிய கால்வாயை வெட்டி, எடவனள்ளி வழியாக நம்மாண்டஹள்ளியில் சின்னாற்றில் இணைத்துவிட்டால், தென்பெண்ணை-சின்னாறு இணைப்பு ஏற்படும். இதனால் மழைக் காலத்தில் உபரி நீரை வீணாக்காமல் பெண்ணாகரம் வரை உள்ள ஏரிகளுக்குத் திருப்பிவிடலாம். தருமபுரி மாவட்டத்தில் உள்ள 5 ஒன்றியங்களுக்கு பயன்படும் வகையில், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்கால நலன் கருதி, நாட்டிலுள்ள அனைத்து ஆறுகளையும் தேசியமயமாக்க வேண்டும். அனைத்து நதிகளையும் இணைத்து, நாட்டை வளப்படுத்த வழிவகை காண வேண்டும். கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். முதற்கட்டமாக, தென்னக நதிகளை இணைத்திட முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவிற்கு அதிகமான பேராசை, கொள்ளை இலாபம் போன்ற நோக்கத்துடன் இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன. இத்தகைய தவறான நடவடிக்கை, நாட்டின் எதிர்கால நலனையே பாதிப்பு அடையச் செய்யும். வரைமுறை இல்லாமல் மணல் அள்ளுவதால், ஆற்றின் உருவமே சிதைக்கப்படுகிறது. இதனால், ஆற்றின் போக்கையே பாழ்படுத்தும் நிலை உருவாகிறது. தமிழகத்தில் உருவாகும். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில், மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், அத்தகைய நிலை எல்லாம் ஏற்பட்டது. இப்போது குறிப்பிட்ட அளவுக்கு, அதாவது எந்த அளவுக்கு மணல் எடுக்க வேண்டுமென்று ஆட்சியாளர்கள் அறிவுறுத்துகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் மணல்

அள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியிலே நடந்ததையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இங்கே பதிவு செய்ய விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் உருவாகும் ஒரே ஆறு தாமிரபரணி ஆகும். இந்தத் தாமிரபரணி ஆற்றில் கடந்த காலத்தில் மணல் அள்ளுதல், குவாரிகளை, ஆற்றிலேயே உடைத்தல் போன்ற நடவடிக்கை தொடர்ந்து வந்தது. இதைக் கண்டித்து மரியாதைக்குரிய மூத்த தலைவர் தோழர் திரு. ஆர். நல்லக்கண்ணு அவர்கள் போராடி வருவதோடு, உயர் நீதிமன்றத்திலும் வழக்காடினார். அதே நிலை எல்லா ஆறுகளிலும் ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்னொரு பக்கம் தனியார் கம்பெனிகள், நீர் வளத்தை ஒட்ட சுரண்டும் நிலை நாட்டின் பல பகுதிகளில் நடந்து வருகிறது. 1,500 அடிகளுக்கு மேல்கூட குழாயை அமைத்து நீரை உறிஞ்சும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பெப்சி போன்ற தனியார் நிறுவனங்கள் நீர் வளத்தைச் சுரண்டும் நிலை மற்ற பகுதிகளிலும் நடந்துகொண்டு இருக்கிறது. தமிழகத்தில் எந்த இடத்திலும் இத்தகைய தனியார் கம்பெனிகளை அனுமதிக்கக் கூடாது என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். நீருக்கு விலை நிர்ணயிக்கும் மத்திய அரசின் மோசமான நடவடிக்கையை தமிழகத்தில் எந்த நேரத்திலும் அனுமதிக்கக் கூடாது என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மரங்களை வெட்டியும், காடுகளை அழித்தும், இயற்கைச் செல்வங்களை அழிப்பதால், மழை பொழிவதில் பாதிப்பு ஏற்படுவதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே, இயற்கை வளங்களையும், மரங்களையும் பாதுகாக்க



வேண்டும். அதிகமாக மணல் அள்ளுதல், ஆற்றின் வடிநிலத்தைச் சிதைத்தல், நீர் வளத்தைக் கொள்ளையடித்தல், வனச் செல்வங்களை அழித்தல் போன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினால்தான், நீர்வளம் பெருக வழி காணமுடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மன்னர் காலத்தில் அமைக்கப்பட்ட ஏரிகள், 42,000 இருந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. ஆனால், 6,000-க்கும் மேற்பட்ட ஏரிகள் வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீர்ப்பாசனத் திட்டத்தைச் சிதைத்து சின்னாபின்னமாக்கினார்கள். வேளாண் முறையைச் சிதைத்தார்கள். விடுதலைக்குப் பிறகும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

*பிற்பகல் 1-45*

காஞ்சிபுரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஏரிகளைப் புனரமைத்து, நீர்த்தேக்கங்களாக மாற்ற வேண்டும். நீண்ட காலத்திற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்து ஏரிகளையும், குளங்களையும் நீர்த்தேக்கங்களாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது பாராட்டுதலுக்குரியது. ஆற்று நீர்ப் பாசனத்தில் கரைகளையும், மதகுகளையும் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் மாவட்ட வாரியாக நீர் வாரியங்களை நியமித்து, சீராகப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிவரும் 1,213 என்.எம்.ஆர். பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்—பெண்ணை ஆற்றுநீரோடு பெங்களூருவிலிருந்து வரும் சாக்கடை நீரையும், கழிவுகளையும் கலக்கச் செய்கிறார்கள். இந்த நீரை பல மாவட்டங்கள் குடிநீருக்கும், வேளாண்மைக்கும் பயன்படுத்துகின்ற நிலை உள்ளது. இதைச் சீர்படுத்தவும், கர்நாடகாவுடன் பேசி தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆற்று நீர் கெட்டு, பல நேரங்களில் நீர் வழவழப்பாக மாறி, கொடுமணம் வீசி, மீன்களும் செத்துவிடுகின்ற அளவுக்கு மோசமாக மாசுபட்டிருப்பதைத் தடுக்கவும், தூய்மைப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** தனியார் குளங்கள் அமைத்தால், அந்த மண்ணையும்கூட எடுக்கக்கூடாது என்று தடை விதிக்கின்ற நிலை மாற வேண்டும். ஏரி, குளம், நீர் நிலைகளில், வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும். மாட்டு வண்டியில் மணல் அள்ளுவதற்கு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. ஆனால் ஒன்றரை மீட்டர் வரை அள்ளுவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மைய அரசின் 5 எக்டர் பரப்பளவுக்குக் குறைவாக மண் அள்ளும் திட்டங்களுக்கு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெறவேண்டும். இது மைய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணை, நாள் 27-2-2012-ன்படி நடைபெறுகின்ற நிகழ்வு. மண், மணல், கருங்கல், செம்மண் மற்றும் கிரானைட் அள்ளுவதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெறவேண்டும். இது சம்பந்தமான விண்ணப்பங்கள் வரப்பெற்றால், 10 நாட்களுக்குள் பரிசீலித்து, உடனடியாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் 292. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினால் அனுமதி வழங்கப்பட்டது 253. 39 விண்ணப்பங்கள்தான் பரிசீலனையில் இருக்கின்றன. 21-2-2012-க்குமுன் இதுமாதிரியான நடைமுறை இல்லை. உச்ச நீதிமன்றத்தின் ஆணை மற்றும் மத்திய அரசின் ஆணைப்படி, சுற்றுச்சூழல் துறை, தாக்கல் மதிப்பீட்டு ஆணையத்தின் ஆணை பெறவேண்டிய கட்டாயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாகத் தீர்வு செய்து, விண்ணப்பங்களைப் பரிசீலித்து, ஆணைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள், சீக்கிரம் முடியுங்கள்.



**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றரை மீட்டர் வரை மணல் அள்ளுவதற்கு சுற்றுச்சூழல் துறையின் அனுமதி தேவையில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. ஆகவே, ஒன்றரை மீட்டர் வரை மணல் அள்ள, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற வேண்டியதில்லை என்ற நிலையில், மண்ணை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மணல் அள்ளுகின்ற இடத்தில், செம்மண் அள்ளுகின்ற இடத்தில், ஒன்றரை மீட்டர் அளவிற்குத்தான் அள்ளுவதற்கு சுற்றுச்சூழல் துறையின் கவனிப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், இது தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு மண்தான் எடுக்க வேண்டும் என்று அனுமதி கொடுக்கும்போதே அளவு குறிப்பிட்டுக் கொடுத்து, கண்காணிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், என்ன சொல்லுங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? நீங்கள் திடீரென்று எழுந்துவிட்டீர்களே? என்ன? சொல்லுங்கள்.

பிற்பகல் 1-50

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **அது காரியசாத்தியம் இல்லாத நிலையில்தான், நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறையின் மூலமாகவே மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய அனுமதியைப் பெற்று, மாட்டு வண்டிகளில் மணல் அள்ளுவதற்கான அனுமதியைப் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நமது அரசு, குவாரிகள் அமைக்கின்ற பட்சத்தில், பொதுப் பணித் துறை மூலமாக அந்தக் கட்டணம் செலுத்தப்படுகிறது என்பதையும், விரைவிலேயே அந்தக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்குண்டான அனுமதி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நஞ்சப்பன், நீங்கள் உங்கள் உரையை முடிக்கிறீர்களா, இல்லை நான் வேறு உறுப்பினரை அழைக்கவா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்**: மத்திய அரசு, நீர் மேலாண்மை ஆணையத்தை அமைக்க விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் பேசும்போது, ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ந. நஞ்சப்பன்**: 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்த சங்கரலிங்கனாருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே அறிவிக்கப்பட்டது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி, நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள். உங்கள் உரையை 5 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்**: 5 நிமிடங்களா!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம், 5 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம் சார்ந்த பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு, கருத்துகளை எடுத்துரைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நெய்யாறு இடதுகரைச் சானல், குமரி மாவட்டத்திற்கே மிக முக்கியமான ஒன்று. இதை குமரி மாவட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினைதானே என்று ஒதுக்கிவிட வேண்டாம். நாங்கள் 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்றாம் நாள் கண்ணீரும், செந்நீரும் சிந்தி, துப்பாக்கிக் குண்டுகளை முதுகில் அல்ல, மார்பிலே தாங்கித்தான் தமிழகத்தோடு இணைந்தோம். அன்று ஆடு, மாடுகளைப் போன்றுகூட இல்லை; குருவிக் குஞ்சுகளைப் போன்று சுட்டுக் கொன்றார்கள். எந்த ஒரு கால்வாய்க்கும் இல்லாத சரித்திர முக்கியத்துவம் நெய்யாறு இடதுகரைக் கால்வாய்க்கு உண்டு. அரசியல் வேறுபாடு மறந்து, மாநில எல்லைகளைக் கடந்து, விவசாய வளர்ச்சியில் இந்தியநாடு தன்னிறைவு பெற வேண்டும் என்பது மட்டுமே, கால்வாய் வெட்டப்பட்டதன் மூலநோக்கமாக இருந்தது. 84.75 அடி கொள்ளளவு கொண்ட நெய்யாறு அணைக்கு வந்துசேரும் தண்ணீரில், 40 சதவிகிதம் குமரி மாவட்டத்திலுள்ள களியல், அணைமுகம், கருப்புஆறு உள்ளிட்ட உள் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலிருந்து வருகிறது. நெய்யாறு அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர், நெய்யாறு கால்வாய் வழியாக நெய்யாற்றின்கரை, பாறசாலை, இஞ்சிவிளை உட்பட கேரளத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கிறது. அதேநேரம், தமிழக-கேரள எல்லையான சுந்தரிமுக்கு பகுதியிலிருந்து இடதுகரைக் கால்வாயாகப் பெயர்பெற்று, விளவங்கோடு தாலுகாவின் விவசாயத்திற்கு பயன்பட்டு வந்தது. கடந்த 1965 ஆம் ஆண்டு, கேரள முதல்வராக இருந்த மாண்புமிகு சங்கர் முன்னிலையில், தமிழக முதல்வராக இருந்த பெருந்தலைவர் மாண்புமிகு காமராஜர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கன்னியாகுமரி கால்வாய், சரித்திர முக்கியத்துவம் மிக்க நிகழ்வின் சாட்சியான கல்வெட்டானது, சுந்தரிமுக்கு ஷட்டரின் அருகே ஊமைச் சாட்சியாக இப்போது விளங்குகிறது. சுமார் 30, 40 ஆண்டுகள் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தடையின்றி தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தபோது, குமரி மாவட்டத்திலுள்ள அண்டுகோடு, இடைக்கோடு, பாகோடு, விளவங்கோடு, குளப்புறம், மெதுகும்மல், ஆறுதேசம், ஏழுதேசம், கொல்லங்கோடு ஆகிய 9 வருவாய்க் கிராமங்கள் பாசன வசதி பெற்று வந்தன. நெய்யாறு இடதுகரை பிரதான கால்வாய் 22.374 கிலோ மீட்டர் நீளமுடையது.

இதிலிருந்து பிரிந்து செல்லும் முல்லையாறு கிளைக் கால்வாய், 12.400 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இந்தக் கால்வாய்க்குத் தண்ணீர் வந்த காலக்கட்டத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் ஆண்டு முழுக்க விவசாயம் நடந்தது. இதுமட்டுமின்றி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயின் தண்ணீரைக் கொண்டு களியக்காவிளை பேரூராட்சியின் 23 குளங்கள், மலையடி ஊராட்சியில் 14 குளங்கள், அடைக்காகுழியில் 24 குளங்கள், மெதுகும்மலில் 20 குளங்கள் உட்பட்ட 200-க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பி வந்ததால், விளவங்கோடு தாலுகாவில் தரிசு நிலமே இல்லாத நிலை காணப்பட்டது. குடிநீர்ப் பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் உள்ளூர் அரசியல் நிர்பந்தம் காரணமாக இடதுகரை நெய்யாறு கால்வாயில் தண்ணீர் விடுவதை படிப்படியாகக் குறைத்து வந்த கேரள அரசு, 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தண்ணீர் விடுவதை முழுமையாக நிறுத்திவிட்டது. அப்போது சுந்தரிமுக்கு ஷட்டர் இழுத்து மூடப்பட்டு, மிகப் பெரிய பூட்டும் போடப்பட்டது. வறட்சி காரணமாக குமரி மாவட்டத்திலுள்ள அணைகள் வறண்டு போய் நீர் மட்டம் குறைந்துள்ள சூழ்நிலையில், நெய்யாறு அணையில் தண்ணீர் இப்போதும் தாராளமாக உள்ளது. இந்தத் தண்ணீர் குமரி மாவட்ட நீர்ப் பிடிப்புப் பகுதிகளுக்கு வருகிறது என்பதை கேரள அரசின் ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டியது நமது கடமையாகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக. . .

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இப்போது பேசுகின்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர். கேரளத்தில் நடைபெறுவது காங்கிரஸ் அரசு. எனவே, அவர்களிடம் சொல்ல வேண்டும். கூடிய விரைவிலே கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். அப்போது வேண்டுமானால் உறுப்பினர் அவர்களும் கலந்து கொண்டு, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சரை வலியுறுத்தி, தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க அவர் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், இந்தத் தண்ணீரை விடுவதற்கு அவர்கள் ஒவ்வொரு வருடமும் பணம் கட்ட வேண்டுமென்று ஒரு நிபந்தனையை விதிக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நீண்ட திட்டத்திற்குப் பணம் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். எனவே, பேச்சுவார்த்தையிலே இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பேசி, தீர்ப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு அந்தத் தண்ணீரை அடைப்பதற்கு காரணமே, கேரளாவில் அப்போது இருந்த ஆட்சியாளர்கள்தான். ஆனால், இப்போது காங்கிரஸ் கட்சி அங்கே ஆட்சி நடத்தினாலும், குமரி மாவட்டம் தமிழகத்தைச் சேர்ந்தது. ஆகவேதான், தமிழக மக்களுக்கு, குமரி மாவட்ட மக்களுக்குத் தண்ணீர் வேண்டுமென்ற கேள்வியை இரு அரசுகளும், அதாவது, தமிழக அரசும், கேரள அரசும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி முடித்தால் நன்றாக இருக்கும். இருந்தாலும்கூட, நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறீர்கள் என்பது தெரியும். அதை வைத்தாவது குமரி மாவட்ட மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கடந்த காலங்களில் இழந்த உரிமைகளையெல்லாம் ஒவ்வொன்றாக மீட்டுக் கொண்டிருக்கிறது. விரைவிலே நெய்யாற்றின் உரிமையும் மீட்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன clarification? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலே இருக்கிற நெய்யாற்றின் இடதுகரை ஆற்றிலே தண்ணீர் விடுவது என்பது ஏற்கெனவே அங்கேயிருந்த

காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் காரணமாக நிறுத்தப்பட்டது. இப்போது யார் முதலமைச்சராக இருக்கிறாரோ அவர்தான் அப்போதும் முதலமைச்சராக இருந்தார். அவருடைய ஆட்சியிலேதான் நிறுத்தப்பட்டது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அச்சுதானந்தன் அவர்கள் தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சிதான் அங்கே தண்ணீர் விடாமல் தடுத்தது என்பதை இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். தீர்மானத்தையும் செயல்படுத்தாமல் நிறுத்திவைத்தார்கள்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் ஜுன் முதல் செப்டம்பர் வரை வட மேற்குப் பருவ மழையும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்குப் பருவ மழையும் பெய்யும். ஆனால், 5 ஆண்டுகளாகப் பருவ மழை குறைந்துவிட்டது. 2012 ஆம் ஆண்டில், மாவட்டத்தில் பெய்த மொத்த மழையளவு 883.37 மில்லி மீட்டர். ஆனால், இயல்பான மழை அளவு 1,560 மில்லி மீட்டர். மாவட்டத்தின் இயல்பான நெற் பயிர் சாகுபடி பரப்பளவு 12 ஆயிரம் ஹெக்டேர். போதிய தண்ணீர் இல்லாமையால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி, என்ன? இப்போதுதான் திரு. பாலகிருஷ்ணன் பேசினார். உடனே நீங்கள் எழுந்துவிட்டீர்கள். என்னவென்று சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேரளாவில் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசுதான் அந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய எல்லா நீர் நிலைகள் குறித்தும் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தில், அருகில் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கோ அல்லது மற்ற இடங்களுக்கோ தண்ணீர் கொடுப்பது குறித்து, இந்தச் சட்டம்தான் இறுதி செய்யும் என்று சொல்லி, ஒரு சட்ட வரையறைக்குள் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த இடது



முன்னணி அரசு, அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதன்பேரில்தான் நெய்யாற்றில் தண்ணீர் விடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்ற திருத்தத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆகவே, தவறாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பதிவு செய்கிறார். ஆகவே, சட்டத்தைக் கொண்டு வந்தது காங்கிரஸ் அரசு, அதில் திருத்தம் கொண்டு வந்தது இடது முன்னணி அரசு. இருந்தபோதும், நம்முடைய தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் வரவில்லை. அதை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதுகுறித்து கடந்த காலத்தில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியிலும், உரிய பேச்சுவார்த்தை நடத்துங்கள், கட்டணம் செலுத்துவது தேவையா, இல்லையா, என்பது குறித்தெல்லாம் இரண்டு அரசும் பேசி, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்தப் பகுதிக்குத் தண்ணீர் விடுவதற்கு கேரள அரசை வலியுறுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டோம். அது இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், பிரச்சினையில்லாமல் பேசி, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் கேரளாவில் காங்கிரஸ் அரசுதான் ஆட்சியில் இருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள்தான் அங்கே போராட்டங்களை நடத்தி, தண்ணீர் விடக் கூடாது என்று தடுக்கிறார்கள். அதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். பேச்சிப்பாறை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எப்படியோ, காங்கிரசோ, கம்யூனிஸ்டோ, கேரளாவிலிருந்து தண்ணீர் வர வேண்டும். அதற்கு இரு கட்சிகளும் ஒத்துழைப்புடன் செயல்பட்டால், உறுதியாக அந்தத் தண்ணீர் வந்து சேரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2003 ஆம் ஆண்டில் (குறுக்கீடு) கேரள அரசு, கேரள நீர்ப் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தத் சட்டத்தின்படிதான், ஒவ்வொரு அணையின் நீர்மட்டத்தையும் அவர்கள் வரையறுக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டில், முல்லைப் பெரியாறு அணையினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், 2003-ல் ஏற்கெனவே அவர்கள் இயற்றிய சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டம், amendment, 2006 ஆம் ஆண்டு கொண்டுவந்தார்கள். 2006 ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்தின்படி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியாக அவர்கள் நிர்ணயம் செய்தார்கள். ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னால், 'கேரள அரசு கொண்டுவந்த அந்த நீர்ப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய திருத்தச் சட்டம், amendment, செல்லாது, இது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது' என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்பதனை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், பிரச்சினை இல்லாமல் பேசி, உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத்தின் இயல்பான நெற்பயிர் சாகுபடிப் பரப்பளவு 12,000 ஹெக்டேர் ஆகும். போதிய தண்ணீர் இன்மையால், 250 ஹெக்டேர் பயிர்கள் கருகியுள்ளன. கடந்த ஜனவரி மாதத்திற்குப் பிறகு மாவட்டத்தில் மழை கிடையாது. குளங்கள், கால்வாய்கள் வறண்டுள்ளன. கடலோரப் பகுதிகளிலுள்ள நீர் ஆதாரங்களில் கடல் நீர் புகுந்ததால், கிள்ளியூர் தொகுதியில் பெரும்பாலான இடங்களில் குடிநீர் உப்பாக மாறியுள்ளது. மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.



பேச்சிப்பாறை அணையைக் கட்டி 108 ஆண்டுகள் ஆகிவிட்டன. இத்தனை ஆண்டுகளில் அது நிரம்பி வழிந்த ஆண்டுகள்தான் அதிகமாக இருக்கும். ஆனால், இந்த ஆண்டு தண்ணீரின்றி, வறண்டுபோய்க் காணப்படுகிறது. பேச்சிப்பாறை அணையைத் தூர்வார தகுந்த தருணம் இதுதான். அணையில் காய்ந்து கிடக்கும் பகுதியிலிருந்து மட்டும் மணலை அள்ளினால் போதுமானது. அணை கட்டப்பட்டதிலிருந்து இதுவரை தூர்வாரப்பட்டதாகத் தெரியவில்லை. நீர்த்தேக்கத்தில் மூன்றில் ஒரு பகுதி மணல் ஆக்கிரமித்துக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்ததிலிருந்து இதுவரையில் எந்த அணையும் தூர்வாரப்படவில்லை. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் எந்த அணையும் தூர்வாரப்படவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டு அணைகளைத் தூர்வார வேண்டுமென்று பல்வேறு நிலைகளிலே, பல்வேறு செயல்பாடுகளை ஆரம்பித்திருக்கிறது. விரைவிலே பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுபோல, மாவட்டத்தின் கட்டடத் தேவைகளுக்கு மட்டுமின்றி, வெளி மாவட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு மணல் உகந்தது. இந்த அணையில் அள்ளப்படும் வண்டல் மண் விவசாய நிலத்திற்குப் பயன்படும். பேச்சிப்பாறை அணையில் நிரம்பிக் கிடக்கும் மணலை அள்ள அரசு எந்தச் செலவும் செய்ய வேண்டியது இல்லை. அனுமதி தந்தாலே போதும். அதன்மூலம் அரசுக்கு வருமானமும், வண்டல் மண்மூலம் விவசாயிகளுக்கு இலாபமும் கிடைக்கும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள அனைத்துக் குளங்களிலிருந்தும் இலவசமாக மண் எடுக்க அரசு அனுமதிக்க வேண்டும். இதனால், மழைக் காலங்களில் வீணாக தண்ணீர்

கடலுக்குச் செல்வது தடுக்கப்படும். நிலத்தடி நீர் மட்டமும் உயரும். தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்டி தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் மாநிலத்தில் ஓடும் அனைத்து நதிகளையும் இணைக்கவேண்டும். இதனால் தண்ணீர் வீணாவது தடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மழைநீர், கடலில் கலப்பதைத் தடுக்க வேண்டுமென்பதற்காகவும், வீணாகின்ற தண்ணீரைச் சேமிக்க வேண்டுமென்பதற்காகவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, குளங்களில் மண் அள்ளுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு வண்டல் மண் அள்ளுவதற்கு அனுமதி என்றுமே மறுக்கப்படுவது இல்லை. அதற்கு அரசாணை இருக்கிறது. விவசாயிகள் இலவசமாக, விலையில்லாமல், மணலை அள்ளிக்கொண்டு செல்ல அரசாணை இருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு விலையில்லாமல் மண் அள்ளுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். இதுசம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வேறொரு கோரிக்கையை வைக்கிறேன். தங்களது கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மழைநீர் சேமிப்புத் தொட்டியைத் தீவிரப்படுத்த வேண்டும். அதில் எனக்கு ஒரு சிறிய கருத்து என்னவென்றால், வீட்டைச் சுற்றி மழை நீர் சேமிப்புத் தொட்டி அமைக்க, நிலம் உள்ளவர்களிடம் மட்டுமே இத்திட்டத்தைச் செயல்படுத்த கட்டாயப்படுத்த வேண்டும். விவசாயத் தேவைக்காக பேச்சிப்பாறை அணையை மீண்டும் தூர்வாருவதோடு மட்டுமின்றி, கால்வாய்கள்



பல இடங்களில் பழுதுபட்டுக் கிடக்கின்றன. செடி, கொடிகளும், குப்பைக்கூளங்களும் மண்டி, தண்ணீர் செல்வதைத் தடுப்பதால் மழைநீர் வீணாகிறது. இதனால் கடைவரம்பு வரை தண்ணீர் செல்வதில்லை. எனவே, கால்வாய்களையும், அணையையும் தூர்வாரி ஆழப்படுத்தினால், மழைக்காலங்களில் அதிகப்படியான தண்ணீரை சேமிப்பதோடு மட்டுமின்றி, தண்ணீர் பஞ்சத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள வழிமுறையாக இது அமைகிறது என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-05*

இறுதியாக, மிக முக்கியமான ஒன்று, ஏ.வி.எம். சானல் பிரச்சினை. இந்தச் சானலை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கேரள மாநிலத்தில் செயல்படுவதுபோன்று, கூடங்குளம் வரை நீட்டிக்க வேண்டும். இதனால், நிலத்தடி நீர், உப்பாவது தடுக்கப்படும். கடற்கரையோர மக்கள் குடிப்பதற்கும், இதர தேவைகளுக்கும் இதனை பயன்படுத்தலாம். கடலில் கலக்கின்ற சிறு ஆறுகளையும் இதில் இணைத்தால், மக்கள் படகுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவார்கள், சுற்றுலாவும் வளம்பெறும். இதனால் ஏராளமான நன்மைகளும் உண்டு. இதுகுறித்து நான் சட்டமன்ற உறுப்பினரானது முதல், பல தடவை இதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இதனைப் பரிசீலிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, எனது தொகுதிப் பிரச்சினையைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவைக் குறிப்பில் பதிந்துகொள்ளலாம். எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் எனது தொகுதிப் பிரச்சினையாகச் சொல்லிவிடுகிறேன்.

தொகுதி பிரச்சினை: எம் தொகுதி மக்களும், எம் மாவட்ட மக்களும் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. மிகவும் பழுதடைந்த, பாழடைந்த சாலைகளை குமரி மாவட்டத்திலும்,

குறிப்பாக கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியிலும்தான் அதிகமாகக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, கன்னியாகுமரி மாவட்டம், பரசேரி-புதுக்கடைச் சாலையை எடுத்துக்கொள்ளுங்கள். இது சம்பந்தமாகக் கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் பேசிவிட்டேன். எத்தனையோ போராட்டங்களையும், விபத்துகளையும் சந்தித்துவிட்டோம். ஆனால், விடிவுகாலம் மட்டும் வரவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சாலையைச் சீரமைக்க வேண்டுமென்று விதிமுறை உள்ளது. ஆனால், இந்தச் சாலை சீரமைக்கப்பட்டு, பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. எனவே, சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன், பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். ஐந்து நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். அதற்கு மேல் அனுமதி கிடையாது.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட்டமைக்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, தமிழக மக்களே, குறிப்பாக, தஞ்சைப் பகுதி மக்கள் 'பொன்னியின் செல்வி' என்ற பட்டத்தைச் சூட்டி, சிறப்புச் செய்தமைக்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

2,000 ஆண்டுகளுக்கு முன்னால் கல்லணையைக் கட்டிய மாமன்னன் கரிகால் சோழன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டுவதாக அறிவித்து, சிறப்புச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், ஆங்கிலேயனை எதிர்த்துப் போராடி வெற்றிகண்ட வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கும் நினைவுச்சின்னம் எழுப்பி பெருமை சேர்த்த, அதேபோன்று ஆங்கிலேயனை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கும், தீரன் சின்னமலை அவர்களுக்கும் மதிப்பளித்து, அவர்களுக்கு நினைவுச்சின்னம் எழுப்பிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



தொலைநோக்குத் திட்டம், 2023 என்ற திட்டம். வேளாண்மைக் கட்டமைப்புக்காக கிட்டத்தட்ட 40,000 கோடி ரூபாயை ஒதுக்கி செயல்பட்டுக்கொண்டு வருவது, வேளாண்மைத் துறையை முன்னேற்றுகின்ற வகையிலே திட்டமிட்டிருப்பது, வரவேற்கத்தக்கது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது போன்று, நீர்த்தேக்கங்களுடைய கொள்ளளவை மேம்படுத்த வைகை அணை, அமராவதி அணை ஆகிய அணைகளைத் தூர்வாரி, வண்டல் படிவைப் பிரித்தெடுத்து, தரப்படுத்தி விற்பனை செய்வதற்குரிய தொழில்நுட்பம் உள்ளடக்கிய முன்னனுபவம் பெற்ற தேசிய மற்றும் உலகளாவிய விருப்பத் தெரிவு கோரப்படுகிறது. இந்தியாவிலேயே முதல் முதலாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநில நதிநீர் இணைப்புத் திட்டம். இதில் முதற்கட்டமாக, நமது அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, பெண்ணையாறு-பாலாறு இணைப்பு; பெண்ணையாறு-பாலாறு இரண்டாவது இணைப்பு; காவேரி-வைகை-குண்டாறு இணைப்பு; காவேரி-சரபங்கா இணைப்பு போன்ற காவேரி நதிநீர் இணைப்புகளை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டமைக்கு நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

முல்லைப் பெரியாறு அணை. அணையைக் கட்டிய பென்னிகுவிக் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைத்து, நினைவிடம் கட்டித் தந்து, அதை அவரே வந்து திறந்து வைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களும், கிட்டத்தட்ட 2,25,000 ஏக்கர் நிலங்களும் பயன்பெறக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை, கிட்டத்தட்ட 85 இலட்சம் பேர் குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும் பயன்படுத்துகின்ற இந்தத் திட்டத்தை, கேரள அரசிடமிருந்து

காப்பாற்றுகின்ற பொறுப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, தொடர்ந்து அதைச் செயல்படுத்தி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு, 136 அடியிலிருந்து 142 அடியில் தண்ணீரைத் தேக்கிவைக்கலாம் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை, கேரளாவில் இருக்கின்ற காங்கிரஸ் அரசுக்கு வழிகாட்டி, ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-10

வடகிழக்குப் பருவமழை பெய்கின்றபோது, அந்த நீரையெல்லாம் தேக்கிவைக்க, ஆறுகள் இணைப்புத் திட்டங்கள் தீட்டி, நீர் செறிவுபடுத்தலுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 400 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நான்கு ஆண்டுக் காலத்தில் அந்த வெள்ள நீரைச் செறிவூட்டிப் பயன்படுத்தும் திட்டத்தையும், நிலத்தடி நீரை உயர்த்துகின்ற வகையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்தத் திட்டம் வரவேற்கக்கூடிய திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதி மக்களின் ஜீவாதார உரிமையாக இருப்பது 58 கிராமக் கால்வாய்த் திட்டம். 58 கிராமக் கால்வாய்த் திட்டம், எங்கள் தலைவர் திரு. வல்லரசு அவர்களால் 1998-ல் அரசிடம் வேண்டி, 33 கோடி ரூபாயில் துவங்கப்பட்ட திட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்றைய ஆட்சிக் காலத்தில், அந்தத் திட்டத்திற்கு 74 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற வேண்டுமென்றால், 8 கோடியே 7 இலட்சம் ரூபாய் தேவைப்பட்டது. அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியினை ஒதுக்கி, அந்தத் திட்டத்தை நிறைவு செய்தமைக்கு உசிலம்பட்டி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முக்கியத்துவம் கொடுத்து உதவிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



என் தொகுதியில் அசுவமா நதித் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், அணையைக் கட்டி, மலைப் பகுதியில் இருக்கின்ற தண்ணீரைச் சேகரித்து, அந்தப் பகுதி விவசாயப் பகுதியாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்த அணையின் உயரத்தை இன்னும் 10 அடி உயர்த்தினால் மழை நீரை இன்னும் சேகரிக்கலாம். அந்த அசுவமா நதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அணையின் உயரத்தை இன்னும் 10 அடி உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று கரிசல்பட்டி ஏரி. அந்த ஏரியிலே, அந்த மலைப் பகுதியிலிருந்து மழைக் காலங்களில் வருகின்ற மழைத் தண்ணீரை சேமிக்கின்ற வகையில் இந்த ஏரி அமைக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் 7 அடி உயர்த்தினால் அந்தத் தண்ணீர் வீணாகாமல் அந்தப் பகுதிக்குப் பயன்படும். எனவே, உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வைகை அணையிலிருந்து பேரணி வழியாக திருமங்கலம் பிரதானக் கால்வாய் இருந்துவருகிறது. அதைக் கட்டி கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு மேலே ஆகிறது. அந்த அணை பழுதடைந்திருக்கிறது. அந்தப் பழுதையெல்லாம் நிவர்த்தி செய்கிற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, கொக்குளம் மற்றும் பெருங்காநல்லூர் கால்வாய் பழுதடைந்துள்ளதையும், அதிலுள்ள மதகுகளையும் சரி செய்து, அதற்கான பழுதுபார்க்கின்ற வேலையையும் செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது தொகுதியிலுள்ள ஐயனார்கோவில் அணை, பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு, நீர் தேக்கிவைக்கப்படுகிறது. அது பெரிய அணை, அந்தப் பகுதி முழுவதும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. அந்தத் தண்ணீரை அப்படியே விட்டுவிட்டார்கள். அதை இன்னும் தோண்டி ஆழப்படுத்தி, பலப்படுத்த நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களுக்குகூட குடிதண்ணீருக்காகப் பயன்பட வாய்ப்பிருக்கிறது. அதையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆறுகள் மாசுபடுகிறது. தண்ணீர் 3 மாதம்,

6 மாதங்களுக்குத்தான் இருக்கும். அங்கு நதி இல்லையென்று சொன்னால், அந்தக் கண்மாய் இல்லையென்று சொன்னால், அந்தத் தண்ணீர் முழுவதும் வீணாகிக் கடலில் கலந்துவிடும். 6 மாதம்தான் அந்தத் தண்ணீர் பயன்படும் என்பதற்காக அதை அழித்துவிட முடியாது. ஆகையால், தண்ணீர் வருகின்றபோது, அதைப் பாதுகாப்பதற்காகத்தான் ஆறுகளும், கண்மாய்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆறுகள் மாசுபடுவதைத் தடுக்க வேண்டும். தமிழக அரசு அருள்கூர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவை மாசுபடாமல் தடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கதிரவன் சீக்கிரம் உரையை முடியுங்கள். நான் மணியடித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உரையை முடிக்காமல் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? விரைவில் உங்கள் உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மாட்டு வண்டி வைத்திருக்கிறார்கள். அதில் சிறு, சிறு வேலைகளுக்கு மணல் எடுக்கிறார்கள். ** வருவாய்த் துறை ஒரு வழக்குப் போடுகிறது, ** ஆனால், அம்மாதிரி வழக்குப் போடுகிறார்கள். ** தமிழக அரசு இதில் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால், ஏழை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-15

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்கிறார்கள்; அனுமதியில்லாமல் மணல் எடுத்தால், வழக்குகள் போடத்தான் செய்வார்கள். அனுமதியோடு மணல் எடுத்தால் இதுபோன்ற பிரச்சினைகள் எழாது என்பதனையும் அப்படி தேவை இருப்பின், எங்கெங்கே மணல் குவாரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், உரையை முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாட்டு வண்டி உரிமையாளர்கள் அதற்கு அரசினை அணுகத் தயாராக இருக்கிறார்கள். ** கிராமப்புற மாட்டு வண்டி வைத்திருக்கிறவர்கள் செய்ய முடியாது, அதைக் கருணைகூர்ந்து விலக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் ** என்று சொன்ன அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பதிலுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்**: "நீரின்றி அமையாது உலகு" இது வள்ளுவன் வாக்கு. அம்மா நீங்கள் இன்றி அமையாது பாரதம், இது இந்திய மக்களின் நோக்கு. பிஞ்சுப் பருவத்திலே வரலாற்றின் வாசலுக்கு வந்த பிரான்சு நாட்டின் ஜோன் ஆப் ஆர்க், குதிரையின் மேலேறி எதிரிகளைப் புரட்டியெடுத்த ஜான்சி ராணி லட்சுமி பாய், துண்டாட வரும் எதிரிகளை துணிச்சல் மிக்க பெண்ணாய் பந்தாட முடியும் என்று இந்த மண்ணிலே நிரூபித்த வீரநங்கை வேலுநாச்சியார், இப்படியும் ஓர் இந்தியப் பெண்மணியா என்று இங்கிலாந்தை வியக்கவைத்த மார்கரெட் தாட்சர், ஆதரவற்றவர்களின் சரணாலயமாக தன்னை ஆக்கிக் கொண்ட அன்னை தெரசா, இப்படி எட்டுத் திக்கிலும் இருந்த பெண்களின் ஒட்டுமொத்த உருவமாய், வீரத்தை, விவேகத்தை, கருணையை, காருண்யத்தை, தலைமைப் பண்பை, தாயுள்ளத்தை, நாவன்மையை, நாட்டுப்பற்றை, அன்பு உணர்வை, அறிவு உயர்வை, அரசியல் சாதுர்யத்தை, ஆட்சித் திறனைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குவது எனக்கு முதல் பெருமை. புரட்சித் தலைவருக்குப் பிறகு தனியொரு தலைவியாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அல்லும், பகலும் காத்து, ஆட்சிக் கட்டிலில் ஏற்றிவைத்த ஓர் அரசியல் சாணக்கியர் அம்மா நீங்கள்.

காவேரி எங்கே கானல் நீராகிவிடுமோ என்று அஞ்சியிருந்த டெல்டா மக்களுக்கு அச்சத்தைப் போக்கி, தலைக் காவேரியை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மீட்டெடுக்க இன்று உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்டப் போர் நடத்திய சட்ட மேதை அம்மா நீங்கள். யானைகளுக்குக் கூட புத்துணர்வு முகாம் தேவையென உணர்ந்து தும்பிக்கைகளுக்கே நம்பிக்கையளிக்கும் வீரத் தலைவி அம்மா நீங்கள். அண்ணாசாலையில் அனைத்து வசதிகள் கொண்ட மருத்துவமனை ஒன்று தேவையென்று நீதிமன்றத்திலே நேர்படச் சொல்லி, அந்தக் கட்டடத்தில் மாற்றங்களைச் செய்ய உத்தரவிட்ட சாதனைத் தலைவி அம்மா நீங்கள்.

இலங்கைத் தமிழரின் ஈரக்கண்களைத் துடைத்து, தனி ஈழம்தான் தீர்வு என்று வரலாற்றுத் தீர்மானத்தை நிறைவேற்றிய வரலாற்றுத் தலைவி அம்மா நீங்கள். சிப்பிகள் ஆயிரம் கடலிலே பிறக்கும். ஆனால் சிப்பிக்குள் முத்தொன்று அரிதாய்ப் பிறக்கும். அதிலும் அபூர்வ முத்தம்மா நீங்கள்.

தமிழக வரலாற்றுக்குப் பலம் சேர்க்க பூமித்தாய் வழங்கியிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா நீங்கள். எங்கள் குடும்ப இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எல்லோரும் காவேரியைப் பற்றிப் பேசுகிறார்கள். நேற்று எனக்கு முன்னே பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் ஏரியிலே, குளங்களிலே தண்ணீரை அருந்திவிட்டு, அவர் காவேரியைப் பற்றிப் பேசுகிறார். காவேரி எல்லோரும் பேசக்கூடிய ஒரு பொருளாகிவிட்டது. யாரைப் பார்த்தாலும் காவேரியைப் பற்றிப் பேசுகிறார்கள். பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள்கூட காவேரியைப் பற்றிப் பேசித்தான், பேச்சைத் தொடங்குகிறார்கள். அப்படி காவேரியை தமிழக வரலாற்றிலே, ஒரு சரித்திரத்திலே இடம்பிடிக்கச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றால், அது மிகையாகாது.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு."

என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் நாடாளும் வேந்தர்களின் பண்புகளான அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அயராது செயல்படுதல், தான் எண்ணியதை எண்ணியவாறு செய்து தமிழகத்தை முதன்மை மாநிலமாக நடத்திச் செல்லும் மகத்தான பணியினை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்றுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** **

"மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார்
தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொள்ளுவார்"

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளின்படி, தமிழக மக்கள் நலனில் அக்கறையில்லாமல், தம் மக்கள் நலனில் அக்கறை கொண்டு ஆட்சி புரிந்த தீய சக்திகளை வேரறுத்து, தமிழ்நாட்டு மக்கள், தம்மீது வைத்துள்ள நம்பிக்கையை எள்ளளவும் குறையாமல் மெய்ப்படுத்திவரும் வீரத்தின் மறுபெயர், விவேகத்தின் உறைவிடம் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா. அவர்களுடைய தன்னம்பிக்கை, விடாமுயற்சி, தொலைநோக்கு சிந்தனை, விவேகமான அணுகுமுறைகள் மற்றும் மிகச் சரியான தருணத்தில் எடுக்கும் சரியான முடிவுகளின் பயனாக, 5-2-2007 அன்று வழங்கப்பட்ட காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் 19-2-2013 அன்று வெளியிடப்பட்டது.

*பிற்பகல் 2-20*

பல்லாண்டு காலமாக, நீடித்து வந்த காவேரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கப்பெற்ற மகிழ்ச்சியான செய்தியினால் காவேரி டெல்டா பகுதி மக்கள் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுமே, காவேரி டெல்டா விவசாயிகளின் நீண்ட காலக் கனவு நனவானது எனப் பூரித்துப் போனார்கள். அன்று தமிழ்நாட்டு மக்களிடையே ஒரு மகிழ்ச்சியான விழாக் கால உணர்வு பிரதிபலித்தது என்றால், அது மிகையாகாது. அத்தகைய உணர்விற்கு வழிகோலிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியினால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட நிகழ்வினால், காவேரி நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டிற்குண்டான உரிமை உறுதி செய்யப்பட்டதோடு மட்டுமின்றி, காவேரி டெல்டா பாசன அமைப்புகளை நவீனப்படுத்தி, புனரமைத்து மேம்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

19-2-2013 அன்று காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 22-2-2013 அன்று, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் தெரிவித்துள்ளபடி, காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் ஒழுங்குமுறைக் குழுவையும், மத்திய நீர்வள அமைச்சகம் அமைப்பதை உறுதி செய்து, இறுதித் தீர்ப்பில் வழிவகை செய்யப்பட்டுள்ளவற்றை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுமட்டுமன்றி, தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்களை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தீட்டியும், பன்மாநில நதிநீர் இனங்களில் தமிழ்நாட்டின் உரிமைக்காக என்றென்றும் குரல் கொடுத்து, அதனை உறுதி செய்ய அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசின்கீழ், முல்லைப் பெரியாறு அணையில் உச்ச நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட அதிகாரம் படைத்த குழு வலியுறுத்திய சோதனைப் பணிகள் அனைத்தும் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, அணையின் வலுத்தன்மை நிரூபிக்கப்பட்டு, அணையின் நீர்மட்டத்தை உயர்த்தக் கோரும் தமிழ்நாட்டின் கோரிக்கை நியாயமானதுதான் என உலகிற்குப் பறை சாற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் கிடைத்துள்ள வெற்றியைப் போலவே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையிலும் வெற்றியடைய, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா



அவர்களது விடாமுயற்சியினால் அனைத்துத் தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8-4-2013 அன்று பெண்ணையாற்றைப் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீதான பதிலுரையின்போது, சட்டமன்றப் பேரவையிலே கூச்சல்-குழப்பங்களை விளைவித்து வெளியேற்றப்பட்ட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், அவைக்கு வெளியே செய்தியாளர்களைச் சந்தித்து, முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டின் உரிமையைக் கொண்டு போய் அடகு வைத்தது யார் என்றும், மீன் பிடிக்கும் உரிமையைக் கேரளாவுக்குக் கொடுத்தது யார் என்றும், காவல் புரிகின்ற உரிமையை கேரளாவிற்குக் கொடுத்தது யார் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். பெரியாறு அணையினைப் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு காவல் துறையினர் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், 20-7-1961 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு காவல் துறையினர் அணையைப் பாதுகாக்கும் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

அதேபோல 29-5-1970 ஆம் நாளன்று, தமிழ்நாடு-கேரள அரசுகளிடையே ஏற்படுத்தப்பட்ட பிரதான குத்தகை ஒப்பந்தத்தின்படி, குத்தகை விடப்பட்டுள்ள பகுதிகளில் மீன்பிடிப்பு உரிமை கேரளாவிற்கு விட்டுக்கொடுக்கப்பட்டது. 1961-லே தமிழகத்தை ஆண்டது காங்கிரஸ் அரசு. 1970 ஆம் ஆண்டிலே ஆட்சி புரிந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை அவர் மறந்துவிட்டு, இந்தச் செய்திகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்.

தமிழகத்தின் உரிமைகளை, விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க, காவேரியானாலும் சரி, தென்பெண்ணையானாலும் சரி, முல்லைப் பெரியாறு ஆனாலும் சரி, பாலாறு ஆனாலும் சரி, விவசாயிகளின் நலனுக்கு எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும், அத்தனையையும் தவிடு பொடியாக்கி, தமிழக விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளின்படி, பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப, பொதுக் கட்டடங்களைக் கட்ட திட்டமிடுதல்; வடிவமைத்தல்; கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட கட்டடத் தொடர்புடைய பணிகளைத் திறம்படச் செயலாற்றி வருகின்றது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, சத்துணவு தந்த சரித்திர நாயகன், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடம் புனரமைக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 9-12-2012 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது. முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு, லோயர் கேம்ப் என்னுமிடத்தில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் 15-1-2013 அன்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 60 ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி, தலைமைச் செயலகத்திற்கும், நேப்பியர் பாலத்திற்கும் இடையே 1.33 கோடி ரூபாய் செலவில் வைர விழா நினைவு வளைவு; சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்தினை, பன்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனையாக மாற்றுகின்ற பணி; திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமத்தில் தேசிய சட்டப் பள்ளிக் கட்டடம்; சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு 700 எண்ணிக்கையிலான 7 அடுக்குமாடிக் குடியிருப்பு; சென்னை உயர் நீதிமன்றத்தின் 150-வது ஆண்டு விழாவில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்ட, ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் கரையரங்கம் மற்றும் அருங்காட்சியகம்; ரூபாய் 52.14 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பெருந்திட்ட வளாகம்; ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்; விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் 17.317 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்; சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 11.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கிலப் பதிவேடுகள் மற்றும் தமிழ் மொழி மாற்றுத் துறைக்கான கட்டடம்; 13-வது நிதிக் குழு பங்களிப்புமூலம் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ரூபாய் 8.50 கோடி வீதம், 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில மண்டல நீதித் துறை மையக் கட்டடம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 2-25*

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, இன்றளவும் கோடானு, கோடி மக்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கும் கல்லணை ஒரு பொறியியல் அற்புதமாகும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, கல்லணையினைக் கட்டிய கரிகால் சோழனை நினைவுகூரும் வகையிலே, 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நினைவு மண்டபம்; விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலைக்கு சேலம் மாவட்டம், சங்ககிரியில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நினைவுச் சின்னம்; மாவட்டத் தொழிலக மையங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ் ரூபாய் 41.42 கோடி மதிப்பீட்டில், 11 மாவட்டத் தொழிலக மையங்களில் புதிய கட்டடங்கள் மற்றும் 21 மாவட்டத் தொழிலக மையங்களில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் புதுப்பிக்கும் பணிகள்; ஆங்கிலப் படையினரை வீரமுடன் எதிர்கொண்டு வெற்றி கண்ட வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம்; சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் முன்பிருந்த கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்டதையொட்டி, அவ்விடத்தில் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பிரம்மாண்ட கலையரங்கம் கட்டப்படவுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி; சென்னை பழைய மத்திய சிறைச்சாலை வளாகத்தில், சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ரூ.56.63 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்; சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புற்றுநோய்

சிகிச்சை மையக் கட்டடம்; சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் 16.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னடுக்குக் கட்டடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டதையும் இம்மாமன்றத்திலே நினைவுகூர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் சீரான, நீடித்த பொருளாதார வளர்ச்சி என்பது பெரும்பாலும் உற்பத்தித் துறைகளின் வளர்ச்சியையே சார்ந்துள்ளது. விவசாய உற்பத்தி வளர்ச்சியடையும்பட்சத்தில், பொருளாதார நிலை மேம்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து, அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெறும். இத்தனை சிறப்புமிக்க விவசாய உற்பத்திக்கு மிக, மிக முக்கியமான மூலப்பொருள் நீர் எனில், அது மிகையாகாது.

“நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.”

என்ற தெய்வப் புலவர் வள்ளுவரின் வாக்கிலிருந்தே, நீர் இல்லாமல் உலகியல் வாழ்க்கை ஈடேறாது என்பதை அறிந்துகொள்ளலாம்.

நீராதாரமானது இயற்கை நமக்கு அளிக்கும் கொடை என்பதால், அது கிடைக்கப்பெறும் காலக்கட்டங்களில் அதனைச் சேமித்து, சுற்றுச்சூழலும், நீரின் தன்மையும் கெடாமல் பாதுகாத்து, பாசனத்திற்குத் தேவைப்படும் தருணங்களில் சரி விகிதாச்சார முறையில் பகிர்ந்தளித்து, சிக்கனமாக உபயோகிப்பதைத் திறம்பட மேலாண்மை செய்வது மிகவும் அவசியமானதாகும். இதுமட்டுமின்றி, பிரதான நோக்கமான அனைத்து உயிரினங்களும் வாழ குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டும், நீர் மேலாண்மை இன்றியமையாததாகிறது. இத்தகைய சீரிய நோக்கத்துடன்தான் நீர்வள ஆதாரத் துறையானது, பொதுப் பணித் துறையின் ஒரு பெரும் அங்கமாக, 150 ஆண்டுகளைக் கடந்து, செயலாற்றி வருகிறது.

“விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.”



பருவமழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாது, பொய்த்துப் போனால், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு, உயிர்களெல்லாம் பசியால் வாடும். இந்தியத் துணைக் கண்டத்தில் ஏறக்குறைய அனைத்து மாநிலங்களும், பெரும்பாலும் பொய்க்காத தென்மேற்குப் பருவ மழையினால் பயன்பெற்று வருகின்றன. ஆனால், தமிழ்நாடு மட்டும் நம்பகத்தன்மை மிகவும் குறைவான வடகிழக்குப் பருவ மழையையே பெரும்பாலும் சார்ந்துள்ள மாநிலமாகும். எனவேதான், மாநிலத்தின் ஆண்டு சராசரி மழையளவு 911.6 மில்லி மீட்டர் என்கிற அளவிலே உள்ளது. நீர்வள ஆதாரங்களைத் திறம்படப் பயன்படுத்தி, சிறந்த முறையில் வடிநில அளவிலான மேலாண்மை செய்யும் பொருட்டு, தமிழகத்தில் பாயும் 34 ஆறுகளும், 17 ஆற்று வடிநில அமைப்புகளாக அமைக்கப்பட்டு, அவை 127 உப வடிநிலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் மொத்த மேற்பரப்பு நீராதாரமான 853 டி.எம்.சி. அடியில், 261 டி.எம்.சி. அடி அண்டை மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது. மேலும், 238.58 டி.எம்.சி. அடி கொள்திறனுடன் 89 அணைகள் அமையப் பெற்றுள்ளன. இவை தவிர, 13,699 ஏரிகளில் நீர் தேக்கி வைக்கப்பட்டு, பாசனம் மற்றும் குடிநீருக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 2-30

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ‘தொலைநோக்குத் திட்டம் 2023’-ல் தமிழ்நாடு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவும் பாசன மேம்பாட்டுத் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையவும், பல ஆண்டுகளுக்குப் பிறகு அன்றைய காலகட்டத்திற்கேற்ப அடைய வேண்டிய இலக்கை, இன்றே யோசித்து, எக்கணமும் தன்னலம் பாராமல் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களுக்காக ‘தொலைநோக்குத் திட்டம் 2023’-ஐ அளித்துள்ளார்கள். இத்திட்டத்தில், அணைகளிலிருந்து கால்வாய் மூலமாக பாசனத்தைத் திறம்பட அளிக்கவும், ஏரிகள் மற்றும் கிணறுகளைச் சுத்தப்படுத்தி, தேவையான அனைத்துப் பாசனத் திட்டங்களை செயலாக்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல்லாண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களின் கொள்ளளவானது, வண்டல் மண் படிவினால் படிப்படியாகக் குறைந்து, நாளடைவில் அவற்றின் பயன்பாட்டுக்

கொள்ளளவு குறைந்து காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில், இருக்கின்ற நீர்வள ஆதாரங்களை சிறப்பாகப் பேணிக் காத்து, சிக்கனமாக நீரைப் பயன்படுத்தினாலே, கூடுதல் பாசன வசதியளிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 'தொலைநோக்குத் திட்டம் 2023'-ல் நீர்த்தேக்கங்களின் கொள்திறனை மீளப்பெற, தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள, முன்னுரிமை அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை மாநகரின் குடிநீர் ஆதாரங்களைப் பெருக்குதல். திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம் அருகே கொரட்டலையாற்றின் குறுக்கே ரூ.35 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைத்து, சென்னை மாநகருக்கு 160 மில்லியன் கன அடி கூடுதல் குடிநீர் வசதி அளிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, விரிவான தள ஆய்வுப் பணிகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டப் பணிகள் விரைவில் செயலாக்கப்படவுள்ளன என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவை தவிர, சென்னை மற்றும் சென்னையின் அருகிலுள்ள நீர் நிலைகளைப் புனரமைத்து, நிலத்தடி நீரினை அதிகரிக்கவும், அவற்றைச் சுற்றி பூங்காக்கள் மற்றும் நடைபாதைகள் அமைத்தும், படகு வசதிகளை ஏற்படுத்தி, அப்பகுதிகளைச் சுற்றுலாத்தலமாக்கி ஏரிகளைப் பாதுகாக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இதன் முதற்கட்டமாக, அம்பத்தூர், கொரட்டூர் மற்றும் மாதவரம் ஏரிகளைப் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காவேரி டெல்டாவில் பருவநிலை மாறுதலை எதிர்கொள்ளும் திட்டம். காவேரி டெல்டாவின் கடைமடைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் விதத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் காவேரி டெல்டா பகுதியில் பருவ நிலை மாறுதலை எதிர்கொள்ள ரூ.1,560 கோடி மதிப்பீட்டிலான திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இப்பணிகளைச் செயலாக்க ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.1,092 கோடி கடனுதவி அளிக்க இசைந்துள்ளது. மாநில அரசின் பங்களிப்பு ரூ.468 கோடி ஆகும்.



மாநில நதிகளை இணைக்கும் திட்டம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி, வெள்ள நீர் உபரியாக வீணாகும் பகுதிகளிலிருந்து, பற்றாக்குறை ஏற்படும் பகுதிகளுக்கு வெள்ள நீரைக் கொண்டு சென்று, பாசனத்திற்கும், குடிநீர்த் தேவைகளுக்கும் பயன்படுத்துவதற்காக தமிழ்நாட்டிற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும்விதமாக, கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது:

பெண்ணையாறு (சாத்தனூர் அணை) பாலாறு இணைப்பு. சாத்தனூர் அணையின் முழு நீர்மட்ட அளவில் ஒரு புதிய தலை மதகு மற்றும் இணைப்புக் கால்வாய் அமைத்து, சுமார் 5.69 டி.எம்.சி. அடி உபரி வெள்ள நீர், பாலாற்றின் கிளை ஆறான செய்யாற்றுக்குக் கொண்டு செல்லப்படும். இத்திட்டத்தின்மூலம், நந்தன் வாய்க்காலுக்கும் நீர் வழங்கப்படும். திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சுமார் 46,069 ஏக்கர் ஆயக்கட்டு இதன்மூலம் பயன்பெறும். இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு ரூ.250 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால், இத்திட்டத்தினை மாநில நிதியைக் கொண்டு செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு)-பாலாறு இணைப்பு. பெண்ணையாற்றில் அமைந்துள்ள நெடுங்கல் அணைக்கட்டிலிருந்து 3.5 டி.எம்.சி. அடி உபரி வெள்ள நீரினை பாலாற்றுக்குக் கொண்டு சென்று, சுமார் 29,319 ஏக்கர் ஆயக்கட்டு பாசன வசதி பெற, தேசிய நீர் மேம்பாட்டு முகமை, விரிவான ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில், கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

காவேரி-வைகை-குண்டாறு இணைப்பு. காவேரியின் குறுக்கே தற்போது கட்டப்பட்டு வரும் கட்டளை கதவணையிலிருந்து புதிய வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, 7 டி.எம்.சி. அடி உபரி வெள்ள

நீரினை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாற்றுக்குத் திருப்பிவிடும் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு ரூ.5,166 கோடியில் தயாரிக்கப்பட்டு, 15-11-2011 அன்று மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த பரிந்துரைத்து அனுப்பப்பட்டது. இத்திட்டத்தின்பேரில், சில குறிப்புரைகளை மேற்கோள் காட்டி, மத்திய அரசு திருப்பி இங்கே அனுப்பியுள்ளது. அவற்றையெல்லாம் சரி செய்து, மத்திய அரசுக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-35

மேட்டூர் அணையிலிருந்து இணைப்புக் கால்வாய் அமைத்து, 2 டி.எம்.சி. அடி உபரி வெள்ள நீரினை சரபங்கா, திருமணிமுத்தாறு மற்றும் முசிறி சிறு வடிநிலங்களுக்குக் கொண்டு சென்று சுமார் 30,430 ஏக்கர் ஆயக்கட்டு பாசன வசதி பெற உதவும் இத்திட்டத்திற்கான விரிவான தள ஆய்வுகளை மேற்கொள்ளவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.50 இலட்சம் ஒப்புதல் அளித்து ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அணைகள் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு. ஆறுகளின் குறுக்கே அணை கட்டி, நீரைத் தேக்கி வைத்து கால்வாய்கள்மூலம் பாசன வசதி அளிப்பது என்பது தமிழர்களுக்குப் புதிதல்ல. தமிழ்நாட்டிலேயே பாசனத்திற்கு முன்னோடியாகக் கருதப்படும் மிகப் பழமையான பாசன அமைப்பான கல்லணை இதற்குச் சிறந்த சான்றாகும்.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கான மதிப்பீட்டில், 80 விழுக்காடு உலக வங்கியிடம் கடனுதவியாகப் பெறப்படுகிறது. எஞ்சிய 20 விழுக்காடு, மாநில அரசின் பங்களிப்பாகும். 66 நீர்வள ஆதாரத் துறை அணைகளும், 38 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அணைகளும் புனரமைக்கப்பட உள்ளன. முதற்கட்டமாக நடப்பாண்டில் மொத்தம் 18 அணைகளில் புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன.



அணைகளின் பராமரிப்பு. அணைகள் சிறந்த நீர்வள ஆதாரங்களாகச் செயல்பட்டு வருவது மட்டுமின்றி, சிறந்த சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குத் தலங்களாகவும் விளங்கி வருகின்றன. அணைப் பகுதியில் அமைக்கப்படும் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு அமைப்புகள் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் ஈர்க்கும்வண்ணம் அமைந்துள்ளன. அணைகளின் பராமரிப்பை உறுதி செய்து, ஒவ்வோர் ஆண்டும் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் அணையினைத் தேர்ந்தெடுத்து, அப்பணியில் ஈடுபட்டுள்ள பொறியாளர்களைப் பாராட்டி, ஊக்குவித்து, ரொக்கப் பரிசும், விருதும் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2012-2013 ஆம் ஆண்டு, முல்லைப் பெரியாறு அணை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட அணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஏரிகளைப் புனரமைத்துப் புதுப்பிக்கும் திட்டம். நம் நாட்டில், தென்னிந்தியாவில்தான் அதிக அளவில் ஏரிகள்மூலம் பாசன வசதி அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், 13,699 ஏரிகள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. அணைகள், அணைக்கட்டுகள் மற்றும் கலிங்கல்களிலிருந்து பெறப்படும் நீரையும், நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து பெறப்படும் நீரையும் சேமித்து வைத்து, பாசனத்திற்கும், குடிநீருக்கும் பகிர்ந்தளிக்கவும், ஒரு சிறந்த நிலத்தடி நீர்ச்செறிவு கட்டுமான அமைப்புகளாகவும் ஏரிகள் செயல்பட்டு வருகின்றன.

பாசன வேளாண்மையில் ஏரிகளின் பங்கு கணிசமானதாகும். தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின்கீழே 6,083 ஏரிகள் புனரமைக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 7,616 ஏரிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வது அவசியமானதாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதற்கட்டமாக, சுமார் ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்புள்ள 100 ஏரிகளைத் தெரிவு செய்து, அவற்றைத் தூர் வாரி, கொள்ளளவை மீளப் பெற்று, வேளாண் உற்பத்தியைப் பெருக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பாண்டிலே ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலே 25 ஏரிகளில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

நீர்வள, நிலவளத் திட்டம். உலக வங்கிக் கடனுதவியுடன் ரூ.2,816 கோடி திருத்திய மதிப்பீட்டில் நீர்வள, நிலவளத் திட்டம் சுமார் 6.69 இலட்சம் எக்டேர் ஆயக்கட்டு பயனடையும் வகையிலே, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 25 மாவட்டங்களில் அமைந்துள்ள 4,910 ஏரிகள், 662 அணைக்கட்டுகள் மற்றும் 8,071 கிலோ மீட்டர் நீள வரத்துக் கால்வாய்கள் புனரமைப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடிவுற்று, எஞ்சிய பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடப்பாண்டில் 17 மாவட்டங்களில் 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அவற்றின் வரத்து வாய்க்கால்களைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகளை ரூ.258.73 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் கால அளவு 1-4-2013 முதல் 30-9-2014 வரை 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், ரூ.258.73 கோடி மதிப்பீட்டில், 17 மாவட்டங்களில் 26 உப வடி நிலங்களிலுள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாநில நிதித் திட்டங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஊட்டி ஏரியைத் தூய்மைப்படுத்தி பாதுகாக்கும்விதமாக, மொத்தம் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையின்மூலமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின்போது, மருதையாறு நதியில், மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் வரப்பெறும் நீரை, உரிய முறையில் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையிலே, பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில், மருதையாற்றின் குறுக்கே ரூ.108 கோடி மதிப்பீட்டில் புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் அமைக்கப்படும்.

இத்திட்டத்தின்மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி, அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 4,194 ஏக்கர் புன்செய்



நிலங்கள் புதியதாக பாசன வசதி பெறும். இதனால் உணவு உற்பத்தி அதிகரிப்பதுடன், அப்பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டமும் உயர வழி வகுக்கும்.

நபார்டு கடனுதவித் திட்டங்கள். இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் திருச்சி மாநகராட்சியின் குடிநீர்த் திட்டங்களுக்கான நீர்த் தேவையை உறுதி செய்யும் நோக்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமம் அருகே காவேரியாற்றின் குறுக்கே ரூ.32 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க ஆணையிட்டு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 2-40

2011-2012 மற்றும் 2012-2013 ஆம் நிதியாண்டுகளில் பாசனத்திற்கான மானியக் கோரிக்கையின்போது, ரூ.193.56 கோடி மதிப்பீட்டிலான 20 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, நபார்டு கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்தது. அவற்றுள் 6 பணிகள் முடிவுற்றுள்ளன. 3 பணிகள் முடியும் தருவாயிலும், 8 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. எஞ்சிய 3 திட்டங்கள் 2013-2014 ஆம் ஆண்டில் செயலாகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

13-வது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டம்

கடலோரப் பாதுகாப்பு. இயற்கைச் சீற்றங்களால் தமிழக கடலோரப் பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பெரும் சேதம் ஏற்படுகின்றது. இச்சேதங்களைத் தடுக்க கடலோரப் பகுதிகளில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 13-வது நிதிக் குழுவின் மானியத்தின்கீழ் 7 மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில், மிகவும் பாதிப்புக்குள்ளான பகுதிகள் கண்டறியப்பட்டு 50 கடலரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.199.93 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ரூ.135.32 கோடி மதிப்பீட்டிலான 41 பணிகளை மேற்கொள்ள நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 7 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 34 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

*மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைத்தல். மரபு சார்ந்த நீர்நிலைகளான மானாவாரி ஏரிகளுக்கான நீர் ஆதாரம், அவற்றின் சொந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் மழை நீரை மட்டுமே சார்ந்துள்ளது. இவற்றைப் புனரமைத்து நவீனப்படுத்துவன்மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயருவதுடன் குறிப்பிட்ட அளவிலான பாசன வசதி மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலும். 13-வது நிதிக் குழு மானிய உதவியுடன் 674 நீர்நிலைகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.99.81 கோடி மதிப்பீட்டில் 338 ஏரிகளில் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு 129 பணிகள் முடிவுற்றுள்ள. எஞ்சிய 209 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமம். சென்னை மாநகரில் மழைக்காலங்களில் வெள்ள அபாயத்தைத் தணிப்பதற்காக, சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித் துறையின்மூலம் வடிகால்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுப் பணித் துறையின்மூலம் பெரிய வடிகால்களான பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம்-அரும்பாக்கம் கால்வாய் மற்றும் வீராங்கள் ஓடை ஆகியன ரூ.819.80 கோடி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளைச் செயல்படுத்தத் தொடங்கிய பிறகு, பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் வடிவது இலகுவாகி, மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்கள் குறைந்து வருகின்றன. நடப்பாண்டில் ரூ.73.01 கோடி மதிப்பீட்டிலான இரண்டு புதிய பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பணிகள் அனைத்தும் முடிவுறும்போது சென்னை மாநகரில் பெரிய வடிகால்கள்மூலம் வெள்ள நீர் தங்குதடையின்றி வெளியேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையின் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும், கருத்துகளுக்கும் பாரதம் கண்ட பகுத்தறிவுப் போர்வாள், கழகம் காக்கும் காவல் தெய்வம், தென்னகத்தின் திருவிளக்கு, தொண்டர்களின் ஒளிவிளக்கு, தமிழினத்தின் ஒளிவிளக்கு, எதிர்கால இந்தியாவின் மணிவிளக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* இயக்கத்தின் ஆதாரம், அரசியல் சிகரம், அன்பின் அகரம், மக்கள் போற்றும் மாதரசி, இந்தியாவில் தமிழகம் முதன்மையுற, கண்துஞ்சாது கடமையாற்றும் தன்னலம் கருதா தனிப்பெரும் தலைவி, புதுமைகள் படைத்திடும் புறநானூற்றுத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, கீழ்க்கண்ட அறிவிப்புகளை அளிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



சுரங்கம் மற்றும் கனிம வளத் துறை மூலமாக, சுற்றுச்சூழல் அனுமதியுடன், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன், உரிய அளவில் மணல் எடுக்க மணல் குவாரிகள் அமைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த மண் குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட அளவிற்குக் கூடுதலாக மணல் அள்ளாதவாறு உரிய முறையில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

பொதுப் பணித் துறை பாசன கண்மாய்களிலிருந்து, மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் விவசாயிகள் மண் எடுக்க அரசாணை எண் 938-ன்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி விவசாயிகள் அனைவருமே விலையில்லாமல் வண்டல் மண்ணை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் உள்ள ஏரி, குளம் மற்றும் கண்மாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகள், தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டத்தின்படி படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன்மூலம், முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ள 13,699 ஏரிகளில், 3,482 ஏரிகளில் எல்லைக்கற்கள் நடப்பட்டு, ஆக்கிரிமிப்புகள் அகற்றப்பட்டு, முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும், 1,921 ஏரிகளில் ஆக்கிரமிப்பை அகற்றும் பணிகளும், 2,129 ஏரிகளில் எல்லைக்கற்கள் நடும் பணிகளும், 3,175 ஏரிகளில் நில அளவைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

வைகை ஆறு, மஞ்சளாறு, வராகநதி போன்ற ஆறுகளின் குறுக்கே புதிய பாலம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு

உறுப்பினர்கள் கோரியுள்ளனர். ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டும் பணி நெடுஞ்சாலைத் துறையினைச் சார்ந்ததாகும். எனவே, அது சாத்தியமில்லை என இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தின் 104 அணைகளைப் புனரமைத்து மேம்படுத்த அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், ரூ.745.49 கோடி மதிப்பீட்டில் நான்கு கட்டங்களாக உலக வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிற்பகல் 2-45

மழை நீர் வீணாகப் போய் கடலிலே கலப்பதைத் தவிர்க்கும்பொருட்டு, நீராதாரம் குறைந்தபோதிலும் நிலத்தடி நீரைச் சேமிக்கும்பொருட்டும், செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் பெரும் திட்டம் ரூபாய் 550 கோடி மதிப்பீட்டிலே செயலாக்கத்திலே உள்ளது. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கீழணையின் கீழ்ப்புறம் கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள ஆதனூர், குமாரமங்கலம் ஆகிய கிராமங்களுக்கருகே ஒரு கதவணை அமைக்க உத்தேசிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கதவணைத் திட்டத்தின்மூலம் வடக்குராஜன் கால்வாய்க்கு கொள்ளிடம் ஆற்றின் நீர் திருப்பி விடப்படும். இதன்மூலம் இந்த நீர் கான்சாகிப் கால்வாய் வழியாகச் சென்றடைந்து பாசனப் பயன்தரும். இதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுப் பணித் துறையின்மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்களில், பராமரிப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட துறைக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிப்பு நிதியிலிருந்து உரிய துறையின் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையிலே, பொதுப் பணித் துறை பராமரிப்புப் பணிகளை நிதிநிலைக்கேற்ப செயல்படுத்தி வருகின்றது. ஒப்பந்தக்காரர்கள் அளிக்கும் விலைப்புள்ளியின் அடிப்படையிலே, ஒப்பந்தக்காரர்கள் கடன் சம்பந்தப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தவிர, கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்திற்கேற்ப, ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கக்கூடிய அரசாணை வெளியிடப்பட்டு



விலை சமன்பாடு நடைமுறையில் உள்ளது. எனவே, அரசு கட்டுமானப் பணிகள் தொய்வின்றி, சரிவர நடைபெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்விற்கேற்ப பொதுப் பணித் துறையால் செந்திர விலைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. இதுதவிர, பணிகளுக்கான ஒப்பந்தங்களில் ஒப்புக்கொள்ளும் காலவரையறைக்குள் பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு கீழ்க்கண்ட புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

**1. கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியினைத் தூர்வாரி கொள்ளளவினை அதிகரித்து சென்னை மாநகர குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 40.00 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டத்தில் வீராணம் ஏரியைத் தூர் வாரி, 1,465 மி.கன அடியாக முழு கொள்திறன் மீளக் கொணர்ந்து, வழங்கு கால்வாயான வடவாறு கால்வாயைப் புனரமைத்து, நீர் கடத்தும் திறனை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், பாசனமும் மேம்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம் காளிங்கராயன் வாய்க்காலின் மைல் 0.0.000 முதல் 3.3.000 வரை புனரமைக்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், ரூபாய் 50.00 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் கால்வாயின் மைல் 3/3 முதல் மைல் 9/7 வரை சீரமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், இக்கால்வாயின் மைல் 0.0 முதல் மைல் 3.3 வரை ரூபாய் 40.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 15,743 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. தமிழ்நாட்டில் ஆயிரம் ஏக்கருக்குமேல் ஆயக்கட்டு உள்ள பெரிய ஏரிகளைத் தூர்வாரி கரைகளைப் புனரமைக்கும் திட்டம்**

தமிழ்நாட்டில் 1,000 ஏக்கருக்கு மேல் பாசனப் பரப்பு உள்ள 100 ஏரிகள் உள்ளன. முதற்கட்டமாக இவ்வாண்டு 1,000 ஏக்கருக்கு மேல் பாசனப் பரப்பு உள்ள 25 ஏரிகளை ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, புனரமைத்து, அதன் கொள்ளளவினை மீளப் பெறுவதற்கான பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடவாறு நீட்டிப்புக் கால்வாயைப் புனரமைக்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்தில், வடவாறு நீட்டிப்பு கால்வாயின் கரைகள், குறுக்குக் கட்டுமானங்களான மதகுகள், ட்ராப்கள், சைபன்கள் மற்றும் நடை பாலங்கள் ஆகியவை ரூபாய் 23.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். இதனால் 15,176 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு அணைக்கட்டை புனரமைத்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வெள்ளாற்றின் குறுக்கே உள்ள சேத்தியாதோப்பு அணைக்கட்டினை ரூபாய் 19.70 கோடி மதிப்பீட்டில், 40,669 ஏக்கர் நிலங்கள் பாசனம் உறுதி செய்யும் வகையில் புனரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முறையே திருவண்ணாமலை மற்றும் செஞ்சி வட்டத்தில் உள்ள நந்தன் கால்வாயை புனரமைத்து நவீனப்படுத்தும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சலார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள



கீரனூர் அணைக்கட்டிலிருந்து பிரிந்து, திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முறையே, திருவண்ணாமலை, செஞ்சி ஆகிய வட்டங்களில் ஓடும் நந்தன் கால்வாய் ரூபாய் 14.50 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. நீர்வள ஆதாரத் துறையின் பாசனம் மற்றும் அலுவலக உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பின்வரும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்:

(அ) தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அலுவலகத்திற்கு 82.5 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு புதிய டீசல் ஜெனரேட்டர் மற்றும் நீர் ஆய்வு நிறுவன அலுவலகத்திற்கு 40 கிலோ வாட் திறன் கொண்ட ஒரு புதிய டீசல் ஜெனரேட்டர் ரூபாய் 0.16 கோடி மதிப்பீட்டில் வாங்குதல்.

(ஆ) நவீன முறையில் ஆய்வுப் பணி மேற்கொள்ள நீர்வள ஆதாரத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவிற்கு டிஜிட்டல் நில அளவை மற்றும் டோப்போகிராபிக் கருவிகள் ரூபாய் 0.30 கோடி மதிப்பீட்டில் வாங்குதல்.

பிற்பகல் 2-50

(இ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், மேட்டுக்குப்பம் கிராமத்தினருகே வேகவதி ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் ரூ.0.22 கோடி மதிப்பீட்டில் அமைத்தல்.

(ஈ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், குளத்தூர் ஏரியின் கொள்ளளவினை மேம்படுத்தும் திட்டம் ரூ.0.58 கோடி மதிப்பீட்டில் செயலாக்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**8. நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பின்வரும் நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்:

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டம், ஆமூர் ஏரி மற்றும் பூந்தமல்லி வட்டம் புதிய பங்காரு வழங்கு வாய்க்காலை ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், வளையாத்தூர் ஏரியினை ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டம், ஆலத்தூர் அணைக்கட்டின் வரத்துக் கால்வாய் மற்றும் அதன்கீழ் உள்ள ஏரிகள் மற்றும் திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள தண்டரை அணைக்கட்டு ஆகியவற்றை ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், குனியமுத்தூர் அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு வாய்க்கால் மற்றும் மேட்டுப்பாளையம் வட்டம், கிருஷ்ண அய்யங்கார் வாய்க்காலை ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், ஆண்டிப்பாளையம் அணைக்கட்டின் தெற்குக் கரை மற்றும் அதன் வழங்கு வாய்க்காலை ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருமங்கலக்குடி கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே, புதிதாக தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் கும்பகோணம் வட்டம், சுவாமிமலை கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே உள்ள படுகை அணை மற்றும் பாபநாசம் வட்டம், மேலமருத்துகுடி, நாககுடி கிராமத்தில் தலைமதகை புனரமைத்தல் ஆகிய பணிகள் ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் செயலாக்குதல்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், போலகுடி கிராமத்தில் நாட்டார் ஆற்றின் குறுக்கேயுள்ள சிறுபுலியூர் ரெகுலேட்டரை ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னிலக்குடி கதவணையைப் புனரமைத்தல் மற்றும் திருநகரி கால்வாய் சைபன் குழாய் (Syphon Aqueduct) கட்டுதல், தரங்கம்பாடி வட்டத்தில் வசிஷ்டாச்சேரி கிராமத்தில் வீரச்சோழன் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவரை மறுகட்டுமானம் செய்தல் ஆகிய பணிகள் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.



மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பல்லப்பட்டி பழைய அணைக்கட்டு, கொட்டான்குளம் அணைக்கட்டு மற்றும் கொட்டான்குளம் கண்மாய் முதலியவற்றை ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் புனரமைத்தல்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோட்டையாடி கால்வாய் மற்றும் தோவாளை வட்டம் இரப்பையாறு மற்றும் சுங்கன் ஓடையின் கரையைப் பலப்படுத்தும் பணிகள் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.

**9. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், வெள்ளாற்றின் குறுக்கே உள்ள பெலாந்துரை கதவணையை புனரமைக்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள பெலாந்துரை கதவணை ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். இதன்மூலம் 12,234 ஏக்கர் நிலங்களின் பாசனம் உறுதி செய்யப்படுவதுடன், கால்வாயின் நீர் செறிவு மண்டலத்தில் உள்ள 2,400 ஏக்கர் நிலம் பாசனப் பயன்பெறும்.

**10. நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கீழ்க்காணும் கால்வாய்களில் புனரமைப்பு மற்றும் தடுப்பணைகள் கட்டும் பணிகள் ரூ.34.55 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்:

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், உளுப்பக்குடி கிராமத்தில் அருவியாறு ஓடையின் குறுக்கே கசிவு நீர்க் குட்டை அமைத்தல் மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டம், புதூர் கிராமத்தில் நங்கஞ்சியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயினைப் புனரமைத்தல்.

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு கிராமத்தின் அருகே லாவா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கே.கே.புதூர் அருகே கிளியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை மற்றும் விழுப்புரம் வட்டங்களில் முறையே பேரங்கியூர் மற்றும் பிடாகம் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே நிலத்தடி தடுப்புச் சுவர் அமைத்தல்.

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், பெல்லாரப்பள்ளி, நாச்சிகுப்பம் மற்றும் ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பாம்பாற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கம்பைநல்லூர் ஆறு மற்றும் கோவிலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், சக்கிலிச்சிகுளம், நல்லிடைச்சேரி ஏரிகளுக்கு நீர் வழங்கும் வாய்க்காலை மேம்படுத்துதல்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், முறையூர் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பரிவிரிசூரியன் மற்றும் தளவாய்புரம் கிராமத்தில் அனுமாநதி குறுக்கே தடுப்பணை அமைத்தல்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், கோம்பாடி அருகே உப்போடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், நாராயணக்குப்பம் அருகே பாம்பனாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**11. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காகங்கரை ஏரிக்குப் புதிதாக நீர் வழங்கு கால்வாய் அமைக்கும் திட்டம்**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காகங்கரை ஏரிக்கு குத்தூர் ஏரியிலிருந்து ஒரு புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் திட்டம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் 218.55 ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் உறுதி செய்யப்படும்.



**12. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜாம்பவான் ஓடை கிராமத்தில் கந்தபரிச்சனார் வடிகாலில் கடைமடை ரெகுலேட்டர் அமைக்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கந்தபரிச்சனார் வடிகாலில் கடல்நீர் உட்புகாமல் இருக்கும்பொருட்டு, ரூ.3 கோடி மதிப்பீட்டில் ரெகுலேட்டர் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**13. ஆறுகள், கால்வாய்களின் குறுக்கே பாலங்கள் அமைத்தல்**

மக்களின் போக்குவரத்து மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களை விரைவாகக்கொண்டு செல்வதற்கு ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பின்வரும் 9 இடங்களில் ரூ.5.87 கோடி மதிப்பீட்டில் பாலங்கள் அமைக்கப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், குரங்கன்பள்ளம் ஓடையின் குறுக்கே மற்றும் ஊஞ்சலாறு பிரிவு கால்வாயில் பாலங்கள் அமைத்தல் மற்றும் பெருந்துறை வட்டம், கண்ணவேலம்பாளையம் மற்றும் பெரிய விலாமலை கிராமத்தின் அருகே கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தினை மறுகட்டுமானம் செய்தல்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், பொழிச்சலூரில் அடையாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்.

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், சோரஞ்சேரியில் கூவம் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பஞ்சன்தாங்கி வழங்கு வாய்க்காலில் சிறு பாலம் மற்றும் குதிரையார் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்.

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், காட்டூர் கிராமத்தில் புள்ளம்பாடி வாய்க்கால் மற்றும் பழையபாடி கிராமத்தில் உப்போடை மற்றும் குலமாணிக்கம் கிராமத்தின் அருகே நந்தியார் பிரதானக் கால்வாய் குறுக்கே புதிய பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெறவுள்ளன.

**14. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பு தடுப்புச் சுவர்களை சீரமைக்கும் பணிகள்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பூத்துறையில் கடலரிப்பு தடுப்புச் சுவர் ரூ.2.09 கோடி மதிப்பீட்டிலும், முள்ளூத்துறையில் எல்.எஸ்.595 மீட்டரிலிருந்து எல்.எஸ்.695 மீட்டர் வரை கடலரிப்பு தடுப்புச் சுவர் ரூ.0.28 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கப்படும்.

பிற்பகல் 2-55

**15. கட்டடக் கட்டுமானங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் பின்வரும் கட்டடக் கட்டுமானங்கள் கட்டப்படும்:

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் பொதுப் பணித் துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட செயற் பொறியாளருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.

திருநெல்வேலியில் 2 உதவி செயற் பொறியாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் 2 உதவி பொறியாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

தருமபுரி மாவட்டம், அரூரில் ஒரு உதவி பொறியாளர் குடியிருப்பு கட்டுதல்.

திருப்பூர், கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு உதவி செயற் பொறியாளர் குடியிருப்பு, ஒரு பாசன உதவியாளர் குடியிருப்பு மற்றும் இரண்டு உப கோட்ட அலுவலகங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.



**16. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பொதுப் பணித் துறை சுற்றுலா மாளிகைகள்/ ஆய்வு மாளிகைக் கட்டடங்களில் சூரிய சக்தி மின் அமைப்பு நிறுவுதல்**

பொதுப் பணித் துறை பராமரித்துவரும் அனைத்து சுற்றுலா மாளிகைகள்/ஆய்வு மாளிகைகளிலும் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் சூரிய சக்தி மின் அமைப்பு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்துள்ள கருத்துகள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலுடன் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியை அளிக்கின்றேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் ஒரு முறை நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, எனது உரையினை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்று தனது பதிலுரையில், ** குறித்து குறிப்பிட்ட கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நான் சொன்னது உட்பட.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

“கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.224,09,41,000/-, மூலதனக் கணக்கில் ரூ.868,27,14,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,462,85,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,850,64,64,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-4-2013) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

77. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

120. மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

121. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) திட்டச் சாதனை, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

122. மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

123. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) திட்டச் சாதனை, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

[2013 ஏப்ரல் 18

*124. கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சிப் பணிகள் என்கிற சிறு நூல். (தமிழ்)*

*125. வளர்ச்சிப் பாதையில் மீன் வளத் துறை என்கிற சிறு நூல். (தமிழ்)*

*126. "புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள், 2012" என்கிற சிறு நூல். (தமிழ், ஆங்கிலம்)*

*127. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)*

*128. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)*

## இணைப்பு—I

*(460 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014

### 1.0 பொது

பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப பொதுக் கட்டடங்களைக் கட்டத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட கட்டடத் தொடர்புடைய பணிகளை திறம்படச் செயலாற்றி வருகிறது.

பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, மாநில மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்கள், கழகங்கள் போன்றவற்றுக்கான கட்டட, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நினைவுச் சின்னங்கள் அமைத்தல் மற்றும் நினைவகங்கள் கட்டுதல் ஆகிய பணிகளும் இவ்வமைப்பின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பாரம்பரிய கட்டடங்களைப் புதுப்பித்தல், புனரமைத்தல் ஆகிய பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது. சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் மாளிகைகள், தலைமைச் செயலகம், மாண்புமிகு அமைச்சர்கள், நீதியரசர்கள் மற்றும் மிக முக்கியப் பிரமுகர்களுக்கான இல்லங்கள், அரசு ஆய்வு மாளிகைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவற்றை இவ்வமைப்பு பராமரித்து வருகிறது.

மிக மிக முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது மேற்கொள்ளப்படும் பணிகளான மேடை அமைத்தல், தடுப்புகள் அமைத்தல், ஒலி மற்றும் ஒளி அமைத்தல் ஆகிய பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

புதிய கட்டடங்களுக்கான ஆரம்ப நிலை கட்டட வரைபடம், விரிவான வரைபடங்கள், கட்டட முகப்பு மற்றும் குறுக்கு வெட்டுத் தோற்ற வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் வண்ணம் தீட்டுதல் ஆகிய பணிகளை இவ்வமைப்புடன் இயங்கி வரும் கட்டடக்

[2013 ஏப்ரல் 18

கலைப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு, பெருந்திட்ட வளாகங்களுக்கான தள வரைபடம் தயாரிக்கும் பணிகளுடன் நினைவகங்கள், மணிமண்டபங்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான கட்டட மனையமைவு வரைபடம் தயாரிக்கும் பணிகளையும் செய்து வருகிறது. இவை தவிர, ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம், பள்ளிகளுக்கான வகுப்பறைகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளுக்கான மாதிரி வடிவமைப்பு வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகளையும் இவ்வமைப்பு செய்து வருகிறது.

### 1.1 அமைப்பு

***1.1.1*** பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு, முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தலைமையில், சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டல தலைமைப் பொறியாளர்களின் (கட்டடம்) கட்டுப்பாட்டின்கீழ், 14 வட்டங்கள் மற்றும் 50 கோட்டங்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

14 வட்டங்களில், 7 மருத்துவம் அல்லாத பணிகளுக்காகவும், 3 மருத்துவப் பணிகளுக்காகவும், 3 மின் பணிகளுக்காகவும், 1 திட்டம் மற்றும் வடிவமைப்பிற்காகவும் செயல்பட்டு வருகின்றது.

50 கோட்டங்களில், 34 மருத்துவம் அல்லாத பணிகளுக்காகவும், 15 மருத்துவப் பணிகளுக்காகவும், 1 கட்டட ஆராய்ச்சி பணிக்காகவும் செயல்பட்டு வருகின்றது.

***1.1.2*** மேலும், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் நிருவாகத்தின்கீழ், ஒரு கட்டட வரைபடப் பிரிவு, தலைமைக் கட்டடக் கலைஞர் தலைமையில், முறையே இணைத் தலைமைக் கட்டடக் கலைஞர், முதுநிலை கட்டடக் கலைஞர்கள், இளநிலை கட்டடக் கலைஞர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

***1.1.3*** பொதுப் பணித் துறை பொறியாளர்களது தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காகவும், துறையில் மேற்கொள்ளப்படும்



2013 ஏப்ரல் 18]

புதிய விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை கடைப்பிடித்து திறம்பட பணியாற்றுவதற்காகவும், அவர்களுக்கு பயிற்சி அளித்திட திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் பொதுப் பணித் துறைப் பணியாளர் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இந்நிலையத்தின்கீழ் செயற் பொறியாளர்கள் நிலையில் மூன்று துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சென்னையில் பொதுப் பணித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

*1.2* தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை நிருவாகத்தின்கீழ் நீர்வள ஆதாரத் துறை, கட்டட அமைப்பு மற்றும் கொதிகலன்கள் இயக்ககம் ஆகியவற்றின் பணியமைப்பு சார்ந்த அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.0 நிதி ஒதுக்கீடு 2013–2014

***2.1*** 2013-2014 ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண் 39-ன் கீழ் ரூ.1092.37 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:—

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | மூலதனக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்) | 739.06 |
| 2. | கணக்குகளிடையே மாற்றம் | 129.21 |
| 3. | வருவாய்க் கணக்கு | |
| | (அ) பராமரிப்பு | 43.08 |
| | (ஆ) பணியமைப்பு (பொதுப் பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட) | 181.01 |
| 4. | கடன் கணக்கு | 0.01 |
| | **மொத்தம்** | ***1092.37*** |

[2013 ஏப்ரல் 18

**2.2 திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள் – மூலதனக் கணக்கு**

**கோரிக்கை எண் 39–ன்கீழ் துறைவாரியான ஒதுக்கீடு 2013–2014**

| வ. எண் | துறை | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | பொதுப் பணித் துறை | 49.82 | 6.74 |
| 2. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 220.10 | 29.78 |
| 3. | உள் துறை | 136.94 | 18.53 |
| 4. | பதிவுத் துறை | 29.49 | 3.99 |
| 5. | வருவாய்த் துறை | 129.99 | 17.59 |
| 6. | பிற துறைகள் | 172.72 | 23.37 |
| | மொத்தம் | 739.06 | 100.00 |

***2.3*** *இவை தவிர, செலுத்துக் கணக்குத் தலைப்பின்கீழ், நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் பள்ளிக் கட்டடப் பணிகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள், அவசரகால சுனாமி மறுகட்டுமானத் திட்டப் பணிகள், உலக வங்கி / மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மருத்துவமனைக் கட்டடப் பணிகள் போன்ற கட்டடப் பணிகளையும் பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.*



2013 ஏப்ரல் 18]

**2.4 அரசுக் கட்டடங்கள் பராமரிப்பு**

**2.4.1 பொதுப் பணித் துறை கட்டடங்கள்**

*2013-2014 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப் பணித் துறை அலுவலகங்கள், அரசு அலுவலர் குடியிருப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக, 43.08 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.*

**2.4.2 இதர துறை கட்டடங்கள்**

*மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகள், பள்ளிகள், சிறைச்சாலைகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை, உள் துறை, பதிவுத் துறை அலுவலகங்கள், மேதகு ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள் மற்றும் பிற அரசுக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2013-2014 ஆம் ஆண்டில் 225.63 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.*

**3.0 2012–2013 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கிய கட்டடப் பணிகள்**

**3.1 முடிக்கப்பட்ட பணிகள்**

***3.1.1*** *பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தினைப் புனரமைத்தல், நுழைவு வாயிலின் முகப்பினை மாற்றி அழகுபடுத்துதல் மற்றும் முன்பக்க சுற்றுச் சுவரினைப் புதுப்பிக்கும் பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தினை புதுப்பொலிவுடன் புனரமைக்கும் பணிக்கு 4.30 கோடி ரூபாயும், நுழைவு வாயிலின் முகப்பினை மாற்றி அழகுபடுத்துதல் மற்றும் முன்பக்க சுற்றுச் சுவரினைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்கு, 3.40 கோடி ரூபாயும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, 8 மாத காலத்திற்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 09-12-2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

[2013 ஏப்ரல் 18

### 3.1.2 முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் திருவுருவச் சிலையுடன் நினைவு மண்டபம் அமைத்தல்

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு தேனி-குமுளி நெடுஞ்சாலையில், லோயர் கேம்ப் எனும் இடத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் அமைக்கும் பணிக்கு 1.25 கோடி ரூபாய் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணி 8 மாத காலத்தில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-01-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

### 3.1.3 சென்னை பழைய மத்திய சிறைச்சாலை வளாகத்தில் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம்

*சென்னை பழைய மத்திய சிறைச்சாலை வளாகத்தில் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 56.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01-03-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

### 3.1.4 சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம்

*சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம், 17.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01-03-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.*

### 3.1.5 சென்னை, திருவல்லிக்கேணி, அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் பன்னடுக்குக் கட்டடம்

*சென்னை, திருவல்லிக்கேணி, அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில், 16.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னடுக்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01-03-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.*



2013 ஏப்ரல் 18]

## 3.2 முன்னேற்றத்திலுள்ள முக்கிய கட்டடப் பணிகள்

### 3.2.1 சென்னை தலைமைச் செயலகத்தின் நாமக்கல் கவிஞர் மாளிகை முகப்புத் தோற்றத்தினைப் புதுப்பிக்கும் பணிகள்

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சென்னை தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையின் முகப்புத் தோற்றத்தினைப் புதுப்பிக்கும் பணிக்கு, 28.00 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இம்மேம்படுத்தும் பணிகளில் நவீன முகப்பு, ஒருங்கிணைந்த குளிர் சாதன அமைப்பு, கழிப்பிட வசதிகளை மேம்படுத்துதல், பணியாளர் இட வசதி மேலாண்மை போன்றவை தவிர, செயலாளர்கள் அடங்கிய குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு அளவிலான அலுவலர்களுக்கான இட வசதியின் மறு அமைப்பு ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

### 3.2.2 சென்னை இராஜாஜி சாலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு அமைக்கும் பணி

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2012 ஆம் ஆண்டு 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புனித ஜார்ஜ் கோட்டைக்கும், நேப்பியர் பாலத்திற்கும் இடையே நினைவு வளைவு அமைக்க 1.33 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-05-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

### 3.2.3 திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி கட்டடம் கட்டும் பணி

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமத்தில், தேசிய சட்டப் பள்ளிக் கட்டடம் கட்டும் பணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 75.00 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

[2013 ஏப்ரல் 18

**3.2.4 திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், வெள்ளித்திருமுத்தம் கிராமத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணியினை, 42.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.5 திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் சுற்றுலாக் காட்சி விளக்க மையம் மற்றும் கலையரங்கம் கட்டும் பணி**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் சுற்றுலாக் காட்சி விளக்க மையம் மற்றும் கலையரங்கம் கட்டும் பணிக்கு, 3.17 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-03-2014-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.6 சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், கலையரங்கம், அருங்காட்சியகம் கட்டும் பணி**

*சென்னை உயர் நீதிமன்றத்தின் 150-வது ஆண்டு விழா, 08-09-2012 அன்று நடைபெற்ற பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கலையரங்கம் மற்றும் அருங்காட்சியகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பணிகளுக்கென 10.00 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. 31-03-2014-க்குள் இப்பணிகளை செய்து முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.7 திருப்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பெருந்திட்ட வளாகக் கட்டடம் கட்டுதல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திருப்பூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பெருந்திட்ட வளாகக் கட்டடம் கட்டும் பணிக்கு, 52.14 கோடி ரூபாய்க்கு நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-03-2014-க்குள் செய்து முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*



2013 ஏப்ரல் 18]

**3.2.8 தஞ்சாவூரில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டடம் கட்டும் பணிக்கு, 25.00 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-03-2014-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.9 சேலம் மாவட்டம், சங்ககிரியில் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவுச் சின்னம் கட்டுதல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சங்ககிரி கிராமத்தில் நினைவுச் சின்னம் அமைக்கும் பணிக்கு, 60.00 இலட்ச ரூபாய்க்கு நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 30-09-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.10 திருவண்ணாமலையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டுதல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடம் கட்டும் பணிக்கு, 130.88 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.11 32 மாவட்டங்களில், மாவட்ட தொழிலக மையங்களைச் சீரமைத்தல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மாவட்டத் தொழிலக மையங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 11 மாவட்டத் தொழிலக மையங்களில் புதிய கட்டடங்கள் மற்றும் 21 மாவட்டத் தொழிலக மையங்களில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கு, 41.42 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

[2013 ஏப்ரல் 18

**3.2.12 சென்னை, எழும்பூர் அரசு மகளிர் நோயியல் நிலைய வளாகத்தில் குழந்தைகள் நல சிறப்பு சுகாதார மையக் கட்டடம்**

*சென்னை, எழும்பூர் அரசு மகளிர் நோயியல் நிலைய வளாகத்தில் குழந்தைகள் நல சிறப்பு சுகாதார மையக் கட்டடம் கட்டும் பணிக்கு, 56.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-05-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**3.2.13 சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் பன்னடுக்கு மாடிக் கட்டடம்**

*சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில், பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணிக்கு, 41.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-05-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**4.0 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்**

**4.1 கரிகால் சோழன் மணிமண்டபம்**

*கரிகால் சோழனால் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு இன்றளவும் கோடானு கோடி மக்களுக்கு பயனளித்துக் கொண்டிருக்கும் கல்லணை ஒரு பொறியியல் அற்புதம் எனவும், இந்தியாவில் தற்போது இயங்கிவரும் அணைகளில் கல்லணையே மிகவும் பழமை வாய்ந்தது எனவும், இப்படிப்பட்ட உறுதியான வரலாற்றுச் சிறப்புமிக்க அணையை உருவாக்கிக் கொடுத்த கரிகால் சோழனின் சேவையை நினைவு கூர்ந்து போற்றும் வகையிலும், கௌரவிக்கும் வகையிலும், ஒரு மணிமண்டபம் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனையடுத்து, இம்மணிமண்டபத்திற்கான வரைபடத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இப்பணிகள் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

**4.2 வீரமங்கை வேலு நாச்சியார் நினைவு மண்டபம்**

*ஆங்கிலேயப் படையினரை வீரமுடன் எதிர்கொண்டு வெற்றிகண்ட வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு*



2013 ஏப்ரல் 18]

*மண்டபம் அமைக்கப்படும் என சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், அப்பணிக்கு 60 இலட்சம் ரூபாய்க்கு நிருவாக ஒப்புதலும், அதற்கான வரைபடங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**4.3 சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்தினை பன்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனையாக மாற்றுதல்**

*சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் பன்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனையும் மற்றும் அதன் அருகில் உள்ள மற்றொரு கட்டடத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரியும் துவங்கப்படும் என அரசின் அறிவிப்பிற்கிணங்க, 26.929 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31-12-2013-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**4.4 சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய பிரம்மாண்ட கலையரங்கம்**

*சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் முன்பு இருந்த கலைவாணர் அரங்கம் இடிக்கப்பட்டதையடுத்து, அவ்விடத்தில் புதிய பிரம்மாண்ட கலையரங்கம் கட்டப்படும் என சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனை அடுத்து, இக்கலையரங்கத்திற்கான வரைபடத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். இப்பணிகள் 61.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

**4.5 சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய விருந்தினர் மாளிகை**

*சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விருந்தினர் மாளிகை கட்டடத்திற்கான வரைபடங்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

[2013 ஏப்ரல் 18

## 5.0 அரசுத் துறைகளுக்காகக் கட்டப்படும் கட்டடங்கள் (2013–2014)

### 5.1 பொதுப் பணித் துறை

*5.1.1* சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு 77.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 700 எண்ணிக்கை "சி" வகை அரசு குடியிருப்புகளைக் கொண்ட 7 அடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை ஜூலை 2014-க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

*5.1.2* ஈரோடு மாவட்டம், ஈரோடு ஆய்வு மாளிகை வளாகத்தில், 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மாளிகை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை ஜூன் 2013-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2 நீதித் துறை

### 5.2.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள பணிகள்

*5.2.1.1* விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், 17.317 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

*5.2.1.2* சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், 11.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கிலப் பதிவேடுகள் மற்றும் தமிழ் மொழிமாற்றுத் துறைக்கான கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

*5.2.1.3* 13-வது நிதிக் குழு பங்களிப்பு மூலம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில், மாநில மண்டல நீதித் துறை மையக் கட்டடம் தலா 8.50 கோடி ரூபாய் வீதம், 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

*5.2.1.4* மாற்றுவழி பிணக்குகள் தீர்வு மையக் கட்டடங்கள் 4.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலும், மற்றும் தலா 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், நாகப்பட்டினம், மதுரை, தேனி, இராமநாதபுரம், நாகர்கோவில், தூத்துக்குடி, ஸ்ரீவில்லிப்புத்தூர், காஞ்சிபுரம், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் திருவள்ளூர் ஆகிய



2013 ஏப்ரல் 18]

மாவட்டங்களிலும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, புதுக்கோட்டை, கரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

*5.2.1.5* ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் அறந்தாங்கி, தூத்துக்குடி, கள்ளக்குறிச்சி, பரமக்குடி, திருவண்ணாமலை, சங்கரன்கோவில், வேதாரண்யம், பாலக்கோடு, திருச்சிராப்பள்ளி, திருவாடானை, திருவள்ளூர், வால்பாறை, விளாத்திகுளம், மேட்டுப்பாளையம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் 96.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.2.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடங்கள்

*5.2.2.1* திருமயம், தேன்கனிக்கோட்டை, மேட்டூர், இரணியல், முதுகுளத்தூர், திட்டக்குடி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் 31.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

*5.2.2.2* சென்னையில் உள்ள ஜார்ஜ் டவுன் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் முதன்மைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் கூடுதல் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம், சைதாப்பேட்டை முதன்மைக் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற சிறு வழக்குகள் நீதிமன்றக் கட்டடம் ஆகிய புராதன நீதிமன்றக் கட்டடங்களை மேம்படுத்தும் பணிகள் 22.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

*5.2.2.3* சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் வழக்குரைஞர்களுக்கான கூட்டுறவு உணவகக் கட்டடம் மற்றும் வழக்குரைஞர்கள் அறைகள் கட்டும் பணிகள் 4.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

*5.2.2.4* சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்ட அலுவலர்களுக்கான கட்டடம் கட்டும் பணி 5.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

[2013 ஏப்ரல் 18

*5.2.2.5* சென்னை எழும்பூரில் உள்ள பெருநகரக் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணி 8.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

*5.2.2.6* கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டும் பணி, 1.417 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

## 5.3 பள்ளிக் கல்வித் துறை

### 5.3.1 நபார்டு கடனுதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள்

நபார்டு கடனுதவியுடன், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக் கூடம், குடிநீர், கழிவறை வசதிகள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் போன்ற முக்கியத் திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| கட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| VII | 195 | 131.69 |
| VIII | 59 | 63.36 |
| IX | 362 | 410.74 |
| XA | 303 | 235.14 |
| XB | 259 | 230.30 |
| XI | 131 | 152.73 |
| மொத்தம் | 1309 | 1223.96 |



2013 ஏப்ரல் 18]

மேற்கண்ட மொத்த 1309 பணிகளில், 934 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.3.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

*5.3.2.1* ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 வீதம் 160 பகுதிநேர நூலகங்களை ஊரக நூலகங்களாகவும், மாவட்டத்திற்கு 3 ஊரக நூலகங்களை கிளை நூலகங்களாகவும் மேம்படுத்தும் பணிகள் 7.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

*5.3.2.2* திருச்சிராப்பள்ளியில் ஆசிரியர் இல்லம் கட்டும் பணி, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*5.3.2.3* சென்னை, சைதாப்பேட்டையில் ஆசிரியர் இல்லத்தினை புதுப்பித்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 5.4 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

### 5.4.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

*5.4.1.1* திருச்சிராப்பள்ளியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையினை 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

*5.4.1.2* சிவகங்கையில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடம் (கட்டம்-3) கட்டும் பணி 14.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

*5.4.1.3* சென்னை குழந்தைகள் நல மருத்துவ நிலையத்திற்கு 300 படுக்கை வசதிகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டும் பணி 13.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

*5.4.1.4* கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நூற்றாண்டு நினைவு கட்டடம் கட்டும் பணி 50.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

*5.4.2* 2013-2014 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள பணிகள்

[2013 ஏப்ரல் 18

*5.4.2.1* சென்னை, கிண்டி கிங் நிலையத்தில் நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பு பிரிவுக்கான கட்டடம் கட்டும் பணி 7.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*5.4.2.2* சென்னை, பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல் தளத்தின் மீது இரண்டாம் தளக் கட்டடம் கட்டும் பணி 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*5.4.2.3* தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிகளில் போதை மறுவாழ்வு மையக் கட்டடம் கட்டும் பணி 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*5.4.2.4* கன்னியாகுமரி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி கட்டடங்களில் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்த கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

*5.4.2.5* கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி 2.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

*5.4.2.6* மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை ஆகிய இடங்களில் பிரேதப் பரிசோதனை மையக் கட்டடத்தினை மேம்படுத்தும் பணிகள் 8.377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 5.4.3 தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம்

*5.4.3.1* திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, தஞ்சாவூர், தேனி, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய எட்டு அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு மருத்துவக் கட்டடம் கட்டும் பணிகள் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.



2013 ஏப்ரல் 18]

*5.4.3.2* சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நல இயக்குநர் அலுவலக வளாகத்தில் அவசரகால மேலாண்மை பொறுப்பு மையத்தின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்கு புதிய கட்டடம் கட்டும் பணி 12.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நடைபெற்று வருகின்றது.

### 5.4.4 மத்திய அரசின் நிதியுதவியுடன் தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்:—

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கை வசதிகளுடன்தரம் உயர்த்தும் பணிகள் | 45.01 | 75 |
| 2. | ஆரம்ப சுகாதார நிலையங்களை, 30 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்தும் பணிகள் | 31.00 | 50 |
| 3. | புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணிகள் | 26.05 | 120 |
| 4. | புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணிகள் | 4.62 | 20 |
| 5. | 2008-2009 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டு, தற்பொழுது செயல்பட்டு வரும் பணிகள் | 16.81 | 26 |
| 6. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம் மூலம் கண்டறியப்பட்ட பணிகள் | 17.67 | 19 |
| 7. | ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டும் பணிகள் | 5.66 | 14 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 8. | அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகள் அளிக்கும் பணிகள் (கட்டம் ஒன்று) | 35.24 | 505 |
| 9. | முதன்மை பரிந்துரைப் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் | 31.92 | 42 |
| 10. | அரசு மருத்துவமனைகளில் கூடுதல் வசதி அமைத்துத் தரும் பணிகள். (இரண்டாம் கட்டம்) | 38.45 | 586 |
| 11. | ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் பணிகள் | 11.00 | 50 |
| 12. | அரசு மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தும் பணிகள் | 16.38 | 26 |
| 13. | ஆர்.சி.எச்.—சிறு கட்டுமானப் பணிகள் (பகுதி 3) | 41.10 | 620 |
| 14. | புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் | 6.56 | 29 |
| 15. | துணை சுகாதார நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் | 21.50 | 1,094 |
| 16. | தரம்-1 மகப்பேறு மற்றும் குழந்தைகள் சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணிகள் | 3.25 | 31 |
| 17. | தரம்-2 மகப்பேறு மற்றும் குழந்தைகள் சிகிச்சை மையங்கள் அமைக்கும் பணிகள் | 11.32 | 42 |
| | மொத்தம் | 363.54 | 3,349 |



2013 ஏப்ரல் 18]

மேற்கண்ட 3,349 பணிகளில், 1,538 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.4.5 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.4.5.1*** புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டும் பணி 20 இடங்களில் 5.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

***5.4.5.2*** பொது சுகாதார பரிசோதனை மையக் கட்டடம் கட்டும் பணிகள் 12 மாவட்டங்களில் 2.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

***5.4.5.3*** செவிலியர் பயிற்சி மையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் 14 இடங்களில் 1.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 5.5 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### 5.5.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.5.1.1*** கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய (மகளிர்) வளாகத்தில் 2.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

***5.5.1.2*** கிண்டி தொழிற்பயிற்சி நிலையத்தில் 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

***5.5.2.3*** நாகப்பட்டினம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விருதுநகர், ஈரோடு, அரியலூர், வேலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடப் பணிகள் மொத்தம் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 5.5.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.5.2.1*** அரியலூர், பரமக்குடி, சென்னை (வடக்கு), தூத்துக்குடி, குன்னூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு,

[2013 ஏப்ரல் 18

நாகப்பட்டினம், திண்டுக்கல், சென்னை (கிண்டி), திருச்செந்தூர், புதுக்கோட்டை, அம்பத்தூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணிகள் 7.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5.5.2.2** கோயம்புத்தூரில் உள்ள இரண்டு செயல்முறை ஆய்வுக் கூடம் மற்றும் மதுரையில் உள்ள இரண்டு இரண்டாம் நிலை ஆய்வுக் கூடம் கட்டும் பணிகள் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5.5.2.3** சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக கட்டடங்கள் கட்டும் பணிகள் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5.5.2.4** விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணி 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 5.6 வணிக வரி மற்றும் பதிவுத் துறை

## 5.6 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

**5.6.1.1** வணிக வரி அலுவலகக் கட்டடங்கள் பின்வரும் 17 இடங்களில், மொத்தம் 32.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | இடம் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சேலம் | 981.00 |
| 2. | விழுப்புரம் | 286.00 |
| 3. | மயிலாடுதுறை | 203.50 |
| 4. | லால்குடி | 19.00 |
| 5. | ஈரோடு | 155.10 |
| 6. | புதுக்கோட்டை | 165.00 |
| 7. | சிவகங்கை | 138.60 |
| 8. | வால்பாறை | 235.00 |
| 9. | கோயம்புத்தூர் | 293.70 |
| 10. | கோவில்பட்டி | 25.00 |
| 11. | திருச்சிராப்பள்ளி | 250.00 |
| 12. | திண்டுக்கல் | 33.88 |
| 13. | நன்னிலம் | 35.00 |
| 14. | மேட்டுப்பாளையம் | 88.00 |
| 15. | ஸ்ரீரங்கம் | 80.00 |
| 16. | திருவண்ணாமலை | 143.99 |
| 17. | பண்ருட்டி | 149.60 |
| | மொத்தம் | 3,282.37 |



2013 ஏப்ரல் 18]

**5.6.1.2** 52 இடங்களில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடங்கள் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், 46 பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 6 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 5.6.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

**5.6.2.1** இராணிப்பேட்டை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் வணிக வரித் துறைக்கான புதிய அரசு வளாகக் கட்டடங்கள் 11.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

[2013 ஏப்ரல் 18

***5.6.2.2*** *26 இடங்களில் சிறிய சோதனைச் சாவடி நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் 6.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

***5.6.2.3*** *7 இடங்களில் பெரிய சோதனைச் சாவடி நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் 2.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

***5.6.2.4*** *சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 26.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 48 கட்டடங்களும் 22.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17 ஒருங்கிணைந்த அலுவலக வளாகங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.*

## 5.7 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

***5.7.1*** *பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினரைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் கட்டும் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:—*

| கட்டம் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| IV | *50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் கட்டும் பணி* | *416* | *142.47* |
| V | *100 மாணவர்கள் தங்கும் வகையில் 25 விடுதிகள் மற்றும் 50 மாணவர்கள் தங்கும் வகையில் 25 விடுதிகள் கட்டும் பணி* | *50* | *32.89* |
| VI | *50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் கட்டும் பணி* | *25* | *13.68* |
| VII | *50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் கட்டும் பணி* | *25* | *12.98* |
| VIII | *50 மாணவர்கள் தங்கும் வகையில் விடுதிகள் கட்டும் பணி* | *25* | *13.50* |
| XI.A | *சூரிய மின் அமைப்புடன் கூடிய 50 மாணவர்கள் தங்கும் வகையில் 69 விடுதிகள், 100 மாணவர்கள் தங்கும் வகையில் 14 விடுதிகள் மற்றும் 200 மாணவர்கள் தங்கும் வகையில் 1 விடுதி கட்டும் பணி* | *84* | *64.48* |
| XI.B | *சூரிய மின் அமைப்புடன் கூடிய 50 மாணவர்கள் தங்கும் வகையில் 41 விடுதிகள், 100 மாணவர்கள் தங்கும் வகையில் 15 விடுதிகள் கட்டும் பணி* | *56* | *50.01* |
| | மொத்தம் | *681* | *330.01* |



2013 ஏப்ரல் 18]

*மேற்கண்ட 681 பணிகளில், 471 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 5.7.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.7.2.1*** *மதுரை மாவட்டம், செக்கானூரணியில் புதிய அரசு கள்ளர் மகளிர் மேல்நிலைப் பள்ளி நிறுவும் பணி 2.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

[2013 ஏப்ரல் 18

### 5.8 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

### 5.8.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.8.1.1*** *சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தினை 5.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

### 5.8.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.8.2.1*** *அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பல்வகை உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகள் 11.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

***5.8.2.2*** *திருவள்ளூர் மற்றும் நாமக்கல்லில் நீச்சல் குளம் அமைக்கும் பணி 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.8.2.3*** *சென்னையில் சறுக்கு விளையாட்டிற்கு உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணி 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.8.2.4*** *சென்னையில், தமிழ்நாடு உடற் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் விளையாட்டு அறிவியல் மையக் கட்டடம் கட்டும் பணி 2.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

### 5.9 சமூக நலத் துறை

### 5.9.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.9.1.1*** *சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் அரசு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்டும் பணி 70.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.9.1.2*** *நீலகிரியில் அரசு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்டும் பணி 82.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.9.1.3*** *தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் அரசு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்டும் பணி 78.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*



2013 ஏப்ரல் 18]

***5.9.1.4*** *சமூக பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 26 குழந்தைகள் காப்பகங்களின் வசதிகளை மேம்படுத்தும் பணிகள் 2.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

### 5.9.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.9.2.1*** *சமூக பாதுகாப்புத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் சென்னை, இராணிப்பேட்டை, மல்லிப்புதூர், தட்டப்பாறை, பஞ்சபள்ளி, தஞ்சாவூர், செங்கல்பட்டு, மற்றும் கடலூர் ஆகிய 9 சிறார் ஆதரவு மையங்களில் மொத்தம் 166 பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் 15.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

### 5.10 போக்குவரத்துத் துறை

### 5.10.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.10.1.1*** *திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சோதனைத் தடம் அமைக்கும் பணி 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.10.1.2*** *கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகம் கட்டுதல் மற்றும் சோதனைத் தடம் அமைக்கும் பணி 1.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.10.1.3*** *அரியலூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டுதல் மற்றும் சோதனைத் தடம் அமைக்கும் பணி 1.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

### 5.10.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.10.2.1*** *திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பத்தில் நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்கும் பணி 105.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.10.2.2*** *விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகம் கட்டும் பணி 52.17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.10.2.3*** *திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 176.97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.10.2.4*** *ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனைத் தடம் கட்டும் பணி 182.53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.10.2.5*** *திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகம் கட்டும் பணி 81.52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.10.2.6*** *திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டையில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகம் கட்டும் பணி 78.42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

### 5.11 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

### 5.11.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.11.1.1*** *திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் தியாகி வாஞ்சிநாதன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.11.1.2*** *திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் ஒண்டிவீரன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி 49.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.11.1.3*** *கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பணி 48.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.11.1.4*** *சென்னை, கிண்டி, சர்தார் பட்டேல் சாலையில் உள்ள மகாத்மா காந்தி மண்டபத்தினை புதுப்பிக்கும் பணி 11.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.11.1.5*** *கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தை புதுப்பிக்கும் பணி, 37.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*





***5.11.1.6*** *சென்னை, தியாகராயநகரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லத்தைப் புதுப்பிக்கும் பணி 25.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

### 5.11.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.11.2.1*** *தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு நினைவகம் கட்டும் பணி 58.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

### 5.12 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

### 5.12.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.12.1.1*** *தஞ்சாவூரில், மாபெரும் சுற்றுலா திட்டத்தின்கீழ், மேம்பாட்டுப் பணிகள் 14.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.12.1.2*** *சென்னை அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் வகுப்பறைக் கட்டடம் மற்றும் திறந்தவெளி கலையரங்கத்தில் குடில் கட்டும் பணிகள் 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.12.1.3*** *தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு இசைக் கல்லூரியில் குடிலுக்கான சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பிட வசதி ஆகிய பணிகள் 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.12.1.4*** *திருவள்ளூர் மாவட்டம், புலிக்காட்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் 2.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.12.1.5*** *நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.12.1.6*** *திருநெல்வேலி அரசு இசைக் கல்லூரியில் புதிய கட்டடம் கட்டும் பணி 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.12.1.7*** *கோயம்புத்தூர் அரசு இசைப் பள்ளியில் கலை மற்றும் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டும் பணி 91.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

[2013 ஏப்ரல் 18

*5.12.1.8* சென்னை அருங்காட்சியகத்தினை மேம்படுத்தும் பணி 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

**5.12.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்**

*5.12.2.1* சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் கூரை அமைக்கும் பணி 7.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5.13 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை**

**5.13.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

*5.13.1.1* பரனூர், யா.புதுப்பட்டி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளுக்கென புதிய கட்டடங்கள் மற்றும் நவீன சமையலறை கட்டடம் கட்டும் பணிகள் 5.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

*5.13.1.2* பூவிருந்தவல்லி பார்வையற்றோர்களுக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் நவீன சமையலறையுடன் கூடிய தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி 2.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

5.13.2 **2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்**

*5.13.2.1* சென்னை, கே.கே. நகரில் உள்ள மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆணையரகக் கட்டடம் கட்டும் பணி 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5.14 வேளாண்மைத் துறை**

**5.14.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

*5.14.1.1* திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமத்தில் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விடுதிக் கட்டடம் கட்டும் பணி 6.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.



2013 ஏப்ரல் 18]

*5.14.1.2* திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர்குட்டப்பட்டு கிராமத்தில் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பிரதானக் கட்டடம் கட்டும் பணி 7.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

*5.14.1.3* 79 இடங்களில் 19.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விதை சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படுவதில், 63 பணிகள் முடிவுற்றன; 15 பணிகள் நடைபெற்று வருகின்றன; 1 பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

*5.14.1.4* 5 இடங்களில் 75.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்மை விரிவாக்க மையத்திற்கான கட்டடங்கள் கட்டப்படுவதில், 3 பணிகள் முடிவுற்றன. 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.

*5.14.1.5* கிசான் பவன் / உழவர் மையங்களுக்கு 10 இடங்களில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

*5.14.1.6* உயிர்-உரங்கள் உற்பத்தி மையத்திற்கான 15 பழுப்பு நிலக்கரி சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**5.14.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்**

*5.14.2.1* 46 இடங்களில், ஒவ்வொரு கிடங்கிலும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் 11.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

*5.14.2.2* 10 இடங்களில், ஒவ்வொரு கிடங்கிலும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

*5.14.2.3* 6 இடங்களில் மாநில பூச்சிக்கொல்லி பரிசோதனை மையக் கட்டடம் கட்டும் பணிகள் 3.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

[2013 ஏப்ரல் 18

***5.14.2.4*** *25 இடங்களில், ஒவ்வொரு கிடங்கிலும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விதை பதப்படுத்தும் பிரிவுக்கான கட்டடம் கட்டும் பணிகள் 6.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

### 5.15 வருவாய்த் துறை

### 5.15.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.15.1.1*** *சூலூர், மதுராந்தகம், செங்கல்பட்டு, குந்தா, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, தென்காசி, திருநெல்வேலி, திருப்பத்தூர், கந்தர்வக்கோட்டை ஆகிய இடங்களில் 20.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

***5.15.1.2*** *தாம்பரத்தில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.15.1.3*** *29 வட்டாட்சியர் குடியிருப்புகள் 4.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், 27 பணிகள் முடிக்கப்பட்டன; 2 பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

***5.15.1.4*** *16 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், 14 பணிகள் முடிக்கப்பட்டன; 2 பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.*

***5.15.1.5*** *புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

### 5.15.2 2013–2014 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.15.2.1*** *கடலூர் மாவட்டம், கடலூரில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கட்டும் பணி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*



2013 ஏப்ரல் 18]

***5.15.2.2*** *உடுமலைப்பேட்டை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் 2.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

***5.15.2.3*** பழனி, திருமங்கலம், உடையார்பாளையம், திருவெறும்பூர், திருபுவனம், சின்னசேலம், கடவூர், உசிலம்பட்டி, குன்னம், அன்னூர், திருப்போரூர், கிணத்துக்கடவு, அந்தியூர், கலசப்பாக்கம், கொல்லிமலை, வாழப்பாடி மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் *மொத்தம் 35.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

### 5.15.3 கடலோரப் பகுதி பேரிடர் பாதிப்பு குறைப்புத் திட்டம்

***5.15.3.1*** *உலக வங்கி நிதி உதவியுடன் கடலோரப் பகுதி பேரிடர் பாதிப்பு குறைப்புத் திட்டத்தின்கீழ், தமிழகத்தின் கடலோர* மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி *ஆகிய 12 மாவட்டங்களில் 121 பன்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மைய கட்டடங்கள், 262.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், 23 பணிகள் நடைபெற்று வருகின்றன; 98 பணிகள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.*

### 5.16 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

### 5.16.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.16.1.1*** சென்னை, கிண்டியிலுள்ள தொழில் முனைவு நிலையத்தின் நவீன பயிற்சி மைய வளாகத்தில், நிருவாக, *கல்வியியல் மற்றும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி 4.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

### 5.16.2 2013–2014 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்

***5.16.2.1*** விருத்தாசலத்தில் உள்ள செராமிக் தொழில்நுட்பவியல் நிலையம், சென்னை, கிண்டி அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையம்

மற்றும் திண்டுக்கல் உபகரண பொறியியல் மையம் ஆகிய கட்டடங்கள் 2.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5.17 கருவூலம் மற்றும் கணக்குத் துறை**

**5.17.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

***5.17.1.1*** *14 இடங்களில் சார்கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் 7.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

***5.17.1.2*** *தூத்துக்குடி மாவட்ட கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

**5.18 கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை**

**5.18.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

***5.18.1.1*** *20 இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறை கட்டடங்கள் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளில், 16 பணிகள் நடைபெற்று வருகின்றன; மீதமுள்ள 4 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

***5.18.1.2*** *தஞ்சாவூர் மாவட்டம், ஈஞ்சக் கோட்டையில் உள்ள விந்து பாதுகாப்பு, உற்பத்திப் பிரிவு கட்டடம் கட்டும் பணி 5.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.18.1.3*** *தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்வியியல் கட்டடத் தொகுதி கட்டடம் கட்டும் பணி 56.25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.*

***5.18.1.4*** *கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகக் கட்டடங்களை ரூ.117.50 கோடி மதிப்பீட்டில் கட்டுதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற 372 பணிகள் விவரம் பின்வருமாறு:—*





| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| *1.* | கடலூர் | *38* | *10.13* |
| *2.* | காஞ்சிபுரம் | *15* | *3.99* |
| *3.* | திருவள்ளூர் | *11* | *2.93* |
| *4.* | திருவண்ணாமலை | *17* | *4.70* |
| *5.* | வேலூர் | *22* | *6.03* |
| *6.* | விழுப்புரம் | *18* | *4.80* |
| *7.* | அரியலூர் | *3* | *0.80* |
| *8.* | கோயம்புத்தூர் | *3* | *0.80* |
| *9.* | தருமபுரி | *8* | *2.13* |
| *10.* | ஈரோடு | *15* | *4.17* |
| *11.* | கரூர் | *6* | *1.60* |
| *12.* | கிருஷ்ணகிரி | *11* | *3.12* |
| *13.* | நாகப்பட்டினம் | *14* | *3.73* |
| *14.* | நாமக்கல் | *10* | *2.67* |
| *15.* | பெரம்பலூர் | *3* | *0.80* |
| *16.* | புதுக்கோட்டை | *13* | *3.47* |
| *17.* | சேலம் | *35* | *9.74* |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 18. | தஞ்சாவூர் | 14 | 3.73 |
| 19. | திருப்பூர் | 8 | 2.13 |
| 20. | திருவாரூர் | 10 | 2.67 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 18 | 4.80 |
| 22. | திண்டுக்கல் | 6 | 1.77 |
| 23. | மதுரை | 11 | 2.98 |
| 24. | இராமநாதபுரம் | 6 | 1.33 |
| 25. | சிவகங்கை | 12 | 3.47 |
| 26. | தேனி | 6 | 1.60 |
| 27. | திருநெல்வேலி | 1 | 0.27 |
| 28. | தூத்துக்குடி | 8 | 2.13 |
| 29. | விருதுநகர் | 12 | 3.39 |
| 30. | கன்னியாகுமரி | 6 | 1.60 |
| 31. | கால்நடைப் பண்ணை | 12 | 20.02 |
| | மொத்தம் | 372 | 117.50 |

மேற்கண்ட 372 பணிகளில், 230 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன; மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.



2013 ஏப்ரல் 18]

**5.19 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**5.19.1 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடங்கள்**

**5.19.1.1** ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்; பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகம் கட்டுதல்; இதர கட்டடங்கள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் 33.424 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5.19.1.2** சென்னை, அண்ணா மேலாண்மை நிலையப் பயிற்சி மையத்தினை மேம்படுத்தும் பணி 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**5.20 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

**5.20.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

**5.20.1.1** 38.91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**5.20.1.2** வேலூர் மாவட்டம், சோளிங்கரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 32.85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

**5.21 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**5.21.1 2013–2014 ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ள கட்டடப் பணிகள்**

**5.21.1.1** சென்னை சைதாப்பேட்டையில் உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 53.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

**5.21.1.2** சென்னை பூங்கா நகரில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி 3.443 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

[2013 ஏப்ரல் 18

***5.21.1.3*** *கிருஷ்ணகிரியில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி 31.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

***5.21.1.4*** *நாமக்கல்லில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி 40.95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.*

**5.21.2 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்**

***5.21.2.1*** *ஸ்ரீவில்லிபுத்தூரில் மாநில நுகர்வோர் குறைதீர்வு மைய ஆணையகம் மற்றும் மாவட்ட குறைதீர்வு மன்றக் கட்டடம் கட்டும் பணி 40.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

***5.21.2.2*** *சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் உதவி மண்டல ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி 85.31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

**5.22 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**5.22.1 2013–2014 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கட்டடப் பணிகள்**

***5.22.1.1*** *16.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறைக்கான 5 மண்டல அலுவலகங்கள், 15 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 49 கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

**6.0 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகக் கட்டடம்**

*தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக புதிதாக உருவாக்கப்பட்ட 28 சட்டமன்றத் தொகுதிகளில் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகங்கள் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 14 சட்டமன்றத் தொகுதி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 3 சட்டமன்றத் தொகுதி அலுவலகங்களுக்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 11 சட்டமன்றத் தொகுதி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

## இணைப்பு II

*(460 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014

**1. நீர்வள ஆதாரத் துறை**

### 1.1 முன்னுரை

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விவேகமான அணுகுமுறைகள் மற்றும் விடாமுயற்சியின் பயனாக காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதனால், மாநிலத்தின் அனைத்து வேளாண் பெருமக்களும், குறிப்பாக, காவிரி டெல்டா விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். இத்தகைய நிகழ்வு காவேரி டெல்டா பகுதிகளில் பல்வேறு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்ற வழிவகை செய்வதோடு, மாநிலத்திலுள்ள நீர்வள ஆதாரங்களை சீரிய முறையில் பராமரித்து, பாதுகாக்க நீர்வள ஆதாரத் துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டு முதல் காவிரி டெல்டா பகுதிகளில் பல பாசன உள்கட்டமைப்புப் பணிகள் இத்துறையின்மூலம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.*

*இயற்கையின் கொடையான உன்னதமான நீர் அரிதானதாக மாறி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பெய்யும் மழையின் அளவைப் பொறுத்தே கிடைக்கப்பெறும் நீரின் அளவு அமைகிறது. இயற்கையின் மாறுபடும் இயல்பும், அண்டை மாநிலங்களிலிருந்து பெறப்படும் குறைவான நீரின் அளவும், நமது நீர்வளத்தினை திறம்பட திட்டமிடுதலுக்கு இடையூறாக அமைகின்றன. இவற்றினைக் கருத்தில் கொண்டு, கிடைக்கின்ற நீரினை திறம்பட பயன்படுத்துவதற்கு உரிய வகையில் திட்டங்களை நீர்வள ஆதாரத் துறை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.*

[2013 ஏப்ரல் 18

நம் மாநில தேவைகளைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள பாசன கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்து, அவற்றினை படிப்படியாக மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிவியல் முறையில் நீர் பங்கீட்டினை மேற்கொள்வதன் மூலம், தற்போதுள்ள பாசன அமைப்புகள் திறம்பட செயல்பட்டு வருவது உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், நமது மாநிலத்தின் கடலோரப் பகுதிகளை சிறந்த முறையில் பாதுகாத்து மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் பெறப்படும் மிக அதிக மழை நீரானது, உடனடியாகக் கடலைச் சென்றடைகிறது. இந்நீரினைச் சேமித்து, சீரிய முறையில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இதற்காக, புதிய தடுப்பணைகள் கட்டுவதன்மூலம், செயற்கை முறையில் நீர்செறிவு செய்தல் மற்றும் மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைப்பதன்மூலம் வெள்ள நீரினைத் திருப்புதல் போன்ற திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.2** மாமன்னன் கரிகால் சோழன் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய கல்லணை இன்றும் திறம்பட இயங்கி வருவது, விவசாயத்திற்கான பாசன அமைப்புகளும், பாசனப் பங்கேற்பு மேலாண்மையும் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்ததற்குக் கட்டியம் கூறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மாமன்னன் கரிகால் சோழனின் செயல்களை நினைவுகூரும் வகையில், கல்லணையில் நினைவு மண்டபம் இத்துறையினால் அமைக்கப்பட உள்ளது.

இந்தக் கோட்பாடுகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறைகளில் மேம்படுத்தப்பட்டு, மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள அணைகள் மேன்மைமிகு கிரீடங்களாக ஜொலிக்கின்றன. மேலும், தமிழ்நாட்டின் அணைகளைப் பாதுகாத்து திறனை அதிகரிப்பதற்காக “அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1.3** நீர்வள ஆதாரத் துறை மற்றும் பொதுப் பணித் துறை (கட்டடட அமைப்பு) என இரு பிரிவுகளாக பொதுப் பணித் துறை செயல்பட்டு வருகிறது. நீர்வள ஆதாரத் துறை, ஆற்று வடிநில அமைப்பு அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. நீர்வள ஆதாரத்



2013 ஏப்ரல் 18]

துறையின் 10 தலைமைப் பொறியாளர்களின் அனைத்துப் பணிகளையும் கண்காணித்து, ஒருங்கிணைத்து, துறையின் தொழில்நுட்பத் தலைவராக நீர்வள ஆதாரத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் செயல்பட்டு வருகிறார்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் அந்தந்த மண்டல எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாயும் ஆறுகளின் வடிநில மேலாளர்களாகச் (Basin Managers) செயலாற்றி வருகிறார்கள்.

இது தவிர, வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், திட்ட உருவாக்கம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய சிறப்பு தொழில்நுட்பப் பணிகளை சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு 3 தலைமைப் பொறியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும், ஒரு தலைமைப் பொறியாளரின் தலைமையில் நீர் ஆய்வு நிறுவனம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நீர்வளத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் சேகரித்து, பராமரித்து, வடிநில ஆய்வுகள் மற்றும் சீரிய நீர் மேலாண்மைக்கான நீர் இருப்பு அறிதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது.

மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் ஒரு தலைமைப் பொறியாளரின் தலைமையில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் குறித்த விவரங்களைச் சேகரித்து சரிபார்ப்பதுடன், நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்குவதற்கான திட்டப் பணிகளையும் செயல்படுத்துகிறது.

திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஒரு பன்னோக்கு பயிற்சி நிலையமாகும். இந்நிலையம், வேளாண் பாசன துறைகளைச் சார்ந்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தேவைப்படும் பயிற்சிகளை அளித்து வருகிறது.

[2013 ஏப்ரல் 18

## 1.4 நீர்வள ஆதார கட்டமைப்பு

தமிழ்நாட்டில் உள்ள 34 ஆற்று வடிநிலங்கள், 17 பெரிய ஆற்று வடிநிலங்களாகவும் 127 உப வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. மாநிலத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 911.60 மி.மீ ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மேற்பரப்பு நீர்வள ஆதாரமானது 853 டி.எம்.சி. அடி ஆகும். இதில் அண்டை மாநிலங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 275 டி.எம்.சி. அடியும் அடங்கும். மாநிலத்தில் உள்ள 89 அணைகளின் மொத்த கொள்ளளவானது 238.58 டி.எம்.சி. அடி ஆகும். தமிழ்நாட்டில் உள்ள 39,202 ஏரிகளில், 13,699 ஏரிகள் நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் உள்ளன. பாசன அமைப்புகளின் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

## 2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023—பாசன மேம்பாடு

***2.1*** தெளிவான தொலைநோக்குடன் பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்பைப் பெருக்குதலையும் உறுதி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22-03-2012-ல் "தொலைநோக்குத் திட்டம் 2023"ஐ வெளியிட்டார்கள். இதன் முக்கிய நோக்கம் வளர்ச்சிக்கான பாதையில் உள்ள தடைகளை அகற்றுதல் மற்றும் மிக முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை வரிசைப்படுத்தி முன்னுரிமை அளித்து செயலாக்குதலாகும்.

***2.1.1*** இந்தத் தொலைநோக்குத் திட்டம் 2023-ல் "தகுந்த காலத்தே பாசன வசதியை உறுதி செய்தல்" ஒரு முக்கிய அம்சமாகும். வேளாண்மை கட்டமைப்பு வளர்ச்சிக்காக ரூ.40,000 கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அணைகளையும், கால்வாய்களையும் பாசன நிலங்களோடு இணைப்பதற்கும் நீர் நிலைகளைப் புனரமைக்கவும் ரூ.16,000 கோடி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நீர்க் கட்டமைப்புகளைப் பலப்படுத்தி, அணைகளின் நீர்க் கொள்ளளவை அதிகப்படுத்துவதன் வாயிலாக பாசனம்பெறும் பகுதிகளை அதிகரித்து, கிடைக்கப்பெறும் நீரினைப் பாதுகாத்து, அனைத்துப் பகுதிகளுக்கும் பாசன வசதியை உறுதி செய்வதே இப்பணிகளின் முக்கிய குறிக்கோளாகும்.



2013 ஏப்ரல் 18]

***2.1.2*** தமிழ்நாட்டில் நீராதாரம் மிகக் குறைந்த அளவில் உள்ளதால் பாசனத்திற்குக் கீழ்க்கண்ட முறைகளில் முதலீடுகளைச் செய்ய வேண்டியுள்ளது:

- நிலத்தடி நீர்ச்செறிவினைத் திறம்பட மேற்கொள்வதன்மூலம் கிடைக்கப் பெறும் நீரினை, அறிவியல் சார்ந்த வகையில் பயன்படுத்துதல்.
- ஏரிகளையும், கால்வாய்களையும் சரியான நேரத்தில் தூர்வாரி சுத்தப்படுத்துவதன்மூலம் அவற்றின் கொள்ளளவினை நிலைநிறுத்துதல்.
- நீர்நிலைகளைப் புனரமைத்தல்.
- கால்வாய்களின் நீர்கடத்தும் திறனை மேம்படுத்துதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்புகளை விரிவாக்குதல்.
- நீர் மேலாண்மை மற்றும் பங்கேற்புப் பாசன மேலாண்மை திறம்பட செயல்படுத்துதல்.

***2.1.3*** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "தொலைநோக்குத் திட்டம் 2023"-இன் குறிக்கோள்களை பாசனத் துறையில் அடைவதற்கும், முறைப்படி திட்டமிடுவதற்கும் ஒரு சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. "தொலைநோக்குத் திட்டம் 2023"—ஐ செயலாக்கத் தேவையான புதிய முயற்சிகளைப் பரிந்துரை செய்ய இக்குழு பணிக்கப்பட்டு உள்ளது.

## 2.1.4 நீர்த்தேக்கங்களின் கொள்திறனை மீளப்பெறுதல்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-இல், மாநிலத்தின் நீர்த்தேக்கங்களின் தற்போதைய கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, நீண்ட காலமாகத் தொடர்ந்து வண்டல் படிவதனால் கொள்திறன் குறைந்து வரும் அணைகளில், முன்மாதிரியாக (Pilot Basis) வைகை மற்றும் அமராவதி ஆகிய இரண்டு நீர்த்தேக்கங்களைத் தூர்வாரி, வண்டல் படிவைப் பிரித்தெடுத்து, தரப்படுத்தி விற்பனை செய்வதற்குரிய தொழில்நுட்பம் உள்ளடக்கிய முன் அனுபவம் பெற்ற தேசிய மற்றும் உலகளாவிய விருப்பத் தெரிவு கோரப்பட்டு, நிறுவனங்களின் சுருக்கப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, நீர்வள ஆதாரத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வில் உள்ளது. இம்மாதிரியான பணி, நீர்வள ஆதாரத் துறையில் முதன்முறையாக மேற்கொள்ள இருப்பதால், இப்பணியினைச் செவ்வனே செயல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்க ஒரு தொழில்நுட்பக் குழுவினை அரசு அமைத்துள்ளது.

[2013 ஏப்ரல் 18

**2.2 சென்னை மாநகரத்திற்கான குடிநீர் ஆதாரங்களைப் பெருக்குதல்**

*சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளின் குடிநீர்த் தேவைக்காக செங்குன்றம், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகள் மற்றும் பூண்டி நீர்த்தேக்கம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மொத்த கொள்ளளவு 11.057 டி.எம்.சி. அடி ஆகும்.*

*மேற்கூறிய நான்கு நீர்நிலைகளுக்கும் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் பெருமளவில் நீர்வரத்து கிடைக்கப்பெறுவதால், கிருஷ்ணா குடிநீர் வழங்கும் கால்வாயிலிருந்து பெறப்படும் நீரை முழுமையாகத் தேக்கி வைக்க இயலுவதில்லை. எனவே, சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணா குடிநீரை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய நீர்த்தேக்கங்கள் / தடுப்பணைகளை அமைத்தும், தற்போதுள்ள ஏரிகளைப் புனரமைத்தும் நீர்த்தேக்கக் கொள்ளளவுத் திறனை அதிகரிக்க பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்:*

**(i) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வைக் கண்டிகை கிராமங்களில் ஒரு புதிய நீர்த்தேக்கத்தினை அமைத்தல்**

*திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் கண்ணன்கோட்டை மற்றும் தேர்வைக் கண்டிகை கிராமங்களின் அருகே கண்ணன்கோட்டை மற்றும் தேர்வைக் கண்டிகை ஆகிய இரு ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கத்தினை அமைக்க ரூ.330.00 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் இரு நிரப்புதல்களில் 1 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நீரைத் தேக்க இயலும். இத்திட்டத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

**(ii) ஏரிகளின் கொள்ளளவை அதிகரித்தல்**

*ஏரிகளின் கொள்ளளவை அதிகரிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, சோழவரம், போரூர், நேமம் மற்றும் அயனம்பாக்கம் ஏரிகளில் கூடுதலாக 568 மில்லியன் கன அடி நீர்த் தேக்கத்திறனை உருவாக்க ரூ.130.00 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*



2013 ஏப்ரல் 18]

**(அ) சோழவரம் ஏரி**

*ஏரியின் கலிங்கின் உயரத்தை ஏற்கெனவே இருந்த உயரத்தை விட ஒரு அடி உயர்த்தி கூடுதலாக 200 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி வைக்கும் வகையில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.*

**(ஆ) போரூர் ஏரி**

*போரூர் ஏரியின் கரைகளைப் பலப்படுத்தி, தூர்வாரி, சாலை வசதி அமைத்து, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து போரூர் ஏரிக்கு நீர் வழங்குவதற்கு ஏதுவாக தந்திக்கால் வாய்க்காலைப் புனரமைத்து, ஏரியின் கொள்ளளவை 24 மில்லியன் கனஅடி அதிகரிக்கவும், ஏரியின் முன்கரைப் பகுதியின் எல்லைகளை வரையறுத்து, வேலி அமைத்து பாதுகாத்திடவும் ரூ.20.00 கோடி மதிப்பீட்டிலான பணிகள் தொடங்கப்பட்டு, முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஜூலை, 2014-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

**(இ) அயனம்பாக்கம் ஏரி**

*அயனம்பாக்கம் ஏரியின் கரைகளைப் பலப்படுத்தி, வரத்து வாய்க்காலை புனரமைத்து, ஏரியைத் தூர்வாரி அதன் கொள்ளளவை 24 மில்லியன் கன அடி கூடுதலாக அதிகரிக்க ரூ.30.00 கோடி மதிப்பீட்டிலான பணிகள் தொடங்கப்பட்டு, முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஜூலை, 2014-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**(ஈ) நேமம் ஏரி**

*நேமம் ஏரியின் நீர்மட்ட உயரத்தைக் கூடுதலாக உயர்த்தி, அதன் வெளிப்புறச் சுவரை கற்காரை கொண்டு பலப்படுத்தி, கரைகளையும் பலப்படுத்தி, ஏரியினைத் தூர்வாரி, பழுதடைந்துள்ள இருளப்பாளையம் மதகினை மறுகட்டுமானம் செய்து, ஏரியின் கொள்ளளவினை 320 மில்லியன் கன அடி அதிகரிக்கவும், நேமம் ஏரியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு உபரி நீர் செல்லும் வழியை புனரமைத்து மேம்படுத்துவதன்மூலம் செம்பரம்பாக்கம் ஏரியில் கூடுதலாக இரண்டு அடி நீர் தேக்கவும், ரூ.79.50 கோடி மதிப்பீட்டிலான பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஜூலை, 2014-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

[2013 ஏப்ரல் 18

இது தவிர, செங்குன்றம், சோழவரம், செம்பரம்பாக்கம் ஏரிகளையும், பூண்டி நீர்த்தேக்கத்தையும் ரூ.19.22 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்த நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் பூண்டி நீர்த்தேக்கத்தை பலப்படுத்தும் பணிகள் முடிவுற்றுள்ளன. சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மார்ச் 2014-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல்**

திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே நபார்டு வங்கி கடனுதவியுடன் ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னை மாநகருக்கு கூடுதலாக 160 மில்லியன் கன அடி குடி நீர் அளிக்க இயலும். மேலும், இத்தடுப்பணையிலிருந்து சுமார் 3 கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ள பகுதிகளில் நிலத்தடிநீர் செறிவூட்டப்படும். இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**(iv) சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள நீர்நிலைகளைப் புனரமைத்தல்**

இதன் முதற்கட்டமாக, அம்பத்தூர், கொரட்டூர் மற்றும் மாதவரம் ஏரிகளைப் புனரமைக்கவும், ஏரிப் பகுதிகளில் நிலத்தடி நீர்த்திறனை அதிகரிக்க செயற்கை முறை நீர்ச்செறிவு கட்டுமானங்களை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பூங்காக்கள், நடைபாதைகள் மற்றும் படகு வசதிகள் அமைப்பதன் மூலம் இப்பகுதிகள் சுற்றுலாத் தலங்களாக ஆக்கப்படுவதுடன், ஏரிகளும் ஆக்கிரமிப்பு ஏதுமின்றி பாதுகாக்கப்படும்.

**2.3 ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் காவேரி டெல்டாவில் பருவநிலை மாறுதலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் திட்டம்**

***2.3.1*** காவேரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாக நீடித்து வந்ததால், நீண்ட காலமாக காவேரி டெல்டாவில் பெரிய அளவில் மேம்பாட்டுப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. டெல்டா பகுதிகளில் உள்ள பெரும்பாலான கடைமடை நீரொழுங்கிகள் மற்றும் வடிகால்களைப் புனரமைப்பது உடனடித் தேவையாக உள்ளது.



2013 ஏப்ரல் 18]

கடைமடைப் பகுதிகளின் பாசன உள் கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் வெள்ள நீரை சீராக வடியச் செய்வதுடன், கடல் நீர் ஊடுருவுதலையும் கட்டுப்படுத்த இயலும்.

***2.3.2*** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் காவேரி டெல்டாவில் பருவநிலை மாறுதலை எதிர்கொள்ள ரூ.1,560.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். இதில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவி ரூ.1,092.00 கோடியும் மாநில அரசின் நிதிப்பங்களிப்பு ரூ.468.00 கோடியும் ஆகும்.

***2.3.3*** இத்திட்டத்தின்கீழ் அத்தியாவசியமான 39 கூடுதல் நீரொழுங்கிகளைக் கட்டுதல் மற்றும் சிதிலமடைந்துள்ள 39 கடைமடை நீரொழுங்கிகளை மீளக் கட்டுதல் / புனரமைத்தல், நீரொழுங்கிகளின் மேற்பகுதியிலுள்ள வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களை உரிய தரத்திற்குக் கொண்டுவர தூர்வாரி, அகலப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்துதல், குளம் குட்டைகளை மேம்படுத்துதல், நீரேற்றுப் பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.1,560.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் காவேரி டெல்டாவின் கடலோர நிலப் பகுதிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இக்கட்டுமானங்கள் வெள்ளநீரினைத் திறம்படப் பயன்படுத்துகின்ற வெள்ளநீர்த் தாங்கிகளாகச் செயல்படுவதுடன், நிலத்தடி நீரினையும் செறிவூட்டும். இத்திட்டத்தினால் திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள காவேரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் மற்றும் கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டினைச் சார்ந்த சுமார் 4.50 இலட்சம் ஏக்கர், பாசனப் பரப்பு பயன்பெறும்.

மேலும், காவிரி டெல்டா விவசாயிகள் தற்போது சந்தித்துவரும் **'வடிகால் இன்மையால் நீர் தேங்குதல்'** பிரச்சினையிலிருந்து விடுபடுவதுடன், விவசாய உற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி மேன்மையடையும் என்பதால், இத்திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப உதவியினை அளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் தொடங்கப்படும்.

[2013 ஏப்ரல் 18

## 2.4 மாநில நதிகளை இணைக்கும் திட்டம்

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தின் நீர்வள ஆதாரங்களைத் திறம்பட பயன்படுத்தும் சீரிய நோக்கத்திலும், வறட்சியான பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடனும், மாநிலத்தின் நதிகளை இணைக்கும் திட்டத்தினை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். இதனடிப்படையில், பின்வரும் நதி இணைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன:—*

i. *பெண்ணையாறு (சாத்தனூர் அணை) - பாலாறு இணைப்பு.*

ii. *பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு) - பாலாறு இணைப்பு.*

iii. *காவேரி - வைகை - குண்டாறு இணைப்பு.*

iv. *காவேரி ( மேட்டூர் அணை ) – சரபங்கா இணைப்பு.*

### 2.4.1 பெண்ணையாறு (சாத்தனூர் அணை) – பாலாறு இணைப்பு

*இத்திட்டத்தில் பெண்ணையாற்றின் வெள்ள உபரி நீரை பாலாற்றின் கிளை ஆறான செய்யாற்றிற்குக் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. சாத்தனூர் அணையின் முழு நீர் மட்ட அளவில், தலைமதகிலிருந்து 23.55 கி.மீ. நீள இணைப்புக் கால்வாய் செய்யாற்றின் குறுக்கே அமைந்துள்ள ஆலத்தூர் அணைக்கட்டின் மேற்புறம் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இணைப்புக் கால்வாயிலிருந்து 38.72 கி.மீ. நீளமுள்ள வரத்துக் கால்வாய் அமைத்து, துரிஞ்சலாற்றுடன் இணைத்து, நந்தன் வாய்க்காலுக்குத் தண்ணீர் வழங்கப்படும்.*

*இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம் 5.69 டி.எம்.சி. அடி வெள்ள உபரி நீர் பாலாறு வடிநிலத்திற்குத் திருப்பப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டத்தின் வட்டங்களான திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு, போளூர், வந்தவாசி மற்றும் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் ஆகியவற்றில் சுமார் 46,069 ஏக்கர் பாசனப் பரப்பு பயன்பெறும். இத்திட்டத்தின் நேரடிப் பயன்களைத் தவிர அருகிலுள்ள நிலங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.*



2013 ஏப்ரல் 18]

*இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால், இத்திட்டத்தினை மாநில நிதியின் கீழ் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.250.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.*

### 2.4.2 பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு) – பாலாறு இணைப்பு

*கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து 3.5 டி.எம்.சி. அடி வெள்ள நீரினை, அக்டோபர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை மாதத்திற்கு 5 நாட்கள் வீதம் 15 நாட்களுக்கு பாலாற்றின் கிளை ஆறான கல்லாற்றுக்குத் திருப்ப முதலில் உத்தேசிக்கப்பட்டது. இருப்பினும், தேசிய நீர் மேம்பாட்டு முகமை,* (National Water development Agency) *பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு) - பாலாறு இணைப்பானது, பெண்ணையாறு (கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்) - பாலாறு இணைப்பினை விட தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஏற்புடையதாக உள்ளதாகத் தெரிவித்துள்ளது. இம்முகமை, இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வுகளை தற்போது மேற்கொண்டு வருகிறது. இந்த மாற்று இணைப்புத் திட்டத்திற்கு மாநில அரசு, கொள்கை அளவிலான ஒப்புதலை அளித்துள்ளது. தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் விரிவான ஆய்விற்குத் தேவையான ஒத்துழைப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் இப்பகுதிகளில் அமைந்துள்ள திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் பாசன வசதி பெறும் சுமார் 29,319 ஏக்கர் விளைநிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படுவதுடன், பாலாறு வடிநிலப்பகுதியின் நிலத்தடி நீர் மட்டமும் உயரும்.*

### 2.4.3 காவேரி-வைகை–குண்டாறு இணைப்பு

*இத்திட்டத்தில், காவேரி ஆற்றிலிருந்து 7 டி.எம்.சி. அடி வெள்ள உபரி நீரினை கட்டளை கதவணையிலிருந்து 258 கி.மீ. நீள இணைப்புக் கால்வாய் அமைத்து அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாற்றுக்குத் திருப்பி விட திட்டமிடப்பட்டுள்ளது.*

[2013 ஏப்ரல் 18

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு, ரூ.5,166.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.4.4. காவேரி (மேட்டூர் அணை)-சரபங்கா இணைப்பு

மேட்டூர் அணையிலிருந்து 182 கி.மீ. நீள இணைப்புக் கால்வாய் அமைத்து, 2 டி.எம்.சி. அடி உபரி நீரினை சரபங்கா, திருமணிமுத்தாறு ஏனைய சிறு வடிநிலங்களில் உள்ள அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளுக்குக் கொண்டு சென்று பாசன வசதியினை உறுதிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் சேலம், நாமக்கல், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள சுமார் 30,430 ஏக்கர் பாசனப்பரப்பு பயன்பெறும். இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு 2012-2013 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.1,134.00 கோடிக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான தளஆய்வுகள் மேற்கொள்ளவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் ரூ.50.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.5 அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)

அணைகளின் பலம், பாதுகாப்பு மற்றும் இயக்கப் பராமரிப்பு மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் உலக வங்கி கடனுதவியுடன் 2012-2013 ஆம் ஆண்டு முதல் 104 அணைகளை, நான்கு கட்டங்களில் ரூ.745.49 கோடி மதிப்பீட்டில் "அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த உலக வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட 4 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டில் 80 விழுக்காடு உலக வங்கியின் கடனுதவியுடனும், மீதமுள்ள 20 விழுக்காடு மாநில நிதியைக் கொண்டும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் நீர்வள ஆதாரத் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் வேளாண் பொறியியல் துறை ஆகிய மூன்றும் பங்கேற்கின்றன.



2013 ஏப்ரல் 18]

**திட்ட மதிப்பீடு**

***(ரூ. கோடியில்)***

| | | |
|---|---|---|
| அ. | நீர்வள ஆதாரத் துறை | 469.94 |
| ஆ. | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் | 260.14 |
| இ. | வேளாண் பொறியியல் துறை | 15.41 |
| | மொத்தம் | 745.49 |

இத்திட்டத்தின் மூன்று முக்கிய கூறுகள்:

1. அணை மற்றும் அணை சார்ந்த கட்டமைப்புகளைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
2. நீர்த்தேக்கங்களின் வண்டல் படிவுகளை ஆய்வு செய்தல் மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் அணைப் பாதுகாப்பு கட்டமைப்புகளை உறுதிப்படுத்துதல்.
3. மாநில திட்ட மேலாண்மைப் பிரிவினை அமைத்தல்.

அணையின் கொள்ளளவினை நிலைநிறுத்தி, தேக்கிய நீரினைத் திறம்பட உபயோகித்து, அணையின் நீண்ட கால செயல் திறனை உறுதி செய்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். அணைகளின் மண் கரைகளை பலப்படுத்தி, கேலரிகள், தடுப்புச் சுவர்கள் மற்றும் மதகுகளைச் சீர்செய்து, நீள்வெட்டுப் பாதையில் சிமெண்ட் கரைசலை செலுத்துவதன்மூலம் சிறு விரிசல்களை அடைத்தல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாகும். மேலும், உரிய அளவு மானிகள் மற்றும் வானிலை தகவல் சேகரிப்பு மையங்கள் அமைத்தல், சூரிய சக்தி மூலம் செயல்படும் மின்னமைப்புகளை நிறுவுதல் மற்றும் நீர் மட்ட அளவுகளைத் தானியங்கி முறையில் சேகரிக்கும் மானிகளை அமைக்கும் பணிகளும் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

[2013 ஏப்ரல் 18

*நீர்வள ஆதாரத் துறையின் 66 அணைகளும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 38 அணைகளும் இத்திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படும்.*

| கட்டம் | நீர்வள ஆதாரத் துறை அணைகள் | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அணைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| I | 12 | 6 | 18 |
| II | 26 | 16 | 42 |
| III | 16 | 12 | 28 |
| IV | 12 | 4 | 16 |
| மொத்தம் | 66 | 38 | 104 |

**இத்திட்ட செயல்பாட்டிற்கான ஒப்பந்தம் உலக வங்கியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, மாநில திட்ட மேலாண்மைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அதிகாரம் படைத்த குழு, இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.**

*முதல் கட்டமாக, நடப்பாண்டில் கீழ்க்காணும் நீர்வள ஆதாரத் துறையின் 12 அணைகளிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 6 அணைகளிலும் புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளன:—*



2013 ஏப்ரல் 18]

| வ. எண் | நீர்வள ஆதாரத் துறை அணைகள் | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அணைகள் |
|---|---|---|
| 1. | வீடூர் | அவலாஞ்சி |
| 2. | இராஜாதோப்புகானார் | கிளன்மார்க்கன் |
| 3. | மோர்தானா | காடம்பாறை |
| 4. | கோமுகி | முக்குருத்தி |
| 5. | மணிமுத்தாறு | போர்த்திமண்ட் |
| 6. | அடவிநயினார் கோவில் | சேர்வலாறு |
| 7. | வடக்குப் பச்சையாறு | — |
| 8. | கொடுமுடியாறு | — |
| 9. | நம்பியாறு | — |
| 10. | பொய்கையாறு | — |
| 11. | சித்தமல்லி | — |
| 12. | குடகனாறு | — |

*இரண்டாவது கட்டத்திற்கான, நீர்வள ஆதாரத் துறையின் 26 அணைகள் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 16 அணைகளுக்குமான நீர்நிலை மறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

[2013 ஏப்ரல் 18

**2.6 சிறந்த முறையில் பராமரிக்கப்படும் அணை**

***"நவீன இந்தியாவின் கோவில்கள்"*** என்றழைக்கப்படும் அணைகளின் வாயிலாக மாநிலத்தின் வேளாண் உற்பத்தியையும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்வதற்கு, உரிய நேரத்தில் பாசன வசதி அளித்தல் இன்றியமையாததாகும்.

***மாண்புமிகு முதலமைச்சர்*** அவர்கள், அணைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, விருது வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இவ்விருது ஆண்டுதோறும் சிறப்பாகப் பராமரிக்கப்படும் ஓர் அணையினைத் தேர்ந்தெடுத்து வழங்கப்படும். 2012-2013 ஆம் ஆண்டில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்ட அணையாக முல்லைப் பெரியாறு அணை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**2.7 காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைத்து திறன்மிகு பாசன நீர் மேலாண்மையினை உறுதி செய்யும் திட்டம் (MER Scheme)**

காவேரி வடிநிலத்தில் பாசனக் கட்டுமானங்களைப் புனரமைத்து மேம்படுத்த அதிகப்படியான நிதியை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. பல்லாண்டு காலமாக நிலுவையிலிருந்து வந்த காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்சினை காரணமாக, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான நிதியுதவியோ, பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவியோ பெறமுடியாத நிலை இருந்தது. ஆகையால், காவேரி வடிநிலப் பகுதிகளில் நீண்டகாலமாக பெரிய அளவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் பயனாக காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை, மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, "காவேரி டெல்டாவின் பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைத்து திறன்மிகு பாசன நீர் மேலாண்மை"யினை உறுதி செய்யும் வகையில் இத்திட்டத்திற்கான முதல் நிலை அறிக்கை 2012-2013 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.11,420.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய நீர்க் குழுமத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் கோரி அனுப்பப்பட்டு, அதன் பரிசீலனையில் உள்ளது. ஒப்புதல்



2013 ஏப்ரல் 18]

பெறப்பட்டவுடன், இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய அரசின் விரைவுப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.8 ஏரிகளை புனரமைத்து புதுப்பிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டம்**

***மாண்புமிகு முதலமைச்சர்*** அவர்களின் "தொலைநோக்குத் திட்டம் 2023"-ன் கீழ் ஏரிகளைப் புனரமைக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் 13,699 ஏரிகள் உள்ளன. பல ஏரிகளில் புனரமைப்புப் பணிகள் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் 5,220 ஏரிகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, 13-வது நிதிக் குழுவின் மானிய உதவித் திட்டமான "மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைக்கும் திட்டத்தின்" கீழ் 674 ஏரிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஏரிகளைச் சீரமைத்து, புதுப்பித்துப் புனரமைத்தல் திட்டத்தின்கீழ் 189 ஏரிகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, எஞ்சியுள்ள 7,616 ஏரிகளிலும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது அவசியமானதாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு ***மாண்புமிகு முதலமைச்சர்*** அவர்கள், ஏரிகளைத் தூர்வாரி, கொள்ளளவை அதிகரிக்க சுமார் 1,000 ஏக்கர் அல்லது அதற்கு மேலான பாசனப் பரப்புள்ள 100 ஏரிகளைத் தெரிவு செய்து, பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

நடப்பாண்டில் மாநில நிதியின் கீழ் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 25 ஏரிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**3 பன்மாநில நதிநீர்ப் பிரச்சினைகள்**

**3.1 காவேரி நதிநீர்த் தாவா:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சியால் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் 19-02-2013 அன்று வெளியிட்டது என்று மீண்டும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

[2013 ஏப்ரல் 18

இப்பிரச்சினையின் பின்னணியும், தமிழ்நாட்டுக்கு உரிய நீர்ப்பங்கீட்டைப் பெறுவதற்கு இவ்வரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பின்வருமாறு:—

**நடுவர் மன்றம் அமைத்தல்:**

காவேரி நதிநீர்த் தாவா சுமார் 23 ஆண்டுகளாக இரு மாநிலங்களிடையேயும் மற்றும் மத்திய அரசின் தலைமையின் கீழும் 26 முறை கூட்டங்கள் கூடி விவாதித்தும் சுமூகமான தீர்வு காணமுடியவில்லை. இறுதியாக, உச்ச நீதிமன்றத்தின் 04-05-1990 நாளிட்ட ஆணையின்படி, மத்திய அரசு 02-06-1990 அன்று காவேரி நடுவர் மன்றத்தை அமைத்தது.

**இடைக்கால ஆணை:**

காவேரி நடுவர் மன்றம் 25-06-1991 அன்று, ஓர் இடைக்கால ஆணையை அளித்தது. அதன்படி, தமிழ்நாட்டின் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் ஆண்டுதோறும், ஒரு குறிப்பிட்ட மாதாந்திர அடிப்படையில், 205 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகம் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்; அதில் 6 டி.எம்.சி. அடி நீரை புதுச்சேரியின் காரைக்கால் பகுதிக்கு தமிழ்நாடு வழங்கவேண்டும்; கர்நாடகம் தன் நீர்ப் பாசனப் பரப்பை ஜூன், 1990-ல் உள்ளபடி 11.2 இலட்சம் ஏக்கருக்கு மிகாமல் அதிகரிக்கக் கூடாது; மேலும் இந்த ஆணை நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரை நடைமுறையில் இருக்கும். நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசின் அரசிதழில் 10-12-1991 அன்று வெளியிடப்பட்டது.

**இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் அமைப்பு:**

நடுவர் மன்றத்தின் 25-06-1991 நாளிட்ட இடைக்கால ஆணையைச் செயல்படுத்த ஓர் அமைப்பு (scheme) 11-08-1998 அன்று மத்திய அரசால் அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த அமைப்பின்படி, பாரதப் பிரதமர் தலைமையில் படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, காவேரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்திற்கு உதவும் வகையில், மத்திய நீர்வளத் துறை செயலாளரின் தலைமையில் மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட காவேரி கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டது.



2013 ஏப்ரல் 18]

**நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை:**

காவேரி நடுவர் மன்றம், இவ்வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும், புள்ளிவிவரங்களையும் நன்கு ஆராய்ந்து, மாநிலங்களின் வாதங்கள், பிரதிவாதங்கள் முதலியவற்றையும் கருத்தில்கொண்டு, 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவாச் சட்டத்தின் பிரிவு 5 (2)-ன்படி தன் இறுதி ஆணையை 5-2-2007 அன்று அளித்தது.

**இறுதி ஆணையின் முக்கிய அம்சங்கள்:—**

- காவேரியில் மொத்த நீர்வளம் 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில் (50% Dependability) காவேரி உண்மை நிலை அறியும் குழுவின் (Cauvery Fact Finding Committee) அறிக்கையின்படி, கீழ் அணை வரையில் 740 டி.எம்.சி. அடி ஆகும்.

- இதில் மாநில வாரியாக 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில் (50% Dependability) ஒதுக்கீடு பின்வருமாறு:—

(டி.எம்.சி. அடியில்)

| **(அ) தமிழ்நாடு** | |
|---|---|
| கர்நாடக - தமிழ்நாடு எல்லையில், பில்லிகுண்டுலு அல்லது வேறு ஒரு குறிப்பிட்ட இடத்தில் மற்றும் சுற்றுப்புறச் சூழல் உள்ளடக்கியது | 192 |
| பில்லிகுண்டுலு மற்றும் மேட்டூருக்கு இடைப்பட்ட பகுதியில் கிடைக்கும் நீர் | 25 |
| மேட்டூரில் கிடைக்கும் மொத்த நீர் அளவு | 217 |
| மேட்டூருக்குக் கீழ்ப்பகுதியில் தமிழ் நாட்டு எல்லையில் கிடைக்கும் நீர் | 212 |
| **மொத்தம்** | **429** |

[2013 ஏப்ரல் 18

| | |
|---|---|
| *(ஆ) கர்நாடகம்* | *270* |
| **(இ) கேரளம்** | |
| கபினி உப படுகை | 21 |
| பவானி உப படுகை | 6 |
| அமராவதி உப படுகை | 3 |
| **மொத்தம்** | ***30***** |
| **(ஈ) புதுச்சேரி** | ***7*** |
| **(உ) தவிர்க்க முடியாத உபரி நீர்** | ***4*** |
| **ஆக மொத்தம்** | ***740*** |

** கேரளாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 30 டி.எம்.சி. அடி நீரில், பயன்படுத்தாத நீரை அவ்வரசு, திறனை மேம்படுத்தி உபயோகப்படுத்தும் வரையில், தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், கபினி ஆற்றின் நீர்வரத்தில் கேரளா பயன்படுத்தாத நீரும் 192 டி.எம்.சி. அடிக்கு கூடுதலாகும்.

- இதன்படி மேட்டூரில், இடைக்கால உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள 205 டி.எம்.சி. அடியில், புதுச்சேரியின் 6 டி.எம்.சி. அடியைக் கழித்தால் கிடைக்கும் 199 டி.எம்.சி. அடிக்குப் பதிலாக, சுமார் (207 + 10 சுற்றுப்புறச் சூழல்) 217 டி.எம்.சி. அடி இறுதி ஆணையின்படி கிடைக்கும்.
- நிலத்தடி நீர் உபயோகம் காவேரி நதியின் நீர் உபயோகமாகக் கருதப்படக்கூடாது.
- இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் (Cauvery Management) மற்றும் காவேரி நீர்முறைப்படுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) ஆகியன அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



2013 ஏப்ரல் 18]

**உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள்:—**

கர்நாடக-கேரள மாநிலங்கள் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில் ஏப்ரல், 2007-ல் சிறப்பு முறையீட்டு மனுக்களை (Special Leave Petitions) தாக்கல் செய்தன. நடுவர் மன்ற இறுதி ஆணையில் தமிழகத்திற்கு பாதகமாய் உள்ள ஒரு சில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக்கோரி, மே, 2007-ல் ஒரு சிறப்பு முறையீட்டு மனுவை (Special Leave Petitions) உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்தது. இந்த மேல்முறையீட்டு மனுக்கள் 06-08-2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

**நடுவர் மன்றத்தில் பிரிவு 5(3)—ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள்:—**

நடுவர் மன்ற அறிக்கையில் உள்ள சில அம்சங்களில் மேல் விளக்கம் மற்றும் வழிமுறைகள் கோரி, எல்லா மாநிலங்களும், மத்திய அரசும், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதி நீர்த் தாவாச் சட்டத்தின் பிரிவு 5(3)-ன்கீழ் மனுக்களை நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்தன. காவேரி நடுவர் மன்றம், தனது 10-07-2007 ஆம் நாளிட்ட ஆணையில், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறப்பு முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டபின்தான் காவேரி நடுவர் மன்றத்தில் பன்மாநில நதிநீர்த் தாவாச் சட்டத்தின் பிரிவு 5(3)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என ஆணை வழங்கியுள்ளது.

**வழக்குகளைத் துரிதப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:—**

உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் மேல்முறையீட்டு மனுக்களுக்கு குந்தகம் ஏதுமின்றி, காவேரி நடுவர் மன்றத்தில் நிலுவையில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்களை விசாரிக்கத் தடையேதும் இல்லை என தெளிவுபடுத்துமாறும், மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய அரசு நடுவர் மன்ற இறுதி ஆணையின் மீது கேட்டுள்ள விளக்கம் கோரும் மனுக்களை காவேரி நடுவர் மன்றம் முடிவுக்குக் கொண்டுவர ஆணை பிறப்பிக்குமாறு கோரி, 01-09-2011 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு இடைக்கால மனுவை தாக்கல் செய்தது.

[2013 ஏப்ரல் 18

காவேரி நடுவர் மன்றத்தில் எல்லா மாநிலங்களும், மத்திய அரசும் 1956 ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர்த் தாவா சட்டப் பிரிவு 5(3)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்படி ஒரு மனுவை நடுவர் மன்றத்தில் தமிழக அரசு 16-03-2012 அன்று தாக்கல் செய்தது. நடுவர் மன்றம் இம்மனுவை ஏப்ரல், 2012-ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள ஆணையிட்ட போதிலும், நடுவர் மன்றத்தின் தலைவர் உடல்நிலை காரணமாக ராஜினாமா செய்ததால், புதிய தலைவர் நியமிக்கப்பட்ட பின்னர்தான் இம்மனுமீது மேல்நடவடிக்கை எடுக்க இயலும். காவேரி நடுவர் மன்றத்துக்கு புதிய தலைவரை நியமிக்கும்படி 19-04-2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார். காவேரி நடுவர் மன்றத்திற்கு தலைவரை நியமிப்பதற்கு இவ்வரசு உரிய நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**மேட்டூருக்கு மேல் பகுதியில் நீர்மின் திட்டங்கள்:—**

தேசிய நீர்மின் திட்டக் கழகம் (National Hydro Power Corporation) மேட்டூர் நீர்த்தேக்கத்தின் மேல் பகுதியில் மேகதாது, சிவசமுத்திரம், ராசிமணல் மற்றும் ஒகேனக்கல் ஆகிய நீர்மின் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்தது. இது மாநில அரசுகள் மற்றும் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. எனினும் கர்நாடக அரசு, சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர்மின் திட்டங்களை தேசிய நீர்மின் திட்டக் கழகம் மூலமாகச் செயல்படுத்த காவேரி நடுவர் மன்றத்தில் அளித்த ஒப்புதலுக்கு மாறாக, சிவசமுத்திரம் மற்றும் மேகதாது நீர்மின் திட்டங்களை தன்னிச்சையாகச் செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளதை நிறுத்தி வைக்கவும், கிருஷ்ணராஜசாகர் நீர்த் தேக்கத்திற்கும், மேட்டூருக்கும் இடையே அமையக்கூடிய எல்லா நீர்மின் திட்டங்களையும் ஒட்டுமொத்தமாக ஏற்கெனவே உத்தேசித்தபடி, தேசிய நீர்மின் திட்டக் கழகம் (National Hydro Power Corporation) வாயிலாகச் செயல்படுத்த ஆணை வழங்குமாறும் கோரி, ஓர் இடைக்கால மனு (I.A) உச்ச நீதிமன்றத்தில் நவம்பர் 2008-ல் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில், சிவசமுத்திரம் நீர்மின் திட்டத்தை தன்னிச்சையாக கர்நாடக அரசு எடுத்துக்கொள்வதை எதிர்த்து, மீண்டும் ஒரு கூடுதல் மனு (Additional Affidavit) உச்ச நீதிமன்றத்தில் ஆகஸ்ட், 2009-ல் தாக்கல் செய்யப்பட்டது.



2013 ஏப்ரல் 18]

**காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடுதல்:—**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் 14-6-2011 அன்று புதுதில்லியில் அளித்த கோரிக்கை மனுவில், காவேரி நடுவர் மன்றத்தின் 5-2-2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் உடனடியாக வெளியிடுவதற்கு நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்குமாறும், மற்றும் இவ்வாணையை வழுவாது நடைமுறைப்படுத்துவதற்காக "காவேரி நீர் மேலாண்மை வாரியம்" என்ற அமைப்பை ஏற்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்கள். அதன் பின்னர், 17-10-2011 அன்றும் அதன் பின்பும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் இதுகுறித்து மத்திய அரசை வலியுறுத்தினார்கள். தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் 17-04-2012 அன்று ஓர் இடைக்கால மனுவைத் தாக்கல் செய்தது. எனினும், இவ்வாண்டு, கர்நாடக அரசு தண்ணீர் விடுவதற்காக, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல் முறையீட்டு மனுக்களுக்கு ஊறு விளைவிக்காத வகையில், நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கு தடையேதும் இல்லையென எல்லா மாநில மூத்த வழக்கறிஞர்களின் கருத்தை உச்சநீதி மன்றம் 04-01-2013 அன்று தனது ஆணையில் பதிவு செய்தது. இறுதியாக, 04-02-2013 அன்று, காவேரி நடுவர் மன்றத்தின் 05-02-2007 நாளிட்ட இறுதி ஆணையை மிக விரைவில் மத்திய அரசிதழில் வெளியிடும்படியும், எவ்வாறாயினும் 20-02-.2013-க்குள் வெளியிட வேண்டும் எனவும் மத்திய அரசுக்கு, உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. இதன்படி, மத்திய அரசு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை 19-02-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டது.

**கர்நாடகத்தில் கோடைப் பயிர் சாகுபடி:—**

கர்நாடகம் தன் நீர்த்தேக்கங்களிலிருந்து கோடை சாகுபடிக்கு நீர் வழங்குவதைத் தடுத்து நிறுத்தவும், தமிழ்நாட்டுக்கு இடைக்கால ஆணைப்படி நீர் வழங்க வழி செய்யும் வகையில், தற்போதுள்ள நீர் இருப்பை அடுத்த ஆண்டின் தமிழ்நாட்டின் பயன்பாட்டிற்காக சேமித்து வைக்கவும் ஆணை வழங்கும்படி ஓர் இடைக்கால மனு (I.A.) 21-3-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[2013 ஏப்ரல் 18

### 3.2 கேரள மாநிலத்தின் பாணாசுர சாகர் நீர்ப்பாசனத் திட்டம்:–

*கேரள அரசு, அம்மாநிலத்தில் கபினி உப படுகையில் உள்ள பாணாசுர சாகர் நீர்ப்பாசனத் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையை ஜனவரி, 2012 இல் அனுப்பியது. இத்திட்டம் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை எதிர்நோக்கி ஏற்கெனவே தொடங்கப்பட்டு கட்டுமானத்தில் இருந்து வந்தது. இத்திட்டம், குறித்து நடுவர் மன்றத்தில் வாதங்கள் நடைபெற்றன. இத்திட்ட அறிக்கையை ஆய்வு செய்ததில், கேரள அரசு இத்திட்டத்தின் தொடக்கத்தில் உத்தேசிக்கப்பட்ட 1.7 டி.எம்.சி. அடி நீரை காவேரிப் படுகையில் உபயோகிக்கவும், 6 முதல் 10 டி.எம்.சி. அடி வரை, சுரங்கப்பாதை மூலம் திருப்பி அருகிலுள்ள வளர்பட்டணம் படுகையில் அமைந்துள்ள குட்டியாடி நீர் மின் திட்டத்தில் பயன்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வந்தது. ஆனால், காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையில் நீரை மேற்கு நோக்கித் திருப்புவதை தடை செய்துள்ளது. மேலும், பாசனத்துக்கு 0.84 டி.எம்.சி. அடி நீரை மட்டுமே வழங்கியது. எனவே, உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் நிலுவையிலுள்ள மனுக்கள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கும் வரையில் இத்திட்டத்தை நிறுத்தி வைக்குமாறு 12-03-2012 அன்று கேரள அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில், கேரள அரசு இத்திட்டத்தினை தற்பொழுது செயல்படுத்த உத்தேசித்துள்ளதை நிறுத்திவைக்க வேண்டும் என்று உத்தரவு வழங்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை தமிழ்நாடு அரசு 24-04-2012 அன்று தாக்கல் செய்தது.*

### 3.3 பாசன ஆண்டு 2012–2013:–

*இவ்வாண்டு (2012-2013) மேட்டூர் நீர்த்தேக்கம் வழக்கமாகத் திறக்கப்படும் நாளான ஜூன், 12 அன்று பாசனத்திற்குத் திறக்கப்படவில்லை. அன்றைய தினம், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 41.223 டி.எம்.சி. அடி அளவுதான் நீர் இருப்பு இருந்தது. தென்மேற்குப் பருவமழை 05-06-2012 அன்று துவங்கிய போதிலும், இயல்பான மழையை விட குறைவாக மழை இருந்தது. காவேரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பருவமழை தீவிரமடையவில்லை. கர்நாடக அரசு வழக்கம்போல் நீர் வரத்து முழுவதையும் தனது நீர்த்தேக்கங்களில் தேக்கிக் கொண்டது. காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படியோ அல்லது இடர்பாடு காலங்களில் நீர்ப் பங்கீடு செய்ய மத்திய நீர்வள ஆணையத்தால் வகுக்கப்பட்டு*



2013 ஏப்ரல் 18]

*காவேரி கண்காணிப்புக் குழுவால் இறுதி செய்யப்பட்ட வழிமுறையின்படியோ, தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கவில்லை. எனவே, நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி, தமிழ்நாட்டிற்கு நீர் வழங்க, கர்நாடக அரசுக்கு உத்தரவிடும்படி ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் 21-07-2012 அன்று தமிழக அரசு தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றம் 10-09-2012 அன்று, செப்டம்பர் 12 முதல் 20 ஆம் தேதி வரை வினாடிக்கு 10,000 கன அடி வீதம் கர்நாடகம் நீர் வழங்கவேண்டும் எனவும், அதன் பின் நீர் வழங்குவது பற்றி காவேரி நதி நீர் ஆணையம் 19-09-2012 அன்று நடைபெறும் தனது கூட்டத்தில் முடிவு செய்ய வேண்டும் என்றும் ஆணையிட்டது. மேட்டூர் நீர்த்தேக்கம் மேலும் காலதாமதமாகத் திறக்கப் பட்டால் விவசாயிகளுக்குப் பயனளிக்காது எனக் கருதி, 17-09-2012 அன்று பாசனத்திற்கு திறக்கப்பட்டது. அன்றைய தினம் நீர்த் தேக்கத்தில் 46.217 டி.எம்.சி. அடி நீர் இருப்பு இருந்தது. 19-09-2012 அன்று நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்படாததால், ஆணையத்தின் தலைவர் என்ற முறையில், பாரதப் பிரதமர் அவர்கள், கர்நாடக அரசு 20-9-2012 முதல் 15-10-2012 வரையில் வினாடிக்கு 9,000 கன அடி வீதம் நீரை விடுவிக்க வேண்டும் என்றும் அதன்பிறகு காவேரி கண்காணிப்புக் குழு கூடி, சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசித்து, 15-10-2012-க்குப் பிறகு நீர் விடுவிப்பது குறித்து முடிவெடுக்கலாம் என்றும் ஆணையிட்டார்.*

*இதற்கிடையில், 1991 ஆம் ஆண்டைய நடுவர் மன்ற ஆணையை நடைமுறைப் படுத்துவதற்காக அறிவிக்கை செய்யப்பட்ட திட்டத்தின் விதிக்கூறு 3(3)-ன்கீழ், பிரதமர் 19-9-2012 அன்று பிறப்பித்த ஆணையினை விலக்கிக்கொள்ள* (set aside) *வேண்டும் என்றும் மற்றும் இக்கோரிக்கையின் மீது முடிவெடுக்கும் வரையில் அம்முடிவினை நிறுத்திவைக்க வேண்டும் என்றும் கர்நாடக அரசு காவேரி நதி நீர் ஆணையத்தினை கேட்டுக் கொண்டது. எனினும், மத்திய அரசு அதன் 24-9-2012 ஆம் நாளிட்ட கடிதத்தில், பில்லிகுண்டுலுவில் நீர்வரத்தைக் கணக்கீடு செய்யப்பட்டதைக் காணும் பொழுது, கர்நாடக அரசு காவேரி நதி நீர் ஆணையத்தின் முடிவின்படி, நீரை விடுவிக்கவில்லை எனத் தெரியவருகிறது என்றும், எனவே அவ்வாணையத்தின் முடிவுப்படி, நீர் விடுவிப்பதை கர்நாடகம் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டது. மத்திய அரசு தன் 11-10-2012 ஆம் நாளிட்ட கடிதத்தில், காவேரி நதி நீர் ஆணையத்தின் உத்தரவை மறு பரிசீலனை செய்ய விதிகளில் இடமில்லை என கர்நாடக அரசுக்கு தெரிவித்தது.*

[2013 ஏப்ரல் 18

**காவேரி கண்காணிப்புக் குழு கூட்டங்களும், அதன் முடிவுகளும்:—**

காவேரி நதி நீர் ஆணையத்தின் 19-09-2012 ஆம் நாளிட்ட ஆணை மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுக்கள் மீது வழங்கப்பட்ட ஆணைகளின்படி, காவேரி கண்காணிப்புக் குழு அவ்வப்போது கூடி, கிடைக்கும் நீரை தமிழகத்துடன் பகிர்ந்து கொள்ள கர்நாடக அரசுக்கு ஆணையிட்டது. தமிழ் நாட்டிற்கு பில்லிகுண்டுலு நீரளவு நிலையத்தில் கிடைத்த நீர் விவரம் வருமாறு:—

(டி.எம்.சி. அடியில்)

| உச்ச நீதிமன்றம் / காவேரி நதி நீர் ஆணையம் / காவேரி கண்காணிப்புக் குழு நீர் விடுவிக்க வழங்கிய ஆணைகள் | நீர் விடுவிக்க வேண்டிய விவரம் | பில்லி குண்டுலுவில் கிடைக்கப் பெற்ற நீர் விவரம் |
|---|---|---|
| உச்ச நீதிமன்ற 10-9-2012 ஆணையின்படி 12-9-2012 முதல் 20-9-2012 வரையில் 10,000 கன அடி வீதம் 9 நாட்களுக்கு: | 7.776 | 9.262 |
| 19-9-2012 ஆம் நாளிட்ட காவேரி நதிநீர் ஆணையம் - 20-9-2012 முதல் 15-10-2012 வரை 9,000 கன அடி வீதம் 25 நாட்களுக்கு | 19.440 | 19.191 |
| காவேரி கண்காணிப்புக் குழு கூட்டங்கள் | | |
| 11-10-2012 (28-வது) | 8.85 அக்டோபர் 16-31 | 6.731 * |
| 31-10-2012 (29-வது) | 3.94 நவம்பர் 1-15 | 6.703 |



2013 ஏப்ரல் 18]

| | | |
|---|---|---|
| 15-11-2012 (30-வது) | 4.81 நவம்பர் 16-30 | 5.057 |
| உச்ச நீதிமன்ற 5-12-2012 ஆணையின் படியும் (9-12-2012 வரையில் நாளொன்றுக்கு 10,000 கனஅடி வீதம்) மற்றும் 7-12-2012 நடைபெற்ற (31-வது) கண்காணிப்புக் குழு | 12.00 டிசம்பர் 1-31 | 11.823 |
| 10-1-2013 (32-வது) | 1.51 ஜனவரி 1-31 | 4.275 |
| **மொத்தம்** | **58.326** | **63.042**** |

* இதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரை 4-12-2012-க்குள் ஈடுசெய்ய வேண்டும் என 31-10-2012 ஆம் நாளிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டது. (இதனை கர்நாடக அரசு ஈடுசெய்தது)

** மேற்காணும் அட்டவணையைக் காணும் பொழுது, நடப்பாண்டில் அரசு, உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு ஆகியவற்றை அணுகியதன் காரணமாக 63.042 டி.எம்.சி. அடி நீர் கிடைக்கப் பெற்றது.

கர்நாடகம், நீர் விடுவிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவில், 22-11-2012 அன்று ஒரு துணை மனு (Supplementary Affidavit) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அம்மனுவில், காவேரி கண்காணிப்புக் குழு பின்பற்றிய இடர்ப்பாடு காலத்தில் சரிசம விகிதாச்சார முறைப்படி, நீரைப் பகிர்ந்துகொள்ளும் முறைப்படி தமிழ் நாட்டிற்கு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் கிடைக்கப் பெற்றிருக்கவேண்டிய நீரில் ஏற்பட்ட குறைபாட்டு நீரளவான 52.8 டி.எம்.சி. அடி நீரை

[2013 ஏப்ரல் 18

விடுவிக்கவும் மற்றும் நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி மே, 2013 வரையில் நீரை விடுவிக்கவோ அல்லது இதற்கு மாற்றாக சம்பா பயிரைக் காப்பாற்றுவதற்காக சரிசம விகிதாச்சார அடிப்படையிலோ நீரை விடுவிக்க வேண்டும் என கோரப்பட்டது. உச்ச நீதிமன்றம் மீண்டும் இம்மனுக்களை 26-11-2012 அன்று விசாரித்த போது, இரு மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இரு மாநில முதலமைச்சர்களும் பேச்சு வார்த்தையின் வாயிலாகத் தீர்வு காண பரிந்துரைத்தது.

**தமிழ்நாடு-கர்நாடக முதலமைச்சர்கள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை:—**

உச்ச நீதிமன்றத்தின் 26-11-2012 நாளிட்ட ஆணையினை அடுத்து, 29-11-2012 அன்று தமிழ்நாடு-கர்நாடக முதலமைச்சர்களிடையே பெங்களூரில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது, தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டிய நீரில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரளவான 53.4 டி.எம்.சி. அடி நீரை டிசம்பர் மாதத்திற்குள் விடுவிக்க வேண்டும் என்றும், உடனடி நிலைப் பயிர்த் தேவைக்காக அடுத்த 15 நாட்களுக்குள் 30 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், கர்நாடக அரசு ஒரு சொட்டு நீரைக் கூட விடுவிக்க இயலாது என தெரிவித்தது. எனவே, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களது உத்தரவின் பேரில், சம்பா பயிரைக் காப்பாற்றுவதற்காக ஏற்கெனவே இருந்து வருகின்ற குறைபாட்டு நீரில் குறைந்தபட்சமாக 30 டி.எம்.சி. அடி நீரையாவது 15-12-2012-க்குள் தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று கோரும் மனு ஒன்று, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவினை 05-12-2012 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி கண்காணிப்புக் குழு உடனடியாகக் கூடி, தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்குத் தேவைப்படக்கூடிய நீர் குறித்து, அன்றே முடிவு செய்யுமாறு ஆணையிட்டது.

இதனடிப்படையில், 7-12-2012 அன்று கூடிய காவேரி கண்காணிப்புக் குழு, தமிழ்நாட்டில் உள்ள பயிர்களைக் காப்பாற்றுவதற்காக உடனடியாக 30 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல், 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்,



2013 ஏப்ரல் 18]

12 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்கு விடுவிப்பதை கர்நாடக அரசு உறுதி செய்ய வேண்டும் என உத்தரவிட்டது. இந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றம் தனது 10-12-2012 நாளைய ஆணையில் பதிவு செய்துள்ளது.

காவேரி கண்காணிப்புக் குழுவின் முடிவினை உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லும் வகையில், தமிழ்நாட்டிற்கு நீர் விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரை விடுவிக்க வேண்டும் அல்லது காவேரி கண்காணிப்புக் குழு 12 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க வேண்டும் என்பதைத் தவிர்த்து, குறைந்தபட்சமாக 18 டி.எம்.சி. அடி நீரை கர்நாடக அரசு விடுவிக்க வேண்டும் என்று கோரி, மேலும் ஒரு மனுவை 20-12-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. இந்த மனுவினை 04-01-2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி கண்காணிப்புக் குழு கூடி, கர்நாடகம், தமிழ் நாட்டிற்கு விடுவிக்க வேண்டிய குறைபாட்டு நீர் உட்பட, தமிழ்நாடு - கர்நாடக பயிர்களுக்குத் தேவைப்படக்கூடிய நீர் குறித்து உரிய ஆணை வழங்கலாம் என உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில், 10-1-2013 அன்று நடைபெற்ற காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், தமிழ் நாட்டிற்கு 1-6-2012 முதல் 31-12-2012 வரையில், பில்லிகுண்டுலு நீரளவு நிலைய கணக்கீட்டுப்படி, இடர்ப்பாடு கால சரிசம விகிதாச்சார முறையின் அடிப்படையில், கர்நாடகம் விடுவிக்க வேண்டிய நீரில் 31.4 டி.எம்.சி. அடி நீர் குறைபாடு ஏற்பட்டுள்ளது எனவும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி, நீரை ஒழுங்குமுறைப்படுத்தி கர்நாடகம் விடுவிக்கவில்லை எனவும், அதன் நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் உத்தரவின் பேரில், ஓரளவேனும் பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு, கர்நாடக அரசு உடனடியாக 12 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க ஆணை பிறப்பிக்க வேண்டி, மேலும் ஒரு மனு 17-01-2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதனை உடனடியாக விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று 18-1-2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் வலியுறுத்தப்பட்டது. உச்ச நீதிமன்றம் இந்த மனுவினை 18-1-2013 மற்றும் 04-02-2013 அன்று விசாரித்த பின்னர், காவேரி டெல்டா பகுதிகளில் தஞ்சாவூர்,

[2013 ஏப்ரல் 18

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பயிரிட்டுள்ள பாசனப் பகுதிகளை ஆய்வு செய்ய மூன்று நிபுணர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதன் அறிக்கையை 06-02-2013-க்குள் வழங்கும்படி மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவருக்கு ஆணை பிறப்பித்தது. மேலும், தமிழ்நாடு அரசு தன் நீர்த்தேக்கத்திலிருந்து 2 டி.எம்.சி. அடி நீரை பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும், மத்திய நிபுணர் குழுவின் அறிக்கை எப்படி இருந்த போதிலும், இந்த நீரை கர்நாடகம் மேட்டூரில் ஈடு செய்ய வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தது. இதற்கிணங்க, சுமார் 2.3 டி.எம்.சி. அடி நீர் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து 04-02-2013 முதல் 08-02-2013 வரை திறந்து விடப்பட்டது.

உச்ச நீதிமன்றம் அதன் 7-2-2013 ஆம் நாளிட்ட ஆணையில், வல்லுநர் குழு குறைந்த கால அவகாசத்தில் நிலைப் பயிர் (Standing Crops) இருப்பதையும் மற்றும் நீர்த்தேவையையும் மிகத் துல்லியமாக அளிக்க இயலாது என கருத்து தெரிவித்தது. வல்லுநர் குழுவின் அறிக்கையினை ஏற்றுக் கொண்டு, நிலைப் பயிர் 1 இலட்சம் ஏக்கர் மட்டுமே இருப்பதால், 2.44 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகம் உடனடியாக மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. கர்நாடகம் 10-2-2013 முதல் 21-2-2013 வரையிலான காலத்தில் நீரை விடுவித்தது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், தென்மேற்குப் பருவக் காலத்தில் உரிய நீரை கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு வழங்காததால், தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை கர்நாடகம் ஈடு செய்யும் வகையில், ஒரு சிவில் வழக்கினை (Original Suit claiming damages) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆணையிட்டுள்ளார்கள்.

### காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

மத்திய அரசு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை, மத்திய அரசிதழில் 19-02-2013 அன்று வெளியிட்டதை அடுத்து, அடுத்த பாசன ஆண்டு முதல் இந்த இறுதி ஆணையின்படி, தமிழ் நாட்டிற்குரிய நீரினைப் பெறுவதற்காக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியன



2013 ஏப்ரல் 18]

அமைக்கப்பட வேண்டும் என்று **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 22-02-2013 மற்றும் 11-3-2013 அன்று பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்கள். மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வரப்பெறாத நிலையில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் ஆணையின் பேரில், தமிழ்நாடு அரசு 18-3-2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவைத் தாக்கல் செய்தது. இந்த மனுவில் தமிழ்நாட்டிற்கு உரிய நீரைப் பெறும் வகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவினை உடனடியாக அமைக்கும்படியும், குறைந்தபட்சம் ஏப்ரல், 2013 கடைசி வாரத்திற்குள் அமைக்கும்படியும் மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த இடைக்கால மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென 9-4-2013 அன்று உச்ச நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டதற்கிணங்க, உச்ச நீதிமன்றம் இம்மனுவினை 22-4-2013 அன்று விசாரிக்க உத்தரவிட்டுள்ளது.

### 3.4 முல்லைப் பெரியாறு அணை

திருவாங்கூர் மகாராஜாவுக்கும், அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் இடையே 29-10-1886-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் வாயிலாக "பெரியாறு திட்டம்" செயல்படுத்தப் பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காலம் 01-01-1886 முதல் 999 ஆண்டுகளாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 8,000 ஏக்கர் நிலம், ஆண்டொன்றிற்கு ஏக்கருக்கு ரூ.5/- என, (தற்போது ஏக்கருக்கு ரூ.30/- வீதம்) பெரியாறு திட்டத்திற்காக குத்தகைக்கு அளிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தினால், தற்போதைய தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமாராக 2.20 இலட்சம் ஏக்கர் நிலம் பயனடைகிறது. ஆண்டொன்றிற்கு சராசரியாக 22 டி.எம்.சி. அடி நீர் பெரியாறு ஆற்றிலிருந்து திருப்பி விடப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

இதற்குப் பின்னர், 29-05-1970 அன்று இரண்டு துணை ஒப்பந்தங்கள் தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே ஏற்பட்டன. இந்த இரண்டு ஒப்பந்தங்களும், 1886 ஆம் ஆண்டின் முதன்மை ஒப்பந்தத்தின் வழித்தோன்றல் (successor) என்ற முறையில் பின்னர் ஏற்படுத்தப்பட்டன. 1886 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை அம்சங்கள் ஏதும் மாற்றம் செய்யப்படவில்லை.

[2013 ஏப்ரல் 18

1979 ஆம் ஆண்டில் மலையாள நாளேடுகள் பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்களை எழுப்பின. மத்திய நீர்க் குழுமத்தின் தலைவர் 23-11-1979-ல் அணையினை ஆய்வு செய்து அணைக்கு உடனடியான ஆபத்து எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

திருவனந்தபுரத்தில் 25-11-1979 அன்று மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், இரு மாநில அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் அடிப்படையில், அணையை நவீன தரத்திற்கு (Modern Standards) வலுப்படுத்த முடிவு செய்து (i) அவசரகால நடவடிக்கை, (ii) இடைக்கால நடவடிக்கை (iii) நீண்டகால நடவடிக்கை என்ற 3 விதமான பலப்படுத்தும் பணிகளைப் பரிந்துரைத்தது. பலப்படுத்தும் பணிகளை செய்து முடிக்கும்பொருட்டு அணையின் நீர் மட்டம், அதன் முழு நீர் மட்ட அளவான 152 அடியிலிருந்து தற்காலிகமாக 136 அடியாகக் குறைக்க முடிவெடுக்கப்பட்டது.

அவசரகால மற்றும் இடைக்கால நடவடிக்கையாக பலப்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர், முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என மத்திய நீர்க் குழுமம் 29-04-1980-ல் பரிந்துரைத்தது. ஆனால், அணையை பலப்படுத்திய பின்பும், கேரள அரசு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 145 அடியாக உயர்த்துவதற்கு ஏற்றுக்கொள்ளாமல், அணையின் நீர்மட்டம் எப்பொழுதும் 136 அடியிலேயே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

இதற்குத் தீர்வு காண, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு (Writ Petition) மற்றும் அதனுடன் தொடர்புகொண்ட மனுக்களின் மீது, உச்ச நீதிமன்றம் 27-02-2006 அன்று இறுதித் தீர்ப்பு அளித்தது. அதில், தமிழ்நாடு அரசு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட அணையின் நீர் மட்டத்தை, 136 அடியிலிருந்து முதலில் 142 அடிக்கு உயர்த்தலாம் எனவும் மற்றும் மத்திய நீர்க் குழுமத்தின் பரிந்துரையின்படி, பேபி அணை (Baby Dam) மற்றும் மண் அணையினை (Earthern Dam) பலப்படுத்தும் பணியினை மேற்கொள்ளலாம் எனவும், தமிழ்நாடு இப்பணிகளை மேற்கொள்வதை கேரள அரசும் அதன் அலுவலர்களும் தடுத்து நிறுத்தாமல் இருக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது. உச்ச நீதிமன்றம் அதன் இறுதித் தீர்ப்பில், மத்திய நீர்க் குழுமத்தின் பரிந்துரையின்படி, அணையை



2013 ஏப்ரல் 18]

பலப்படுத்திய பின், நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்துவதற்கு அனுமதிக்கும் முன், வல்லுநர்கள் அணையின் பாதுகாப்பை ஆய்வு செய்வார்கள் என்றும் கூறியுள்ளது.

உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியவுடன், கேரள அரசு 18-03-2006-ல் அதன் கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் சட்டம் 2003-ற்கு சில திருத்தங்களைச் செய்து "கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம், 2006" என்ற சட்டத்தினை இயற்றி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்த முடியாதபடி செய்தது. இந்த திருத்திய சட்டத்தில், முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர் மட்ட அளவு 136 அடி (FRL as 136 ft.) என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத் திருத்தம் முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில், அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது எனவே, இது செல்லத்தக்கதல்ல என உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 31-03-2006 அன்று சிவில் வழக்கை (O.S.No. 3 of 2006) தாக்கல் செய்தது.

இவ்வழக்கில், 25-09-2006-ல் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியவாறும், அதனைத் தொடர்ந்து 23-10-2006-ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படியும், 29-11-2006 அன்று மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் புதுடில்லியில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் கேரள அமைச்சர்கள் அளவிலான பேச்சு வார்த்தை 18-12-2006 அன்று நடைபெற்றது. பின்னர், மத்திய அரசின் நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மற்றும் கேரள முதலமைச்சர்களின் கூட்டம், 19-12-2007 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் ஒருமித்த கருத்து ஏதும் ஏற்படவில்லை.

உச்ச நீதிமன்றம் 13-12-2007 அன்று வழக்கினை முடிவு செய்ய இனங்களை (Famed issues) முடிவு செய்தது. உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய சிறப்பு அமர்வு முன், 21-10-2009 முதல் 10-11-2009 வரை வாதங்கள் நடைபெற்றபோது, இந்த வழக்கில் சில அரசமைப்பு சட்டப் பிரிவுக்கூறுகள் மீது விளக்கங்கள் தேவைப்படுவதால், ஐந்து நீதிபதிகளைக்கொண்ட அரசியல் சாசன

சட்ட அமர்வுமுன் இவ்வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்று இந்த சிறப்பு அமர்வு கருதியது. மேலும், 10-11-2009 அன்று உச்ச நீதிமன்றம் பின்வருமாறு ஆணையிட்டது:—

"இருமாநில அரசுகளும் அன்றைய தினம் உள்ள நிலையைத் (Status quo) தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். தமிழ் நாடு அரசு முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்குத் தடையேதும் இல்லை".

பின்னர் அமைக்கப்பட்ட ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்ட அமர்வு, 20-01-2010 முதல் வாதங்களைக் கேட்டபிறகு, 18-02-2010 அன்று ஓய்வுபெற்ற, உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர். ஏ.எஸ். ஆனந்த் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஓர் அதிகாரம்படைத்த குழுவினை (Empowered Committee) ஏற்படுத்த மத்திய அரசிற்கு உத்தரவிட்டது. இக்குழு, சட்டப் பிரச்சினையைத் தவிர்த்து, மற்ற அனைத்து இனங்களையும் ஆராய்ந்து, கூடுமானவரையில், ஆறு மாதத்திற்குள் அறிக்கையை அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் 27-02-2012 ஆணையின்படி, இக்குழுவின் காலம் ஏப்ரல் 30, 2012 வரை நீட்டிக்கப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள் தங்களுடைய மனுவை அதிகாரம் படைத்த குழுவின்முன் சமர்ப்பித்தது. இந்தக் குழு 5 இனங்களைப் (framed issues) பட்டியலிட்டது. அதில் கேரள அரசின் புதிய அணை கட்டும் திட்டமும் ஓர் இனமாகும் (issue). மத்திய நீர்க் குழுமத்தின் ஆலோசனைக்கிணங்கவும், கேரள அரசின் இசைவுடனும், முல்லைப் பெரியாறு அணையில் பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, இவ்வணை புதிய அணைபோல் செயல்பட்டுவருகிறது; எனவே, கேரள அரசு கருதியுள்ளவாறு, புதிய அணை கட்டத் தேவையில்லை என்று உச்ச நீதிமன்றம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின்முன் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியது.

இந்த அதிகாரம் படைத்த குழுவின்கீழ், அணையின் வலுத்தன்மையை சோதிக்க களச் சோதனைகள் மற்றும் சோதனைக் கூடங்களில் செய்யக்கூடிய சோதனைகள் மற்றும் ஆய்வுகளை மத்திய நீர்க் குழுமம் (Central Water Commission),





மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (Central Soil and Meterial Research Station), மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையம் (Central Water and Power Research Station),மற்றும் சில நிறுவனங்கள் மூலம் செய்ய வேண்டி இருந்ததால் அவற்றை ஒருங்கிணைத்து நடத்த ஒரு குழுவை (Committee to Coordinate-CTC) அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் உறுப்பினராக உள்ள டாக்டர் திரு. சி.டி. தட்டே அவர்களின் தலைமையில் நியமித்தது. தமிழ்நாடு அரசு, இந்த ஒருங்கிணைப்புக் குழு கேட்டுக் கொண்டுள்ள பல சோதனைகள் மற்றும் ஆய்வுகளைச் செய்து முடித்தது.

கேரள காவலர்கள் தற்பொழுது முல்லைப் பெரியாறு அணையினைப் பாதுகாப்பதற்குப் பதிலாக மத்திய தொழில் பாதுகாப்புப் படையினை (Central Industrial Security Force) அனுப்பி வைக்க வேண்டுமென்று மத்திய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கேரள அரசு, அணைக்குப் போதுமான பாதுகாப்பு கேரள காவல் மற்றும் வனத் துறைகளால் அளிக்கப்பட்டு வருகிறது என்றும், இதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அளித்த வாக்குறுதி மற்றும் மத்திய உள் துறை அமைச்சகம், மத்திய படையினை நீதிமன்ற ஆணையின்படியோ அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத்தின் கோரிக்கைக்கேற்பவோ தான் அணையை பாதுகாக்க அனுப்பிவைக்க இயலும் என்று தெரிவித்த நிலையில், உச்ச நீதிமன்றம் இதற்கான உத்தரவு ஏதும் தேவையில்லை எனக் கருதி தமிழ்நாடு தாக்கல் செய்த மனுவினை (மனு எண். 19/2011) முடிவுக்குக் கொண்டுவருவதாக (disposed off) 15-12-2011 அன்று ஆணை பிறப்பித்தது.

முல்லைப் பெரியாறு அணையின் தற்போதைய நீர்மட்டமான 136 அடியிலிருந்து 120 அடியாகக் குறைக்க வேண்டுமென்று, 06-12-2011 அன்று கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இடைக்கால மனுவினை (I.A.20/2011), கேரள அரசு திரும்பப் பெறுவதாகவும், இது குறித்து அதிகாரம் படைத்த குழு முன் மனு தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்ததன்பேரிலும், அம்மனு 13-12-2011 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதனையே வலியுறுத்தி, கேரள அரசு, அதிகாரம் படைத்த குழுவின்முன் 15-12-2011 அன்று மனு ஒன்றினை தாக்கல் செய்தது. ஆனால், இக்குழு இந்த மனுவின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 10-12-2011 அன்று முல்லைப் பெரியாறு அணை பற்றிய அனைத்து விவரங்களையும் விளக்கி, இரு மாநிலங்களும் சுமூகமான உறவினை நிலை நிறுத்தி பேணுவதற்கு உறுதி பூண்டுள்ளதால், இரு மாநிலங்களின் நலனைக் கருதி, எந்த ஒரு பிரிவினை சக்திகளுக்கும் இடம் தராமல் இருக்க வேண்டும் என கேரள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழ்நாட்டின் ஒருமித்த நிலைப்பாட்டினை எடுத்துரைப்பதற்காக, 15-12-2011 ஆம் நாளன்று, இம்மாமன்றம் நிறைவேற்றிய தீர்மானம் மத்திய அரசின் தகவலுக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் அனுப்பிவைக்கப்பட்டது.

அதிகாரம் படைத்த குழுவின் கூட்டம் 02-01-2012 மற்றும் 03-01-2012 அன்று நடைபெற்றது. 02-01-2012 அன்று தமிழ்நாடு மற்றும் கேரள வழக்குரைஞர்களின் வாதங்கள் அதிகாரம் படைத்த குழுவின்முன் வைக்கப்பட்டன. அப்போது தமிழ்நாட்டின் சார்பில், தற்பொழுது பலப்படுத்தப்பட்டுள்ள அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளதாலும், புதிய அணை போல் செயல்படுவதாலும், கேரள அரசு கருதியுள்ளவாறு புதிய அணை தேவையில்லை என்றும், உச்ச நீதிமன்றத்தின் 27-02-2006 நாளிட்ட ஆணையின்படி, 142 அடி வரை நீரைத் தேக்கி வைக்க தமிழ் நாட்டிற்கு அனுமதி வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

கேரள அரசு, அதிகாரம் படைத்த குழுவின்முன் மீண்டும் ஒரு மனுவினை 10-1-2012 அன்று தாக்கல் செய்தது. இதில் புதிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கப் பட்டிருந்தது. இதற்கான பதில் மனு 23-1-2012 அன்று தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்டது. தற்போதைய முல்லைப் பெரியாறு அணை, புதிய அணை போல் செயல்படுவதால், புதிய அணை கட்டத் தேவையில்லை என மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

புதுதில்லியிலுள்ள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், (National Disaster Management Authority) கேரள அரசின் கோரிக்கையினை ஏற்று முல்லைப் பெரியாறு மற்றும் கீழ்ப் பகுதிகளில் ஏற்படக்கூடிய எதிர்பாரா நிகழ்விற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றினை அதன் 12-12-2011 ஆம் நாளிட்ட ஆணையின் வாயிலாக ஏற்படுத்தியது. நீதிமன்ற விசாரணையில் உள்ள நிலையில் இம்மாதிரியான





ஆய்வினை மத்திய அரசு மேற்கொள்வதற்கான தருணம் இல்லை. அவ்வாறு மேற்கொள்ளப்படுமாயின் தேவையற்ற கருத்து மாறுபாடுகளை உருவாக்கும் என்பதால், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் 12-12-2011 அன்று ஏற்படுத்தியுள்ள வல்லுநர் குழுவினைத் திரும்பப் பெறவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-12-2011 அன்று பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தனது 22-12-2011 ஆம் நாளிட்ட ஆணையில், அதிகாரம் படைத்த குழு உச்ச நீதிமன்றத்திற்கு அறிக்கை தாக்கல் செய்யும் வரையில் மேற்குறிப்பிட்டுள்ள வல்லுநர் குழுவின் பணிகளை நிறுத்தி வைத்துள்ளது (kept in abeyance) என தெரிவித்தது.

பாரதப் பிரதமர் 25-12-2011 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது, **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றினை அளித்தார்கள். அம்மனுவில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் கீழ்க்காணும் கோரிக்கைகளின்மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்:—

i. உச்ச நீதிமன்றம் 27-2-2006 ஆம் நாளிட்ட ஆணையில் முதற்கட்டமாக 136 அடியிலிருந்து 142 அடிக்கு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தலாம் என்று வழங்கிய ஆணையை கேரள அரசு மதித்து செயல்படுத்துவதற்கும், தேவையான திருத்தங்களை கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் (திருத்தம்) சட்டம், 2006-ல் கொண்டுவருவதற்கும் கேரள அரசிற்கு அறிவுரை வழங்குதல்;

ii. வலுப்படுத்தப்பட்ட முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாகவும், நல்ல முறையிலும் செயல்பட்டு வருவதால் கேரள அரசு புதிய அணை கட்டுவதை மேற்கொள்ளக்கூடாது என கேரள அரசிற்கு அறிவுறுத்துதல்;

iii. மத்திய நீர்க் குழுமம் தெரிவித்த பரிந்துரைகளில் மீதம் உள்ள பலப்படுத்தும் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு மேற்கொள்வதற்கு கேரள அரசு இடையூறு ஏதும் ஏற்படுத்தாமல் தமிழ்நாடு அரசிற்கு இப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு அளிக்க கேரள அரசிற்கு அறிவுறுத்தல்;

[2013 ஏப்ரல் 18

iv. குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை கேரள அரசு அகற்றுவதற்கான அறிவுரை வழங்குதல்;

v. குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணை மற்றும் அதனைச் சார்ந்த கட்டுமானங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய தொழிற்பாதுகாப்புப் படையினை அனுப்பிவைத்தல்; மற்றும்

vi.. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் முல்லைப் பெரியாறு அணையின் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்புத்தன்மை திட்டத்தை (Contingent Response Plan) உருவாக்க ஏற்படுத்தப்பட்ட "வல்லுநர்கள் அடங்கிய குழு" (Team of Experts) அறிவிப்பை திரும்பப் பெற வேண்டுதல்.

கேரள அரசு முல்லைப் பெரியாறு அணை மற்றும் அதிலிருந்து கேரளப் பகுதிக்குச் செல்லும் நீரைக் கண்காணிப்பதற்காக மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்கவும் அவ்வாறு ஒப்பந்தம் ஏற்கெனவே ஏற்பட்டிருப்பின், அதனை ரத்து செய்யுமாறும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 9-2-2012 அன்று பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதே நாளன்று, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சகத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கேரள அரசு மத்திய அரசுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதை தடைசெய்யக் கோருதல் போன்றவற்றை உள்ளடக்கிய கோரிக்கை கொண்ட ஓர் இடைக்கால மனுவினை தமிழ்நாடு 2-3-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

அதிகாரம் படைத்த குழு அதன் அறிக்கையை 25-04-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. அக்குழு, இந்த அறிக்கையில் முல்லைப் பெரியாறு அணை நீரியல் ரீதியாகவும், கட்டுமான ரீதியாகவும், பூகம்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் தாங்கும் அளவுக்கு வலுவாக உள்ளது எனவும் நீர் மட்டத்தை 142 அடி வரை உயர்த்தலாம் எனவும் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றம், 23-07-2012 நாளிட்ட ஆணையில், தமிழ்நாடு அரசு, பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று ஆணையிட்டது. அதன்படி, சிற்றணையின் மேற்பகுதியில்



2013 ஏப்ரல் 18]

தேய்வடைந்துள்ள இடங்களில் மறுபடியும் கற்காரை பாவுதல் என்ற பராமரிப்புப் பணி (Redaying the wearing coat over the Baby dam) மற்றும் நீர்க்கசிவுத் துவாரங்களில் சேர்ந்த படிமங்களை அகற்றும் (Reaming the drainage holes) பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்ற பராமரிப்புப் பணிகள், வரக்கூடிய பாசனம் அல்லாத பருவ காலத்தில் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 8-1-2012 அன்று லோயர் கேம்ப்பில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய வளாகப் பகுதியில் சுமார் 2,500 சதுர அடி பரப்பில், கர்னல் ஜெ. பென்னிகுவிக் அவர்களது திருவுருவச் சிலையுடன் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, இம்மணிமண்டபம் கட்டி முடிக்கப்பட்டு, இம்மணிமண்டபத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-01-2013 அன்று திறந்து வைத்தார்கள்.

உச்ச நீதிமன்றம் 9-4-2013 அன்று இவ்வழக்கின் இறுதி விசாரணையை 23-7-2013 முதல் தொடங்கலாம் என்று ஆணையிட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலனைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

### 3.5 பாலாறு

ஆந்திர மாநிலத்தில், சித்தூர் மாவட்டத்தில், குப்பம் வட்டத்தில் கணேசபுரம் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகளை ஆந்திர அரசு உத்தேசித்திருந்தது. இத்திட்டம் நிறைவேறினால் பாலாற்றை நம்பி உள்ள தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்கள் மற்றும் நகரங்களின் குடிநீர் மற்றும் பாசன நீருக்குப் பாதிப்பு ஏற்படும். ஆதலால், இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 10-02-2006 அன்று ஒரு சிவில் வழக்கினை (Original Suit- O.S.No.2 / 2006) தாக்கல் செய்தது.

இவ்வழக்கில் 07-01-2008 அன்று உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டின் கோரிக்கையினை ஆந்திர அரசுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு முடிவெடுக்கவும் மற்றும் இரு மாநிலங்களுக்கு இடையேயுள்ள பிரச்சினையினைத் தீர்த்து வைக்கலாம் என்றும் உத்தரவு பிறப்பித்தது.

[2013 ஏப்ரல் 18

இந்த உத்தரவிற்கிணங்க, மத்திய நீர்க் குழுமத் தலைவர், இரு மாநிலங்களுக்கிடையே பேச்சு வார்த்தையை 11-03-2008 அன்று புதுதில்லியில் நடத்தினார். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரையில், ஆந்திர அரசு நீர்த்தேக்கம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று மத்திய நீர்க் குழுமம் எடுத்துரைத்தது. பாலாறு படுகைக்கான நீரியல் ஆய்வு பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட கூட்டு ஆய்வுக் குழு பாலாறு படுகை ஒரு பற்றாக்குறைப் படுகை என உறுதி செய்துள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு, மத்திய நீர்வள ஆதார அமைச்சக செயலாளர், 26-05-2011 அன்று தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச அரசுகளின் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டினார். இரு மாநில விவாதங்களின் முடிவில், இப்பிரச்சினைகள் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்வு காண இயலாததால், உச்ச நீதிமன்றத்துக்கு தன்னுடைய கருத்தைத் தெரிவித்தார்.

இதற்கிடையில், உச்ச நீதிமன்றம் இவ்வழக்கின் இனங்களைப் பட்டியலிட்டது. உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கு 04-07-2011 அன்று விசாரணைக்கு வந்தபோது, சாட்சியாளர்களைப் பட்டியலிடுமாறு உத்தரவிட்டது. இதற்கிணங்க, தமிழ்நாட்டின் சாட்சியாளராக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவ்வாறே ஆந்திர அரசும் சாட்சியாளராக ஒருவரை நியமித்துள்ளது. உச்ச நீதிமன்றம், ஜூலை 2013-ல், சாட்சிகளின் குறுக்கு விசாரணையை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளது. சாட்சியாளர்களைக் குறுக்கு விசாரணை செய்யவும் மற்றும் இரு மாநிலங்களின் வாத பிரதிவாதங்களைக் கேட்டு, உச்ச நீதிமன்றம் முடிவு மேற்கொள்ளும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு, பாலாறு நதியை நம்பியுள்ள விவசாயிகள் மற்றும் மக்களின் நலன் கருதி தேவையான எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

### 3.6 பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம்—ஒப்பந்த மறு ஆய்வு

மேற்கு நோக்கி ஓடுகின்ற எட்டு நதிகளில், அதாவது, மலைப் பகுதியில் செல்லுகின்ற ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், அதன் கிளை நதிகளான பெருவாரிப்பள்ளம் மற்றும் தூணக்கடவு மற்றும் சமவெளிப் பகுதியில் ஓடுகின்ற ஆழியாறு



2013 ஏப்ரல் 18]

மற்றும் பாலாறு ஆகிய நதிகளில் கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும்வகையில் பரம்பிக்குளம் ஆழியாறு என்ற பன்நோக்குத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கேரள அரசின் இசைவு மற்றும் ஒத்துழைப்புடன் பயன்களைப் பகிர்ந்து கொள்ளும்பொருட்டு நிறைவேற்றப்பட்டது. கேரள மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுக்கு இடையே 29-05-1970 அன்று மேற்குறிப்பிட்டுள்ள நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு 09-11-1958 முதல் முன் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மாவட்டமும் பயனடைகிறது. இந்த ஒப்பந்தம் 09-11-1988 அன்று மறு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதன்படி இரு மாநிலங்களும் இந்த ஒப்பந்த மறு ஆய்விற்கான ஆவணங்களை 21-09-1989 அன்று பரிமாற்றம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் மறு ஆய்விற்குப் பின்னர் 30 ஆண்டுகள் தொடர்வதற்காக அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நிலையில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

சென்னையில் 10-06-2002 அன்று கேரள—தமிழ்நாடு அரசு அமைச்சர்கள் நிலையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒருமித்த மறு ஆய்வினை மேற்கொள்வதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக இவ்வொப்பந்தத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைக் கண்டறியும் பொருட்டு, பொறியாளர்கள் அடங்கிய ஒரு தொழில்நுட்பக் குழு ஏற்படுத்தவும், அதனை அரசு மட்டத்தில் ஆய்வு செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது. இத்தொழில்நுட்பக் குழு தனது அறிக்கையினை மே, 2003 ஆம் ஆண்டு அளித்தது. இவ்வறிக்கை 10-11-2003 அன்று சென்னையிலும் மற்றும் 04-01-2004 அன்று திருவனந்தபுரத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் விவாதிக்கப்பட்டன.

கேரள அரசுடன் மேற்கொள்ளப்பட்ட நீண்ட கடித போக்குவரத்திற்குப் பிறகு 30-05-2008 அன்று திருவனந்தபுரத்தில் நடந்த இரு மாநில தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒப்பந்த மறு ஆய்வு குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில், கூடுதல் விவரங்கள் மற்றும் புள்ளிவிவரங்களைப் பரிமாறிக் கொள்ளவும், அடுத்த கூட்டத்தை சென்னையில் வைத்துக்

[2013 ஏப்ரல் 18

கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. சென்னையில் 27-2-2009 அன்று நடந்த கூட்டத்தில், இரு மாநிலங்களின் அரசுச் செயலாளர் நிலையில் கூட்டத்தைக் கூட்டி அந்தந்த மாநிலங்களின் எல்லா இனங்களையும் (Issues) ஆராய்ந்து ஒரு தொகுப்பாக தயாரித்து இருமாநில அமைச்சர்களிடம் அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. இம்முடிவின்படி, 8-4-2009-ல் திருவனந்தபுரத்திலும், 24-4-2009 மற்றும் 25-4-2009 ல் சென்னையிலும் அரசுச் செயலாளர் நிலையில் கூட்டங்கள் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக திருவனந்தபுரத்தில் 21-1-2011 அன்று தலைமைச் செயலாளர்கள் நிலையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு மேல் நடவடிக்கை தொடரலாம் என முடிவுகள் எடுக்கப்பட்டன:—

**(அ) ஆனைமலையாறு:**

**ஆனைமலையாற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்கு திருப்புதல்:**

கேரள அரசு, இத்திட்டத்தினை தானே செயல்படுத்த விரும்புவதாகக் கூறி, அதனைச் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூற்றினைத் தெரிவித்து இத்திட்டத்திற்கான அறிக்கை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், அதன் மீதான தமிழ்நாட்டின் கருத்துக்களை இரண்டு மாத காலத்திற்குள் அளிக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், அதன் திட்ட அறிக்கை இதுவரையில் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இவ்வினம் குறித்து மேலும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(ஆ) மணக்கடவு:**

கேரள அரசு, மணக்கடவில் அளிக்கப்பட்டு வரும் அதன் நீரின் பங்கை 7.25 டி.எம்.சி. அடியிலிருந்து 12.00 டி.எம்.சி. அடியாக நீர் உயர்த்தி அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டது.

**(இ) மணக்கடவின் மேற்பகுதியில் சமச்சீர் நீர்த்தேக்கம் (0.50 டி.எம்.சி. அடி) (Balancing Reservoir):**

கேரளாவிற்கு நீர் செல்வதை முறைப்படுத்த தற்பொழுது உள்ள மணக்கடவு அணைக்கட்டின் மேல் பகுதியில் 0.50 டி.எம்.சி. அடி



2013 ஏப்ரல் 18]

கொள்ளளவு கொண்ட ஒரு சமச்சீர் நீர்த்தேக்கம் அமைக்கும் தமிழ்நாட்டின் திட்டத்தினை கேரள அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு உள்ள ஆண்டு ஒன்றிற்கு 7.25 டி.எம்.சி.-க்கும் கூடுதலான நீரை மணக்கடவிலிருந்து கேரளாவிற்கு அளிப்பது குறித்து தமிழ்நாடு பரிசீலிக்க இயலுமென எடுத்துரைக்கப்பட்டது.

**(ஈ) நீராறு—நல்லாறு நேரிணைப்பு:**

தமிழ்நாடு அரசு, நீராறு அணையிலிருந்து திருமூர்த்தி அணைக்கு மட்டக் கால்வாய்மூலம் சுற்றுப் பாதையில் நீரைக் கொண்டு செல்வதையும், அதன் வாயிலாக ஏற்படும் நீர் இழப்பையும் தவிர்க்கும் பொருட்டு, நீராறு-நல்லாறு நேரிணைப்புத் திட்டத்தைச் செயல் படுத்த வேண்டுமென வலியுறுத்தியது. இத்திட்டத்தில் நல்லாற்றின் குறுக்கே 7 டி.எம்.சி அடி நீரைத் தேக்கி வைக்க ஒரு நீர்த்தேக்கம் அமைக்கவும் மற்றும் இத்திட்டத்தின்கீழ் நீர் மின் திட்டம் செயல்படுத்தவும் வழிவகை உள்ளது. இத்திட்டத்திற்காக கேரள அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. ஆனால், இந்தத் திட்டமானது மறு ஆய்விற்கு அப்பாற்பட்டது எனத் தெரிவித்து, கேரள அரசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், இத்திட்டத்தினால் கேரள அரசிற்குக் கிடைக்கக்கூடிய பயன்கள் குறித்த விவரத்தை அவ்வரசின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டது.

இக்கூட்டத்திற்கான நடவடிக்கைக் குறிப்பினை உறுதி செய்வதற்காக கேரள அரசு தனது 10-2-2011 ஆம் நாளிட்ட கடிதத்தின்வாயிலாக இவ்வரசின் இசைவினைக் கோரியது. நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் நடவடிக்கைக் குறிப்பில் ஒரு சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமென இவ்வரசு 1-3-2011 ஆம் நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேரள அரசிற்குத் தெரிவித்து, இறுதியாக்கம் செய்யப்பட்ட நடவடிக்கைக் குறிப்பினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கேரள அரசு சில கூடுதல் விவரங்களுடன்கூடிய நடவடிக்கைக் குறிப்பினை மீண்டும் அனுப்பி வைத்ததை இவ்வரசு ஏற்றுக்கொள்ள இயலாது என்று அவ்வரசிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக்கம் செய்யப்பட்ட நடவடிக்கைக் குறிப்பு, கேரள அரசிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை.

[2013 ஏப்ரல் 18

தமிழ்நாடு அரசு இவ்வொப்பந்த மறு ஆய்வினை விரைந்து இறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**3.7 நெய்யாறு பிரச்சினை**

நெய்யாறு பாசனச் திட்டம் இரு கட்டங்களாக திருவாங்கூர்-கொச்சி அரசால் திட்டமிட்டு கட்டி முடிக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு மாநிலங்களைத் திருத்தியமைக்கும் சட்டத்தின்படி (States Reorganisation Act, 1956) விளவங்கோடு வட்டத்தில் உள்ள 9,200 ஏக்கர் பாசனப் பரப்பு தமிழ்நாட்டின், கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, மத்திய அரசு மற்றும் கேரள அரசின் இசைவோடு, மேற்கூறிய விவசாய நிலங்களுக்கு, பாசன வசதிக்காக கால்வாய்ப் பணிகளை தமிழ்நாடு அரசு செய்தது. இத்திட்டம் 1965 ஆம் ஆண்டிலிருந்து செயல்பாட்டில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள இப்பகுதிக்கு நெய்யாறு இடதுபுறக் கால்வாய்மூலம் கேரள அரசு தண்ணீர் அளித்தபோதிலும், அதனுடைய பாசனத் தேவையான 150 கன அடி நீரைவிடக் குறைவாகவே தந்தது. இருப்பினும், பிப்ரவரி 2004 முதல் தண்ணீர் தருவதை கேரள அரசு முற்றிலும் நிறுத்தி விட்டது.

மாநிலங்களைத் திருத்தி அமைத்த பிறகு, கேரள அரசு 1957 ஆம் ஆண்டு, இத்திட்டம் நிறைவேற்றத்திற்கான தொகை பகிர்விற்காக சென்னை அரசாங்கத்தின் இசைவைப் பெற விரும்பியது. இத்தொகை பகிர்வு குறித்து 1-2-1965 அன்று கேரள அரசு ஒப்புதல் அளித்தது. இதற்கிணங்க, தமிழ்நாடு அரசு 1971 இல் இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு மற்றும் தமிழ்நாட்டிற்கு நீரை வழங்குவதற்கான ஒரு வரைவு ஒப்பந்தத்தைத் தயாரித்து கேரள அரசின் இசைவைத் தொடர்ந்து கோரி வந்தது. இத்திட்டத்திற்கான செலவினைப் பகிர்ந்துக் கொள்வதை கேரள அரசு ஏற்றுக்கொண்டபோதிலும், தமிழ்நாடு தயாரித்த வரைவு ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. நெய்யாறு ஒரு பன்மாநில நதி அல்ல, எனவே, தமிழ்நாட்டுடன் ஒப்பந்தம் ஏதும் தேவையில்லை என்ற அதன் ஒரு நிலைப்பாட்டை முதன்முதலாக 1999-ல் கேரள அரசு தெரிவித்தது.



2013 ஏப்ரல் 18]

நெய்யாறு அணைப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டி மத்திய அரசைத் தொடர்ந்து தொடர்பு கொண்டபோது, மத்திய அரசு 2003-ல், இரு மாநிலங்களுக்கிடையே 13-2-2003 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படியும், மத்திய நீர்க் குழுமத்தின் உதவி எப்பொழுது தேவைப்படுகிறதோ, அதன் உதவியுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம் என்றும் தெரிவித்தது.

இதன்பிறகு நீண்ட கடிதப் போக்குவரத்துக்குப் பின்னர், கேரள அரசு, கேரள சட்டமன்றத்தில் 18-10-2006 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தமிழ்நாட்டிற்கு அளிக்கும் நீருக்குக் கட்டணம் (Charges) கொடுத்தால் தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கப்படும் என்று 2007-ல் தெரிவித்தது. ஆனால், நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்பதால், 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதி நீர்த் தாவாச் சட்டம் பிரிவு 7-ன்படி தண்ணீர் வழங்குவதற்கு கட்டணம் அல்லது வேறு எந்தவித தொகையும் அளிப்பது என்ற கேள்வியே எழாது என்ற நிலையை தமிழ்நாடு கேரள அரசுக்குத் தெரிவித்தது.

நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்று தமிழ்நாடு மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் வரைபடம் (Topo Sheets) மூலம் சுமார் 12.90 சதுர கி.மீ. நெய்யாறு நீர்ப் பிடிப்புப் பகுதி, தமிழக எல்லையில் நதியின் தலைப்பகுதியில் (Head Reaches) இருக்கிறது என்று தமிழ்நாடு அரசு நிரூபித்தபோதிலும், கேரள அரசு, நெய்யாறு ஒரு பன்மாநில நதி அல்ல என்ற நிலையை மீண்டும் வலியுறுத்தியது. இருப்பினும், தமிழ்நாடு அரசின் நிலைப்பாடான நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்பதற்கு எந்தவித பாதகமும் ஏற்படாத வகையிலும், விளவங்கோடு பாசன விவசாயிகளின் நலன் கருதியும், மீண்டும் ஒரு புதிய வரைவு ஒப்பந்தம் கேரள அரசின் இசைவு வேண்டி 19-5-2009 ஆம் நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், கேரள அரசு தமிழ்நாடு அரசு 19-5-2009 அன்று அனுப்பிய புதிய வரைவு ஒப்பந்தத்திற்கு கருத்துக்கள் ஏதும் தெரிவிக்காமல் தன்னிச்சையாக ஒரு புதிய வரைவு ஒப்பந்தத்தினை தனது 11-1-2010 ஆம் நாளிட்ட கடிதத்தின்மூலம் இவ்வரசுக்கு அனுப்பி வைத்தது. இது தமிழ்நாடு அரசின் நலனுக்கு பாதகமாக இருந்ததால், இவ்வரைவு ஒப்பந்தத்தை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. கேரள முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தத்தினை இறுதி செய்வதற்கு தொழில்நுட்ப அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றை

[2013 ஏப்ரல் 18

பேச்சுவார்த்தை நடத்த அனுப்பவேண்டி கேட்டுக் கொண்டதற்குயிணங்க, திருவனந்தபுரத்தில், 6-5-2011 அன்று தமிழ்நாடு தொழில்நுட்ப அலுவலர்கள் அடங்கிய குழு பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய இனங்கள் குறித்து எவ்விதத் தீர்வும் ஏற்படவில்லை.

இதற்கிடையில், இப்பிரச்சினை குறித்து மத்திய அரசு தலையிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் மத்திய அரசிடமிருந்து எந்தவித சாதகமான பதில் வரப்பெறாத நிலையிலும், கேரள அரசுடன் ஒப்பந்தம் ஏற்பட முடியாததாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில், 30-5-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. இவ்வழக்கில் தமிழ்நாட்டிற்கு, நெய்யாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட கோரப்பட்டுள்ளது.

நெய்யாறு பாசனத் திட்டத்தின்கீழ் உள்ள விளவங்கோடு பாசன விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்து நீரைப் பெற்றுத் தர தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**3.8 செண்பகவல்லி அணையைச் சீரமைத்தல்:—**

கேரள எல்லையில் பெரியாறு வடிநிலத்தில் புளியம்பட்டிதோடு மற்றும் சொக்கம்பட்டிதோடு ஆகிய இரு ஓடைகள் கூடுமிடத்தில் தமிழகம் நோக்கி தண்ணீர் திருப்பிவிட ஏதுவாக, தமிழ்நாட்டின் மேற்கு எல்லையில் செண்பகவல்லி அணை கட்டப்பட்டது. இந்த அணை கி.பி. 1773 முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்த அணையிலிருந்து சிவகிரி வட்டத்தில் உள்ள முக்கியமான இரு ஏரிகளான குலசேகரப்பேரி மற்றும் இராசிங்கப்பேரி ஏரிகளுக்கு நீர் திருப்பி விடப்பட்டு, சுமார் 10,924 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது.

எளிதில் செல்ல முடியாத வனப் பகுதியில் இந்தச் சிறு அணை அமைந்திருப்பதால் இதன் வாய்க்கால் பழுதுபட்டிருந்தது. எனவே, 1959-1962-ல் தமிழ்நாடு அரசு ரூ.3.25 இலட்சத்திற்கு பராமரிப்புப் பணிகளைச் செய்தது. மீண்டும் 1971 ஆம் ஆண்டு இவ்வணை பழுதுபட்டதால் அதனைப் புனரமைக்க கேரள அரசு அளித்த மதிப்பீட்டின்படி, ரூ.5.15 இலட்சம் (50 சதவீதம்) தொகை முன்பணமாக 1986-ல் கேரள அரசிற்குச் செலுத்தப்பட்டது.



2013 ஏப்ரல் 18]

பெரியாறு புலிகள் சரணாலயத்தின் முக்கியப் பகுதியில் (Core Zone of Periyar Tiger Reserve) செண்பகவல்லி அணைக்கட்டு உள்ளதால் வனத் துறை தடைசெய்வதாகக் கூறி இவ்வணையைச் சீரமைக்கும் பணியை மேற்கொள்ள இயலவில்லை என கேரள அரசு தெரிவித்து, டிசம்பர் 2005 இல் ரூ.5.15 இலட்சத்தை கேரள அரசு தமிழக அரசிற்குத் திருப்பி அளித்தது.

இதற்கிடையில், சிவகிரி விவசாயிகள் சங்கம், சென்னை உயர் நீதிமன்றத்தில் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசையும் கேரள அரசையும் கன்னியா மதகு கால்வாயையும், செண்பகவல்லி அணைக்கட்டையும் பழுதுபார்க்கக் கோரி ஆணையிடுமாறு வழக்கு ஒன்றைத் (W.P.No.1274/2006) தாக்கல் செய்தது. இவ்வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் 20-7-2006 அன்று இதுபற்றி மீண்டும் பரிசீலிக்குமாறு கேரள அரசுக்கு அறிவுறுத்தி ஆணை வழங்கியது.

இதற்கிணங்க, கேரள அரசு செப்டம்பர் 2006-ல் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை ஆய்வு செய்து, தன் நிலைப்பாட்டை மறு பரிசீலனை செய்யும் நிலையில் இல்லை எனத் தெரிவித்தது.

செண்பகவல்லி அணைக்கட்டுவாயிலாக பாசனப் பயன்பெறும் விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்பதால், கேரள அரசு இவ்வணையினைச் சீரமைக்கும் பணியை மேற்கொள்ளவோ அல்லது தமிழ்நாடு அரசு இப்பணியினை மேற்கொள்ளவோ தகுந்த அறிவுரையினை கேரள அரசுக்கு வழங்கிடவும், அவ்வாறு கேரள அரசு பணியினை மேற்கொள்ளுமாயின் அதற்கான செலவினை தமிழ்நாடு அரசு ஈடுசெய்யும் என்று மத்திய அரசுக்கு 1-8-2011 அன்று தெரிவித்து, இதற்கான அறிவுரைகளை கேரள அரசுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, 20-12-2011 முதல் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு பல கடிதங்கள் அனுப்பியது. ஆனால் மத்திய அரசிடமிருந்து எவ்வித சாதகமான பதிலும் பெறப்படவில்லை.

மத்திய அரசு மற்றும் கேரள அரசுடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயன்று வருகிறது.

[2013 ஏப்ரல் 18

### 3.9. நதிகள் இணைப்பு

மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு

மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவிரி-வைகை-குண்டாறு நதிகளை இணைக்க தேசிய நீர் மேம்பாட்டு முகமை (National Water Development Agency) சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரித்துள்ளது. மகாநதி மற்றும் கோதாவரி நதிகளில் உள்ள நீர்த் தேவையை முற்றிலும் பூர்த்தி செய்தபின் 925 டி.எம்.சி. அடி நீர் மிகையாக இருப்பதாக இம்முகமை கணக்கிட்டுள்ளது. இந்த மிகை நீரை பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை பயன்பாடு போன்ற பல்வேறு பயன்களுக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசமாக 2.10 மில்லியன் எக்டேர் கூடுதல் பாசனம் பெறுவதுடன், மொத்தம் 3.00 மில்லியன் எக்டேர் பாசன வசதி பெறும். மேலும், கணிசமான கூடுதல் மின் உற்பத்தி மற்றும் பல மறைமுகமான பயன்கள் கிடைக்கும் என இம்முகமை மதிப்பீடு செய்துள்ளது. இம்முகமை தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தினால் தமிழ்நாட்டிற்கு 214 டி.எம்.சி. அடி நீர்வரத்தும், சுமார் 7.74 இலட்சம் எக்டேர் (19.13 இலட்சம் ஏக்கர்) நிலங்கள் கூடுதல் பாசன வசதியும் பெறும் என மதிப்பீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தின்மூலம் கிடைக்கும் நீரை சுமார் 100 டி.எம்.சி. அடி அதிகப்படுத்தி அளிக்குமாறு தமிழ்நாடு இம்முகமையைக் கேட்டுக்கொண்டது. மேலும் பெண்ணாறு – பாலாறு - காவேரி இணைப்புக் கால்வாயை சற்று மேல் மட்டத்தில் (Higher Contour) மாற்றியமைத்து, நீர்த் தேவையுள்ள பகுதிகளுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பன்மாநில நதிகளை இணைக்கும் பொருட்டும், உரிய நேரத்திலும், குறைந்த பொருட்செலவில் மேற்கொள்ள வேண்டியும், மத்திய அரசு ஒரு சிறப்புக் குழுவினை (Special Committee for Inter-Linking of Rivers) அமைக்குமாறும், 27-2-2012 அன்று நதிகள் இணைப்புத் திட்டத்தைப் பற்றிய பொது நல வழக்கில் அளித்த தனது தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



2013 ஏப்ரல் 18]

நதிகள் இணைப்பு சிறப்புக் குழுவில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ளனர் என மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது:—

(1) பொதுப் பணித் துறை அமைச்சர்.

(2) தலைமைச் செயலாளர் சார்பில், பொதுப் பணித் துறைச் செயலாளர்.

மத்திய அரசு மேற்கூறியுள்ள சிறப்புக் குழுவினை விரைவில் ஏற்படுத்தி, நதிகள் இணைப்புத் திட்டத்தை உரிய காலத்தில் வெவ்வேறு நிலைகளிலும் நிறைவேற்றிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.10 பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு இணைப்பு:–

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை, கேரளாவின் பம்பா-அச்சன் கோவில் ஆறுகளின் மிகை நீரை தமிழ் நாட்டிற்குத் திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கி உள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சங்கரன்கோவில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறவும், அதற்காக 22 டி.எம்.சி. அடி நீரைத் திருப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தவிர, அதிகபட்சமாக 500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இந்த 22 டி.எம்.சி. அடி நீரானது பம்பா-அச்சன்கோவில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் 20 விழுக்காடு மட்டுமே ஆகும்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது. ஆனால், கேரள அரசு இத்திட்டத்திற்கு ஆதரவாக இல்லை. எனினும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசும், தேசிய நீர் மேம்பாட்டு முகமையும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு பல்வேறு தருணங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### 4 வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்படும் வெள்ள நீரினைத் திறம்பட பயன்படுத்துதல்.

***4.1*** தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில், கடலோரப் பகுதிகளில் மிக பலத்த மழை பெய்கிறது. கடற்கரையை

[2013 ஏப்ரல் 18

ஒட்டிய பகுதிகள் ஒரே சீரான மட்டத்தில் இருப்பதால், வெள்ள நீரானது குடியிருப்புப் பகுதிகளில் தேங்குவதுடன், வெள்ள நீர் வடிவதிலும் சிரமம் ஏற்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் முழுமையான தீர்வு காண்பதற்குத் தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக, ஒரு தொழில்நுட்பக் குழுவினை அமைக்க ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், காவேரி தொழில்நுட்பக் குழுமத் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, வடகிழக்குப் பருவமழையினால் ஏற்படும் வெள்ள நீரினை உரிய வகையில் உபயோகப்படுத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழிமுறைகளைப் பரிந்துரை செய்துள்ளது.

இக்குழு, ரூ.13,560.00 கோடி மதிப்பீட்டிலான 12 திட்டப் பணிகளைப் பரிந்துரைத்துள்ளது.

**4.2** இக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள திட்டங்களில் நதிநீர் இணைப்புத் திட்டமும் ஒன்றாகும். இதில் ஏற்கெனவே, ரூ.5,166.00 கோடி மதிப்பீட்டில் காவேரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேலும், ரூ.1,862.00 கோடி மதிப்பீட்டில் அத்திக்கடவு-அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டம், ரூ.250.00 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாறு (சாத்தனூர் அணை)—பாலாறு இணைப்பு, ரூ.253.00 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு)-பாலாறு இணைப்பு, ரூ.1,134.00 கோடி மதிப்பீட்டில் காவேரி (மேட்டூர் அணை)-சரபங்கா இணைப்பு ஆகிய திட்டங்கள் இக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவை ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ளன.

## 5 தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் (TN IAMWARM Project)

**5.1** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழகத்தில் 2005 ஆம் ஆண்டு உப வடிநில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின்மூலம் பாசனத்திற்கு நீர் வழங்கும் சேவை மற்றும் வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக்கொண்டு தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் உலக வங்கி கடனுதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



2013 ஏப்ரல் 18]

இத்திட்டம், ரூ.2,547.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.2,816.00 கோடி திருத்திய மதிப்பீட்டில், 6.69 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் 5,220 ஏரிகள், 725 அணைக்கட்டுகள் மற்றும் 8,788.50 கி.மீ. நீர்வரத்துக் கால்வாய்களில் புனரமைக்கும் பணிகள் ரூ.1,766.96 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 5.1.1 திட்டத்தின் பயன்கள்

தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்ட உப வடி நிலங்களில் ஒன்றான மேல்வெள்ளாறு உப வடிநிலத்தில் அரசு சாரா நிறுவனம்மூலம் மாதிரி புள்ளிவிவர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இத்திட்டம் மேற்கொண்டதால், பாசனப் பரப்பு 31% அதிகரித்துள்ளதும், பயிரின் நீர்த்தேவை 12% குறைந்துள்ளதும், அதேசமயம் ஒரே அளவு நீருக்கு 2.5 மடங்கு அதிக வருவாய் கிடைத்துள்ளதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தினால் ஏற்பட்ட பயன்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனம், நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகளினால் ஏற்பட்ட பயன்களை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் விவரங்கள் அறியப்பட்டன.

- ஏரிகளின் கொள்ளளவு சராசரியாக 9 விழுக்காடு உயர்ந்துள்ளது.
- நிலத்தடி நீர், செறிவூட்டப்பட்டு 8 மீட்டர் முதல் 20 மீட்டர் வரை உயர்ந்துள்ளது.
- பரம்பிகுளம்-ஆழியாறு திட்டத்தில் கால்வாய்களின் நீர் கடத்தும் திறன் 97 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

### 5.1.2 நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ள பணிகள்

சிறந்த நீர் மேலாண்மைக்கு, உபயோகிக்கும் நீர் அளவினைக் கணித்தல் மிகவும் முக்கியமானது. மதகுகளில் வெளியேறும் நீரினை அளப்பதற்காக முதல் மற்றும் இரண்டாம் கட்ட உப வடி நிலங்களில் புனரமைப்புப் பணி மேற்கொண்ட ஏரிகளில் உள்ள

[2013 ஏப்ரல் 18

பாசனக் கால்வாய்களில் அகவுறை இடுதல் மற்றும் நீர் வெளியேற்றத்தின் அளவை அளக்கும் கருவிகளைப் பொருத்தும் பணிக்காக ரூ.71.50 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இவ்வாண்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.258.73 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில், 26 உபவடி நிலங்களிலுள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அதன் நீர் வழங்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல் மற்றும் மத்திய, மண்டல தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 5.1.3 மாநில நீர்வள மேலாண்மை முகமை (SWaRMA)

நீர்வள மேலாண்மையின் திட்ட மதிப்பீடு ஆவணத்தின்படி, நிலையான நீர்வள ஆதார மேலாண்மைக்கான நிறுவன அமைப்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில், 'மாநில நீர்வள மேலாண்மை முகமை' உருவாக்கப்பட்டது. இத்தகைய அமைப்பு, 13 ஆவது நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் தேசிய நீர்க் கொள்கையின்படி அவசியமாகிறது.

எனவே, மாநில நீர்வள மேலாண்மை முகமை 9-6-2011 இல் உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது. இம்முகமையின் செயல்பாட்டிற்காக புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

#### 5.1.3.1 மாநில நீர்வள மேலாண்மை முகமையின் தற்போதைய பணிகள்

பல்வேறு பகுதிகளின் நீர்த்தேவை மற்றும் அதன் பயன்பாடு ஆகியவற்றின் விவரங்களைச் சேகரித்து புவியியல் தகவல் நிலை அடிப்படையில் வலைதளத்தில் கிடைக்கச் செய்தல்.

### 5.2 மாநில நிதித் திட்டங்கள்

*5.2.1* பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள் மாநில நிதியின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1,92,656 எக்டேர் ஆயக்கட்டு பயன்பெறும் வகையில், ரூ.466.35 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்கண்ட திட்டப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன:



2013 ஏப்ரல் 18]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | பயன்பெறும் ஆயக்கட்டு (எக்டேரில்) |
|---|---|---|---|
| 1. | திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயில் எல்.எஸ். 0.00 கி.மீ. முதல் 49.30 கி.மீ. வரையுள்ள பகுதிகளைப் புனரமைத்தல். | 184.50 | 171995 |
| 2. | குடிநீர் வழங்க ஏதுவாக வீராணம் ஏரியை மேம்படுத்துதல் – கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வீராணம் கிராமத்தில் புதிய வீராணம் திட்டத்தினைச் செயல்படுத்துதல். | 106.35 | 1816 |
| 3. | மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளித்தல். | 82.67 | 925 |
| 4. | ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயின் வாய்க்காலின் மைல் 3/3–000 முதல் 9/7–000 வரை புனரமைத்தல் | 50.00 | 15743 |
| 5. | தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர்க் கால்வாய் அமைத்து, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களிலுள்ள சாயல்குடி கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்குதல். | 18.00 | 1731 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 6. | தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், மத்தளப் பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல். | 14.15 | 446 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் கிராமம், காளிமார் பாலத்தில் இருந்து சைமன் காலனி வரை பாலம் கட்டுதல், தடுப்புச் சுவர் மற்றும் தார்ச்சாலை அமைத்தல். | 2.94 | – |
| 8. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், காவிரியாற்றின் இடது கரை மைல் 119/0 முதல் 123/2 வரை (ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்கால் தலைமதகு முதல் அம்மாமண்டபம் வரை) தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் கற்காரைப் பலகை பதித்தல். | 1.60 | – |
| 9. | ஊட்டி ஏரியில் 4 நுண்துளைக் கருவிகள் மூலம் நீரின் பிராணவாயுத் திறனை அதிகரித்தல். | 1.50 | – |
| 10. | நீலகிரி மாவட்டம், ஊட்டி நகரத்தில் கோட்டப்பமந்து வாய்க்காலைத் தூர்வாருதல். | 1.20 | – |
| 11. | ஊட்டி ஏரியில் புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். | 1.00 | – |
| 12. | முல்லைப் பெரியாறு அணைக்கு இரண்டு பழைய படகுகளுக்கு பதிலாக இரண்டு புதிய படகுகள் வாங்குதல். | 0.90 | – |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| 13. | தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணந்தன்குடி மேலையூர் கிராமம், சிங்கநேரி ஏரியைப் புனரமைத்தல். | 0.75 | – |
| 14. | சேலம் மாவட்டம், மேட்டூர் அணை (ஸ்டான்லி நீர்த்தேக்கம்) இடது கரை எல்லிஸ் சேடில் (saddle) முதல் 109 மீட்டர் வரை கம்பிகளுடன்கூடிய கற்காரை மேற்பரப்பு சுவர் அமைத்தல். | 0.60 | – |
| 15. | திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கள்ளிக்குடி மற்றும் ஒவரூர் கிராமங்களில் மரக்காகோரையார் இடது கரை தொலைகல் மைல் 3/54–இல் உள்ள கள்ளிக்குடி தலைமதகு மற்றும் புதுப்பாண்டியார் வலது கரை தொலைகல் மைல் 6/26–ல் உள்ள ஒவரூர் புதுமடை தலைமதகைப் புனரமைத்தல். | 0.14 | – |
| 16. | நுண்ணுயிர் வளர்சிதை மாற்றம் (Bioremediation) மூலம் மாசடைந்த ஊட்டி ஏரியைச் சீரமைத்தல். | 0.05 | – |
| | மொத்தம் | 466.35 | 192656 |

**5.2.2 மருதையாற்றின் குறுக்கே புதிய அணை கட்டுதல்**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின்போது மருதையாறு நதியில் மிகக் குறுகிய காலத்தில், அதிக அளவில் வரப் பெறும் நீரை உரிய முறையில் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில், மருதையாற்றின் குறுக்கே ரூ.108.00 கோடி மதிப்பீட்டில், புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் அமைக்கப்படும்.*

[2013 ஏப்ரல் 18

இத்திட்டத்தின்மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டபாடி, அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் புதியதாக பாசன வசதி பெறும். இதனால், உணவு உற்பத்தி அதிகரிப்பதுடன், அப்பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டமும் உயர வழி வகுக்கும்.

**5.3 நபார்டு கடனுதவித் திட்டங்கள்**

நபார்டு வங்கியின் மூலம் பாசனக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) கீழ் கடனுதவி பெறப்பட்டு வருகிறது.

ஆர்.ஐ.டி.எப்.- XIII, XV, XVI, XVII மற்றும் XVIII-ன் கீழ் பாசனத் திட்டங்கள், சிறு சாலைகள், பாலங்கள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள் தற்போது செயலாக்கத்திலுள்ளன.

ஏரிகளை உள்ளடக்கிய 106 திட்டப் பணிகள் ரூ.925.42 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில், ரூ.482.29 கோடி மதிப்பீட்டிலான 73 பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. ரூ.331.63 கோடி மதிப்பீட்டிலான 28 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.111.50 கோடி மதிப்பீட்டிலான 5 பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

முன்னேற்றத்தில் உள்ள திட்டங்களின் விவரங்கள்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | பயன்பெறும் ஆயக்கட்டு (எக்டேரில்) |
|---|---|---|---|
| | **ஆர்.ஐ.டி.எப்– XVIII (2007– 2008)** | | |
| 1. | கரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் காவேரி மற்றும் கொள்ளிடம் ஆற்றுக் கரைகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள் (1 பணி). புத்தூர் கலிங்கில் இயக்க மேடைக்கு அணுகு அமைப்புடன் நீர் ஒழுங்குமுறை அமைப்புகளை அமைத்தல். | 14.50 | – |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| | **ஆர்.ஐ.டி.எப் – XV (2009–2010)** | | |
| 2. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், குடமுருட்டி ஆற்றில் வெள்ளத் தடுப்புப் பணிகள். | 40.62 | – |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை கால்வாய், இராதாபுரம் கால்வாய் மற்றும் கண்மாய்களைப் புனரமைத்தல். | 22.50 | 12087 |
| 4. | இராமநாதபுரம் மாவட்டம், மந்திவலசை அருகே வைகையாற்றின் குறுக்கே களரி வாய்க்கால் மற்றும் வலது பிரதான கால்வாயினால் பயன்பெறும் ஏரிகளுக்கு நீர் வழங்க படுகை அணை அமைத்தல். | 14.20 | 4007 |
| 5. | தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பாளையம் பரவு வாய்க்கால் மற்றும் பி.டி.ராஜன் வாய்க்கால்களின் நீர் கடத்தும் திறனை அதிகரித்தல். | 10.08 | 3070 |
| 6. | தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மற்றும் பெண்ணாகரம் வட்டம் ஜெர்தலாவ் வாய்க்காலின் எல்.எஸ். 5690 மீட்டரிலிருந்து தொட்லாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் 15 இதர ஏரிகளுக்கு வரத்து வாய்க்கால் அமைத்தல். | 6.29 | 330 |
| 7. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், குடமுருட்டி ஆற்றின் குறுக்கே வயலூர் சாலை அருகே உயர்மட்டப் பாலம் அமைத்தல். | 2.80 | – – |

[2013 ஏப்ரல் 18

| | ஆர்.ஐ.டி.எப் – XVI (2010–2011) | | |
|---|---|---|---|
| 8. | மதுரை மாவட்டம், நிலையூர் விரிவாக்கக் கால்வாயின் நீர் கடத்தும் திறனை அதிகரிக்க நிலையூர் கால்வாயைப் புனரமைத்தல். | 23.50 | 4023 |
| 9. | பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான் துறை கிராமத்தில் விஸ்வகுடி அருகில் கல்லார் ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைத்தல். | 19.00 | 348 |
| 10. | காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் பழுதடைந்துள்ள நீஞ்சல்மடுவு அணைக்கட்டை மீண்டும் கட்டுதல். | 9.00 | 2105 |
| 11. | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தையம் கிராமம் அருகே, நல்லத்தங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல். | 6.97 | 327 |
| 12. | கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், 28 ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க பாலேகுளி ஏரியிலிருந்து புதிய கால்வாய் அமைத்தல். | 6.50 | 346 |
| 13. | திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சேவூர் கிராமத்தின் அருகில் கமண்டலநாக நதியின் குறுக்கே புதிய அணைக்கட்டு அமைத்து இரும்பேடு மற்றும் பையூர் ஏரிகளுக்கு நீர் வழங்குதல். | 2.00 | 351 |
| 14. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், மலட்டாற்றிலிருந்து பிரியும் பனங்குடி மற்றும் குயவன் வாய்க்கால்களை மேம்படுத்துதல். | 3.00 | 448 |



2013 ஏப்ரல் 18]

| | ஆர்.ஐ.டி.எப் – XVII (2011–2012) | | |
|---|---|---|---|
| 15. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமத்தில் முத்தரசநல்லூர் அருகே காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | 32.00 | – |
| 16. | கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமராவதி ஆற்றுப் பாசனத் திட்டத்தில் உள்ள 16 பழைய அணைக்கட்டுகளைப் புனரமைத்தல். | 18.00 | 6154 |
| 17. | கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே உள்ள விருத்தாச்சலம் அணைக்கட்டை விரிவுபடுத்திப் புனரமைத்தல். | 13.00 | 25300 |
| 18. | மதுரை மாவட்டத்தில் பத்தாவது கிளைக் கால்வாய் மற்றும் சுண்ணாம்பூர் பகிர்வுக்கான ஊட்டுக் கால்வாய் மற்றும் அதனைச் சார்ந்த 12 கண்மாய்களை நவீனப்படுத்துதல். | 10.00 | 5013 |
| 19. | மதுரை மாவட்டம், கொண்டம்வாரி ஓடைக்கு வெள்ளத் தடுப்புப் பணிகள், பழுதடைந்த அணைக்கட்டுகள் மற்றும் பழுதடைந்த கண்மாய்களின் கலிங்குகளைப் புனரமைத்தல். | 10.00 | 1923 |
| 20. | கடலூர் மாவட்டம், பெரிய ஓடையின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 5.50 | 1700 |
| 21. | ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் கீழ்பவானி பிரதான கால்வாயில் மைல் 0/0 முதல் 124–2–560 வரை மற்றும் கிளைக் கால்வாய்களில் உள்ள மதகுகளில் திருகு அடைப்பான்கள் அமைத்தல் | 3.00 | 83772 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 22. | காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கிளியநகர் கிராமம், செம்பூண்டி அணைக்கட்டினைச் சீரமைத்தல். | 2.20 | 523 |
| 23. | தருமபுரி மாவட்டம், கல்லார் ஆற்றின் குறுக்கே வாணியார் சிறு வடிநிலத்தில் உள்ள 16 அணைக் கட்டுகளைச் சீரமைத்து மேம்படுத்துதல். | 2.15 | 525 |
| 24. | வேலூர் மாவட்டம், சித்தாத்தூர் கிராமம், பாலாற்றின் குறுக்கே உள்ள மோர்தானா நீர்த்தேக்கத்தின் வலது பிரதானக் கால்வாயைப் புனரமைத்தல். | 1.40 | 1378 |
| | **ஆர்.ஐ.டி.எப் – XVIII (2012–2013)** | | |
| 25. | தூத்துக்குடி மாவட்டம், பேய்க்குளம், பொட்டைக்குளம், கோரம்பள்ளம் குளங்களை மேம்படுத்துதல். | 20.07 | 457 |
| 26. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அத்தனூர் கிராமத்தில் பார்த்திபனூர் பெரிய மற்றும் சிறிய கண்மாய், வன்னிக்குடி கண்மாய் மற்றும் இரண்டு கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 16.00 | 795 |
| 27. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், இலாடனேந்தல் கிராமம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை அமைத்து மாரநாடு மற்றும் 9 கண்மாய்களுக்கு நீர் வழங்குதல் | 12.85 | 2145 |
| 28. | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எலமனூர் கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே மேலணையில் பழுதடைந்த மதகுகளைப் புனரமைத்தல். | 4.50 | 263158 |
| | **மொத்தம்** | **331.63** | **420285** |



2013 ஏப்ரல் 18]

மேலும், ரூ.111.50 கோடி மதிப்பீட்டில் பின்வரும் 5 பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இதன் மூலம் 2,453.44 எக்டேர் ஆயக்கட்டு பாசன வசதி பெறும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| | **ஆர்.ஐ.டி.எப் – XVIII (2013–2014)** | |
| 1. | அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், அம்பலவார் கட்டளை–சுண்டகுடி சாலை 3/2 கி.மீ–ல் மருதையாற்றின் குறுக்கே 51/0 கி.மீ.–ல் பாலம் கட்டுதல். | 10.00 |
| 2. | திருவள்ளூர் மாவட்டம், திருக்கண்டலம் கிராமம் கொசஸ் தலையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல். | 35.00 |
| 3. | திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட பாசன அமைப்பை உப்பார் கால்வாயுடன் இணைத்தல் | 8.10 |
| 4. | திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், நேதாஜி நகர் முதல் நெட்டுக்குப்பம் வரை கடலோரப் பகுதியில் எல்.எஸ். 13/100 முதல் 18/640 கி.மீ. வரை அமையப்பெற்ற கடலரிப்புத் தடுப்புச் சுவரை 2 மீட்டர் உயர்த்தி புனரமைத்து, கடல் அலைகளால் ஏற்படும் அரிப்பு மற்றும் கடல் நீர் ஊடுருவலைத் தடுத்தல் | 26.58 |
| 5. | திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எண்ணூர் முதல் எர்ணாவூர்குப்பம் வரை கடலோரப் பகுதியில் எல்.எஸ்.19/000 முதல் 15/200 கி.மீ. வரை 10 தூண்டில்வளைவுகளை அமைத்தல் | 31.82 |
| | **மொத்தம்** | **111.50** |

[2013 ஏப்ரல் 18

### 5.3.1 திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் அருகே கம்பரசம்பேட்டை கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல்

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் குடிநீர்த் திட்டங்களுக்குத் தொடர்ந்து நீர் வழங்குவதை உறுதி செய்வதோடு, அருகாமைப் பகுதிகளில் உள்ள கிணறுகளைச் செறிவூட்டுவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதற்காக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் அருகே கம்பரசம்பேட்டை கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே ரூ.32.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன்தடுப்பணை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இத்திட்டத்தில் 72 விழுக்காடு பணிகள் முடிவுற்று, எஞ்சிய பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

### 5.4 தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)

மத்திய அரசின் நிதியுதவியுடன் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாசன கட்டமைப்புகளை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகள் சிறந்த வளர்ச்சியினை அடைவது இதன் நோக்கமாகும்.

2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.9.21 கோடி மதிப்பீட்டில் 14 பணிகளைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள் 7 பணிகள் முடிக்கப்பட்டும், எஞ்சிய பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன.

### 5.5 செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம்

மாநிலத்தின் நிலத்தடி நீர் வளத்தினை மீளப்பெற மாநில நிதியின்கீழ் ரூ.550.00 கோடி மதிப்பீட்டில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெருந்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.



2013 ஏப்ரல் 18]

ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள ஓடைகள், சிற்றாறுகளின் குறுக்கே தடுப்பணைகள், தரைகீழ் குறுக்கணைகள் (Sub-Surface Dyke) ஏரி, ஓடைகளில் நீர்செறிவு துளைகள் அமைத்தல் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல்மூலம் அதிகப்படியான வெள்ள நீரினைப் பயன்படுத்தி வறண்ட நிலத்தடி நீர்த்தாங்கிகளை மீளப் பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் மேற்பரப்பு நீரும் நிலத்தடி நீரும் இணைக்கப்பட்டு நிலத்தடி நீர் பெருக்கப்படுவதால் கடல் நீர் ஊடுருவுதல் தடுக்கப்பட்டு மழைக் காலங்களில் நீர் தேங்கும் பகுதிகளில் வெள்ளம் தணிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் நீர்வள ஆதாரத் துறைக்கு ரூ.265.11 கோடி மதிப்பீட்டில் 523 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இதில் ரூ.199.66 கோடி மதிப்பீட்டில் 429 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 94 பணிகள் நடப்பாண்டில் ரூ.65.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்கண்ட திட்டத்தினால் நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. மார்ச் 2011 கால அளவிலான நிலத்தடி நீர் இருப்பு குறித்த முன்னோடி ஆய்வு கணக்கீட்டின்படி 44 வருவாய் குறுவட்டங்களில் நிலத்தடி நீர் இருப்பு அதிகரித்துள்ளதாக அறியப்பட்டு உள்ளது.

### 5.5.1 வடகிழக்குப் பருவமழையால் ஏற்படும் வெள்ள நீரோட்டம் மற்றும் மாநில ஆறுகளின் இணைப்புத் திட்டத்தால் நிலத்தடி நீர் செறிவூட்டுதல்

மாநிலத்தின் வெவ்வேறு இடங்களில் நிலத்தடிநீர் தொடர்ந்து உறிஞ்சப்படுவதால் இயற்கையான நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் மாநிலத்தின் பல இடங்களில் நீர்வள ஆதாரம் குறைந்து, நிலத்தடி நீர்மட்ட அளவும் குறைந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழையால் ஏற்படும் வெள்ளப்பெருக்கை முறையாகப் பயன்படுத்துவதன் மூலமும் மாநிலத்தில் உள்ள ஆறுகளை முறையாக இணைப்பதனால் திருப்பப்படும் வெள்ள நீரோட்டத்தின் மூலமும் நிலத்தடி நீர்த்தாங்கிகளை செறிவூட்டும் வகையில், ரூ.400.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து 4 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

[2013 ஏப்ரல் 18

## 5.6 13 ஆவது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டம்

### 5.6.1 கடலோரப் பாதுகாப்பு

*மாநிலத்தின் கடற்கரையோரம் நில இழப்பை ஏற்படுத்தக்கூடிய கடலரிப்பு, மாபெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. பருவ மழைக் காலங்களில், கடலரிப்பு மற்றும் அதிவேக அலைகளின் சீற்றங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடிய புயல், கனமழை, காற்றழுத்தத் தாழ்வு நிலை மற்றும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக இப்பிரச்சினை அதிகரிக்கிறது. இதனால் நெடுஞ்சாலை, சாலைகள் போன்ற உள்கட்டுமானங்கள் ஈடுசெய்ய முடியாத அளவுக்கு பாதிக்கப்படுவதுடன், உயிர் இழப்புகளும் நிலமிழப்பும் ஏற்பட்டு கடற்கரையோர மீனவக் குடியிருப்புகளும் பாதிக்கப்படுகின்றன.*

*13 ஆவது நிதிக் குழுவால் மாநிலத்தின் குறிப்பான இனங்களுக்கான மானியத்தின்கீழ், கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்காக 2011-2012 முதல் 4 ஆண்டுகளுக்கு ரூ.200.00 கோடி மானியமாகப் பரிந்துரைக்கப்பட்டது. முன்னுரிமை அடிப்படையில், 7 மாவட்டங்களில் மிகவும் பாதிப்புக்கு உள்ளான பகுதிகள் கண்டறியப்பட்டன. ரூ.199.93 கோடி மதிப்பீட்டில் 50 கடலரிப்பு தடுப்புப் பணிகளை மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.*

**கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள்.**

**கட்டம்–I (2011–2012)**

| மண்டலம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | முடிக்கப்பட்ட பணிகள் | செயலாக்கத்தில் உள்ள பணிகள் |
|---|---|---|---|---|
| சென்னை | 7 | 16.57 | 3 | 4 |
| மதுரை | 15 | 18.44 | 4 | 11 |
| திருச்சிராப்பள்ளி | 4 | 15.21 | 0 | 4 |
| **மொத்தம்** | **26** | **50.22** | **7** | **19** |



2013 ஏப்ரல் 18]

**கட்டம்–II (2012–2013)**

| மண்டலம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | செயலாக்கத்தில் உள்ள பணிகள் |
|---|---|---|---|
| சென்னை | 6 | 28.55 | 6 |
| மதுரை | 5 | 13.64 | 5 |
| திருச்சிராப்பள்ளி | 4 | 42.91 | 4 |
| **மொத்தம்** | **15** | **85.10** | **15** |

**செயலாக்கத்தில் உள்ள பணிகள்–கட்டம் I (2011–2012)**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தேவனாம்பட்டினத்தில் (எல்.எஸ். 800 மீ. – எல்.எஸ்.1220 மீ.) கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 1.80 |
| 2. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், சின்னமுதலியார்சாவடி கிராமத்தில் எல்.எஸ். 1850 மீ. முதல் 2470 மீ. வரை மற்றும் எல்.எஸ். 2710 மீ. முதல் எல்.எஸ். 3090 மீ. (1000 மீ.) வரை கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 2.80 |
| 3. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், முதலியார்சாவடியில் தொடர்ச்சியாக 2 தூண்டில்வளைவுகள் அமைத்தல். | 8.26 |

| | | |
|---|---|---|
| 4. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாழங்குடா முதல் தேவனாம்பட்டினம் வரை மற்றும் விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டத்தில், முதலியார்சாவடி, பொம்மையார்பாளையம் மற்றும் சோதனை குப்பத்தில் தேவைப்படும் தொலைவிற்கு கடற்கரையோரம் மற்றும் கடலினுள் அலை உடைவுப் பகுதி வரையிலான தளமட்ட அளவுகள் சேகரித்தல் மற்றும் பேரலை நீரோட்டம், கரையோர நீரோட்ட அளவுகள் சேகரித்தல். | 0.42 |
| 5. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பழையாறு கிராமத்தில் 1000 மீ. நீளத்திற்கு + 3.25 மீ. அளவிற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 5.97 |
| 6. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அக்கரைப்பேட்டை கிராமத்தில் 1000 மீ. நீளத்திற்கு + 3.66 மீ. அளவிற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 5.18 |
| 7. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கல்லாறு கிராமத்தில் 700 மீ. நீளத்திற்கு + 3.66 மீ. அளவிற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 3.65 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சமந்தாபேட்டை, வானகிரிகுப்பம், செருதூர் மற்றும் திருமுல்லைவாசல் கடற்கரையில் தேவைப்படும் தொலைவிற்கு கடற்கரை ஓரம் மற்றும் கடலினுள் அலை உடைவுப் பகுதி வரையிலான தளமட்ட அளவுகள் சேகரித்தல் மற்றும் பேரலை நீரோட்டம், கரையோர நீரோட்ட அளவுகள் சேகரித்தல். | 0.42 |





| | | |
|---|---|---|
| 9. | தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம் சவேரியார்புரம் கிராமம் விவேகானந்தர் காலனியில் 230 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 1.02 |
| 10. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், லீபுரத்தில் 525 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் 300 மீ. நீளத்திற்கு தற்போதுள்ள கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 2.61 |
| 11. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சின்னமுட்டத்தில் 205 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் 245 மீ. நீளத்திற்கு தற்போதுள்ள கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 1.34 |
| 12. | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பூத்துறை தேவாலயத்தின் மேற்குப் பகுதியில் 260 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 0.78 |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பூத்துறை மற்றும் தூத்தூருக்கு இடையிலான விடுபட்ட பகுதியில் 500 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 1.88 |
| 14. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சலில் 250 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 1.06 |
| 15. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மேலமணக்குடியில் 180 மீ. நீளத்திற்கு தற்போதுள்ள கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 0.41 |
| 16. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரியில் தூண்டில்வளைவுகள் அமைத்தல். | 4.89 |

| | | |
|---|---|---|
| 17. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், புத்தன்துறையில் 570 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 1.24 |
| 18. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கோடிமுனையில் 420 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 1.17 |
| 19. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரி, இடிந்தகரை மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயல் கிராமத்தில் தேவைப்படும் தொலைவிற்கு கடற்கரையோரம் மற்றும் கடலினுள் அலை உடைவுப் பகுதி வரையிலான தளமட்ட அளவுகள் சேகரித்தல் மற்றும் பேரலை நீரோட்டம், கரையோர நீரோட்ட அளவுகள் சேகரித்தல். | 0.25 |

**செயலாக்கத்தில் உள்ள பணிகள் – கட்டம் II (2012–2013)**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், முதலியார்சாவடியில் 2 தூண்டில் வளைவுகள் (5 மற்றும் 6 ) அமைத்தல். | 9.65 |
| 2. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பொம்மையார்பாளையத்தில் 3 தூண்டில் வளைவுகள் அமைத்தல். | 6.90 |
| 3. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், சோதனைக்குப்பத்தில் 5 தூண்டில் வளைவுகள் அமைத்தல். | 4.72 |





| | | |
|---|---|---|
| 4. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், பெண்ணையாறு முகத்துவாரத்தின் இடது கரையிலிருந்து சுப உப்பளவாடி கிராமம் வரை 210 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 0.84 |
| 5. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், பெண்ணையாறு, வலது கரையிலிருந்து தாழங்குடா கிராமம் வரை 650 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 2.54 |
| 6. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தேவனாம்பட்டினத்தில் எல்.எஸ். 1220 மீ. முதல் எல்.எஸ் 2140 மீ. வரை கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 3.90 |
| 7. | நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் கிராமத்தில் ஆற்றோரத்தில் 250 மீ. நீளத்திற்கும் மற்றும் கடலோரத்தில் 550 மீ. நீளத்திற்கும் முறையே +1.800 மீ. மற்றும் +3.66 மீ. மட்டம் வரையில் கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 3.50 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாசல் கிராமத்தில் 100 மீ. நீளத்திற்கு + 4.50 மீ. மட்டம் வரை திருப்புச் சுவர் (Spurs) அமைத்தல். | 5.46 |
| 9. | தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயலில் வழிபடுத்து சுவர் (Training wall) அமைத்தல். | 8.47 |
| 10. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரையில் கூடுதல் தூண்டில்வளைவு அமைத்தல். | 0.30 |

[2013 ஏப்ரல் 18

| | | |
|---|---|---|
| 11. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருமணலில் (வடக்கு பக்கம் 1300 மீ.) கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 2.07 |
| 12. | தூத்துக்குடி மாவட்டம், ஆட்சியர் மாளிகை மற்றும் கடற்கரை சாலை அருகில் 350 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 0.67 |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கீழ்மணக்குடியில் 1200 மீ. நீளத்திற்கு தற்போதுள்ள கடலரிப்பு தடுப்புச் சுவரைச் சீரமைத்தல். | 2.13 |
| 14. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வானகிரிகுப்பத்தில் 950 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் தூண்டில்வளைவு அமைத்தல். | 16.98 |
| 15. | நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், வானகிரிகுப்பத்தில் 500 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் தூண்டில்வளைவு அமைத்தல். | 16.97 |

**கட்டம்– III (2013–2014)**

| மண்டலம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| சென்னை | 1 | 21.90 |
| மதுரை | 4 | 8.06 |
| திருச்சிராப்பள்ளி | 1 | 3.00 |
| **மொத்தம்** | **6** | **32.96** |



2013 ஏப்ரல் 18]

**செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகளின் விவரம் – கட்டம்–III (2013–2014)**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| | **சென்னை மண்டலம்** | |
| 1. | கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாழங்குடாவிலிருந்து தேவனாம்பட்டினம் வரை தொடர்ச்சியாக 8 தூண்டில் வளைவுகள் அமைத்தல். | 21.90 |
| | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டம், சமந்தா பேட்டையில் 600 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 3.00 |
| | **மதுரை மண்டலம்** | |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இரவிபுத்தன்துறை மற்றும் வள்ளவிளைதுறை இடையிலான விடுபட்ட பகுதியில் 1250 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 2.81 |
| 4. | கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கேசவன்புத்தன்துறையில் 520 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 1.31 |
| 5. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கொட்டில்பாடுவில் 460 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 3.24 |
| 6. | கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மேல்மிடாலத்தில் கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல். | 0.70 |
| | **மொத்தம்** | **32.96** |

[2013 ஏப்ரல் 18

**5.6.2 மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைத்தல்**
(Restoration of Traditional Water Bodies)

*பெரும்பாலான மரபு சார்ந்த நீர்நிலைகள் புனரமைக்கப்பட மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய அவசிய நிலையில் உள்ளன. 13 ஆவது நிதிக் குழுவால், மாநிலத்தின் குறிப்பான இனங்களுக்கான மானியத்தின்கீழ் மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகளுக்காக 2011-2012 முதல் 2014-2015 வரை 4 ஆண்டுகளுக்கு ரூ.200.00 கோடி மானியமாகப் பரிந்துரைக்கப்பட்டது.*

*674 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகளை ரூ.200.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.*

**கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் – கட்டம் (2011–2012)**

| மண்டலம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | முடிக்கப்பட்ட பணிகள் | செயலாக்கத்தில் உள்ள பணிகள் |
|---|---|---|---|---|
| சென்னை | 34 | 10.55 | 26 | 8 |
| மதுரை | 91 | 28.17 | 68 | 23 |
| திருச்சிராப்பள்ளி | 29 | 9.41 | 27 | 2 |
| கோயம்புத்தூர் | 9 | 1.89 | 8 | 1 |
| **மொத்தம்** | **163** | **50.02** | **129** | **34** |



2013 ஏப்ரல் 18]

**கட்டம் II (2012–2013)**

| மண்டலம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | செயலாக்கத்தில் உள்ள பணிகள் |
|---|---|---|---|
| சென்னை | 70 | 17.35 | 70 |
| மதுரை | 60 | 16.64 | 60 |
| திருச்சிராப்பள்ளி | 45 | 15.60 | 45 |
| **மொத்தம்** | **175** | **49.59** | **175** |

**செயலாக்கத்தில் உள்ள பணிகள் – கட்டம் I**

**(2011–2012)**

| வ. எண் | ஏரியின் பெயர் | ஆயக்கட்டு (எக்டேரில்) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **ஈரோடு மாவட்டம்** | | |
| 1. | உக்கரம் | 163.97 | 40.00 |
| | மதுரை மாவட்டம் | | |
| 2. | திருவாதவூர் | 204.75 | 68.98 |
| 3. | வரிச்சூர் | 218.35 | 68.26 |
| 4. | சிறுவானை | 139.52 | 43.72 |

| | | | |
|---|---|---|---|
| 5. | கலிக்குடி | 68.34 | 24.40 |
| 6. | தென்கரை | 581.34 | 206.36 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| 7. | வெங்குளம் | 52.63 | 20.10 |
| 8. | மருங்கூர் | 82.38 | 33.03 |
| 9. | நகரிகாத்தான் | 107.93 | 36.96 |
| 10. | முகில்தாகம் | 182.49 | 73.30 |
| 11. | கோடனூர் | 55.72 | 22.30 |
| 12. | மல்லனூர் | 52.51 | 21.30 |
| 13. | அகளூர் | 139.90 | 56.06 |
| 14. | புதுப்பையூர் | 47.58 | 25.35 |
| 15. | பழையன்கோட்டை | 69.06 | 26.38 |
| 16. | அதியகுடி | 44.57 | 17.32 |
| | **சிவகங்கை மாவட்டம்** | | |
| 17. | மேலமங்களம் | 42.08 | 15.40 |
| 18. | சீனகண்மாய் | 95.70 | 36.50 |
| 19. | கரநாடு | 49.71 | 19.31 |
| 20. | குருக்கா | 65.37 | 27.29 |





| | | | |
|---|---|---|---|
| 21. | கடம்பன்குடி மற்றும் செட்டி | 77.86 | 31.82 |
| 22. | விளாநேரி | 64.48 | 23.59 |
| 23. | காத்தவன்குடி | 66.03 | 24.14 |
| 24. | கீழமங்களம் | 53.12 | 21.69 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | |
| 25. | காப்பக்குடி | 48.75 | 19.55 |
| 26. | பழுவாஞ்சிபெரியகுளம் | 65.20 | 22.82 |
| | **வேலூர் மாவட்டம்** | | |
| 27. | மாடப்பள்ளி | 137.20 | 36.15 |
| 28. | மின்னூர் | 43.07 | 15.75 |
| 29. | கோளமங்களம் | 63.13 | 24.20 |
| 30. | திப்பசமுத்திரம் | 115.74 | 39.00 |
| 31. | மொகமதுபுரம்நாகலேரி | 44.72 | 16.30 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | | |
| 32. | வி.புதுப்பாக்கம் | 75.30 | 27.10 |
| 33. | வெள்ளிமடுப்பேட்டை | 63.92 | 22.42 |
| 34. | செம்பாக்கம் | 54.19 | 19.60 |

[2013 ஏப்ரல் 18

**செயலாக்கத்தில் உள்ள பணிகள் – கட்டம் II**

**(2012–2013)**

| வ. எண் | ஏரியின் பெயர் | ஆயக்கட்டு (எக்டேரில்) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **கடலூர் மாவட்டம்** | | |
| 1. | கீழப்புளியங்குடி | 59.92 | 20.97 |
| 2. | சாத்தவட்டம் | 50.00 | 14.67 |
| 3. | செக்கன் | 52.06 | 18.27 |
| 4. | எடையூர் | 56.55 | 19.44 |
| 5. | மண்ணம்பாடி | 41.37 | 14.48 |
| 6. | மங்களூர் | 65.10 | 22.79 |
| 7. | புல்லூர் | 48.28 | 16.8 |
| 8. | மலையனூர் | 44.07 | 15.42 |
| 9. | பனையந்தூர் | 41.60 | 14.56 |
| 10. | வள்ளிமந்துரம் | 65.83 | 23.04 |
| 11. | தொழுதூர் | 160.00 | 56.00 |
| 12. | நல்லன்குளம் | 56.34 | 19.73 |
| | **தருமபுரி மாவட்டம்** | | |
| 13. | சமனேரி | 66.80 | 23.00 |
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 14. | மேவளூர்குப்பம் | 158.73 | 40.00 |
| 15. | வெங்கடமங்கலம் | 111.69 | 10.00 |
| 16. | முருகமங்கலம் | 40.87 | 10.00 |
| 17. | நத்தமேடு | 175.18 | 52.50 |
| 18. | கூவத்தூர் | 296.05 | 43.00 |
| 19. | இரத்தினமங்கலம் | 70.82 | 20.00 |
| 20. | ஊத்துக்காடு | 201.54 | 54.70 |
| 21. | திம்மசமுத்திரம் | 298.26 | 80.00 |
| 22. | பெண்ணலூர் | 98.75 | 50.00 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | | |
| 23. | பண்ணப்பள்ளி | 43.54 | 15.00 |
| 24. | கரீம்சாகிப் | 41.57 | 14.54 |
| 25. | தேவசமுத்திரம் | 56.25 | 19.68 |
| 26. | பயணப்பள்ளி | 55.10 | 19.28 |
| 27. | குப்பம்மாசெருவு | 96.95 | 33.50 |
| 28. | கோவிந்த கவுண்டர் | 67.79 | 23.50 |
| 29. | அத்திமுகம் தளவாய் | 79.97 | 27.50 |
| 30. | சின்னப்பரெட்டி கோடிகை | 48.17 | 16.50 |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| 31. | அடவங்கா | 42.11 | 14.50 |
| 32. | மஸ்திகலா | 93.52 | 32.50 |
| 33. | ஜவாலநாயக்கன் | 41.25 | 14.25 |
| | **மதுரை மாவட்டம்** | | |
| 34. | நெடுங்குளம் | 60.70 | 22.63 |
| 35. | மோதகம் | 48.16 | 16.85 |
| 36. | எம்.செங்குளம் | 50.00 | 17.50 |
| 37. | உத்தினி | 84.76 | 29.88 |
| 38. | குன்னத்தூர் | 508.97 | 100.54 |
| 39. | குலமங்கலம் | 242.60 | 92.45 |
| 40. | மேலக்கல் | 108.94 | 40.90 |
| 41. | வைரவநத்தம் | 89.07 | 34.10 |
| 42. | சித்தாலங்குடி | 165.18 | 60.64 |
| 43. | வண்டியூர் | 389.80 | 125.35 |
| 44. | இலுப்பக்குடி | 56.95 | 16.70 |
| | **நாமக்கல் மாவட்டம்** | | |
| 45. | பழையபாளையம் | 94.18 | 40.00 |
| 46. | பெரியகுளம் | 146.66 | 25.00 |
| 47. | பொம்மசமுத்திரம் | 59.53 | 20.00 |



| | | | |
|---|---|---|---|
| 48. | பட்டணம் | 81.34 | 28.00 |
| 49. | அணைப்பாளையம் | 117.48 | 40.00 |
| 50. | நடுப்பட்டி | 48.13 | 16.00 |
| 51. | ஆதனூர் | 90.98 | 31.00 |
| 52. | மேலணை | 98.79 | 33.00 |
| 53. | தொப்பம்பட்டி | 138.91 | 45.00 |
| 54. | கருமாபுரம் | 53.54 | 18.00 |
| 55. | பேளுக்குறிச்சி | 41.21 | 10.00 |
| 56. | பாப்பன்குளம் | 213.68 | 70.00 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்** | | |
| 57. | விச்சூர் | 141.66 | 9.25 |
| 58. | பெரம்பூர், பெரியகுளம், சுடலைக்குளம் / செட்டிக்குளம் | 50.78 | 9.75 |
| 59. | மெய்யனூர் சனனேந்தல் | 111.28 | 9.50 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| 60. | கருப்பூர் | 58.61 | 20.50 |
| 61. | மஞ்சூர் | 52.82 | 18.48 |
| 62. | பிள்ளையாரேந்தல் | 43.33 | 15.16 |
| 63. | கீழக்கீழ்குடி | 48.40 | 16.94 |
| 64. | கருங்காலக்குடி | 47.25 | 16.53 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 65. | செக்கன்திடல் | 46.97 | 16.43 |
| 66. | குரங்கனேந்தல் | 47.58 | 17.01 |
| 67. | கடமனேந்தல் | 52.34 | 19.25 |
| 68. | இளங்குன்றம் | 57.99 | 20.87 |
| 69. | சனரேந்தல் | 48.23 | 16.87 |
| 70. | அரசூர் | 107.56 | 39.03 |
| 71. | கால்விழியேந்தல் | 68.78 | 25.03 |
| 72. | தனியன்பீர் | 53.82 | 19.58 |
| 73. | சேனவயல் | 43.26 | 15.86 |
| 74. | பதனக்குடி | 60.82 | 21.28 |
| 75. | அரசாத்தூர் | 81.89 | 29.71 |
| 76. | உதயணசமுத்திரம் | 51.80 | 18.57 |
| 77. | பாகனவயல் | 63.65 | 19.32 |
| 78. | பாலன்குளம் | 42.37 | 15.15 |
| 79. | செமனவயல் | 49.77 | 18.05 |
| 80. | கீழகஞ்சிரங்குளம் | 61.21 | 17.75 |
| 81. | அடுத்தாக்குடி | 58.60 | 21.98 |
| 82. | குருந்தான்குடி | 42.95 | 16.70 |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| | **சேலம் மாவட்டம்** | | |
| 83. | கோட்டக்குள்புதையன் | 71.12 | 25.00 |
| 84. | கூடமாநேரி | 186.43 | 60.00 |
| 85. | பெரிய சக்கலச்சி | 42.51 | 15.00 |
| 86. | அம்மாபாளையம் | 90.64 | 30.00 |
| 87. | கொத்தனேரி | 176.76 | 62.00 |
| 88. | நச்சம்பட்டி | 42.87 | 15.00 |
| 89. | பொன்னுசமுத்திரம் | 52.54 | 18.00 |
| 90. | ஓடேரி | 45.57 | 15.00 |
| 91. | இஸ்மாயில்கான் | 54.29 | 19.00 |
| 92. | இடப்பாடி | 165.84 | 55.00 |
| 93. | வெள்ளாளபுரம் | 200.00 | 70.00 |
| | **சிவகங்கை மாவட்டம்** | | |
| 94. | நூவனி | 52.80 | 18.48 |
| 95. | தெம்மம்பட்டு | 152.55 | 53.00 |
| 96. | சியாமுத்து | 88.46 | 23.50 |
| 97. | பெருவாஞ்சி | 58.08 | 20.50 |
| 98. | நெடுங்குளம் | 41.00 | 14.30 |
| 99. | கொடுங்குளம் | 50.81 | 17.60 |

| | | | |
|---|---|---|---|
| 100. | ஏ.கருங்குளம் | 57.56 | 20.00 |
| 101. | செல்லியம்பட்டி | 41.16 | 14.60 |
| 102. | கொளந்தி | 70.40 | 25.66 |
| 103. | ஏரிவயல் | 51.73 | 18.90 |
| 104. | புளிகண்மாய் | 49.74 | 17.98 |
| 105. | முனசேரி | 47.32 | 17.31 |
| 106. | தச்சனேந்தல் | 45.79 | 16.62 |
| 107. | பகனி | 61.98 | 25.40 |
| 108. | பூங்குடி | 63.35 | 30.50 |
| 109. | உபயகண்மாய் | 43.14 | 16.30 |
| | **தேனி மாவட்டம்** | | |
| 110. | பொட்டைவனன் | 10.49 | 4.50 |
| 111. | இலக்கியம்பட்டி | 11.00 | 9.75 |
| | **திருவள்ளூர் மாவட்டம்** | | |
| 112. | வெளியகரம் | 143.35 | 35.00 |
| 113. | கோணசமுத்திரம் | 125.51 | 30.00 |
| 114. | ஈகாத்தூர் | 148.18 | 31.00 |
| 115. | சேலை | 139.68 | 31.74 |
| 116. | குளூர்மாவூர் | 60.55 | 15.00 |



| | | | |
|---|---|---|---|
| 117. | பாலபுரம் | 42.21 | 14.00 |
| 118. | மாமண்டூர் | 47.57 | 11.50 |
| 119. | சத்ராஞ்சனேயபுரம் | 71.13 | 17.50 |
| 120. | பொன்னிமாங்காடுசித்தேரி | 57.30 | 14.00 |
| 121. | கொளத்துலீர் | 90.18 | 22.00 |
| 122. | குருசாமிநாயுடு | 52.13 | 15.00 |
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | | |
| 123. | சதுப்பேரி | 127.88 | 28.98 |
| | **தூத்துக்குடி மாவட்டம்** | | |
| 124. | கொற்கை | 510.53 | 178.00 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | |
| 125. | நெல்லிக்குளம் | 72.43 | 26.00 |
| 126. | ஆவரன்குளம்/புதுக்குளம் | 42.69 | 16.00 |
| 127. | வடமலைப்பட்டி | 43.88 | 15.35 |
| 128. | கருப்பம்பட்டி | 60.34 | 21.00 |
| 129. | புலிவலம் | 40.49 | 14.15 |
| 130. | சித்தலாரை | 99.88 | 35.00 |
| 131. | எம்.களத்தூர் | 314.20 | 110.00 |
| 132. | கன்னத்தூர் | 338.87 | 123.00 |

| | | | |
|---|---|---|---|
| 133. | சேவலூர் | 106.87 | 36.00 |
| 134. | சேந்தன்குளம் | 58.06 | 21.50 |
| 135. | பேராம்பி | 44.07 | 15.42 |
| 136. | நக்கம்பாடி | 78.96 | 27.63 |
| 137. | வண்டாலை | 65.15 | 22.80 |
| 138. | ஆலத்துடையான்பட்டி | 131.20 | 45.50 |
| 139. | சிறுநாவலூர் | 165.20 | 57.80 |
| 140. | சிக்கதாம்பூர் | 203.71 | 71.00 |
| 141. | கலிங்கமுடியான் பட்டி | 102.02 | 35.70 |
| 142. | சேனப்பநல்லுலீர் | 176.40 | 53.75 |
| 143. | நாகநாயக்கன்பட்டி | 69.22 | 24.20 |
| | **வேலூர் மாவட்டம்** | | |
| 144. | கன்னியனுலீர் | 89.13 | 27.12 |
| 145. | திமிரி | 134.89 | 37.00 |
| 146. | மலையம்பட்டு | 48.51 | 8.20 |
| 147. | ரெட்டிமான்குப்பம் | 64.75 | 10.75 |
| 148. | விண்ணம்பள்ளி | 54.57 | 18.50 |
| 149. | முத்தரசிகுப்பம் | 43.90 | 14.50 |
| 150. | மேல்பாடிமூங்கிலேரி | 145.51 | 24.00 |



| | | | |
|---|---|---|---|
| 151. | கரிவேடுசித்தஞ்சி | 55.65 | 19.00 |
| 152. | ஐயப்பேடு | 63.20 | 20.00 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | | |
| 153. | கெடார் | 118.60 | 35.00 |
| 154. | ஈயல் | 84.25 | 29.00 |
| 155. | வீப்பேரி | 61.51 | 21.50 |
| 156. | வீராணம் | 97.02 | 25.00 |
| 157. | ஊரணிவாஞ்சிக்குட்டை | 72.46 | 25.00 |
| 158. | ஏமப்பூர் | 53.70 | 18.50 |
| 159. | அவலூர்பேட்டை | 75.42 | 26.00 |
| 160. | வெங்கூர் | 43.14 | 12.00 |
| 161. | பஞ்சமாதேவி | 61.71 | 21.60 |
| 162. | அனுமந்தை | 55.46 | 17.50 |
| 163. | வடக்கந்தாழ் கல்லேரி | 118.62 | 42.73 |
| 164. | கூத்தாங்குடி | 87.18 | 31.60 |
| 165. | மஞ்சப்புதூர் | 91.50 | 33.27 |
| 166. | கூகையூர் | 64.64 | 10.00 |
| 167. | மணலூர் | 97.20 | 34.00 |
| 168. | தும்பூர் | 123.66 | 37.50 |

[2013 ஏப்ரல் 18

| | **விருதுநகர் மாவட்டம்** | | |
|---|---|---|---|
| 169. | குரண்டி மேலகண்மாய் | 48.77 | 11.20 |
| 170. | அரசகுளம் | 50.41 | 14.55 |
| 171. | கடம்பகுளம் | 43.21 | 14.19 |
| 172. | ஆவியூர்கிழக்கு ஏரி | 42.28 | 14.70 |
| 173. | பத்தனேந்தல் | 44.79 | 15.00 |
| 174. | நாட்டார்மங்கலம் | 55.44 | 19.40 |
| 175. | திருத்தங்கல் பெரியகுளம் | 53.82 | 18.83 |
| | **மொத்தம்** | **15809.98** | **4959.86** |

**கட்டம் III (2013–2014)**

| மண்டலம் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| சென்னை | 99 | 26.01 |
| மதுரை | 30 | 8.92 |
| திருச்சிராப்பள்ளி | 47 | 15.15 |
| **மொத்தம்** | **176** | **50.08** |



2013 ஏப்ரல் 18]

**செயலாக்கத்திற்கு எடுக்கப்படவுள்ள பணிகள்—கட்டம் III (2013 – 2014)**

| வ. எண் | ஏரியின் பெயர் | ஆயக்கட்டு (எக்டேரில்) | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **அரியலூர் மாவட்டம்** | | |
| 1. | தூத்தூர் | 168.57 | 59.00 |
| | **கடலூர் மாவட்டம்** | | |
| 2. | புலியூர் | 67.12 | 10.00 |
| 3. | கற்குடல் | 85.83 | 25.00 |
| 4. | குட்டியன் குப்பம் | 188.56 | 65.80 |
| 5. | அக்கடவல்லி | 40.91 | 14.32 |
| 6. | கரும்பூர் தாங்கல் | 42.23 | 15.35 |
| 7. | கிருஷ்ணன் குப்பம் மணக்கோழை இஸ்சா கொல்லை | 70.37 | 27.20 |
| 8. | வயலூர் | 474.49 | 38.50 |
| 9. | ஆலடி | 114.98 | 26.25 |
| | **தருமபுரி மாவட்டம்** | | |
| 10. | தாளவல்லி | 64.48 | 20.00 |
| 11. | பொம்மனூர் | 63.92 | 22.00 |

| | | | |
|---|---|---|---|
| 12. | தொப்பை பள்ளம் | 78.80 | 27.00 |
| 13. | எருப்பள்ளி | 43.25 | 15.00 |
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 14. | வளர்குன்றம் | 57.47 | 20.00 |
| 15. | கரும்பூர் | 109.26 | 15.00 |
| 16. | சோமங்கலம் | 197.57 | 20.00 |
| 17. | வளையகரணை | 100.38 | 20.00 |
| 18. | செம்பாக்கம் | 61.94 | 10.00 |
| 19. | ஒட்டியம்பாக்கம் | 182.19 | 20.00 |
| 20. | நாவலூர் | 83.77 | 10.46 |
| 21. | அன்னூர் | 146.84 | 20.00 |
| 22. | வழுவாதூர் | 150.08 | 15.00 |
| 23. | கீழ்பாக்கம் | 152.91 | 15.00 |
| 24. | மணிமங்கலம் | 842.00 | 99.00 |
| 25. | தென்னேரி இஸ்சா | 2730.70 | 155.00 |
| 26. | கொளத்தூர் | 59.02 | 20.00 |
| | **கிருஷ்ணகிரி மாவட்டம்** | | |
| 27. | படேதலாவ் | 332.20 | 116.27 |
| 28. | நரளப்பள்ளி | 95.58 | 33.06 |





| | | | |
|---|---|---|---|
| 29. | அச்சமங்கலம் | 70.83 | 24.79 |
| 30. | நாராயணப்பன் | 53.44 | 18.70 |
| 31. | பளிநாயணப்பள்ளி | 41.64 | 14.57 |
| 32. | சின்னமட்டாரப்பள்ளி | 41.70 | 14.59 |
| 33. | ரெங்கப்ப நாயக்கன் | 75.70 | 26.49 |
| 34. | பையாஸ்கான் | 40.48 | 14.16 |
| 35. | காட்டு சிங்கிரிப்பள்ளி | 52.00 | 18.00 |
| | **மதுரை மாவட்டம்** | | |
| 36. | கள்ளிக்குடி செங்குளம் | 88.40 | 14.50 |
| 37. | இலுப்பக்குடி | 60.73 | 21.00 |
| 38. | களத்தூர் | 50.72 | 17.75 |
| 39. | அம்பி கண்மாய் | 60.10 | 60.10 |
| 40. | வாவிடமருதூர் | 43.98 | 15.38 |
| 41. | வேதாத்தகுளம் | 106.69 | 38.20 |
| 42. | அரும்பனூர் | 49.99 | 18.55 |
| 43. | செட்டிக்குளம் | 47.59 | 17.30 |
| 44. | கொல்லங்குளம் | 49.59 | 18.10 |
| 45. | வெள்ளியன் குன்றம் | 83.33 | 30.00 |
| 46. | பாப்பாகுடி | 55.18 | 18.60 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 47. | திருக்கனி | 116.39 | 32.31 |
| 48. | அச்சன்குளம் | 134.55 | 34.13 |
| 49. | மன்னாடிமங்களம் | 196.52 | 68.75 |
| | **புதுக்கோட்டை மாவட்டம்** | | |
| 50. | வெண்ணாவிக்குளம் | 104.53 | 36.00 |
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| 51. | பரூர் | 45.37 | 15.88 |
| 52. | காளையனூர் | 66.78 | 23.00 |
| 53. | எல். கருங்குளம் | 73.16 | 25.60 |
| 54. | ஐவகை | 47.16 | 16.51 |
| 55. | வன்னிக்குடி | 45.67 | 15.98 |
| | **சிவகங்கை மாவட்டம்** | | |
| 56. | அம்பி கண்மாய் | 59.54 | 20.60 |
| | தஞ்சாவூர் மாவட்டம் | | |
| 57. | சடையன் | 160.95 | 56.33 |
| 58. | ஐயனார் | 117.95 | 41.27 |
| 59. | பாப்பன்ஓடை | 117.65 | 41.18 |
| 60. | வெள்ளையன் | 63.82 | 22.34 |
| 61. | செம்பனேரி | 104.16 | 36.46 |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| 62. | கரிசவயல் | 94.36 | 33.03 |
| 63. | நாவக்குளம் | 61.98 | 21.69 |
| 64. | வெள்ளேரி | 73.81 | 25.83 |
| 65. | சிறுபாலக்குளம் | 53.81 | 20.09 |
| 66. | வண்ணான் குளம் | 56.54 | 19.79 |
| 67. | அண்டமி | 76.24 | 26.68 |
| 68. | கூடலிவாயல் | 98.52 | 34.48 |
| 69. | எட்டிவயல் | 95.53 | 33.44 |
| 70. | மஞ்சன் | 83.19 | 30.14 |
| 71. | வளையான்குளம் (கடந்தன்குடி) | 86.12 | 30.14 |
| 72. | கலத்திக்குளம் | 57.27 | 20.04 |
| 73. | கள்ளி வயல் | 70.91 | 24.82 |
| 74. | அம்மையாண்டி | 77.75 | 27.21 |
| 75. | மஞ்சக்குப்பம் | 77.22 | 27.03 |
| 76 | காசான் குளம் | 61.02 | 21.36 |
| 77. | முடப்பள்ளி குளம் | 86.88 | 30.41 |
| 78. | வளையான்குளம் (கொள்ளுக்காடு) | 80.57 | 28.20 |
| 79. | கூத்தாடி வயல் | 101.80 | 35.63 |
| 80. | குறிச்சி | 327.64 | 62.96 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 81. | கருப்பேரி | 179.89 | 62.96 |
| 82. | கள்ளக்குளம் | 73.40 | 25.69 |
| 83. | சொக்கன் | 54.86 | 19.20 |
| 84. | முத்தன் குறிச்சி | 75.06 | 26.27 |
| 85. | நாவகுளம் | 56.68 | 19.84 |
| 86. | பைங்காட்டு வயல் | 56.14 | 19.65 |
| 87. | பில்லங்குழி | 71.60 | 25.06 |
| 88. | கடமங்கல் | 99.01 | 34.65 |
| 89. | சீதாக்குளம் | 96.88 | 33.91 |
| 90. | பள்ளி ஓடை வயல் | 74.91 | 22.62 |
| 91. | பாப்பன் குளம் | 59.45 | 20.81 |
| 92. | பரக்காலக்குளம் | 55.68 | 19.49 |
| 93. | செந்தன் | 75.44 | 26.40 |
| 94. | புதுக்குளம் | 56.20 | 19.67 |
| 95. | நாவலூர் | 83.26 | 29.14 |
| 96. | கவனி | 108.73 | 38.06 |
| 97. | பொன்னன் | 117.62 | 58.08 |
| | **தேனி மாவட்டம்** | | |
| 98. | செங்குளம் | 125.47 | 39.00 |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| | **திருவள்ளூர் மாவட்டம்** | | |
| 99. | எரும்பி | 109.62 | 31.00 |
| 100. | வேதியங்காடு | 55.67 | 15.00 |
| 101. | ஸ்ரீகளிக்காபுரம் | 63.00 | 18.00 |
| 102. | பெரியணங்காபுடி | 54.08 | 15.00 |
| 103. | சிலம்பு | 80.08 | 20.00 |
| 104. | நபலூர் | 54.25 | 13.30 |
| 105. | பொன்னி மாங்காடு | 176.94 | 25.00 |
| 106. | வெள்ளல் சேரி | 149.95 | 35.80 |
| 107. | ஜயனேரி | 183.43 | 44.80 |
| 108. | அலமேலு மங்காபுரம் | 49.36 | 12.00 |
| 109. | ராகவநாயுடு குப்பம் | 45.90 | 14.00 |
| 110. | தண்ணீர் குப்பம் | 197.17 | 49.00 |
| | **தூத்துக்குடி மாவட்டம்** | | |
| 111. | கீழ மங்கலம் | 56.07 | 12.50 |
| 112. | எப்போதும் வென்றான் | 443.11 | 101.70 |
| 113. | தெற்கு கல்மேடு | 148.99 | 44.00 |
| 114. | கொல்லம் பரும்பு | 160.14 | 48.00 |
| 115. | வெள்ளாரம் கரிசல் குளம் | 63.08 | 14.50 |

| | | | |
|---|---|---|---|
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | | |
| 116. | நெத்தப்பாக்கம் | 47.34 | 16.00 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | |
| 117. | செவந்தன் குளம் | 165.93 | 58.08 |
| 118. | புறந்தாகுளம் | 98.87 | 34.60 |
| 119. | அசூர் | 143.04 | 50.06 |
| 120. | பொய்யாக்குடி | 73.32 | 25.66 |
| | **வேலூர் மாவட்டம்** | | |
| 121. | நரசிங்கபுரம் | 42.51 | 11.20 |
| 122. | மேலக்குப்பம் | 72.00 | 17.70 |
| 123. | மருதாலம் | 41.17 | 12.30 |
| 124. | வேலம் | 55.06 | 16.20 |
| 125. | கொளத்தேரி | 61.46 | 17.00 |
| 126. | கீழ்மேல் குப்பம் சித்தேரி | 45.41 | 15.00 |
| 127. | கூடலூர் | 74.60 | 20.50 |
| 128. | பணவட்டாம்பாடி | 53.90 | 18.40 |
| 129. | சோமசமுத்திரம் | 45.50 | 14.50 |
| 130. | புடூர் | 57.08 | 19.97 |
| 131. | செக்கனூர் | 62.96 | 22.03 |





| | | | |
|---|---|---|---|
| 132. | புதூர் | 50.17 | 17.56 |
| 133. | வள்ளி மலை வெள்ளனேரி | 49.39 | 14.30 |
| | **விழுப்புரம் மாவட்டம்** | | |
| 134. | கடம்பாக்கம் | 158.82 | 40.00 |
| 135. | வெங்கூர் சித்தேரி | 42.55 | 11.50 |
| 136. | நன்னாடு | 67.99 | 20.40 |
| 137. | மாம்பாக்கம் | 45.13 | 15.50 |
| 138. | வடசிறுவலூர் | 47.04 | 16.00 |
| 139. | வேதம்பட்டு | 98.33 | 29.50 |
| 140. | மேல்மலையனூர் | 363.20 | 90.00 |
| 141. | சோழவாண்டிபுரம் | 132.98 | 30.00 |
| 142. | அனுமந்தை வாஞ்சி குட்டை | 51.33 | 17.50 |
| 143. | பஞ்சமாதேவி புது ஏரி தாங்கல் | 47.71 | 16.70 |
| 144. | கொங்கம்பட்டு | 74.52 | 18.50 |
| 145. | கொண்டங்கி | 100.18 | 30.00 |
| 146. | மோட்சக்குளம் | 103.60 | 15.50 |
| 147. | ஜீ.அரியூர் | 128.59 | 32.50 |
| 148. | அச்சிப்பாக்கம் | 59.50 | 20.50 |
| 149. | ஒட்டேரிப்பாளையம் | 76.59 | 26.80 |

[2013 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 150. | களிஞ்சிக்குப்பம் | 43.13 | 12.00 |
| 151. | வெங்காத்தூர் | 133.50 | 30.00 |
| 152. | புரன்கரி | 26.35 | 9.00 |
| 153. | எல்ராம்பட்டு | 71.40 | 18.00 |
| 154. | வி. புதூர் | 115.42 | 23.00 |
| 155. | கந்தம்பாக்கம் | 203.10 | 40.00 |
| 156. | நாவம்மாள் மருதூர் | 131.17 | 20.00 |
| 157. | வட மலையனூர் | 55.92 | 14.00 |
| 158. | ராம்பாக்கம் | 152.60 | 19.00 |
| 159. | ராவுத்த நல்லூர் | 188.08 | 65.85 |
| 160. | பரனூர் | 148.99 | 52.00 |
| 161. | உரங்காணி | 89.07 | 32.00 |
| 162. | மல்லபுரம் கணபதி | 53.19 | 19.30 |
| 163. | நெடுவன்னூர் | 58.20 | 21.20 |
| 164. | பொய்குணம் | 41.31 | 15.05 |
| 165. | பாளையனூர் | 25.97 | 16.82 |
| 166. | பள்ளிப்பட்டு | 21.67 | 18.63 |
| 167. | வேலனந்தல் | 23.69 | 16.19 |
| 168. | கொசபாடி | 59.73 | 21.87 |



2013 ஏப்ரல் 18]

| | | | |
|---|---|---|---|
| 169. | மல்லாபுரம் வைரன் தாங்கல் | 43.02 | 15.55 |
| 170. | பூவரசன்குப்பம் | 118.98 | 66.10 |
| 171. | செம்பராம்பட்டு | 44.07 | 16.00 |
| 172. | கச்சிராபாளையம் | 89.88 | 56.25 |
| | **விருதுநகர் மாவட்டம்** | | |
| 173. | புதுக்கோட்டை பெரிய குளம் | 129.32 | 45.25 |
| 174. | இஞ்சார்நடுவப்பட்டு | 102.47 | 35.86 |
| 175. | வேப்பிலைபட்டி | 48.12 | 16.84 |
| 176. | சிறு குளம் | 33.31 | 11.66 |
| | **மொத்தம்** | **19823.48** | **5007.78** |

### 5.7 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமம் (JNNURM)

சென்னை மாநகரில் பருவமழைக் காலங்களில் வெள்ள அபாயத்தைத் தணிப்பதற்காக நீர்வள ஆதாரத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரிநல்லா, விருகம்பாக்கம் - அரும்பாக்கம் கால்வாய், வீராங்கல் ஓடை ஆகிய பெரிய வடிகால்களை மேம்படுத்துவதற்காக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.819.80 கோடி திருத்திய மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.73.01 கோடி மதிப்பீட்டில் இரண்டு புதிய பணிகள் சென்னை பெருநகரப் பகுதிகளில் செயலாக்கப்படவுள்ளன.

### 5.8 வெள்ள மேலாண்மைத் திட்டம்

தேசிய தொலைநோக்கு திட்டத்தின்கீழ், வெள்ள மேலாண்மைத் திட்டம் 75 : 25 என்ற விகிதத்தில் மத்திய - மாநில அரசுகளின் நிதி பங்கேற்புடன் தமிழகத்தில் செயலாக்கப்பட்டு வருகிறது.

[2013 ஏப்ரல் 18

இத்திட்டத்தில் ஆரணியாறு, வெள்ளாறு, கொசஸ்தலையாறு, பெண்ணையாறு, கெடிலம், மலட்டாறு, உப்பனாறு, பரவனாறு மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் வெள்ள பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் வெள்ள சேதத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் கீழ்க்கண்ட 5 பணிகளுக்கு ரூ.635.54 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் மாவட்டம், ஆரணி ஆற்றில் ஏ.என். குப்பம் அணைக்கட்டின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் வெள்ள பாதுகாப்புப் பணிகள் மற்றும் லட்சுமிபுரம் அணைக்கட்டு கீழ் பகுதியிலிருந்து பழவேற்காடு (Pulicat) முகத்துவாரம் வரை வெள்ள பாதுகாப்புப் பணிகள் | 12.41 |
| 2. | கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் | 164.32 |
| 3. | கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி மற்றும் கடலூர் நகரங்களை பெண்ணையாறு, கெடிலம், உப்பனாறு, பரவனாறு மற்றும் தெற்கு மலட்டாறு ஆகியவற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் பணிகள் | 68.41 |
| 4. | திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலை ஆற்றில் நாப்பாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் | 14.50 |
| 5. | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களின் பகுதிகளில் ஓடும் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளத் தடுப்புப் பணிகள் | 375.90 |
| | **மொத்தம்** | **635.54** |



2013 ஏப்ரல் 18]

இத்திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்க வேண்டிய பங்கீட்டுத் தொகை ரூ.460.07 கோடியாகும். இது வரை, முதல் தவணையாக ரூ.59.82 கோடி மட்டும் 2011 இல் பெறப்பட்டுள்ளது. குறித்த காலத்தில் பணிகள் முடிக்கப்பட்டும் மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.400.25 கோடியினைப் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு தமிழ்நாடு அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 5.9. பகுதி –II–திட்டங்கள்

(அ) 2012-2013 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் 15 பணிகளுக்கு ரூ.3.02 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றுள் 3 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 12 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) 2013-2014 ஆம் ஆண்டில், பகுதி - II திட்டத்தில் 9 பணிகளுக்கு ரூ.1.64 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் செயலாக்கப்படும்.

### 6 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் (2012) அறிவித்த திட்டங்கள்

### 6.1 காவேரி டெல்டா பாசனப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி பாசன பகுதியில் ஆற்றுப் படுகையின் மட்ட அளவினைப் பராமரிக்கவும், கால்வாய்களில் முறையான அளவு நீரைக் கொண்டு செல்ல ஏதுவாகவும் ரூ.68.55 கோடி மதிப்பீட்டில் 25 படுகை மட்ட சுவர் கட்டுமானப் பணிகள் இவ்வாண்டில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் டெல்டா பகுதியில் பாசனத் திறன் வெகுவாக மேம்படுத்தப்படும்.

### 6.2 இராமநாதபுரம் மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கும் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே, 4 தடுப்பணைகள் அமைக்க ரூ.78.06 கோடியில் கீழ்க்காணும் திட்டங்கள் நபார்டு வங்கி நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும்:

[2013 ஏப்ரல் 18

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம் குப்பநேந்தல் கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே பார்த்திபனூர் மதகணையின் கீழ்ப்புறம் தடுப்பணை அமைத்தல். | 19.50 |
| 2. | இராமநாதபுரம் மாவட்டம், கீழ்நாட்டார் கால்வாய்க்கு நீர் வழங்க, போகலூர் வட்டம் வலசை கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | 19.86 |
| 3. | இராமநாதபுரம் மாவட்டம், 14 ஏரிகளுக்கு நீர் வழங்க, பரமக்குடி வட்டம், தெளிச்சாத்த நல்லூர் கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | 19.00 |
| 4. | இராமநாதபுரம் மாவட்டம், கூத்தானக்கால் வழங்கு வாய்க்கால் மூலம் முதுகுளத்தூர் மற்றும் பரமக்குடி வட்டங்களைச் சார்ந்த 36 ஏரிகளுக்கு நீர் வழங்க, கமுதக்குடி அருகே வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | 19.70 |
| | **மொத்தம்** | **78.06** |

**6.3 அரியலூர் மாவட்டம், மேலராமநல்லூரில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே இருவழி பாலம் அமைக்கும் திட்டம்**

*அரியலூர் மாவட்டம், மேலராமநல்லூர் கிராமத்தை, அரியலூர் சாலையில் உள்ள அழகியமணவாளம் கிராமத்துடன் இணைக்க கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே இருவழி பாலம் ரூ.43.00 கோடியில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் அமைக்கப்படும்.*



2013 ஏப்ரல் 18]

**6.4 கடலரிப்புத் தடுப்புப் பணிகள்**

*தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், வீரபாண்டியன்பட்டினம், பெரியதாழை, கல்லாமொழி மற்றும் கீழ்வைப்பாறு ஆகிய இடங்களில் ரூ.72.00 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும்.*

**7 மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

*நிலத்தடி நீரானது மீளப் பெறக்கூடிய நீர்வளத்தினைக் கொடுக்கும் தன்மையை கொண்டது. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம், நிலத்தடி நீரின் வளத்தினைப் பெருக்குவதற்கும், திட்டமிடவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும் கீழ்க்காணும் கொள்கைகளுடன் செயல்பட்டு வருகிறது:*

*(அ) அறிவியல்பூர்வமாக, நிலத்தடி நீர் அளவை மதிப்பீடு செய்தல், நீரின் தன்மையைக் கண்காணித்தல் மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மைக்கு வழிவகுத்தல்.*

*(ஆ) சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மூலமாக நிலத்தடி நீரைப் பெருக்குதல்.*

*(இ) மாநிலத்தின் நீர்வளத்தினை மிகச் சிறந்தமுறையில் பயன்படுத்த நீரினைப் பயன்படுத்துவோர் மற்றும் தொடர்புடைய இதர துறைகளுடன் ஒன்றிணைந்து செயல்படுதல்.*

*(ஈ) அறிவியல்பூர்வமாக நிலத்தடி பனிமங்களை (Lithology) அறிவதற்காக துளைக் கிணறுகள் அமைத்தல்.*

*(உ) பொதுமக்கள், அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நீர்வழங்கும் திட்டங்களைப் பெருக்குவதற்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல்.*

*(ஊ) சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிலத்தடி நீர்ச் சான்று வழங்குதல்.*

*(எ) கடல் நீர் ஊடுருவலைச் சிறப்பாய்வுமூலம் கண்காணித்தல்.*

[2013 ஏப்ரல் 18

(ஏ) நீரியல் திட்டம்மூலம் ஆற்றுப் படுகைகளில் நீர்வளத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான விவரக் குறிப்புகளை அவ்வப்பொழுது இணையதளத்தில் பதிவு செய்தல்.

(ஐ) நடப்பாண்டிலிருந்து, சிறப்பாய்வுப் பணியாக, தமிழ்நாட்டில் நில நீர்த் தாங்கிகள் வரைபடப் பணி மற்றும் நிலநீர் மேலாண்மைப் பணி ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன. நிலத்தடி நீரை, நீர்த் தாங்கிகள்தான் சேமித்து வைக்கின்றன. தமிழ்நாட்டில் பூமிக்குகீழ் உள்ள நீர்த் தாங்கிகளின் (மணல் படுகைகள், ஆற்றுப் படுகைகள் மற்றும் பாறைப் பகுதிகள்) ஆழம், அகலம், நீளம் போன்ற குறிப்புகளுடன், தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் இவ்வாய்வுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாய்வினால், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்துவதற்கும், நிலத்தடி நீர்த் தாங்கிகளை வளப்படுத்துவதற்கும் மற்றும் பாசன ஏரிகளிலும், ஆற்று வாய்க்கால்களிலும் செயற்கை முறையில் நிலத்தடி நீரினைச் செறிவூட்டும் கட்டுமானப் பணிகளான தடுப்பணைகள், செறிவூட்டுக் கிணறுகள், கசிவு நீர்க் குட்டைகள் உருவாக்குதல் போன்ற திட்டங்களுக்கும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க இயலும்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க, திருவாரூர் மாவட்டத்தில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் வகையில் 4,000 செறிவூட்டுத் துளைக் கிணறுகள் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

## 8 நீர் ஆய்வு நிறுவனம்

**8.1** நீர் ஆய்வு நிறுவனம் மாநிலத்தின் ஆற்றுப் படுகைகளை நுண்ணிய அளவில் (Micro Level) ஆய்வு செய்து, நீர்வள ஆதாரத் துறைக்கு நீர் மேலாண்மைக்காகத் தொடர்ந்து வழிகாட்டி வருகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் இந்நிறுவனம் தமிழ்நாட்டின் "முதல் தொலையுணர்வு பயன்பாடு மையமாக"" 2002 இல் அறிவிக்கப்பட்டு இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் படங்கள் மற்றும் வரைபடங்கள்மூலம் நீர்நிலைகளையும், நீர்வள ஆதாரங்களையும் ஆய்வு செய்து, புள்ளி விவரங்களைச் சேகரித்து உடனுக்குடன் அரசுக்குத் தெரிவித்து வருகின்றது.



2013 ஏப்ரல் 18]

நீர் ஆய்வு நிறுவனத்தால் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

அ) மொத்தமுள்ள 17 ஆற்றுப் படுகைகளின் திருத்திய எல்லைக் கோட்டை வரையறுத்தல்.

ஆ) ஆற்றுப் படுகைகளின் வரைபடங்களை உயர் அளவுகோலில் (1:50000) தயாரித்தல்.

இ) அனைத்து ஆற்றுப் படுகைகளிலும் உள்ள நீர்வள ஆதாரங்களின் புள்ளி விவரங்களைச் சேகரித்து வலைதளத்தில் கொணர்தல்.

மாநிலத்தின் அனைத்து நீர்நிலைகளுக்கும் ஆற்றுப் படுகை வாரியாக தனித்தன்மை குறியீடு எண் கொடுக்கும் பணி (Unique Identification) 2013-2014 ஆம் ஆண்டின் முக்கியப் பணியாக மேற்கொள்ளப்படும். இந்தப் பணி நிறைவுற்றால், ஏரியின் குறியீட்டு எண்ணை வைத்து, மாவட்டம், வட்டம், ஆற்றுப் படுகை, ஏரியின் பெயர், கரை நீளம், கொள்ளளவு, பாசனப் பரப்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடையும் வகையில் அளிக்க இயலும்.

### 8.2 நீர்க் கொள்கை (Water Policy)

தேசிய நீர்க் கொள்கை 1987-ஐ அடிப்படையாகக் கொண்டு, மாநில நீர்க் கொள்கை 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பின்னர், ஏப்ரல் 2002 இல் தேசிய நீர்க் கொள்கை திருத்தங்களுடன் மத்திய நீர்க் குழுமத்தால் ஏற்கப்பட்டது.

மத்திய நீர்வள அமைச்சகத்தால் ஜூன் 2012 இல் பரிந்துரை, செய்யப்பட்ட வரைவு நீர்க் கொள்கையில் நீரினை வணிகப் பொருளாகக் கொண்டு அதன் கட்டணத்தை (Pricing of Water) பொருளாதார அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் இதனை நீர் ஒழுங்குமுறை ஆணையமே நிர்ணயம் செய்து ஒழுங்குபடுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கு சட்டபூர்வமான அதிகாரத்தை அளித்து நீரினைப் பயன்படுத்துவோரிடமிருந்து அதற்கான கட்டணத்தை வசூல் செய்யவும் பரிந்துரைத்துள்ளது.

27-12-2012 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீர் ஒரு மிக

[2013 ஏப்ரல் 18

அரிதான வளம் என்ற போதிலும், இதற்காக வணிக நோக்கில் கட்டணத்தை நிர்ணயம் செய்யக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்கள். மேலும், 28-12-2012 அன்று நடைபெற்ற ஆறாவது தேசிய நீர்வளக் குழுக் கூட்டத்தில் நீரின் கட்டணத்தை நிர்ணயம் செய்தல் தொடர்பாக தமிழகத்தின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுகையில், நீர்க் கட்டண நிர்ணயத்தை மத்திய அரசு வலியுறுத்துவது மாநில அதிகாரத்தில் தலையிடுவதாக அமையும் என்றும், எனவே நீரின் கட்டணத்தை பொருளாதார அடிப்படையில் சாதக பாதகங்களை அறிந்து மாநில அரசே முடிவு செய்ய வேண்டும் என்றும் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் அறிவுறுத்தலின்படி வலியுறுத்தப்பட்டது.

தேசிய நீர்க் கொள்கை ஏற்கப்பட்ட பின்னர், மாநிலத்தின் மறுப்புகள் மற்றும் கருத்துகளை கவனத்தில் கொண்டு மாநில நீர்க்கொள்கை உருவாக்கப்படும்.

## 9 பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி (IMTI)

தமிழ்நாடு அரசினால் 1984 ஆம் ஆண்டு, திறன்மிக்க நீர் பயன்பாட்டின்மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, பல்துறை சார்ந்த பயிற்சிகளை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பட்ட பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் மாநிலத்தின் ஒரு முன்னோடி பயிற்சி நிலையமாகும்.

இப்பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், கீழ்க்காணும் பயிற்சிகளை ஆண்டுதோறும் அளித்து வருகின்றது:

அ) விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை, பயிர்களுக்கான நீர்த்தேவை அறிதல், காலமுறை பாசனம், நுண்ணிய நீர்ப் பாசனம் முதலான பயிற்சிகள்.

ஆ) பாசன ஆய்வாளர்கள், பாசன உதவியாளர்கள் மற்றும் பணி ஆய்வாளர்களுக்கு நீர் மேலாண்மை திறன்களை வளர்க்கக்கூடிய பயிற்சிகள்.

இ) புதிதாக பணியேற்கும் உதவிப் பொறியாளர்களுக்குக் கணினி பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள்.

ஈ) பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீரின் ஒருங்கிணைந்த நீர் பயன்பாடு மற்றும் மேலாண்மை குறித்த பயிற்சிகள்.



2013 ஏப்ரல் 18]

உ) உயர்நிலை அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை மற்றும் செயல்திறன் வளர்த்தல் பயிற்சிகள்.

மேற்கண்ட பயிற்சிகள்மூலம் நீரினை நிருவகிக்கும் அலுவலர்களும், நீரினைப் பயன்படுத்தும் விவசாயப் பெருங்குடி மக்களும் ஆண்டுதோறும் அறிவியல்பூர்வமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கி உள்ளதுடன், ஒவ்வொரு துளி நீரிலிருந்தும் அதிக அளவு உற்பத்தி செய்யும் உத்தியை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில் 105 பயிற்சி திட்டங்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த 1,550 அலுவலர்களுக்கும், 570 விவசாய பெருங்குடி மக்களுக்கும் அளிக்கப்பட்டன.

இந்த ஆண்டு, இப்பயிற்சி நிறுவனம் 110-க்கும் அதிகமாக பயிற்சிகளை நடத்த திட்டம் வகுத்துள்ளது.

## 10 கொதிகலன்கள் இயக்ககம்

தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககம், மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட கொதிகலன்கள் சட்டம், 1923-ன் (கடைசியாக 2007 இல் திருத்தப்பட்டது) விதி நெறிமுறைகளை மாநிலங்கள் அளவில் நடைமுறைப்படுத்தி, கொதிகலன்கள் பாதுகாப்போடு இயங்கவும், பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு சேதாரம் நிகழாவண்ணம் பாதுகாத்து செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும்.

பொதுப் பணித் துறையின் ஓர் அங்கமாக விளங்கும் கொதிகலன்கள் இயக்ககம், கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள கொதிகலன்கள் இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக, 800 மெகா வாட் சூப்பர் கிரிட்டிக்கல் வகை கொதிகலன்களை உள்நாட்டிலேயே தயாரிக்க உத்தேசிக்கப்பட்ட வடிவமைப்புக்கு அங்கீகாரம் வழங்கி, இத்தகைய கொதிகலன்களின் உற்பத்திக்கு வழிகோலியுள்ளதன்மூலம் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதமாக கொதிகலன்கள் இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககம், மின் உற்பத்தி செய்யத் தேவையான கொதிகலன்களை விரைவாக நிறுவவும் இயக்க ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் உறுதுணையாகச்

செயல்பட்டு கொதிகலன்களின் இயக்கத்திற்கு சான்றிதழ் வழங்கி மின் உற்பத்திக்கு வழி வகுத்துள்ளது.

கொதிகலன்கள் இயக்ககம், கடந்த 2012-2013 ஆம் ஆண்டில், கொதிகலன்களின் பணியாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி 441 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

கொதிகலன்கள் இயக்ககம், 2012-2013 ஆம் நிதியாண்டில் ஆய்வுக் கட்டணம் மற்றும் சான்றிதழ் கட்டணம் மூலமாக ரூ.9.50 கோடி அரசுக்கு வருவாயைப் பெற்றுத் தந்துள்ளது.